
# கம்பனில் பெண்ணியம்



முனைவர் இரா. செல்வக்கணபதி

N.RAVISANDRAN

வானதி பதிப்பகம்

www.saivamonline.com

# Contact Details


www.saivamonline.com

www.facebook.com/saivamonline

@saivamonline Saivam Online



sspathipagam@gmail.com

+91 94440 21113

G Pay +91 94440 21113

UPI 9444021113@UPI

# முன்னுரை

**'கம்பனில் பெண்ணியம்'** என்ற இந்த ஆய்வு, கவிச் சக்கரவர்த்தி கம்பனின் பெண்மைச் சித்திரிப்புக்களை முழுவது மாக ஆய்வுக்கு உட்படுத்தி, 'பெண்ணியம்' பற்றிய கவிஞனின் மதிப்பீடுகளைக் கண்டு தெளியும் நோக்கில் மேற்கொள்ளப் பட்டது.

கம்பன் காலம் வரை— பெண்மை, கம்பனின் கதைக் கரு, ஒரு பாத்திரப் புனைவில்— கம்பன், கரும்புள்ளிகள், புகழ் மகுடங்கள், கம்பனில் பெண்ணியம் என்ற ஆறு உள் தலைப்புக் களில் இவ்வாய்வும், ஆய்வு முடிபுகளும், முறையாக இனங் காட்டப்பட்டுள்ளன.

தமிழ் இலக்கியத் தடத்தில் முதன்முதலாகக் கம்பன் பெண் விடுதலைக்குக் குரல் கொடுத்ததோடு, இப்பாதையில் பெண்மை வீறு கொண்டு எழுவதற்கு வேண்டிய அளவு வழி வகுத்துத் தந்துள்ளமையும் ஆய்வின் நிறைவில் கண்டு தெளியப்பட்டன.

அமரர் ஏவி.எம். நினைவு அறக்கட்டளை சார்பாக இச்சொற்பொழிவை நிகழ்த்த வாய்ப்பளித்த, ஏவி.எம். குடும்பத்தாருக்கும், இதில் என்னை ஈடுபடுத்திப் பணி கொண்ட சென்னைக் கம்பன் கழகத் தலைவர் மாண்பமை நீதிபதி டாக்டர் திரு. மு.மு. இஸ்மாயீல் அவர்களுக்கும், செயலாளர், 'கம்பன் அடிசூடி' திரு. பழ. பழநியப்பன் அவர் களுக்கும், ஏனைய, கம்பன் கழகப் பொறுப்பாளர்களுக்கும் பெரிதும் நன்றி பாராட்டி மகிழ்கிறேன். 28-07-2000 அன்று நிகழ்த்திய அறக்கட்டளைச் சொற்பொழிவின் நூல் வடிவம் தங்கள் கைகளில் திகழ்கிறது.

www.saivamonline.com

சென்னை, மதுரை, பாண்டிச்சேரி மற்றும் அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களில் பல அறக்கட்டளைச் சொற்பொழிவுகளை நிகழ்த்தும் வாய்ப்பு முன்னரே அமைந் திருப்பினும், என் மணிவிழா ஆண்டில் சென்னைக் கம்பன் கழகம் வாயிலாக இச் சொற்பொழிவை நிகழ்த்தி, நூல் வடிவில் வெளிக் கொணர்வது இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தருகிறது.

மேடையில் பேசி, காற்றில் கரைந்து போகும் உயரிய சிந்தனைகளை, நூல் வடிவில் கொண்டுவர வேண்டும் என்று என் துணைவியாரும், மயிலாடுதுறை நகர்மன்றத் தலைவருமாகிய திருமதி. சந்திரா செல்வக்கணபதி அவர்கள் பெரிதும் வற்புறுத்தி வந்தார். ஒரு பெண்ணின் பார்வையில் பெண்ணியம் பற்றிய கோட்பாடுகள், மற்றும் பெண் உரிமை பற்றிய மதிப்பீடுகள் எவ்வாறு அமையும் என்பதை நான் அறிந்து கொள்வதற்கு அவரது ஆலோசனைகள் பெரிதும் துணையாக அமைந்தன. அவர்களுக்கும், கைப்பிரதிகளைச் சரிபார்த்து உதவிய என் இனிய நண்பர்கள் பேராசிரியர் முனைவர் திரு. துரை. குணசேகரன் அவர்களுக்கும், முனைவர் திரு. ச. சுப்புரத்தினம் அவர்களுக்கும், தட்டச்சு செய்து உதவிய என் உதவியாளர் திரு. சி. சீனிவாசன் அவர்களுக்கும் பெரிதும் நன்றி பாராட்டி மகிழ்கிறேன்.

கம்பன் கவியமுதம் பருகி மகிழும் பல்லாயிரம் தமிழ் நெஞ்சங்களுக்கும், சிறப்பாகப் பெண் விடுதலை குறித்த தீவிர எண்ணம் கொண்டுள்ள தமிழ்ச் சகோதரிகளுக்கும் என் ஆய்வு பெரிதும் மகிழ்ச்சியைத் தரும் என்று நம்புகிறேன்.

*கம்பன் புகழ் வாழ்க!*
*கன்னித் தமிழ் வாழ்க!*

இரா. செல்வக்கணபதி

www.saivamonline.com

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | கம்பன் காலம் வரை — பெண்மை | 1 |
| 2. | கம்பனின் கதைக் கரு | 25 |
| 3. | ஒரு பாத்திரப் புனைவில் — கம்பன் | 33 |
| 4. | கரும் புள்ளிகள் | 52 |
| 5. | புகழ் மகுடங்கள் | 121 |
| 6. | கம்பனில் பெண்ணியம் | 199 |


www.saivamonline.com

# 1. கம்பன் காலம் வரை – பெண்மை

## பெண்மை மதிப்பீடுகள்

"கம்பனில் பெண்ணியம்" என்ற இவ்வாய்வு, கம்பராமாயணத்தில் இடம் பெற்றுள்ள, பெண்மை பற்றிய, கம்பனின் மதிப்பீடுகளைப் பகுப்பாய்வு செய்து நிறுவும் நோக்கில் அமைகிறது.

இராமாயணம், பாரத நாடு தழுவிய இதிகாசமாயினும், கம்பனின் புனைவு தமிழில் அமைந்ததால், பெண்மை பற்றிய மதிப்பாய்வை நிகழ்த்த, கம்பன் காலம் வரை, தமிழகத்தில் நிலவிய பெண்மை பற்றிய மதிப்பீடுகளைத் தேடிக் காண்பது இன்றியமையாததாகிறது. இத்தேவை கருதி, வேத காலம் முதல் கம்பன் காலம் வரையிலான, பெண்மை பற்றிய சித்திரிப்புக்களைத் தொன்னூல்கள் மற்றும் அவற்றிற்கான உரைகள் வாயிலாகத் தொகுத்துக் காணும் நோக்கில் "கம்பன் காலம் வரை – பெண்மை" என்ற இம் முதல் இயல் நடையிடுகிறது.

## முதற்குறிப்புக்கள்

வேதங்கள், இந்தியாவின் தொன்னூல்கள் என்று கருதப்படுபவை. அவை, வடமொழியில் பதிவு செய்யப் பெற்றிருப்பினும், நாடு தழுவிய, ஒரு விசாலப்பார்வை அவற்றில் உண்டு. இந்தியத் தத்துவச் சிந்தனைகளின் முன்பதிவாகிய வேதங்களைப் பற்றிய முதற்குறிப்புக்களைத்

www.saivamonline.com

தமிழில் தொன்னூலாகிய தொல்காப்பியத்தில் காண முடிகிறது. அவற்றுள் ஒன்று, வேதம் குறித்துக் காட்டும், பண்டைய திருமணங்கள். திருமணங்களில் பெண்ணுக்கு வழங்கப்பட்டிருந்த உரிமையின் அளவு இன்னது என்பதைக் கண்டறிய தொல்காப்பியப் பொருளதிகார நூற்பா ஒன்றும், அதற்கான உரைகளும் துணை செய்கின்றன.

## பொருளதிகாரம்

தொல்காப்பியப் பொருளதிகாரம், தமிழ்க் கவிதை களின் பாடு பொருள்களாகிய அகம், புறம் என்பனவற்றை வரையறுத்துக் காட்டுகிறது. ஒரு விளையாட்டுக்கு, ஆடரங்கும், விதிமுறைகளும் வகுத்துக் கொள்ளப்பட்டிருப் பது போல், தமிழில் கவிதை எழுத முயல்வார்க்கு இப்பகுதி, வரையறைகளை வகுத்துரைக்கிறது. இலக்கண எல்லை கடவாது, கவிதைகள் புனையப்பட்ட காலம் ஒன்று தமிழகத்தில் நிலவி இருந்தமைக்குக் கடைச்சங்க நூல்கள் அரண் சேர்க்கின்றன. தமிழ்க் கவிதைகளில் போற்றப் படும் காதல் மணம் எத்தகையது என்ற வினா எழுந்தது. தொல்காப்பியர், அக்காதலை, வேதத்தை அடியொற்றி, அதில் இடம் பெறும் எண்வகை மணமுறைகளுள் ஒன்றாகிய காந்தருவ மணத்தை ஒத்தது, தமிழரின் காதல் மணம் என்று விளக்கம் தருகிறார்.

## இளம்பூரணர்

தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் மூன்றாவது இயல் களவியல். இதில் முதலில் இடம் பெற்றுள்ள நூற்பா,

**"இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு**
**அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்**
**காமக் கூட்டம் காணும் காலை**
**மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்**
**துறையமை நல்யாழ் துணைமையோர் இயல்பே."**

*(தொல். பொருள்—3-1)*

www.saivamonline.com

என்பதாகும். இதில், "மறையோர் தேஎத்து மன்றல் எட்டு" என்ற தொடருக்கு "மறையிடத்து ஓதப்பட்ட மணம் எட்டனுள்ளும்" என்று உரை விரிக்கிறார் இளம்பூரணர். மணம் எட்டு என்று குறிப்பித்த தொல்காப்பியர் அவை இன்னின்ன எனக் குறித்துக் காட்டவில்லை.

வடமொழிப் புலமையும், வேதக் கல்வியும் வல்ல உரைகாரர்கள் வேதமுறை மணங்கள் எட்டனையும் விரித்துரைத்துள்ளனர். இங்கேதான், பண்டைக்காலப் பெண்கள், தங்கள் துணைவரைத் தேர்ந்து கொள்வதில் சிறிதளவும் உரிமை பெற்றிருக்கவில்லை என்பதை அறிய முடிகிறது.

வேதகாலத்தின் எண்வகை மணங்கள் இன்னின்ன என்பதை விரித்துரைக்கும் இளம்பூரணர், அவற்றை முறையே 1. பிரமம், 2. பிரசாபத்தியம், 3. ஆரிடம், 4. தெய்வம், 5. காந்தருவம், 6. அசுரம், 7. இராக்கதம், 8. பைசாசம் என வரிசைப்படுத்துகிறார்.

தொல்காப்பிய உரைகாரர்களுள் ஒருவராகிய நச்சினார்க்கினியர், இம்மணங்கள் நிகழ்த்தப்பட்ட முறைகளை விரித்துரைத்துள்ளார்.

### 1. பிரம மணம்

"பிரம மணம்" என்பது, நாற்பத்து எட்டு ஆண்டு பிரமசரியம் காத்த ஆண் மகன் ஒருவனுக்கு, பன்னிரண்டு வயதே நிரம்பிய பூப்பெய்திய இளமகளை, இரண்டாவது மாதவிலக்கு வருவதற்குள், அணிகலன்களை அணிவித்துப் பெற்றோர் தானமாகக் கொடுப்பது. இந்த இடைவெளிக்குள் மகளை மணம் செய்து வைக்காத தந்தைக்கு, பசுவையும், பிராமணனையும் கொலை செய்த பாவம் வந்து சேரும் என்றும் வேதம் அச்சுறுத்துகிறது.

www.saivamonline.com

## 2. பிரசாபத்தியம்

இரண்டாவதாகிய, "பிரசாபத்தியம்" என்பது, பெண் கொள்வதற்கு உரிய கோத்திரத்தார், பெண்ணுக்கு ஐம்பது கழஞ்சு நகை அணிவித்தால், பெண்ணின் பெற்றோர் அதன் இருமடங்காகத் தம் மகளுக்கு நூறு கழஞ்சு நகை அணிவித்து அவளை, பரிசம் கொடுத்தவனுக்கு, மணம் முடித்துக் கொடுப்பது. மணமகன் வயதோ, தகுதியோ இங்கே நோக்கப் படுவதில்லை. செல்வ வளம் மட்டுமே முன்னிலை வகிக்கிறது.

## 3. ஆரிட மணம்

மூன்றவதாகிய, "ஆரிடம்" என்பது, உலோகத்தால் பசு, மற்றும் காளை மாடுகளை வடிவமைத்து, அவற்றின் கோடு களையும், கொம்புகளையும் பொன்னால் அமைத்து, இவற்றின் இடையே மகளை அணிகலன் அணிவித்து நிறுத்தி, நீர் வார்த்து ஓர் ஆடவனுக்கு வழங்குவது.

## 4. தெய்வ மணம்

நான்காவதாகிய, "தெய்வ மணம்" என்பது, மிகப் பெரிய வேத வேள்விகளை நிகழ்த்தும் ஆசாரியன் ஒருவனுக்கு மகளை வேதத் தீயின் முன் தட்சிணையாகக் கொடுப்பது.

## 5. காந்தருவம்

ஐந்தாவதாகிய, "காந்தருவம்" என்பது, விண்ணில் சுற்றித் திரியும், காந்தருவ குமாரரும், கன்னியரும் ஒருவரை ஒருவர் எதிர்ப்பட்டு, கண்டு, விரும்பி இணைவது.

## 6. அசுர மணம்

ஆறாவதாகிய, "அசுரம்" என்பது, காளைகளை அடக்குதல், வில்லொடித்தல், மேலே சுழலும் எந்திரங்களைக்

www.saivamonline.com

கீழே குனிந்தவாறு, குறித்த இடத்தில் அம்பெய்து வீழ்த்துதல் முதலிய போட்டிகளை அறிவித்து, அதில் வெற்றி கொள்வா னுக்கு மகளைக் கொடுப்பது.

## 7. இராக்கதம்

ஏழாவதாகிய, "இராக்கதம்" என்பது, இளமகள் ஒருத்தியை அவள் விருப்பமோ, அவளது பெற்றோர் விருப்பமோ பாராது, வலிமை உடையான் ஒருவன் வலிந்து பற்றிச் சென்று மணப்பது.

## 8. பைசாச மணம்

எட்டாவதாகிய, "பைசாசம்" என்பது, ஒருவன் தன்னை விட அகவையில் மூத்தாளையும், கள்ளுண்டு மயங்கிக் கிடப்பாளையும், உறங்குவாளையும் புணரும் கொடுமை குறித்து நிற்பது.

## கைக்கிளை: பெருந்திணை

இவற்றுள், பிரமம் முதலிய நான்கையும், பொருந்தாக் காமம் என்ற பொருளில் பெருந்திணை என்றும், அசுரம் முதலிய பின் மூன்றையும் ஒருதலைக் காமமாகிய கைக்கிளை என்றும் தொல்காப்பியம் குறித்தது.

## தமிழர் காதல் நெறி

இவற்றுள், தமிழர் அக இலக்கியங்களில் பேசப்படும், காதல் நெறி ஆணும் பெண்ணும், ஒருவரை ஒருவர் விரும்பிக் கூடும், "காந்தருவ" வழக்கோடு ஒத்தது என்று இனங் காட்டுகிறார் தொல்காப்பியர்.

## சுயம்வரங்கள்

மேற்குறித்த வேத மணங்களில் காந்தருவம் நீங்கலாக ஏனையவற்றில், பெண்மைக்கு இழைக்கப்பட்டிருந்த அநீதியையும், கொடுமையையும் உணர முடிகிறது. பெண்

www.saivamonline.com

எத்தகைய அடிப்படை உரிமைகளையும் பெற்றிருக்கவில்லை என்பதையே இம் மணமுறைகள் எடுத்துரைக்கின்றன. தான் விரும்பிய ஆண்மகனுக்கு மாலையிடலாம் என்று பேசப்பட்ட சுயம் வரங்களிலும் கூட, பெண் தன் விருப்பப் படி மாலையிடும் முன், அவளை வலிமையுடையார், பற்றித் தூக்கிச் சென்றுள்ளனர் என்பதைக் காசி மன்னன் மகளின் சுயம்வரத்தில் பீஷ்மர் செய்த செயல்களால் அறிய முடிகிறது. சுயம்வரத்திலும், தந்தை விரும்பிய மன்னர்கள் மட்டுமே அழைக்கப்பட்டுள்ளனர். சம்யுக்தை சுயம்வரத்தில், பிருதிவிராசன் புறக்கணிக்கப்பட்ட வரலாறும், நம் மனத்தில் நிழலாடுகிறது. வேதம், "அசுரம்" என்று குறிப்பிட்ட மண முறையே சீதை திருமணத்திலும், பாஞ்சாலி திருமணத்திலும் முன் வைக்கப் பெற்றுள்ளது. ஏறு தழுவி வெற்றி கொள்வா னுக்கே மகள் என்று கூறும் வழக்கைத் தமிழில், முல்லைக் கலி பதிவு செய்து நிற்கிறது.

## இல்லது: இனியது: நல்லது

மேற்குறித்த பெண்ணடிமைத் திறமெல்லாம் வட புலத்தில் தாம்; தமிழகத்தில் இவை இல்லை என்று கருதி மகிழ முடியவில்லை. தொல்காப்பியம் கூறும் காந்தருவ மணம், நாடகக் கூறுகள் சார்ந்த, இலக்கிய வழக்கே அன்றி, அதுவே வாழ்வாகப் பண்டைத் தமிழகத்தில் விரிந்திருக்க வில்லை. அக இலக்கியச் சித்திரிப்புக்களை, தமிழர்தம் வாழ்க்கைதான் என்று நச்சினார்க்கினியர் முதலிய சிலர் நிறுவ முயன்றனர். முற்றிலும் இவை கற்பனை என்றார் சமணச் சார்புடைய இளம்பூரணர். இறையனார் களவியல் உரைகாரர் நக்கீரர் என்பவர், அக இலக்கியம் காட்டும் காதல் வாழ்வை நாகரிகமாக, "இல்லது; இனியது; நல்லது;" என்று ஆய்ந்து உரைத்தார். இலக்கியக் காதலும், பெண்மை உயர்வும் சமூக வாழ்வில் நடைமுறையில் இல்லை; ஆனால், இலக்கியத்தில் படித்து மகிழ மட்டும், அது இனிமை

www.saivamonline.com

பயப்பது; இலக்கியக் காதல் நடைமுறை வாழ்வாக மலர்ந்தால், அது நன்மை பயக்கும் என்பதுதான் உண்மை நிலை.

சங்க நூல்கள் தோற்றங்கொண்டமைக்குப் பல நூற்றாண்டுகளுக்குப் பின் வந்த கம்பன் காலம் வரையிலும், ஏன்? இன்று வரையிலும் கூட, வேதம் குறிப்பிடும் பொருந்தா மணமும், ஒருதலை மணமும் நம்மைவிட்டு அகன்றபாடில்லை. பெண்ணினம் பெரிதாக உரிமை பெற்று விட்டதாக மகிழவும் கூடவில்லை.

## மருதத் திணை

தமிழின் மேல்வரிச் சட்டமாகிய தொல்காப்பியத்தின் வழி நின்று பாடப்பட்ட கடைச்சங்க கால, அக இலக்கியங்களில் தலைவி, தோழி, செவிலி முதலிய பெண் மாந்தர்கள் அறிவு நிரம்பியவர்களாகப் படைக்கப்பட்டுள்ளனர் என்பது உண்மையே. அறத்தொடு நிலையும், உடன் போக்கும் மிகச் சிறந்த பண்பாட்டுக் கூறுகள் என்பதில் ஐயம் இல்லை. தலைவியால் விரும்பப்பட்ட தலைவனோடு தலைவியை இணைத்து வைப்பதில் பெருநாட்டம் காட்டிய இவ் இலக்கியங்கள், காதலனை அடைவதில் பெண் காட்டிய உறுதியைக் "கற்புக்கடம்" என்று பேசி பெண்மைக்கு மகுடம் சூட்டின. ஆயினும், தடைபல தாண்டித் தன்னை மணந்து கொண்ட அன்புடைய மனைவிக்கு உண்மையுடையவனாய்த் தலைமகன் வாழ வேண்டும் என்று, அவற்றால் வற்புறுத்த இயலவில்லை. அடுத்த சில மாதங்களிலேயே, அவன் வேறு ஒரு பெண்ணை நாடிச் செல்வதும், அதனை அறிந்த தலைவி வாடுவதும் பின் ஊடுவதும், அக இலக்கியத்தில் ஒரு கூறாகவே "மருதம்" என்று போற்றிக் கொள்ளப்பட்டது. காமக்கிழத்தியும், பின்முறை வதுவைப் பெருங்குலக் கிழத்தியும், இற்பரத்தையும், சேரிப்பரத்தையும், தலைவனின்

www.saivamonline.com

காமத்திற்கு ஆட்பட்டுக் கிடந்தமையை தமிழர் வாழ்வின் பெருமிதம் என்றா கொள்ள முடிகிறது?

## பரத்தையர் பிரிவு

தன் கணவனே அடுத்த பிறவியிலும், தான் விரும்பும் மணாளனாக அமைய வேண்டும் என்று பெண் வாட்ட முற்று, விரும்பியதாகவே சங்க இலக்கியம் பேசுகிறது.* 'இவளே மறுமையிலும் என் மனைவியாக வேண்டும்' என்ற ஆடவன் குரல் அங்கே எழுந்து ஒலிக்கவில்லை. கணவனின் பரத்தமை ஒழுக்கத்தைக் கண்டு கொள்ளாது, குழந்தைகளை வளர்த்துக் கொண்டு, அவனோடு ஒத்துப் போகத் தான் செவிலியும், தோழியும் தலைவிக்கு அறிவுரை கூறுகின்றனரே அன்றி, தலைவனின் முறை திறம்பிய வாழ்வைத் தட்டிக் கேட்பார் எவரும் அங்கே இலர். கற்பு வாழ்வில், தலைவன் தலைவியை விட்டுப் பிரியும் பிரிவை ஆறு வகைப்படுத்துகிறது தொல்காப்பியம். அவற்றுள் ஒன்றாகப் பரத்தையர் பிரிவைப் பதிவு செய்வது உற்று நோக்கத்தக்கது.

## ஐயமும் தெளிவும்

நடைமுறை வாழ்வில் பெண்ணை அறிவுடையவள் என்றோ, உணர்வுடையவள் என்றோ ஏற்காத ஆடவர் சமுதாயம், நாடக வழக்குக் கலந்த அக இலக்கியத்திலாவது பெண்மையைச் சற்றே உயர்த்திக் காட்ட முயல்கிறதா என்றால், இல்லை. களவில் தலைவனும் தலைவியும் ஒருவரை ஒருவர் முதன் முதல் சந்திக்கும்போது, இயற்கை எழில் சூழ்ந்த இடமும், தலைவி அழகும், தலைமகனுக்கு இவள் மானுட மகள்தானோ என்ற ஐயத்தை ஏற்படுத்தும். தலைவன், தலைமகளைப் பலவாறு ஐயுற்றபின் தன்

* குறுந்தொகை — 49

2
www.saivamonline.com

அறிவுத் திறத்தால் இவள் மானுட மகளே என்று ஐயம் தீர்வான்.

> **"அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை**
> **மாதர்கொல் மாலும்என் நெஞ்சு"** *(திரு. 1080)*

என்று வள்ளுவரின் காமத்துப் பாலும் தலைவன் ஐயத்தைச் சித்திரிக்கும். தலைமகனுக்கு ஏற்பட்டது போல் தலைவிக்கும், இவன் யாராக இருப்பான் என்ற ஐயம் எழுதல் இயற்கை. ஆனால், தொல்காப்பியமும், சங்க அக நூல்களும், ஐயுற்றுத் தெளியும் வாய்ப்பைப் பெண்ணுக்குத் தர மறுக்கின்றன. காரணம், பெண் ஐயுற்றால் அவள் அறிவுக் குறைபாட்டால், உள்ளத்தே அச்சம் எழுமேயன்றி, அன்பு பிறவாது என்று உரையாசிரியர்கள் சமாதானம் கூறுவர். பெண் என்பவள் அச்சம், மடம், நாணம், உடையவளே அன்றி ஆண் போல் பெருமையும், உரனும் (அறிவு) உடையவள் அல்லள் என்பது அன்னோர் மதிப்பீடு. நாடகப் பாங்கு நிரம்பிய இலக்கியங் களில் கூட, பெண்ணுக்கு உயர்ச்சி தாராத நம் முன்னோர் நிலை, நமக்கு வியப்பைத் தருகிறது. உயர்ச்சி தாராவிடினும், சமநிலையிலாவது வைத்துப் பேசியிருத்தல் கூடாதா என்று நம் நெஞ்சம் ஏக்கம் கொள்கிறது.

## புறப்பாடல்கள்

அக இலக்கியங்கள் கிடக்கட்டும்; சமூகம் சார்ந்த புற இலக்கியங்களிலாவது, பெண்மைக்கு உரிய இடம் தரப் பெற்றுள்ளதா என்று ஆராய்ந்தால், அங்கேயும் ஏமாற்றமே விஞ்சுகிறது.

சங்கப் புறப்பாடல்களில் தலையாயது புறநானூறு. அடுத்து எண்ணத் தக்கது பதிற்றுப் பத்து. மூன்றாவதாகப் பத்துப்பாட்டுள் சில பாடல்கள். சங்க காலச் சமூக வாழ்வை முற்றாக ஆராய இவை போதுமானவை அல்ல. காரணம், இப்பனுவல்கள் பலவும் மன்னனுக்கும், புலவனுக்கும்

www.saivamonline.com

இடையே நிலவும் உறவில் விரிந்தவை. இங்கே, மன்னன் வெற்றியும், கொடையும், புகழும் விரித்துப் பேசப்படு கின்றனவே அன்றி, சமூகம் பற்றிய சித்திரிப்புக்கள் மிகுதி யாக இடம் பெற்றில. இருசாரருக்கும் இடையே நிலவிய உறவில் கிளைத்த புறப்பாடல்கள் துணையோடு சங்க காலச் சமூக வாழ்வை முற்றாக மதிப்பிட இயலவில்லை.

## புலமை மகளிர்

புலமை மிக்க மகளிர் சிலர் வாழ்ந்ததை இவை அறிவித்தாலும், அவர்களைக் கொண்டு சமூகத்தில் வாழ்ந்த சராசரிப் பெண்மையை மதிப்பிடக் கூடவில்லை. அறிவு நிரம்பிய ஔவையார் போன்ற புலமை மகளிரும் கூட வறுமையில் வாடி, வள்ளல்களை நாடிச் சென்றே வாழ்வு பெற்றுள்ளனர். பெண்பாற் புலவர்கள் பாடல்களிலும் கூட, பெண்மை பற்றிய சிறந்த மதிப்பீடுகள் ஏதும் இடம் பெற்றிருக்கவில்லை. இந்தப் புலமை மரபு கூட, சங்க காலத்திற்குப் பின் ஏன் தொடரவில்லை என்பது, புரியாத புதிராகவே நிற்கிறது. நீண்ட இடைவெளிக்குப் பின்னரே காரைக்கால் அம்மையார் ஒருவரும், ஓர் ஆண்டாளும் சமயத் துறையில் தென்படுகின்றனர்.

## புரியாத புதிர்

வீரயுகம் என்றும் வீர யுகப் பாடல்கள் என்றும் சிலர் சங்க காலத்தையும், அக்காலத்தில் எழுந்த பாடல்களையும் போற்றுகின்றனர். பச்சிளம்பாலகனைப் போர்முனைக்கு அனுப்பும் வீரத்தாயின் சித்திரிப்பில், அவலம் பற்றி எழுந்த ஆவேசம் முன்னிற்கிறதே அன்றி, அறிவு கலந்த பெண்மை யைக் காண முடியவில்லை. கணவன் மறைவுக்குப் பின் உடன் கட்டை ஏற முனைந்த அரசியாரை, இது வேண்டா என்று தடுத்து நிறுத்திய அறிவார்ந்த சமூகத்தை இழித்து உரைத்து விட்டு, உடன்கட்டை ஏறுவதையே பெருமிதம்

www.saivamonline.com

என்று பேசி, தமக்குத் தாமே விலங்கிட்டுக்கொள்ளும் பெண்மைக்கு விடியல் எங்கிருந்து வர முடியும்? பேகனின், பொருந்தாத புற ஒழுக்கத்தால் வாடிய அவன் மனைவி கண்ணகியின் அழுகுரலுக்குப் புலமையாளர்கள், மருந்து காண முற்பட்ட பதிவுகளும் அங்கே உள்ளன. பெண்மைக்கு உரிமை தர மறுத்த ஒரு சமூகம், பெண் தெய்வ வழிபாட்டை மட்டும் தவறாது மேற்கொண்டிருந்த புதுமை புரியாத புதிராகவே உள்ளது. சிலம்பிலும், மணிமேகலையிலும், பரிபாடலிலும், புராண வரலாறு கொண்ட பெண் தெய்வங்கள் பேசப்பட்டுள்ளனர். இந்நிலைக்களம் மேலும் ஆய்வுக்கு உரியது.

## பொருந்தா வாதம்

ஓர் ஆண் மகன் பல பெண்களை மணக்கும் வழக்கம் சங்க காலத்தில் நிலவியிருந்தது. இவ்வழக்கினைச் சங்கச் சான்றோர்களோ, அல்லது வள்ளுவர் போன்ற சமூக நாட்டமிக்க கவிஞர்களோ வெளிப்படையாகக் கண்டிக்க வில்லை. இதனினும் மேலான அவலம் ஒன்று உண்டு. அன்னோர், பலதார மணத்தைக் கண்டிக்காமைக்குக் காரணம், போர் மிகுந்த காலத்தில் கூட்டங்கூட்டமாகப் போர் முனையில் ஆடவர் பலர் இறந்தொழிந்ததால், பெண்கள் தொகை மிகுந்துவிட்டது. அன்னோர்க்கு வாழ்வு தரவே ஓர் ஆடவன் பல பெண்களை மணந்த அச் சமூக அமைப்பைப் புலவர்கள் கண்டிக்க முன் வரவில்லை என்பது அன்னோர் முன்வைப்பது.

இவ்வாதம், ஏற்கத்தக்கதன்று. இளமை மணம் வழக்கி லிருந்த காலத்தில், போர்க்கள இறப்புக்களால், விதவையர் தொகை வேண்டுமானால் கூடியிருக்கலாம். மணமாகாத இளம் பெண்கள், திருமணத்திற்குக் காத்துக் கிடந்ததாகச் செய்திகள் இல்லை. பல பெண்களை மணந்தார் எவரும்,

www.saivamonline.com

விதவைகளுக்கு வாழ்வு தந்ததாகவும் பதிவுகள் இல்லை. எனவே, நெறி திறம்பிய, காம நாட்டத்தால், ஒருவனே பல பெண்களை மணப்பதும், அவன் இறந்தால் அவன் துணைவியர் ஒட்டுமொத்தமாக, உடன்கட்டை ஏறி மாய்வதும் பெருவழக்காகவே சங்க காலத்தில் நிலவி யிருந்துள்ளது.

## இருண்ட காலம்

பலதாரமணம் மட்டுமன்றி, ஆடவர்கள் பரத்தையர் உறவு கொண்டிருந்தமைக்கும் சங்க நூல்களில் சான்றுகள் உள்ளன. பூம்புகாரிலும், மதுரையிலும் பரத்தையர் சேரிகள் இருந்தமையைச் சிலப்பதிகாரம் பதிவு செய்கிறது. அக்காலச் சான்றோர்களும் பரத்தைகளைக் கண்டித்தனரே அன்றி, பரத்தமையை நாடிச் செல்லும் ஆடவர்களைக் கண்டிக்கத் தவறினர். புலால் உண்பார் அதை நிறுத்திக் கொண்டால், புலால் விற்பவர் கொலைத் தொழில் புரிய மாட்டார் என்று கூறிய வள்ளுவரும் கூட, பரத்தையரிடம் செல்லும் விருப்பம் ஆடவரிடம் ஒழிந்தால், பரத்தையரே இருக்க மாட்டார்கள் என்று கூற முன்வரவில்லை. இவற்றை எல்லாம், நன்கு மதிப்பிடும் போது, சங்க காலம் ஒரு பொற் காலம் என்று சித்திரிக்கப்பட்டாலும், சமூக வாழ்வில் பெண் களுக்கு அது ஓர் இருண்ட காலமாகவே நிலவியிருந்தமை தெளிவாகிறது.

## எதிர் நீச்சல் இலக்கியம்

திருவள்ளுவரில் பெண்மையைச் சற்றே மேலெடுத்துச் செல்ல முதன் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதை இனங்காண முடிகிறது. சங்க காலத்தை ஒட்டிய காலப் பகுதியில் வாழ்ந்தவர் திருவள்ளுவர். ஆயினும், அவர் தமது நிகழ்காலச் சமூக விருப்பங்களை உள்ளவாறு புனையாது, தீமைகளைக் கண்டித்தும், நன்மைகளை வரவேற்றும், அறங்

www.saivamonline.com

கூற முற்பட்டுள்ளார். அவரது கள்ளுண்ணாமை, புலால் மறுத்தல், வரைவின் மகளிர் போன்ற அதிகாரங்கள் அவரை, எதிர் நீச்சல் இலக்கியம் படைக்கும் துணிவு உடையவர் என்று இனங்காட்டுகின்றன.

## பிறனில் விழையாமை

பண்டைத் தமிழகத்தில், மாற்றான் ஒருவன் மனைவியை விரும்பும் கொடுமை நிலவியிருந்ததை, வள்ளுவரின் பிறனில் விழையாமை என்ற அதிகாரம் இனங்காட்டுகிறது. மாற்றான் மனைவியைக் காமக் கண் கொண்டு நோக்காத ஆண்மையை, அவர், பேராண்மை என்று பாராட்டுகின்றார். புறப்பகை வெல்வது மட்டுமே ஆண்மை என்ற நிலையை மாற்றி, அகப்பகையாகிய காமத்தை வெல்லுதலையும் அவர் ஆண்மை என்று போற்றுகிறார். ஒருவகையில் இது பெண்மைக்குப் பாதுகாவலாக அமைகிறது. ஒரு பெண்ணை மணந்த ஆண்மகன் ஒருவன், பொருளாதாரத்திலோ, வலிமையிலோ குறைந்தவனாக இருந்தாலும், தன் கீழ் தனக்குக் கட்டுப்பட்டு வாழ்பவனாக இருந்தாலும், அவன் மனைவியை அடைதல் எளிதென்று கருதுவாரை, வள்ளுவர் கண்டிக்கத் தவறவில்லை.

## சில குற்றச்சாட்டுக்கள்

ஒரு பெண்ணை மணந்துகொண்டு இல்லறம் தொடங்கும் ஓர் ஆண் மகன் பின்பற்றி ஒழுக வேண்டிய நல்லறங்கள் இவை, இவை என்று சுட்டிச் செல்லும் வள்ளுவர், ஒரு பெண்ணை மணங்கொள்ளும் ஆண் மகனுக்கு உரிய கடமைகளையோ, அவன் மேற்கொள்ள வேண்டிய ஒழுக்கங்களையோ இனங்காட்டவில்லை. ஆனால், இல்வாழ்க்கையை அடுத்து, வாழ்க்கைத் துணை நலம் என்ற ஓர் அதிகாரம் அமைத்து, மனைவிக்கு இருக்க வேண்டிய குணநலன்களையும், அவளது கடமைகளையும்

www.saivamonline.com

வலியுறுத்துகிறார். இல்லறம் ஏற்கும் இருவரில், ஒருவருக்கு மட்டும் கட்டுப்பாடுகளை விதிக்கும் வள்ளுவர், பெண்மையை அடிமைப்படுத்தும் எண்ணமுடையவரே என்று குறை சொல்வாரும் உளர். என்றாலும், **பெண்ணின் பெருந்தக்க யாவுள** என்றும், **இல்லதென் இல்லவள் மாண்பானால்** என்றும் கூறும் திருக்குறள் தொடர்கள் பெண்மைக்குச் சிறப்புச் சேர்ப்பனவாகவே காணப் படுகின்றன.

மனைவி தரும் இன்பம் ஒன்றை மட்டும் விரும்பி, அவளுக்கு அடிமைப்பட்டு, தான் செய்ய வேண்டிய கடமைகளைக்கூடச் செய்யத் தவறும் ஆண்மகனைக் கண்டிக்கும் நோக்கிலேயே வள்ளுவரின், பெண்வழிச் சேறல் என்ற அதிகாரம் அமைகிறது. ஆயினும், புதுமை எண்ணம் கொண்ட பெண்கள், அவர்களது பெண்ணியப் பார்வையில் இவ்வதிகாரம் பெண்மையை இழிவுபடுத்துவதாகவே வாதிடுகின்றனர்.

## மருதத் திணைக்கு ஒரு மறுப்பு

காமத்துப்பாலில், திருவள்ளுவர் செய்திருக்கும் மாற்றம், அவரது பெண்மை பற்றிய நல்லெண்ணத்திற்குச் சான்றாக அமைகிறது. குறிப்பாக, பரத்தமை பற்றி வரும் ஊடலைப் புறந்தள்ளி, தலைவன் தவறேதும் செய்யாது இருக்கவும், தன் அன்பு மிகுதியால், அவன் தவறு செய்திருப்பானோ என்று அஞ்சி, தலைமகள் ஊடுவதாக மாற்றியமைத்திருப்பது, சங்க கால அக இலக்கிய மருதத் திணைக்கு வள்ளுவர் மறுப்புத் தெரிவிப்பதாகவே தோற்றம் தருகிறது. ஓர் ஆண் பல பெண்களை மணக்கலாம். ஆனால், ஒரு பெண் ஓர் ஆண் மகனை மட்டுமே மணந்து வாழ வேண்டும் என்ற சங்ககால வாழ்க்கைப் போக்கை ஆதரிக்காத

www.saivamonline.com

திருவள்ளுவர், அவனும், ஒருத்தியோடு மட்டுமே வாழ வேண்டும் என்பதை,

> **"உடம்பொடு உயிரிடை என்னமற் றன்ன**
> **மடந்தையொ டெம்மிடை நட்பு"** *(திரு. 1122)*

என்ற குறளால், மறைமுகமாக வற்புறுத்தியிருப்பதாகச் சிலர் கூறுகின்றனர். ஓர் உடம்புக்கு ஓர் உயிர் என்றால், ஓர் உயிருக்கும் ஓர் உடம்புதானே இருக்க முடியும் என்ற நுண் பொருளில் இக்குறள் பொருள்கொள்ளப்பட வேண்டும் என்று அன்னார் பொருள் விரிக்கின்றனர். வள்ளுவர் ஏன் வெளிப்படையாகத் தம் கருத்தை முன்மொழியவில்லை? என்பதற்கு விடை கூறுவார் இலர். இக்கருத்தை ஏற்றால், 'ஒருவனுக்கு ஒருத்தியே' என்ற முதல் முழக்கம், வள்ளுவத்தில் அரும்பியதாகக் கொள்ளலாம். இக்கருத்து மேலும் விரிவாக ஆராயப்பட வேண்டுவது.

## முதற் காப்பியம்

கதை பொதிந்த பேரிலக்கியங்கள் தொல்காப்பியர் காலத்திற்கு முன்னரே தமிழில் நிலவியிருந்தன என்பதைத் தொல்காப்பியக் குறிப்புக்களால் அறிய முடிகிறது. ஆனால், அவற்றுள் ஒன்றும் இன்றுவரை கிடைத்தில. பிற்காலத்தில் எழுந்த முதல் கதை பொதி இலக்கியமாக, இளங்கோவின் சிலப்பதிகாரம் நமக்குக் கிடைக்கிறது. இதனை, "உரையிடை யிட்ட பாட்டுடைச் செய்யுள்" என்றும், "தொடர்நிலைச் செய்யுள்" என்றும் உரைகாரர்கள் குறித்தனர். தமிழில் எழுந்த முதல் காப்பியம் என்றும் இதனைக் கருதலாம். "கம்பன் காலம் வரை – பெண்மை" என்ற இம் முதல் இயலுக்குச் சிலப்பதிகாரத்தை ஆராய்வது பெரிதும் துணையாக அமைய முடியும். ஏனெனில், சிலப்பதிகாரக் கதை தமிழ் மண்ணில் நடந்ததாகச் சித்திரிக்கப்படுவதால், தமிழ்ப் பெண்மை பற்றிய ஆய்வில், சிலப்பதிகாரம்

www.saivamonline.com

தரும் ஒளிக்கீற்றுகள் பெரிதும் நம்பகத்தன்மை கொண் டிருக்கும்.

## காப்பிய வகைகள்

தமிழில் எழுந்த பெருங்காப்பியங்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று: தமிழ்க் காப்பியம், இரண்டு: தமிழில் எழுதிக்கொள்ளப்பட்ட காப்பியம். சிலப்பதிகாரமும், பெரிய புராணமும் போல்வன தமிழ் மண்ணில் நடந்த கதை மேல் புனையப்பட்டவை. சீவக சிந்தாமணியும், பெருங் கதையும் போல்வன, பிற மண்ணில் நடந்த கதை மேல் தமிழில் புனைந்து கொள்ளப்பட்டன. தமிழ்ப் பெண்மை; தமிழர் பண்பாடு; தமிழர் சால்பு முதலியனவற்றை ஆராய்வதில், முதல் வகைக் காப்பியங்களின் பங்களிப்பே பெரிது என்பதை யாரும் உணர முடியும். சிலப்பதிகாரம் இவ்வகையில் பெண்மை பற்றிய ஆய்விற்குப் பெரிதும் துணை நிற்கிறது.

## சிலம்பில் மணம்

சங்க கால அக இலக்கியங்கள், ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் விரும்பி மணக்கும் காந்தருவ முறையை வற்புறுத்திய போதிலும், தமிழில் எழுந்த முதல் காப்பிய மாகிய சிலப்பதிகாரத்தில், கண்ணகி கோவலன் திருமணம், பெற்றோர்களால் நிச்சயிக்கப்பட்ட பெருந்திணைத் திருமண மாகவே காட்டப்பட்டுள்ளது. எனவே, காந்தருவ வழக்கு என்ற தொல்காப்பிய நெறி, கற்பனை அளவில், அக இலக்கியச் சித்திரிப்பாக நின்றதே அன்றி, வாழ்வாக மலர வில்லை என்பது தெளிவாகிறது. "கற்பெனப் படுவது கரணமொடு புணர" என்ற தொல்காப்பியத்தில் சுட்டப் பெற்ற மணச் சடங்கினை முதன் முதல், கண்ணகி கோவலன் திருமணத்தில்தான் காண முடிகிறது.

www.saivamonline.com

செல்வக் குடும்பத்துப் பெண்ணை, அதே அளவு செல்வம் படைத்த வேறு ஒரு குடும்பத்துப் பிள்ளைக்கு மணம் முடிக்கும் பெற்றோர் விருப்பமே இத்திருமணத்தில் நிலைநாட்டப்படுகிறது.

## சமூக அமைப்பு

மனைவி எந்தவிதக் குறைபாடும் இல்லாதபோதும், தன்னிச்சையான போக்கில், கலை ஆர்வத்தைக் காரணம் காட்டி, ஆடவன், மனைவியைப் பிரிந்து, வேறு ஒரு ஆடல் மகளோடு, பூம்புகாரிலேயே வாழ்ந்திருந்ததை, கண்ணகி காலச் சமூக அமைப்பில் காண்கிறோம். அவனைத் திரும்பப் பெறும் முயற்சி ஒன்றனையும் மேற்கொள்ளாது, வாடிக் கிடக்கும் பெண்மையின் இயலாமையே இங்கே கற்பென்று பேசப்படுகிறது. கண்ணகியின் பெற்றோர்களோ, கோவலன் பெற்றோர்களோ, சமூகப் பெரியவர்களோ கோவலனை நெறிப்படுத்தி, கண்ணகியின் பால் சேர்க்க முயன்றதாகச் சிலப்பதிகாரத்தில் குறிப்பேதும் இல்லை. ஒருவேளை, கோவலனைத் தட்டிக் கேட்கும் தார்மீக பலம், அவர்களுக்கே கூட இல்லாதிருந்திருக்கலாம். கண்ணகியின், துன்பம் மறைத்து வெளிப்படுத்திய பொய்யான முறுவலுக்கு, கோவலன் பெற்றோரால் மனம் வருந்த இயன்றதே அன்றி, அவனை நெறிப்படுத்துவதற்கு அவர்களுக்குத் துணிவிருக்க வில்லை.

## பீடன்று

நாடக வழக்குச் சார்ந்த, சங்க அக இலக்கியங்களில் கூட கணவன், மாற்றாள்பால் பிரிந்திருக்கையில், தலைவி, தோழி வாயிலாக அவனைத் தன்பால் கொணரும் முயற்சி யில் ஈடுபட்டதற்குச் சான்றுகள் உள்ளன. நடைமுறை வாழ்வில் அதற்கு இடம் இருந்திருக்கவில்லை என்பதை, சிலப்பதிகாரத்தில் காண முடிகிறது. கண்ணகியின், வைதிக

www.saivamonline.com

நெறி வாழும் பார்ப்பனத் தோழி, கணவனைத் திரும்பப் பெற சோமகுண்டம், சூரிய குண்டங்களில் நீராடி, மன்மதனைத் தொழுமாறு கண்ணகியிடம் வேண்டுகின்றாள். கண்ணகியோ, அத்தகு செயல் தனக்குப் பெருமை தருவது அன்று என்ற பொருளில், "பீடன்று" என்று உரைக்கிறாள். இதனை, ஆராய்ந்த திறனாய்வாளர்கள், கணவன் குறை யினைக் கடவுள்முன்னர்க் கூட எடுத்துரைக்கக் கற்பரசிகள் விரும்பமாட்டார்கள் என்று நயங்காட்டிப் போந்தனர். கோவலனின் பரத்தமை வாழ்வை, "நல்வினை" என்று காப்பியத்தின் அறநெறிப் பாத்திரம் சான்றளித்து மகிழ்கிறது.

## பெண்ணியப் பார்வை

நீண்ட இடைவெளிக்குப் பின் மாதவிமேல் சினம் கொண்ட கோவலன், கண்ணகிபால் திரும்பிவந்து, 'மதுரைக்கு எழுக' என்ற போதும் கண்ணகி சினம் காட்ட வில்லை. அவன் சொல் வழி, இரவில், அவனோடு மதுரைக்குப் புறப்படுகிறாள். ஊர் எல்லை தாண்டுமுன் மதுரை வந்து விட்டதோ என்று, அறியாமை மீதுர வினவு கிறாள். தெய்வமுற்ற சாலினி என்பாள் தன்னைக் கணவன் முன் புகழ்ந்துரைத்த போது நாணமுற்றுக் கணவன் முதுகின் பக்கம் மறைகிறாள். கோவலன் வேண்டிய போது, பேதைமைப்பட, ஒற்றைச் சிலம்பை விற்றுவர வழங்கு கின்றாள். மேற் குறித்த, பெண்மையின் அறியாமையும், இயலாமையுமே பெருங்கற்பாக இந்நூலுள் சித்திரிக்கப் பட்டுள்ளன. பெண்ணியப் பார்வையில், தற்கால மகளிர் சமுதாயம், கண்ணகி இவ்வாறு சித்திரிக்கப்பட்டிருப்பதை ஏற்றுப் போற்றுமா என்பது ஐயமே.

## முதல் அடையாளம்

பன்னெடுங் கால ஆண் ஆதிக்கத்துக்கு உட்பட்ட பெண்ணடிமைத் தடத்தில், கண்ணகி நீதி கேட்டு நிமிர்ந்

www.saivamonline.com

தெழுந்த செயலே, பெண்ணிய எழுச்சியின் முதல் அடையாளமாக, இலக்கியத்தில் பதிவாகியுள்ளது. பெண்மையின் சீற்றம், அஞ்சாமை, அறிவுத் திறன், போர்க்குணம் யாவும் கிளர்ந்தெழும்போது பெண்மைக்குள் அடங்கிக் கிடந்த ஆற்றல்களை இனங்காண முடிகிறது. இத்துணை ஆற்றல்களையும் புறங்காட்டாது, அடங்கிக் கிடக்கும் பெண்மை மீது, நியாய உணர்வு படைத்தவர்களுக்குச் சினமே மூள்கிறது. கண்ணகியின் இந்தச் சீற்றத்தை முன்னிறுத்தி இதனையே மேல்வரிச் சட்டமாக்கிப் பின் வந்த பெண்மை கிளர்ந்தெழுந்திருந்தால், ஒரு வரலாற்றுப் பரிணாம வளர்ச்சியைத் தமிழகம் கண்டு மகிழ்ந்திருக்கும். ஆனால், அந்தப் பதிவு அத்துடன் அடங்கிப் போய், பெண்மை மீண்டும், விலங்குகளை எடுத்துத் தமக்குத் தாமே பூட்டிக் கொண்ட அவலத்தை எண்ணி, நம் நெஞ்சம் துணுக்குறுகின்றது.

## வரலாற்று முடக்கம்

நிறைவில், பாண்டிய மன்னனைக் கண்ணகி "தன் தீது இலன் என்று தளர்ச்சி நீங்கி, என் தீது என்று எய்தியது உணரும்" போதும், "தென்னவன் தீதிலன்" என்று மன்னிக்க முன்வரும்போதும், அபூர்வமாகக் கிளர்ந்தெழுந்த பெண்மை, பெண்மைக்கே உரிய தன்னைத் தான் நொந்து கொள்ளும் இயல்பால், வரலாறாக விரியாமல், பெட்டிப் பாம்பாய் ஒடுங்கிப் போய் விடுகிறது. அவள், தெய்வமானாள்; விண்ணில் சேர்ந்தாள்; சேரன் கோட்டம் எடுத்தான்; என்பதால் எல்லாம், பெண்மை பெற்ற எழுச்சியின் அடையாளம் நிலைநிறுத்தப்படவில்லை. 'பெண் தெய்வ'ப் பட்டியலில் இன்னும் ஓர் எண்ணிக்கை கூடியதோடு, இந்த எழுச்சி வரலாறு முற்றுப் பெற்றுவிடுகிறது.

## பரமபதப் பாம்பு

பெண்மை மேலெழுவதற்குரிய பிறிதோர் அடையாளத்தை மாதவிபால் காண முடிகிறது. அரசனால்,

www.saivamonline.com

தலைக்கோல் அரிவை பட்டம் பெற்ற நடன மகள் மாதவி, வீதியில் ஏலப்பொருள் போல் நிறுத்தப்பட்டாலும், தந்தை பெயர் தெரியாத மாதவிக்கு, மனைவி என்கிற சமூகப் பெருமிதத்தைக் கோவலன் தருவது ஆறுதலாக அமைகிறது. அவள் வயிற்றில் பிறந்த பெண்ணுக்குத் தன் குல தெய்வத் தின் பெயராகிய "மணிமேகலை" என்ற பெயரைக் கோவலன் சூட்டும் போது, பெண்மை மகுடம் சூட்டிக் கொண்டது போன்ற எண்ணம் நம்முள் எழுகிறது. கலை விரும்பிய காமம் சார்ந்த கோவலன் அவளை ஐயுற்றதும், அவளை ஆடல் மகள் தானே என்று எள்ளி நகையாடியதும், "சலம்புணர் கொள்கைச் சலதி" என்று பழி தூற்றியதும், வளர்ந்த மகள் இருக்கிறாள் என்ற பொறுப்புணர்வு சிறிதும் இன்றி அவளை விட்டு நீங்கியதும் அறிய வரும் போது, மீண்டும் பெண்மை, பரமபதப் படத்தின் பாம்பின் வாய்ப் புகுந்து, பழைய இடத்திற்கே சென்று சேர்ந்து விடுகிறது.

## மணிமேகலை

மாதவி தன்னைப் பிரிந்த கோவலனை மீண்டும் அடைய முயன்ற முயற்சிகள் யாவும் தோற்கின்றன. தன் வயிற்றில் பிறந்த மணிமேகலையை, "மாபெரும் பத்தினி மகள்" என்று அடையாளப்படுத்த வேண்டியவள் ஆகிறாள். இருந்தும் தன் மகளை, சமூகத்தில் தக்க ஒருவனுக்கு மணம் முடிக்க அவளால் இயலவில்லை. சோழ இளவரசன், அவளை விரும்பியது, அவள் அழகில் ஏற்பட்ட மையலே அன்றி, அவளுக்கு அரியணையில் இடம் தருவதற்கு அன்று என்பது புலப்பட்டு நிற்கிறது. ஓர் இளம்பெண் இறுதியில் பௌத்த விகாரத்தில், புத்த பிக்குணியாக அடைக்கலம் அடைகிறாள். மாதவி, துறவறம் பூணுகிறாள். அரசு விருது பெற்ற ஒரு நடனமணிக்கும், அரசருக்கு இணையான செல்வக் குடியில் பிறந்த கோவலனுக்கும் பிறந்திருந்தும்,

www.saivamonline.com

அழகு நிறைந்திருந்தும், சமூகத்தில் எந்த ஓர் ஆடவனும் அவளை மனைவியாக ஏற்றுக்கொள்ள முன்வராத அவலம், நம் நெஞ்சத்தை வருத்துகிறது.

## சீவக சிந்தாமணி

வளையாபதியும், குண்டலகேசியும் ஐம்பெருங்காப்பியப் பட்டியலில் இடம் பெற்றிருப்பதோடு முடிகிறது. சீவக சிந்தாமணி வீர தீரச் செயல்களால், கதைத் தலைவன் பல பெண்களை மணந்து, அவர்களை ஆங்காங்கே விட்டு நீங்குதலைப் பேசி நிறைகிறது. “மண நூல்” என்று அழைக்கப்பட்டு, “காதல் பாட, எங்களுக்கும் வரும்” என்று சமணர் ஒருவர், நிரூபணம் செய்த நூல் என்று சீவக சிந்தாமணியைக் கூறுவர். இந்திய நாடெங்கும், பலதார மணத்துக்கு வழங்கப்பட்டிருந்த அங்கீகாரத்தை தமிழ் மக்களுக்கும் திருத்தக்கத் தேவர் புதுப்பித்து வழங்கினார் என்பதற்கு மேலாக, இந்நூலுள், பெண்மை பெற்ற பெருஞ் சிறப்பு ஏதும் இல்லை.

## அடிமன விழைவு

சீவக சிந்தாமணியின் வருகையும், அதன் கதைப் போக்கும், சீவகனின் வீரமும், அவன் கொண்ட மணங்களும் தமிழ் மக்களுக்கு, குறிப்பாகச் சோழ வேந்தர்களுக்குப் பெரிதும் மகிழ்ச்சியைத் தந்திருக்கிறது. அதன் சுவையில், அவர்கள் கட்டுண்டு கிடந்துள்ளனர். இம்மயக்கத்தை மாற்றவே சேக்கிழார் பெரியபுராணம் இயற்றினார் என்று திருத்தொண்டர் புராண வரலாறு பேசுகிறது. இது உண்மையானால், பெரியபுராணம் தோற்றம் கொள்ளும் காலம் வரையிலும், தமிழ் மக்களுக்கு அடிமனத்தில் ஓடிய விழைவு இன்னது என்பதை எடுத்துரைக்கத் தேவையில்லை. பிற்காலச் சோழர் வரலாற்றில், மன்னர்கள் எண்ணற்ற

www.saivamonline.com

பட்டத்தரசியரைக் கொண்டிருந்தனர் என்பதைக் கல்வெட்டுச் சான்றுகள் உறுதி செய்கின்றன.

## ஆண்டாள்

சைவ — வைணவ சமயங்கள் எழுச்சி பெற்ற காலத்தி லும் பெண்மை பெரிதும் வீறு கொண்டு எழுந்ததற்கான சான்றுகள் ஏதும் காணப்படவில்லை. மானுட வாழ்வின் எல்லைக்கு அப்பாற்பட்ட ஒரு தெய்வப் பெண்மையாக, ஆண்டாள் வரலாறு சித்திரிக்கப்பட்டு நிறைகிறது. "பெண்ணியம்" பற்றிய புதிய வரவாக ஆண்டாள் வரலாற் றிலிருந்து எடுத்துக்கொள்ள ஏதும் இல்லை. மானுடப் பெண் இறைவனை மணப்பது என்பது, இறைமை சார்ந்த கோட்பாடு. நல்ல கவிதைகள் ஆண்டாள் வழி தமிழுக்குக் கிடைத்தன என்பதே மகிழ்ச்சிக்கு உரியது. வைணவத்திலும் ஆண்டாளுக்குப் பின், பெண்மையின் சாதனை வரலாறு ஏதும் புதுப்பிக்கப்படவில்லை.

## மங்கையர்க்கரசி

பெரியபுராணம் பாடிய சேக்கிழார், கம்பருக்குக் காலத்தால் சிறிது பிற்பட்டவர் என்பர் ஒருசார் வரலாற்று ஆய்வாளர். அது எங்ஙனமாயினும், பெரியபுராணத்தில் இடம் பெற்றிருக்கும் நாயன்மார் வரலாறுகள் சுந்தரர் காலத்துக்கு முற்பட்டவை. அறுபத்து மூவர் பட்டியலில் இடம் பெற்ற மகளிர் மூவர். இசைஞானியார்— சுந்தரரைப் பெற்றெடுத்தவர் என்ற அளவில்— சிறப்புப் பெறுகிறார். மங்கையர்க்கரசியார், பழையாறைப் பகுதியில் வாழ்ந்திருந்த சோழர் குலமகள். சிவநெறி மாறாச் சிந்தையர். இவரை சைவ நெறிக்கு முற்றிலும் மாறான, சமண நெறி நின்ற கூன்பாண்டியனுக்கு மணம் முடித்தனர் என்பது வரலாறு. சமய வளர்ச்சியில், மங்கையர்க்கரசியார் ஆற்றிய பணிகள் பற்றிய ஆய்வன்று இது. அழகும், அறிவும், சைவப் பற்றும்

www.saivamonline.com

கொண்ட ஒரு பெண்ணை, அவர் உணர்வுகளுக்கு மதிப்புத் தராது, சமணத்தில் தலை நின்ற, உடல் ஊனம் கொண்ட ஒருவனுக்கு மணம் முடித்தது எவ்வாறு நிகழ்ந்தது? அரசர் குலமகளை வேறோர் அரச குமாரனுக்கு மணம் முடிப்பது என்பதற்கு மேலாக, இத்தகு மணங்களிலே பெண்மை உணர்வுகளுக்கு மதிப்பேதும் தரப்பட்டிருக்கவில்லை என்பதே உண்மை.

## காரைக்கால் அம்மையார்

ஒரு மாங்கனி பற்றி ஐயம் கொண்டு, தெளிந்து, மனைவியிடம் தெய்வத் தன்மை இருப்பதை உணர்ந்து, அவரைப் பிரிந்து, வேறோர் பெண்ணைக் கணவன் மணந்து கொண்ட போதும், ஒருநாள் அவர் வருவார் என்று, அழகும், இளமையும் தாங்கிநின்ற பெண்மையைக் காரைக்கால் அம்மையார் வரலாற்றில் காண்கிறோம். தெய்வநிலை பெற்றனர் அம்மையார் என்பது சமயஞ் சார்ந்த மதிப்பீடு. சமூக நோக்கில் பெண்மையின் தனி வாழ்வில் ஏற்பட்ட சீர்குலைவாகவே அம்மையார் வரலாறு நிறைகிறது. பெரிய புராணத்தில், கணவர் தெய்வ அருள் பெற்றவர் என்பதை அறிந்த போதும், பெண்கள் அஞ்சி ஒதுங்காது அவருக்குத் துணை நின்றுள்ளனர். அம்மையார் வரலாற்றில் மனைவி தெய்வத் தன்மை பெற்றவர் என்று தெரிந்ததும், அஞ்சி ஒதுங்கிய ஆண்மையைக் கண்டு நாம் வியக்க வேண்டியுள்ளது.

## சில வரலாறுகள்

சிவன் திருமேனியில் ஒரு சிலந்தி விழுந்து விட்டவுடன் தாய் அன்பில் அதனை வாயால் ஊதி நீக்கிய மனைவியைச் சினந்து பிரிந்த கணவனும், பூசனைக்கு உரிய பூவை மோந்தமைக்காக, ஒரு பெண்ணின் மூக்கை அரிந்த நாயன்மாரும், இது போதாது என்று, கணவரே அப்

www.saivamonline.com

பெண்ணின் கையை வெட்டிய வரலாறும், தம் இல்லத்துப் பணியாளர் சிவனடியாராகத் திரும்பி வந்த போது, அவர் கால்களில் நீர் ஊற்றத் தயங்கியமைக்காக மனைவியை ஒதுக்கி வைத்த கணவர் செயலும், சிவபக்தியில் தலைநின்ற போதும் மனைவியை விடுத்து, இன்பத்துறையில் எளிய ரான கணவர் வரலாறும் சமயநோக்கில் ஏற்கத் தக்கனவே யன்றி, பெண்ணிய நோக்கில் ஏற்கத் தக்கனவாக அமைந்தில.

## கம்பன் காலம்

மேற்குறித்தனவும், இவை போல்வன பிறவுமாகிய சான்றுகளை, உற்றுநோக்கி ஆராயும்போது, "கம்பன் காலம் வரை பெண்மை" பெரிதாக ஒன்றும் எழுச்சி பெற்றிருக்க வில்லை என்பதே போதருகிறது. அங்கொன்றும் இங் கொன்றுமாகக் காணப்படும் ஒருசில விதிவிலக்குகளைத் தவிர, பெண்மை, முடி சூட்டிக்கொண்டு எழுந்து நின்றதாக உறுதி செய்ய முடியவில்லை. இத்தகு ஒரு காலக் கட்டத்தில் தான் கம்பன் இராமகாதையைத் தமிழில் தர முன் வருகிறான். பல்வேறு இடையூறுகளையும் தாண்டி கம்பன், பெண்மைக்குப் பெருமை சேர்க்க முயன்றுள்ளானா? அம்முயற்சியில் அவனுக்கு வெற்றி கிட்டியதா? அவன் காப்பியப் படைப்பால் பெண்மைக்கு கிடைத்த சிறப்புக்கள் எவை எவை?

இவற்றை எல்லாம் ஆராய்ந்து காணும் முன்பாக கம்பன் தன் காப்பியத்திற்கு, இராமன் கதையைத் தேர்ந்து கொண்டமைக்கு ஏதேனும் பெரிய நோக்கம் இருக்குமா? என்பதை அடுத்த இயலில் விரிவாக ஆராய்ந்து மேற் செல்லலாம்.

www.saivamonline.com

# 2. கம்பனின் கதைக்கரு

## பெருங்காப்பியங்கள்

**த**மிழில், சிற்றிலக்கியங்கள் வளர்ச்சி பெற்ற அளவிற்குப் பெருங்காப்பியங்கள் வளர்ச்சி அமையவில்லை. தமிழ்ப் பெருங்காப்பியங்களின் எண்ணிக்கை, பத்துக்கு மேல் இல்லை. இந்த வறுமைக்கு யாது காரணம் என்பது, இதுவரை ஆராய்ந்து நிறுவப்படவில்லை. நீண்ட பாரம்பரிய வரலாறு படைத்த தமிழ் மொழியில், பெரும் எண்ணிக்கையில் பெருங்காப்பியங்கள் தோன்றியிருக்க வேண்டும். வடமொழியிலும், மேலைநாடுகளில் செம்மை பெற்ற மொழிகளிலும், கம்பனுக்கு முன்னும், பின்னும் தோன்றிய பெருங்காப்பியங்களின் எண்ணிக்கை பெரிது. பாடுவதற்கு உரிய கதை நிகழ்வுகளும், வரலாறும், தமிழ் மொழியில் மிகுந்திருந்தும், கவிஞர்கள் பெருங்காப்பியங்களைப் பாடுவதில் ஆர்வங் கொண்டிருக்கவில்லை என்றே தோன்றுகிறது. காப்பியம் புனைவதற்குரிய மேல் வரிச்சட்டமாக, வடமொழியில் இருப்பது போல் தமிழில், காப்பிய இலக்கணங்கள், வகுத்துரைக்கப்படாமை கூட இந்த வறுமைக்குக் காரணமாகலாம்.

## கதைக்கரு தேர்வு

இன்று கிடைத்திருக்கும் பெருங்காப்பியங்களும், கதைக் கருவில் தமிழ் மண்ணுடன் ஒட்டாமல் அன்னியப்பட்டே நிற்கின்றன. சீவக சிந்தாமணியையும், பெருங்கதையையும்,



www.saivamonline.com

கந்தபுராணத்தையும், மகாபாரதத்தையும் தமிழில் தந்தவர்கள், தமிழ் மண்ணில் பிறந்து, வாழ்ந்து, தமிழ் மரபுகளை நன்கு அறிந்தவர்களே. இருந்தும், ஒரு கதைக் கருவை இந்தத் தமிழ் மண்ணிலிருந்து அவர்கள் தேர்ந்து கொள்ளாமைக்கு, வேறு காரணங்கள் இருந்தேயாக வேண்டும். இருபதாம் நூற்றாண்டில், உரை நடையில் எழுந்த புதினங்கள் பலவும், இந்த மண்ணில் நிகழ்ந்த வரலாற்று நிகழ்வுகளைப் பின் புலமாகக் கொண்டே வடிக்கப்பட்டுள்ளன. எனினும், சிலப்பதிகாரமும், பெரிய புராணமும் தவிர, பிற பெருங் காப்பியங்களுக்குக் கதைக்கரு, தமிழ் மண்ணிலிருந்து தேர்ந்து கொள்ளப்படவில்லை.

## மணிமேகலை

சீத்தலைச் சாத்தனார் மணிமேகலைத் துறவைப் பாடத் தேர்ந்தமை, தான் மேற்கொண்டொழுகிய, பௌத்த மதக் கருத்துக்களைத் தமிழ் மண்ணில் விதைக்கத்தான் என்பர் திறனாய்வாளர்கள். காப்பியக் கலையழகைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு, சமயப்பிரச்சாரம் அங்கே துருத்திக்கொண்டு முன்னே நிற்பதை மறுத்தல் இயலாது. சிலப்பதிகாரத்தோடு கதைத் தொடர்ச்சி உடையதாய், அதே காலப் பகுதியில் தோற்றம் கொண்டிருந்தும், சிலப்பதிகாரம் பெற்ற வரவேற்பை, மணிமேகலை தமிழகத்தில் பெறாமைக்கு இந்த சமயப் பிரச்சாரமே காரணம். சிலப்பதிகாரத்திலும் சமய நோக்கு உண்டு. ஆயினும், காப்பிய எழிலை வீணடிக்காது சமய உண்மைகள் அதில் இலைமறை காயாகவே பதிவு செய்யப்பட்டுள்ளன.

## சிந்தாமணியின் வீழ்ச்சி

சீவக சிந்தாமணியில் கவிதை அழகும், காப்பிய எழிலும், நிறைந்திருந்தும் இன்று அதனை விரும்பிப் பயில்வாரும், மேடை ஏறி முழங்குவாரும் இலர். அதனை

www.saivamonline.com

வளர்க்கவும், அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லவும், முன் வருவாரைக் காண முடியவில்லை. காரணம், அதுவும் சமண சமயத்தை நிலை நிறுத்தும் நோக்கில், புனையப் பட்டமையே ஆகும். ஒரு மதத்தாரை, ஒரு சமயத்தாரை அல்லது ஒரு கூட்டத்தாரை மகிழ்விக்க மட்டுமே ஒரு பெருங் காப்பியம் தோன்றியிருக்குமானால், அவர்கள் அருகிவிட்ட காலத்தில், அக்காப்பியம் சென்று தேய்ந்து மறையும். கதைக் கரு, இம்மண்ணின் மரபுகளோடு பெரிதும் பொருந்தி வராமையும், சமண சமய வீழ்ச்சியும், சமணர்கள் எண்ணிக்கை பெருமளவில் குறைந்து போனமையும் சிந்தாமணியின் வீழ்ச்சிக்குக் காரணங்கள் எனல் தகும். பெருங்கதைக்கும் இது பொருந்தும்.

## காப்பிய வாழ்வு

மகாபாரதத்தைத் தமிழில் தந்த வில்லிபுத்தூர் ஆழ்வார், வெளிப்படையாகவே இடையிடையே, கண்ணனின் இனிய வரலாறு இடம் பெறுவதாலேயே இதனைப் பாட முன் வந்தேன் என்று பறைசாற்றி விடுகிறார். கந்த புராணமும் இவ்வாறே முருகன் பெருமை கூறவே அமைந்து நிறைகிறது. காப்பியங்களின் வாழ்வு, இவற்றைப் போற்றிக் கொள்ளும் கூட்டத்தாரின் வாழ்வை ஒட்டியதாகவே அமைகிறது. திருமால் அவதாரங்களுள் ஒன்றாகிய, கிருஷ்ணாவதாரத் தைப் பேசிய வில்லிபுத்தூராருக்குக் கிடைக்காத வரவேற்பு, இராமனைப் பேசிய கம்பனுக்கு வாய்த்தமை எங்ஙனம்?

## சைவ – வைணவ எழுச்சி

கி.பி. ஏழாம் நூற்றாண்டு தொடங்கி, தமிழகத்தில் பெரும் எழுச்சியோடு சைவ வைணவ சமயங்கள் கிளர்ந்து எழுந்தன. வைதிக சமயத்தை எதிர்த்து வந்த பௌத்தம் மற்றும் சமண மதங்கள் செல்வாக்குக் குன்றி, காலப் போக்கில் இறந்துபட்டன. ஆழ்வார்களும், நாயன்மார்களும்,

www.saivamonline.com

தமிழகம் எங்கும் சென்று, தம் அழகிய தமிழ்க் கவிதைகளால் சமயப்பயிர் வளர்த்தனர். மன்னர்களின் ஆதரவும் இச்சமயங் களுக்குக் கிடைத்தன. இவற்றுக்கிடையே குறிப்பிடத்தக்க பெரும் மோதல்கள் ஏதும் நிகழ்ந்தனவாகச் சான்றுகள் இல்லை. இக்காலப் பகுதியில், திருமாலின் தசாவதாரப் பெருமைகளைத் தமிழ்மக்களில் ஒரு பகுதியினர் ஆழ்வார்கள் வழி அறிந்து, வைணவத்தில் பற்றுறுதி கொண்டு வாழ்ந்தனர். மங்களாசாசனம் செய்யப்பட்ட, வைணவ திவ்யதேசங்களுக்கு மதிப்பு மிகலாயிற்று.

## கம்பனின் கதைத் தேர்வு

வடநாட்டில், கிருஷ்ணாவதாரத்திற்கு மக்கள்பால் பெரும் ஈடுபாடு நிலவி வந்தது. பல பெருங்கவிஞர்கள் கண்ணன்பால் ஈடுபாடு கொண்டு, அழகிய கவிதைகளைத் தந்தனர். நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்திலும், கண்ணனே பெரிதும் போற்றப் பெற்றான். அவன் பால லீலைகளும், பாகவத வரலாறுகளுமே பிரபந்தத்தில் மேலோங்கி நின்றன. இராமனைப் பற்றிய பாடல்கள் மிகச் சிலவே. எனினும், பரம வைணவனாகத் திகழ்ந்து, நாலாயிரத்தில் பெரிதும் தோய்ந்திருந்தும், ஏனோ கிருஷ்ணாவதாரம் கம்பனைப் பெரிதும் ஈர்க்கவில்லை. கம்பன், பெருங்காப்பியக் கருவாக இராமன் வரலாற்றையே தேர்ந்து கொண்டான். வடமொழி யில் வான்மீகி தந்த இராமகாதையைத் துணையாகக் கொண்டு, ஒரு கலைக் காப்பியமாகக் கம்பன் தன் இராமகாதையைப் படைத்து வழங்கினான்.

சேக்கிழாரின் பெரியபுராணத் தோற்றத்திற்குப் பிற் காலச் சோழர்கள் பெரிதும் துணை நின்றனர். சேக்கிழார் நன்கு ஆதரிக்கப்பட்டார். தில்லையில், பெரியபுராண அரங் கேற்றம் சிறப்பாக நடந்தேறியது. சோழன், சேக்கிழாரை யானை மீது அமர்த்தி, சாமரம் வீசி, திருவீதி உலா வந்தான்.

www.saivamonline.com

சேக்கிழாருக்கு விருதுகள் வழங்கப்பட்டன. அரசவையில் பெரும் செல்வாக்குடன் அவர் வீற்றிருந்தார். பெரிய புராண நாயன்மார்களின் புகழ் தமிழகம் எங்கும் பரவியது. அன்னார் திருமேனிகள் சிவாலயங்களில் எழுந்தருளிச் செய்யப்பெற்றன. சைவம் புதிய எழுச்சியைப் பெற்றது.

## புரியாத புதிர்

கம்பன் வைணவச் சார்புடைய அவதார நிகழ்வு ஒன்றைத் தம் பெருங்காப்பியக் கருவாகத் தேர்ந்துகொண்ட போதும், அவன் சைவத்திற்கு மாறான கருத்துக் கொண்டிருக்கவில்லை. மாறாக, பல இடங்களில் சிவனையும், சிவ நெறியையும் வைணவத்திற்கு நிகராகவே ஒப்ப வைத்துப் போற்றுகின்றான். கம்பனும், சேக்கிழார் காலத்துக்கு முன்னாகச் சோழனின் அவைக்களப் புலவனாகவே திகழ்ந்திருக்கிறான். இருந்தும், கம்பன் இராமகாதை இயற்றுவதற்குச் சோழர்கள் துணை நிற்கவில்லை. எங்கோ, தென்பெண்ணை ஆற்றங்கரையில், திருவெண்ணெய்நல்லூரில் வாழ்ந்த ஒரு குறுநில மன்னனாகிய சடையப்ப வள்ளல் என்பவனே கம்பனுக்கு இராமகாதை இயற்ற ஆதரவு தந்திருக்கிறான். ஏன், சோழர்கள் ஆதரவு, கம்பனுக்குக் கிடைக்கவில்லை என்பது புரியாத புதிராகவே நிற்கிறது.

## சில ஐயங்கள்

கம்பன் காப்பிய அரங்கேற்றத்திற்குச் சோழ மன்னன், ஏற்பாடு செய்ய முன்வரவில்லை.

இராமகாதை அரங்கேறிய, திருவரங்கக் கோயில் கல்வெட்டுக்களில், கம்பன் காப்பியம் அரங்கேறிய இடம் இது என்று சிறு குறிப்பும் இல்லை என்கின்றனர் ஆய்வாளர்கள்.

www.saivamonline.com

பின்வந்த வைணவ உரையாசிரியர் பெருமக்களும், கம்பனை, உரைமேற்கோள் காட்டுவதில் பெரிதும் தயக்கம் காட்டியே வந்துள்ளனர்.

தமிழ் இலக்கிய இலக்கணங்களை எல்லாம் அழகுறப் பட்டியலிடும், தமிழ் விடு தூது என்ற நூலில், கம்பனின் இராமகாதைக்கு இடம் வழங்கப்படவில்லை.

வைணவ ஆலயங்களில், கம்பனின் அழகிய தோத்திரக் கவிதைகளுக்கு உரிய இடம் வழங்கப்படவில்லை.

சமயம் மற்றும் சாதியம் பற்றிய வேறுபாட்டுணர்ச்சிகள், மேற்குறித்த புறக்கணிப்புகளுக்குக் காரணமாக இருந்திருக்கக் கூடுமோ என்று ஐயுற வேண்டியுள்ளது.

## கம்பன் விரும்பியிருந்தால்...

கம்பன் நினைத்திருந்தால், செயங்கொண்டாரைப் போல், சோழ மன்னனைப் புகழ்ந்து ஒரு பரணி பாடியிருக்க முடியும்.

விரும்பியிருந்தால், சோழ மன்னர்களைக் குழந்தையர் களாக உருவகித்து, ஒட்டக்கூத்தரைப் போல் பல பிள்ளைத் தமிழ் நூல்களைப் பாடி, பரிசுகளைக் குவித்துக் கொண் டிருக்க முடியும்.

பேதை முதல் பேரிளம் பெண் ஈறாக, ஏழு பருவத்து மகளிர் சோழன் உலாக் கண்டு, சொக்கி மயங்கியதாகப் பாடி, அன்னாரை மகிழ்வித்திருக்க முடியும்.

## நோக்கம் யாது?

இவற்றில் சோழ மன்னர்களை முன்னிறுத்தி யாதொன்றையும் பாட முன் வாராது, கம்பன், இராமன் கதையைத் தன் காப்பியத்திற்கு மூலமாகத் தேர்ந்து கொண்டமைக்கு வேறு ஏதோ ஓர் இன்றியமையாத நோக்கம் இருந்திருக்க வேண்டும்.

www.saivamonline.com

வேதகாலம் முதல் தான் வாழ்ந்த காலம் வரை, தமிழில் எழுந்த தனிப்பாடல்களையும், சிற்றிலக்கியங்களையும், காப்பியங்களையும் தான் மறு மதிப்பீடு செய்வதற்காகக் கம்பன் ஆராய்ந்திருக்க வேண்டும்.

எங்கும் எதிலும் எல்லாம் தலைவிரித்தாடிய ஆடவர்களின் இன்ப நாட்டமும், காமம் சார்ந்த சமூக அமைப்பும், பெண்கள் எவ்வித உரிமையும் அற்றவர்களாய் ஆடவர்களின் காமக்களியாட்டத்திற்கு ஆட்பட்டுக் கிடந்த அவலமும், பலதார மணமும், சமூகப் பெருமிதங்களாகச் சித்திரிக்கப்பட்டுக் கிடந்த, தனக்கு முற்பட்ட இலக்கியங்கள் மேல் அவன் கோபம் கொண்டிருக்க வேண்டும். மன்னர்களும், மாபெரும் செல்வர்களும் வாழ்ந்த, நெறி திறம்பிய காம வாழ்வை அவனது அடிமனம், வெறுத்து ஒதுக்கியிருக்க வேண்டும். ஆணாதிக்கத்தால் பெண்மைக்கு உற்ற சிறுமையும், கீழ்மையும் அவனை நீளச் சிந்திக்க வைத்திருக்க வேண்டும். சமூக விருப்பங்களை வழி மொழியாமல் எதிர் நீச்சல் இட்டுச் சமூக மாற்றத்திற்கு எழுதுகோல் எடுக்க அவன் நினைத்திருக்க வேண்டும்.

## தேர்வின் பின்புலம்

ஆடவர்களுக்கும் ஒழுக்கம் வேண்டும் என்று வற்புறுத்தவும், பெண் என்பவள் உரிமை சான்ற, அறிவு நிரம்பியவளாக எழுச்சி கொள்ள வேண்டுமென்பதை நிலைநாட்டவும், நடையில் நின்றுயர் நாயகனாகிய இராமன் கதை, அவனைப் பெரிதும் ஈர்த்திருக்க வேண்டும். இந்த இப்பிறவிக்கு இரு மாதரைச் சிந்தையாலும் தொடாது ஆண்மகன் வாழ வேண்டும் என்று விரும்பிய சீதையின் பெண்மை, அவனுக்கு மகிழ்வைத் தந்திருக்க வேண்டும். இந்த மாபெரும் நல்லெண்ணத்தின் மேல்தான், கம்பன் தன் காப்பியக் கருவாக, இராமன் கதையைத் தெரிவு செய்திருக்க வேண்டும்.

www.saivamonline.com

கம்பனின் பெண்ணியப் புனைவில், "ஓர் ஆணுக்கும் ஒரே பெண்தான்" என்ற சமூக மாற்றம் பற்றிய நல்லெண்ணம் முதன்முதலாகத் தமிழ் இலக்கியத் தடத்தில் வெளிப்படையாக முன்னிறுத்தப்பட்டது.

## போர்க்கொடி

கேளிக்கை நாட்டமும், பெண் விழைவும் கொண்ட மாமன்னர்களுக்கும், பெருஞ்செல்வர்களுக்கும் கம்பன் அன்னியப்பட்டு நின்றதற்கு அவன் தேர்ந்து கொண்ட கதைக்கருவே காரணமாக நின்றது. ஆயினும், கம்பன் அஞ்சா நெஞ்சனாய்த் தனித்து நின்று, ஆண் ஆதிக்க சமூகத்துக்கு எதிராகப் பெண் உரிமை வேண்டி, போர்க் கொடியை உயரத் தூக்கி நிறுத்தினான்.

கம்பன் தேர்ந்து கொண்ட கதைக்கரு, பெண்ணியம் பற்றிய அவனது புதிய பிரகடனத்திற்கு மாபெரும் அரணாக அமைந்தது. கம்பன் காலத்துக்கு முன்வரை, ஆடவர்களின் நெறி திறம்பிய காம வாழ்வைக் கண்டித்து எழுந்த நூல் ஒன்றும் தமிழில் தோற்றம் கொண்டிருக்கவில்லை.

## கவிஞனை இனங்காண...

இராமன் கதையைக் காப்பியக் கருவாகக் கொண்டு கம்பன் மேலெடுத்துச் சென்ற பெண்மையையும், உயர்த்திப் பிடித்த அவர்தம் உரிமைகளையும், முற்றாக மதிப்பிட்டு ஆராயத் தொடங்குமுன், பெண்மை பற்றிய கவிஞனின் மனநிலையைக் கண்டறிய, ஏதேனும் ஒரு பாத்திரப் புனைவை முன்னிறுத்தி ஆராய்வது தேவையாயிற்று. அவ்வகையில் கம்பனின், மண்டோதரி பற்றிய பெண்மை மதிப்பீடுகளை, முழுமையாக அடுத்து வரும் இயலில் ஆய்வுக்கு உட்படுத்தலாம். இவ்வாய்வு, கவிஞன் பெண்மையின் உருவாக்கத்தில் எத்தகைய மனநிலை கொண்டு விளங்கினான் என்பதை அறியப் பெரிதும் உதவியாதல் கூடும்.

www.saivamonline.com

# 3. ஒரு பாத்திரப் புனைவில் – கம்பன்

## மன ஓட்டம்

கம்பனின் பெண்மை பற்றிய மதிப்பீடுகளைத் தொகுத்து, இனம் பிரித்து, பகுப்பாய்வு செய்து கம்பனின் பெண்ணியக் கோட்பாடுகளை உருவாக்குவதற்கு முன்பாகக் கவிஞனின் பெண்மை பற்றிய மன ஓட்டங்களைக் கண்டு தெளிதல் இன்றியமையாததாகிறது. ஒரு மனிதனை மதிப்பிட்டு அறிவதற்கு முன்னாக, அவனது நடவடிக்கை களைக் கண்காணித்தல், உற்றுநோக்கல், சாற்றியறிதல் என்பன தேவைப்படுதல் போல், கம்பனையும் சிறிது நுனித்தறிய வேண்டும் என்று தோன்றுகின்றது. ஒருவன் பெண்மை பற்றித் தாழ்வான கருத்துக் கொண்டவனாக இருக்கலாம்; பிறிதொருவன் உயர்வான கருத்தில் திளைத் திருக்கலாம். இவ்விரண்டு மனோபாவமும், நடுநிலையான முடிவு ஒன்றை எட்டத் தடையாகவே அமையும். திறந்த மனத்துடன், தனி விருப்பு வெறுப்பு அற்றவனாகக் கவிஞன் திகழ்வதை உறுதி செய்து கொண்டால்தான், அவனது கோட்பாடுகளை உலகம் உன்னதமானவை என்று ஏற்றுப் போற்றும்.

## ஆய்வது யாரை?

இதற்கு என்ன செய்யலாம்? கவிஞனை எவ்வாறு இனங்காணலாம் என்று எண்ணியபோது, ஏதேனும் ஒரு பெண் பாத்திரப் புனைவை மையப்படுத்திக் கவிஞனை

www.saivamonline.com

துல்லியமாக அளவிட்டுப் பார்க்கலாம் என்ற எண்ணம் முகிழ்த்தது. சீதையை முன்னிறுத்தலாமா? என்றால், காப்பியம் முழுவதும் நிறைந்திருக்கும் அவளை, அவளது புனைவை மதிப்பிடுவது இயலாத ஒன்று என்றே தோன்று கின்றது. மேலும், தலைமைப் பாத்திரத்தின் மதிப்பீட்டில் கவிஞன் குறை சொல்லத் தயங்கியிருப்பானோ என்ற ஐயமும் எழும். மாறாக, ஒரு எதிர்நிலைத் தீய பெண் பாத்திரமாக வரும் சூர்ப்பணகைப் பாத்திரத்தை ஆராய லாமா என்றால் அங்கும் அதே குறைபாடு வேறுபடத் தோன்றும். பின் எவ்வாறு மதிப்பிடலாம்?

**மயன்மகள்**

தீமைக்கு இடையே வாழ்ந்த நன்மை நிறைந்த ஒரு பாத்திரமே கவிஞனின் அணுகுமுறைகளை முற்றாக ஆராயத் துணை புரியும் என்ற எண்ணம் வந்தது. அக்காலை மனத்திரையில் இராவணன் மனைவி மண்டோதரி தோன்றி னாள். விருப்பு வெறுப்பு இன்றியும், முழுமையாகவும் ஏதேனும் ஒரு பெண்பாத்திரத்தைச் செதுக்கியிருக்கும் நேர்த்தியைக் கம்பனில் கண்டு தெளிய சில காட்சிகளில் மட்டுமே வரும் மண்டோதரி பொருத்தமானவளாக அமை கிறாள். இதன் அடிப்படையில் கம்பன் புனையும் மண்டோதரி பாத்திரத்தை முழுமையாக மதிப்பிட வேண்டி யுள்ளது. தீமையையே, தீமை களைந்து, நன்மையாகச் சித்திரிக்கவல்ல பண்பாடுமிக்க தமிழ்க் கவிஞர்கள் கையில் ஒரு நன்மை கிடைத்து விட்டால், அதை அவர்கள் எந்த அளவுக்கு ஒளியூட்டுவார்கள் என்பதை எடுத்துக் காட்டு வதற்கு ஒரு சான்றாகத் திகழ்கிறாள் மயன் மகள் மண்டோதரி.

**தாய் அன்பு**

கவிஞன் ஒரு தாய் போன்றவன். தேறும் என்று அவள் எதிர்பார்த்த பிள்ளை தேறிவிட்டால் அவள் மகிழ்வதைவிட,

www.saivamonline.com

தேறாது என்று நினைத்த பிள்ளை தேறும்போது அவள் மகிழ்ச்சி இரட்டிப்பாகிறது. தீமையின் ஊடே நன்மையையும், மறத்தின் ஊடே அறத்தினையும் காணும்போது மகிழ்வது மானுட இயல்பு. கவிஞன் மானுடத்திற்கும் மேம்பட்டவன். அதனைப் பாடிப் படைத்துச் சாகாவரம் தருபவன்.

## கற்பரசி

இருள் சூழ்ந்த இலங்கையில் வீடணனும், திரிசடையும், மண்டோதரியும் கண்ணில்படும் போது, அவன் கவிதை உள்ளம் கர்வம் கொள்கிறது. கம்பனின் கைவண்ணத்தில் இராவணன் மனைவி மண்டோதரி மறக்கவொண்ணாக் கற்பரசியாக, கவினார் நங்கையாகப் பேருருக்கொள்கிறாள்.

## கவிஞனின் ஆளுமை

சீதையின் விடுதலை கண்டு மகிழ வேண்டிய நம்மை, மண்டோதரி மாங்கல்யம் இழந்ததற்காகக் கலங்க வைக்கக் கம்பனால் முடிகிறது. இராவணன் வீழ்ச்சியால் நிறைய வேண்டிய மனம், மண்டோதரி அடைந்த துயரத்தில் பங் கேற்கத் துடிக்கிறது. "இவனுக்கு, இது வேண்டும்" என்று உள்ளம் துள்ளும்போது, "இவளுக்கா இத்துயரம்" என நெஞ்சம் அஞ்ச வைக்கிறான் கவிச்சக்கரவர்த்தி கம்பன். தீயவன் துணைவியாகிய மண்டோதரி, உத்தமன் துணைவி சீதைக்கு நிகராக உருவாகும் போது, நெஞ்சம் அவளை ஏற்கவே செய்கிறது; நெகிழ்ந்து கண்கள் குளமாக ஆகின்றன.

## அறிமுகப் புனைவு

ஆறு காண்டத்துக் கம்பனில், அவளை ஐந்தாவது காண்டத்து இடையில்தான், ஆஞ்சநேயன் கண்வழி முதன் முதலாகக் காண்கிறோம். சிற்றுருக்கொண்டு சீதையைத் தேடி வருகிறான் அனுமன். நெடுநேரத் தேடலுக்குப் பின், வித்தியாதர மாதர் வீதியைக் கடந்து வரும்போது,

www.saivamonline.com

மண்டோதரி மாளிகை அவன் கண்ணில் படுகிறது. கம்பன், அவள் உறையும் மாடத்தை அறிமுகப்படுத்தும்போதே அவள் அழகையும் உரைக்கின்றான்.

> **"கண்டனன், நளிர்திங்கள் மாய நந்திய வாள்முகத்து**
> **ஒருதனி மயன் மகள் உறை மாடம்"** *(சு. 5029)*

என்கிறான். சந்திரமண்டலத்துக்கு மேலாகக் காண்பார்க்கு மகிழ்ச்சியை விளைத்து விளங்கும், முக அழகுடையவளாம் மண்டோதரி. அசுரர் தச்சனாகிய மயன் மகள், அழகிலும் சிறந்தவள். அவள் அகலிகை, திரௌபதி, சீதை, தாரை என்பாரோடு ஒருங்கு வைத்து எண்ணப்படும் பஞ்ச கன்னியருள் ஒருத்தி. இதுவரை கண்ட மனைகளிலெல்லாம் மேம்பட்ட மனை இது என்றுணர்ந்த அனுமன், சீதை சிறை வைக்கப்பட்ட மாடம் இதுவே என எண்ணுகிறான். உள் நுழைகிறான். சீதையோ என ஐயுற்று, அவன் காணும் மண்டோதரி உறங்கிக் கிடக்கும் நிலையை, மூன்று கவிதை களில் கம்பன் புனைகிறான். மன்மதனின் அம்பறாத்தூணி போன்ற மண்டோதரியின் கால்களை அரம்பை, மேனகை, திலோத்தமை, ஊர்வசி முதலியோர் பிடித்து விட்டுக் கொண்டுள்ளனர். சிலர், வெண்சாமரம் வீசுகின்றனர். வேறு சிலர், வீணை மீட்டுகின்றனர். சிலர், கற்பகமலர்களின் மணத்தை, அவள் நுகர நீட்டுகின்றனர். தென்றலோ அருகிலிருக்கும் பெண்கள் வீசு என்று அழைத்தால் உள்ளே நுழையலாம் என்று காத்து நிற்கின்றது. அருகில் ஏற்றி வைக்கப்பட்ட இரத்தினமணி விளக்குகளின் ஒளிகளைத் தன் உடல் ஒளியால் ஒளியிழக்கச் செய்தவாறு உறங்குகிறாள் மண்டோதரி.

## கம்பனின் உத்தி

அவளைக்கண்ட அனுமன் இவள் சீதையோ என எண்ணி மயங்குகிறான். மயங்கி வெகுள்கின்றான்.

www.saivamonline.com

"அன்னள் ஆகிய சானகி இவள் என
அயிர்த்து, அகத்து எழு வெந் தீ,
துன்னும் ஆர் உயிர் உடலொடு சுடுவது ஓர்
துயர் உழந்து, இவை சொன்னான்." (க. 5033)

*வான்மீகியில், இராவணன் காற்கடையில் மிக உயர்ந்த படுக்கையில் மண்டோதரி படுத்து உறங்குவதை அனுமன் கண்டு, பெருமகிழ்வு கொண்டு, பின்பு உற்று நோக்கி இவள் சீதை அல்லள் எனத் தெளிந்தான் எனக் கதை நடையிடு கிறது.*

*கம்பன் மண்டோதரிக்குத் தனி மாளிகை கட்டுகின் றான். சீதையோ என்ற ஐயம் அனுமனுக்கு இராவணன் காலடியில் உருவாவதைவிட, தனியிடத்தில் உருவாவது வலியுடைத்து என எண்ணுகின்றான். காப்பியத்தில் அனுமன், கவிஞனின் கருத்து வெளிப்பாட்டிற்குத் துணை நிற்பவன். கம்பன் மதிப்பீடுகள் பலவும், அனுமன் வாயி லாகவே இராமகாதையில் வெளிவரப் பெறும். கண்களால் கற்புடைமையை நுனித்து அறியும் அறிஞன் அவன்.*

*இராமன் சீதையின் அங்க அடையாளங்களை அனும னிடம் விரித்துரைத்தான். அவற்றையெல்லாம் மண்டோதரி யிடம் வைத்து நோக்கும் அனுமன், சீதைக்கு உரைத்த அடையாளங்கள் பலவற்றையும் மண்டோதரியின்பால் கண்டு, இவள் சீதையோ என ஐயம் கொள்கிறான். சீதைக்கு இணையான அங்க அடையாளங்கள் கொண்ட பேரழகி, கற்பரசி, உயர்குல மடந்தை இவள் என்பதைக் கற்பார்க்கு உணர்த்தக் கம்பன் செய்யும் உத்திகளில் ஒன்று இது.*

## நோக்கம் வேறு

*அனுமனுக்கு வாராத ஐயத்தை வரவழைத்து, நமக்கு மண்டோதரி சீதைக்கு நிகரானவள் என்று செய்தி சொல் கின்றான். நோக்கம் வேறு உண்டு. இத்தகு அழகும்,*

www.saivamonline.com

*கற்புமுடையாளைத் துணையாகப் பெற்றிருந்தும், அவளை விடுத்து மாற்றான் மனைவியாகிய சீதையை நாடிய இராவணன் சிறுமையை உணர்த்தவும் கம்பன் இதனைக் கையாளுகின்றான்.*

## அனுமன் மதிப்பீடு

*கோபத்தோடு உற்று நோக்கிய அனுமன், உறக்கத்தில் அவள்பால் நிகழும் நிகழ்வுகள் சிலவற்றைக் காண்கின்றான்.*

**"அலக்கண் எய்துவது அணியது உண்டு என்று,எடுத்து**
**அறைகுவது, இவள் யாக்கை;**
**மலர்க் கருங் குழல் சோர்ந்து, வாய் வெரீஇ, சில**
**மாற்றங்கள் பறைகின்றாள்;**
**உலக்கும் இங்கு இவள் கணவனும்; அழிவும், இவ்**
**வியன் நகர்க்கு உளது"** *(சு. 5036)*

*என்றான். தீமை விரைவில் வரப்போவதை இவள் யாக்கை காட்டுகின்றது. மலர்க் கருங்குழல் சோர்கின்றது. வாய்பிதற்றி உறக்கத்தில் சில சொல் மொழிகின்றாள். இவ்வறிகுறிகள், இவள் கணவனுக்கும் இந்நகருக்கும், அழிவு வரப்போவதை உணர்த்துகின்றன என்பதை அனுமன் உணர்கின்றான். பின், அனுமன் இராவணன் மாளிகையில் புகுகின்றான்.*

## அக்ககுமாரன் வதை

*மீண்டும் மண்டோதரியை அக்ககுமாரன் வதைப்படலத் தின் இறுதியில் கம்பன் கொண்டு வருகின்றான். அக்க குமாரன் மண்டோதரியின் இரண்டாவது மகன். இந்திர சித்தனின் தம்பி. பொழில் இறுத்த அனுமனோடு போரிட்டு அக்ககுமாரன் மாள்கிறான். அவன் இறப்பு இலங்கையில் பெரும் துயர் விளைக்கிறது. எல்லோரும் புலம்புகின்றனர். மகனைப் பறிகொடுத்த தாய் மண்டோதரி புலம்பலை, கடைசியாகக் கம்பன் வைக்கின்றான். செய்தி கேட்ட மண்டோதரி, மகனைத் தேடிச் சென்று கண்டு புலம்பாது,*

www.saivamonline.com

*அருகில் நின்ற கணவன் இராவணனின் கால்களில் வீழ்ந்து, அழுது அரற்றுகின்றாள். கம்பன் அற்புதம் செய்யும் இடம் இது.*

**"கயல் மகிழ் கண் இணை கலுழி கான்று உக,**
**புயல் மகிழ் புரி குழல் பொடி அளாவுற**
**அயன் மகன் மகன் மகன் அடியில் வீழ்ந்தனள்**
**மயன் மகள், வயிறு அலைத்து அலறி மாழ்கினாள்."** *(சு. 5715)*

*இராவணனை, "அயன் மகன் மகன் மகன்" என்று கம்பன் குறிக்கின்றான். அயன் மகன் புலத்தியன். புலத்தியன் மகன் விச்சிரவசு; விச்சிரவசுவின் மகன் இராவணன்.*

## கவிஞன் குறிப்பு

*இராவணனின் கால்களில் வீழ்ந்து மண்டோதரி வயிறு அலைத்து மாழ்கினாள் என்று மட்டுமே கம்பன் கூறுகின்றான். அவள் கூற்றாக ஏதும் கூறவில்லை. வார்த்தைகள் அற்ற அழுகைக்குள்ளே, ஆழ்ந்த நோக்குடைய குறிப்புக் களைக் கவிஞன் பெய்கின்றான். ஏனெனில், மண்டோதரி துயர், அது வந்த காரணம், கணவன்பால் வெளிப்பட உரைக்க இயலாத ஒன்று. 'பாவி, உனது முறையற்ற காமத் தால் அல்லவா என் அருமை மகன் அக்ககுமாரனை இன்று நான் இழந்தேன்,' என்று கூறாமல் கூறும் கூற்றுக்களைக் குறிப்பில் பெய்கின்றான் கவிச்சக்கரவர்த்தி.*

## ஒரு ஒப்பீடு

*காப்பியங்களில் வரும் எதிர்முனைப் பாத்திரங்கள் பலவும் தீமையின் சித்திரிப்புக்களாகவே அமைகின்றன. இராவணன் மட்டும் அல்லன்; பிற படைப்புகளில் வரும் துரியோதனனும் சூரபதுமனும் கூடத் தீயவர்கள்தாம். ஆனால் ஒரு வியப்பு. இந்தத் தீயவர்களுக்கு வாய்த்த துணைவியர் பலரும் கற்பரசியர் ஆகவே விளங்குகின்றனர். இராவணன் மனைவி மண்டோதரி; துரியோதனன் மனைவி*

www.saivamonline.com

*பானுமதி; சூரபதுமன் மனைவி பதும கோமளை. யாவருமே உன்னதமான பெண்மைப் படைப்புகளே. மூவருமே துயருற்றனர். கணவனை இழந்தனர். பிள்ளைகளைப் பறி கொடுத்தனர். மூவர் துயர் அளவும் ஒன்றுதானா? அதுதான் இல்லை. மண்டோதரிக்கு உற்ற துயர் பெரிது; மிகப் பெரிது; வாய் திறந்து அரற்றவும் இயலாத, கணவனின் காமம் சார்ந்தது. மானத்திற்காகப் போரிட்டான் சூரபதுமன்; மண்ணுக்காகப் போரிட்டான் துரியோதனன். அந்தப் போராட்டத்தின் இறுதியில் தோல்வி என்றாலும், துணைவி யர்க்கு ஒரு பெருமிதம் இருந்தது. ஆனால், இராவணன் போரோ, காமத்திற்காக, மாற்றான் மனைவிக்காக. இங்கே தான் மண்டோதரியின் துயர் அளவு இரட்டிப்பு ஆகிறது. இது பெண்மைக்கு ஏற்பட்ட பெரும் சோதனை.*

## இந்திரசித்தன் மறைவு

*மீண்டும் மண்டோதரியை யுத்த காண்டத்தில் கம்பன் காட்டுகின்றான். அழுவதற்கு மட்டுமே உரியவள் அவள் போலும். மூத்த மகன் இந்திரசித்தன் இறந்தான் என்ற செய்தி கேட்டு மைந்தன் மேல் விழுந்து புலம்புகின்றாள் மண்டோதரி. அவள் சோகத்தை ஏழு விருத்தங்களில் கம்பன் பதிவு செய்கின்றான். மண்டோதரி புலம்பல் கல்லையும் கரைவிக்கும் உருக்கம் மிக்கது.*

*"மகனே, நீ நாள்தோறும் திங்கள்போல் வளர்ந்து வந்த காலத்தில் வில் எடுத்துச் சிங்கத்தை வென்ற காட்சியைக் கண்டு அன்று களித்தேனே. ஐயகோ இன்று உன் தலையிலா உடலைக் காண நான் என்ன தீவினை செய்தேன் அப்பா.*

> **"ஐயனே, அழகனே, என் அரும் பெறல் அமிழ்தே ஆழிக்**
> **கையனே மழுவனே, என்று இவர் வலி கடந்த கால**
> **மொய்யனே, முளரி அன்ன நின் முகம் கண்டிலாதேன்**
> **உய்வெனோ?"** *(க. 9233)*

www.saivamonline.com

மகனே, இளமைக்காலத்தில் ஒருநாள் நீ இரு சிங்கக்குட்டிகளைப் பிடித்துக்கொண்டு முன்னே வந்தாய். சினம் மூட்டி ஒன்றொடு ஒன்றை மோதவிட்டாய். மீளமீள நீ ஆடிய ஆட்டத்தை மகனே இனி என்று காண்பேன். ஒருநாள் நீ வானத்து நிலவை வா என்று அழைத்தாய். அஞ்சி அம்புலி உன் கையில் வந்தது. நிலவிலிருந்த மறுவைக் கண்டு, இந்தா இந்த முயலை நீக்குகின்றேன் என அதனைப் பற்றி இழுத்தாயே என் இளம் கதிரே உன்னை காணத் துடிக்கின்றேன். மீள எழுந்து வாராயோ?''

## சோகத்தின் பின்புலம்

மகன் மறைவு பற்றிய சோகத்திற்குப் பின்னே, பெண்மை மனம் சோகத்தின் பின்புலத்தை நினைவு கூர்கிறது. மெல்லிய சொற்களால் அதனை வெளிப்படுத்துகின்றாள் மண்டோதரி. அதில்தான் எவ்வளவு நனி நாகரிகம். முன்னை இராவணன் மகன் அதிகாயன் சாக்காட்டில் அவன் தாய் தானியமாலினி புலம்பியதைக் கம்பன் பதிவு செய்வான். பலவாறு அழுத தானியமாலினி சோகத்தின் உச்சியில் இராவணனை நோக்கி அவன் காமத்தைச் சுட்டிக் கண்டித்து,

> **''ஏது ஐயா சிந்தித்து இருக்கின்றாய். எண் இறந்த**
> **கோதை ஆர் வேல் அரக்கர் பட்டாரைக் கூவாயோ?**
> **பேதை ஆய்க் காமம் பிடிப்பாய் பிழைப்பாயோ?**
> **சீதையால் இன்னம் வருவ சிலவேயோ?''** *(க. 7997)*

எனச் சீறுவாள். ஆனால் அதே போன்று சோகத்தின் உச்சியில் மண்டோதரியிடம் கணவனைக் கண்டிக்கும், அவன் காமத்தைச் சாடும் பண்பு காணப்படவில்லை. ஆனால் ஓர் உண்மை. வரப்போகும் துயரத்தைக் கற்பு மனம் கணித்துக் காட்டுகிறது:

> **''பஞ்சு எரி உற்றது என்ன அரக்கர்தம் பரவை எல்லாம்**
> **வெஞ்சின மனிதர் கொல்ல, விளிந்ததே, மீண்டது இல்லை**

www.saivamonline.com

**அஞ்சினேன் அஞ்சினேன் அச்சீதை என்று அமுதால் செய்த**
**நஞ்சினால், இலங்கைவேந்தன் நாளை இத்தகையன் அன்றோ?**
*(க. 9238)*

மகன் இறப்புக்குக் கணவனே காரணம் என்பதைத் தாய் மனம் உணர்கிறது. என்றாலும், இன்று மகனுக்கு நேர்ந்தது நாளை, கணவனுக்கு நேர்ந்து விடுமோ என்ற அச்சத்தில் விரிகிறது. கற்பின் வீச்சுக்குக் கம்பன் காட்டும் உன்னத அடையாளம் இது. தானியமாலினி மகன் பிரிவில் கணவனைச் சாடுகிறாள். மண்டோதரியோ நாளை நிகழப் போகும் சோகத்தை நினைவு கூர்ந்து கற்பில் தலை நிற்கிறாள். "**சீதை என்று அமுதால் செய்த நஞ்சு**" என்று முதன் முதல் அவள் வாய் சீதையின் திருப்பெயரை உச்சரிக்கின்றது. மண்டோதரியின் மாண்பு நம் நெஞ்சத்தை நெகிழ்விக்கின்றது.

## இராவணன் வீழ்ச்சி

கற்பரசிகளின் கணிப்புகள் தவறுவதில்லை. அவள் நினைந்தவாறு ஒருநாள் இராவணன் மாண்டான் என்ற பேரிடி, செய்தியாக வந்தது. இராவணன் உயிர் துறந்து கிடக்கும் படுகளத்திற்கு அவள் வருகிறாள். கம்பன் செய்தியாகக் கூறும்போது,

**"இனம் தொடர்ந்து உடன்வர, எய்தினாள் என்ப–**
**நினைந்ததும் மறந்ததும் இலாத நெஞ்சினாள்."** *(க. 9929)*

என்கிறான்.

தன் கணவனை அவள் நினைத்ததே இல்லை. ஏன் தெரியுமா? அவள் மறந்தால்தானே நினைக்க என்கின்றான் கம்பன். அவளோ அவன் நினைவாகவே வாழ்கிறாள். இராவணன் மார்மீது வீழ்ந்து மண்டோதரி புலம்புகிறாள். காவியத்தில் கனம் நிறைந்த சோகம் கொட்டிக் கிடக்கும் கம்பன் கவிதைகள் நீளுகின்றன. மரங்களும், மலைகளும்

www.saivamonline.com

உருக வாய்திறந்து இரங்கினாள் மயன் மகள் என்பான் கம்பன். உயிரற்ற மலைகளும், சிற்றறிவு படைத்த மரங்களுமே அவள் துயர் கண்டு இரங்கின எனின் ஏனை மாந்தர் துயரை என்னென்பது என நம்மைக் கம்பன் வினவும் இடம் இது.

## மண்டோதரி துயரம்

மண்டோதரியின் புலம்பலை ஏழு பாடல்களில் கம்பன் பதிவு செய்கிறான். அவற்றில் ஒவ்வொன்றும் ஆயிரம் பொருள் பொதிவு கொண்ட அவலம் நிறைந்தன. கணவன் பெயரை மனைவி வெளிப்பட உரைத்தல் பண்பன்று என்பது தமிழர் மரபு. "கோவலன் மனைவி கண்ணகி என்பது என் பெயரே" என, கணவன் பெயர் குறித்தாள் கண்ணகி என்பார் இளங்கோ. "இறைவனே அஞ்சேல் இயற்பகை வெல்லும்" என்று கணவன் பெயர் உரைத்தார் இயற்பகை நாயனார் துணைவி என்பார் சேக்கிழார். ஒன்று தெரிகிறது கணவன் பெயரை மனைவி உச்சரிக்கலாம். ஒன்று அவன் இறந்த பிறகு, மற்றொன்று அவன் துறந்த பிறகு. இறந்த பிறகு உச்சரித்தாள் கண்ணகி. துறந்த பிறகு உச்சரித்தார் இயற்பகை துணைவி. இலங்கை வேந்தன் நாளை இத்தகையனன்றோ என்று குறித்த மண்டோதரி, அவன் இறந்த பிறகு, "என்னேயோ என்னேயோ இராவணனார் முடிந்த பரிசு" எனத் தன் கணவன் பெயர் உரைத்துப் புலம்புகின்றாள்.

## சோகத்தின் விளிம்பில்

கணவனுக்கு முன்னாகப் பூவொடும் பொட்டொடும் இறக்க விரும்புவது இந்தியப் பெண்களின் தலையாய விருப்பம். மண்டோதரியும் அதனையே நினைத்திருந்தாள். ஆனால், இவ்வளவு விரைவில் இராவணன் வீழ்வான் என்று அவள் நினைத்தாள் இல்லை. நினையாத ஒன்று

www.saivamonline.com

*நிகழ்வதுதானே உலக இயல்பு. மண்டோதரி அரற்று கின்றாள்.*

**"அன்னேயோ, அன்னேயோ ஆ, கொடியேற்கு
அடுத்தவாறு! அரக்கர் வேந்தன்
பின்னேயோ, இறப்பது? முன் பிடித்திருந்த
கருத்து அதுவும் பிடித்திலேனோ?"** *(க. 9939)*

*தன் எண்ணம் பொய்த்தது. இராமன் வில் அம்புகளால் துளைபட்டு, பொடியாடி வீழ்ந்து கிடக்கும் தன் கணவனின் திருமேனியைக் காணுகின்றாள். மனைவியை விட ஓர் ஆண்மகனைச் சரியாக எவரால் மதிப்பிட முடியும்? இராவணனை மற்ற எல்லாரையும் விட நன்கு அறிந்தவள் மண்டோதரி. மாற்றான் மனைவியை இதயமாம் சிறையில் வைத்தவன் கணவன் என்று அவள் அறிவாள். இக்காமம் பற்றி எழுந்த போரில் தன் கணவன் முதல் நாள் அவமானப் பட்டுத் தனியனானதும் அவளுக்குத் தெரியும். அப்போது கூட, சானகி நகுவள் என அவன் மானத்தால் சாம்பியதை அவள் உள் உணர்வு எடை போட்டிருக்கும். காமத்தில் கிளைத்த போர் அது. எவர் சொல்லையும் கேளாது "என்னையே நோக்கி நான் இந்நெடும்பகை தேடிக் கொண் டேன்" என்ற இராவணனின் வீரம் அவள் அறியாததன்று. ஆனால் போர்க்கள நிகழ்வுகளால் அடுத்தடுத்து அதிகாய னும், கும்பகருணனும், இந்திரசித்தனும் ஒவ்வொருவராக மாளமாள அளவிறந்த சோகத்தில் இராவணன் தடுமாடு கின்றான். காமம் நிறைந்திருந்த நெஞ்சில் சோகம் நிறைகிறது. அறிஞன் இராவணன், காமக் கனலைச் சோகக்கனல் சுடச்சுட அந்த மாபெரும் வெம்மைக்கு முன் காமம் புறங் காண்கிறது. காமத்தில் தொடங்கிய போர், மானத்தில் திரும்புகின்றது. இராவணனின் மனமாற்றம் ஊருக்கும் உலகுக்கும் புலப்படாது இருக்கலாம். உயிர் கலந்த மண்டோதரிக்குப் புலனாகி விட்டது. அவள் தெளிவாக*

www.saivamonline.com

அதனைத் தெரிந்து கொண்டு விட்டாள். கணவனின் சிறு அசைவுகளில் கூட அவன் உளப்போக்கை அறியும் ஆற்றல் சராசரிப் பெண்களுக்கே உண்டு என்றால், சீதைக்கு நிகரான கற்பரசி மண்டோதரிக்கு இராவணனின் மனமாற்றம் தெரிய வந்ததில் வியப்பு என்ன உண்டு. பெண்மை சோகத்தின் விளிம்பில் வெளிப்படுத்தும் உண்மைகள் பெரிது; நேரிது.

## மண்டோதரி ஏக்கம்

இராமன் இராவணன் மீது அம்பெய்து அவன் உயிரை மாய்த்திட்டான். ஆனால், மண்டோதரி, இராமபாணம் இராவணன் மார்பில் பாயந்ததற்கு வேறு காரணம் கற்பிக்கின்றாள். தன் துணைவியை அசோகவனத்திலிருந்து விடுவிப்பது மட்டுமா இராமனின் நோக்கம்? அன்று. தம் மனையாள் பற்றிய காதல் எண்ணத்தை இராவணன் எந்த நெஞ்சில் மறைத்து வைத்தானோ அந்த எண்ணச் சிறையிலிருந்தும் இராமன் அவளை விடுவிக்கவே விரும்பினான். அவன் இராமபாணத்தை இராவணன் மேல் ஏவியதும் அதற்காகத்தானாம். மண்டோதரி அழுகுரல் ஊடே எழும் நுட்பமான வார்த்தைகளில் இராவணனின் தூய்மையும், இராமபாணம் ஏமாற்றம் உற்றதும் அழகுற வெளிப்படுகின்றன. இதனை நுனித்து அறியவல்லார் மட்டுமே உணர முடியும். இராவணன் மனச் சிறையில் சீதை இருக்கின்றாள் என்று இராமன் திடமாக நம்புகின்றான். அம்பு விடுகின்றான். அதுவும் மார்பை ஊடுருவிச் செல்கிறது. மண்டோதரி நினைக்கின்றாள். என் கணவன் உள்ளத்திலிருந்த சீதை என்றோ எடுத்துத் தூர வீசப்பட்டாள். அவன் நெஞ்சில் காமம் குடிபெயர்ந்து வீரம் வேர்விட்டுள்ளது. ஆனால், ஐயகோ இராமபாணம் சீதை நினைவு அங்கே இருக்கும் என்று உள்ளே புகுந்து ஒவ்வோரிடமாகத் தேடி ஏமாற்றம் அடைந்துள்ளதே. இராமபாணத்திற்கா இந்தக் கதி?

www.saivamonline.com

அழுகையின் ஊடே கணவனின் நெஞ்சறிந்து போற்றும் கற்பின் திறத்தைக் கம்பன் சாறு பிழிந்து காட்டுகின்றான்.

"வெள் எருக்கஞ் சடை முடியான் வெற்பு எடுத்த
திருமேனி மேலும் கீழும்,
எள் இருக்கும் இடம் இன்றி, உயிர் இருக்கும்
இடன் நாடி, இழைத்தவாறோ?
கள் இருக்கும் மலர்க் கூந்தல் சானகியை
மனச் சிறையில் கரந்த காதல்
உள் இருக்கும் எனக் கருதி, உடல் புகுந்து
தடவியதோ ஒருவன் வாளி?" *(க. 9940)*

*"உள்ளிருக்கும் எனக் கருதி" என்ற தொடரில் காமம் என் கணவன் உள்ளத்தே இல்லை என்ற உறுதி வெளிப்படக் காண்கின்றோம். சீதையைக் "கள் இருக்கும் மலர்க் கூந்தல் சானகி" என அடைமொழி சேர்த்து அரற்றுவதில், அம் மலரை நான் இழந்தேனே என்ற ஏக்கம் தொனிக்கிறது.*

## இராவணன் உயர்வு

*பொதுவாக, மனித உடலை "மெய்" என்றே அழைப்பது மரபு. மனித வடிவில் அமைந்த ஒன்றை உருவம் என்றே கூறுவர். கடவுள் வடிவை மட்டுமே "திருமேனி" என்று குறித்தல் தமிழர் மரபு. கம்பன் இராவணனின் வீழ்ந்து கிடக்கும் உடலைத் திருமேனி என்றுக் கூறக் காண்கிறோம். ஆம். மண்டோதரி அறிவாள். "மனத்தூய்மையோடு, என் கணவன் மரணத்தைத் தழுவினான். அவன் உடல் வணங்கத் தக்க திருமேனி ஆயிற்று" என்ற அவள் அரற்றலில், இராவணன் கற்பார் நெஞ்சில் ஒருபடி உயர்கின்றான்.*

## ஒரு பாடல் ஆய்வு

*கம்பன் கைவண்ணத்தில் மண்டோதரி புலம்பலாக வரும் "காந்தையருக்கு அணி அனைய" என்ற பாடல், பேரழகு பெற்று விளங்குகின்றது. கவிதை அழகெல்லாம்*

www.saivamonline.com

நிறைந்த உன்னதப்பாடல் அது. மண்டோதரியின் மனப் பண்பை அது ஆழமாகப் படம் பிடித்துக் காட்டுகின்றது.

இந்திரன் தவம் செய்தான். எதற்காக? அரக்கரை அழித்து, அமரரை வாழ்விக்க. அவன் தவம் வென்றதா? ஆம். வென்றது. எப்போது? இராவணன் வீழ்ச்சியில்! முக்கோடி வாழ்நாளும் முயன்றுடைய பெருந்தவமும் உடைய இராவணனுக்கு வீழ்ச்சி யாரால் வந்தது? கற்புமனம், காரணங்களைச் சோகத்திலும் நிலை தடுமாறாமல் கணித்து உரைக்கிறது.

இராவணன் வீழ்ச்சிக்கு முதற்காரணம். சீதையின் பேரழகு. அழகுக்கு அழிக்கும் திறம் உண்டா? அழகு மட்டும் காரணம் அன்று; அவள் கற்பும் ஒரு காரணம்.

மூன்றாவதாக, இராவணனார் சீதைபால் கொண்ட காதல்; இராவணன் கொண்டது காமம்தான்; ஆனால், மண்டோதரியின் கணவனைக் குறை காணாத நெஞ்சம் காமத்தையும் காதல் என்று நாகரிகப்படுத்துகின்றது. அடுத்த காரணம், நாத்தி, சூர்ப்பணகை. சூர்ப்பணகை என மட்டும் கூறாது, "அவள் இழந்த மூக்கும்" என்கிறாள் மண்டோதரி. சூர்ப்பணகையின் மூக்கு மட்டும் அரியப் பெறாதிருந்தால், அவள் இராவணனை நாடி முறையிட வந்திருக்கமாட்டாள். எனவே, இலக்குவன் செயல்கூட, சூர்ப்பணகை வடிவில், இராவண வீழ்ச்சிக்கு ஒரு காரணம் என்கிறது காதல் நெஞ்சம்.

வேந்தர் தலைவனாகிய இராமன், தயரதன் கட்டளை யால், காடு போந்ததுவும் ஒரு காரணம் என்கிறாள் அவள். கணவன் வீழ்ச்சிக்குப் பல காரணங்களை அடுக்கும் மண்டோதரியின் அரற்றலுக்கு இடையே ஓர் உண்மை புலப்படவே செய்கிறது. என்ன அது? இராவணன் வீழ்ச்சிக்கு முதலும் முடிவுமான ஒரே காரணம் அவன் சீதைபால் கொண்ட காமமே. ஆனால், அன்பு மனம்;

www.saivamonline.com

கணவனைக் குறைகாண விரும்பாத கற்பு நெஞ்சம், பல காரணங்களை அடுக்கி, அவற்றுள் ஒன்றே என் தலைவனின் காமம் என, அவனைக் காக்க முற்படும் அற்புதத்தைச் செய்கிறது.

**"காந்தையருக்கு அணி அனைய சானகியார்**
**பேர் அழகும், அவர்தம் கற்பும்**
**ஏந்துபுயத்து இராவணனார் காதலும், அச்**
**சூர்ப்பணகை இழந்த மூக்கும்**
**வேந்தர்பிரான், தயரதனார், பணியதனால்**
**வெங்கானில் விரதம் பூண்டு**
**போந்ததுவும் கடைமுறையே புரந்தரனார்**
**பெருந்தவமாய்ப் போயிற்றம்மா."** *(க. 9942)*

மண்டோதரியின் பெண்மைப் பண்பால், இராமன் என்ற பெயர் சுட்டாது, ஒருவன் என்றும், மானுடவன் என்றும், வேந்தர் பிரான் என்றும், மனித்தனார் என்றும் கூறப்படும் அருமைப்பாடு, கம்பசித்திரத்திற்கு அழகு சேர்க்கிறது.

## கற்பின் மாட்சி

மண்டோதரியின் அழுகையைக் கூட, பலபடப் புனையும் கம்பன், அவற்றில் எல்லாம், அவள் கற்பின் மாட்சியைக் காட்டுகிறான்.

**"........நீ உழந்த அருந்தவத்தின்**
**பெருங் கடற்கும் வரம் என்று ஆன்ற**
**காவற்கும், வலியான் ஓர் மானுடவன்**
**உளன் என்னக் கருதினேனோ?"** *(க. 9943)*

என்ற அவள் அரற்றலும்,

**"திரை கடையிட்டு அளப்பரிய வரம் என்னும்**
**பாற்கடலைச் சீதை என்னும்**
**பிரை கடையிட்டு அழிப்பதனை அறிந்தேனோ**
**தவப்பயனின் பெருமை பார்ப்பேன்?"** *(க. 9944)*

என்ற அவள் மனக் குமுறல்களும்,

www.saivamonline.com

"நார நாள்மலர்க் கணையால், நாள் எல்லாம்
தோள் எல்லாம் நைய எய்யும்
மாரனார் தனி இலக்கை மனித்தனார்
அழித்தனரே வரத்தினாலே" (க. 9945)

என்ற அவள் நிலை குலைவும் கம்பனில் மறக்க இயலாத துன்பியல் ஓவியங்களாக அமைகின்றன.

இவ்வாறு பலபட அழுது அரற்றிய மண்டோதரி, வீழ்ந்து பட்ட இராவணன் மார்பினைத் தன் கரங்களால் தழுவி, யாருமற்ற இடத்தில், கணவன் மட்டுமே அறிய, அவள் கூறும் அந்த ஒரு சொல்லை, கூட்டக் கலப்பில், இன்ப உச்சத்தில் சொல்லப்படும் அந்த ஒரு சொல்லைக் கூறி அன்பனை அழைத்தாள். அவள் ஆவி நீங்கிற்று எனக் கம்பன் நிறைவிக்கிறான்.

"என்று அழைத்தனள், ஏங்கி எழுந்து அவன்
பொன் தழைத்த பொருஅரு மார்பினைத்
தன்தழைக் கைகளால் தழுவி, தனி
நின்று அழைத்து உயிர்த்தாள்; உயிர் நீங்கினாள்." (க. 9946)

கணவன் உடலோடு உடல் சேர்ந்து ஆவி பிரிந்த தனி அன்பில் மண்டோதரி, மரணத்தையும் ஆட்சி செய்கிறாள். ஒரு நீண்ட இனம்புரியாத சோகம் நம்மைக் கவ்விக் கொள்கிறது. அவளுக்காக நாமும் அழத் தொடங்குகின்றோம். பன்னலக் கற்பில் மண்டோதரி அமரத்தன்மை பெறுகின்றாள்.

## அன்பின் வெளிப்பாடு

அன்பு என்பதற்கு இலக்கணம் கூற வந்த இறையனார் களவியல் உரைகாரர் நக்கீரர், அது, சாவிற் சாதல், நோவில் நோதல், ஒண்பொருள் கொடுத்தல், நன்கினிது மொழிதல், புணர்வு நனிவேட்டல், பிரிவு நனி இரங்கல், இவற்றால் அறியப்படும் என்பார். அன்பின் விரிவே காதல். கணவன்

www.saivamonline.com

சாவில் சாதல் உன்னதமானதுதான். மரணம் அன்பில் விளைதல் வேண்டும். தானே அமைய வேண்டும். தீக் குளித்தலோ, தற்கொலை செய்து கொள்ளுதலோ உண்மை அன்பின் வெளிப்பாடுகளாகிவிட முடியாது. மண்டோதரி மரணம் கணவனோடு அமைகிறது. அவன் மேனி தழுவி உயிர்க்க, அவள் ஆவி பிரிகிறது. இது அவள் கற்பு நிலையின் உன்னதம் காட்டுகிறது.

அன்பின் வெளிப்பாடு சாதலில் உண்டு என்றாலும், உடன் உயிர் துறவாமை குற்றமாகிவிடாது. கள்வன் என்ற குறை நீக்கவேண்டி, சிலநாள் உயிர்வாழ்ந்து பாண்டிய னோடு வாதிட்டு, கணவன் பழி துடைத்து விண்புகுந்த கண்ணகியும் கற்பரசியே. கோவலன் மரணத்திற்குப் பின், மகள் மணிமேகலையின் வாழ்வு கருதி அவளைப் பௌத்த மதத்தில் சேர்ப்பித்துத் தானும் துறந்த மாதவியும் கற்பரசியே. தகைசான்ற சொற்காக்கும் பெண்மைப் பண்பு இவர் களிடையே சிறந்திலங்கக் காண்கிறோம்.

சிலம்பில் பாண்டிமாதேவியும் உயிர் துறக்கக் காண் கிறோம். தவறே செய்யாத கணவன், விதி வயத்தால் தவறிய போது, நேர்ந்த மரணம் பாண்டிய மன்னனுடையது. இராவணன் அப்படிப்பட்டவன் அல்லன். அவன் திட்ட மிட்டுத் தவறு செய்தவன். பலர் எடுத்துரைத்தும் திருந்த முற்படாதவன். பலரை அடுத்தடுத்துப் பறி கொடுத்தும் நீதி சேராதவன். சொல்லப்போனால், மனைவியினிடத்தில் மாற்றாள் ஒருத்தியை இருத்திப் பார்த்தவன்.

## பெண்மையின் பேருரு

மண்டோதரி இராவணனை வெறுத்தொறுக்க ஆயிரம் காரணங்கள் உண்டு. ஆனால், அவற்றுள் அவள் ஒன்றையும் சிந்தை செய்தவள் அல்லள். மரணத்தில் மனிதனின் தவறுகள் தெரிவதில்லை. பிறருக்குத் தெரிந்தாலும்,

www.saivamonline.com

கற்புடைய மனைவிக்குத் தெரிவதில்லை. மண்டோதரியின் பிறப்பு, வளர்ப்பு, மணம், வாழ்வு, இவற்றுள் ஒன்றையும் காப்பியம் நமக்குக் காட்டவில்லை. சோகங்களில் மட்டுமே அவள் நிழலாடுகிறாள். இழப்புக்களில் மட்டுமே அவள் இனங்காட்டப்படுகிறாள். அவள் இடம் பெறும் காட்சிகளோ மிகச்சில. கம்பனின் பாடல்களோ வெகுசில. சிலவாய பாடல்களிலேயே மண்டோதரி கற்பார் மனத்தில் நிற்கிறாள். சோகத்திலும் பண்பு தவறாத அவள் சிந்தனையும், இழப்பிலும் ஏற்றம் விட்டு இறங்காத அவள் பண்பும், குறையுடையவன் மாட்டும் மனம் மாறா அன்பு செய்யும் சால்பும், மரணத்தை வா என்று அழைத்து ஆட்சி கொள்ளும் உன்னதமும் மறக்கவியலாத மாபெரும் பாத்திரமாக அவளை உயர்த்தி விடுகின்றன.

## நம்பிக்கை

கம்பனின் மண்டோதரி பற்றிய, துல்லியமான புனைவைக் கண்டு தெளிந்தபின், கவிஞன் மேல் நமக்கு மேலான எண்ணமும், பெண்மை பற்றிய கவிஞன் மதிப்பீடு இனி யாதாக அமையினும் அதை ஏற்க வேண்டும் என்ற விருப்பமும் எழுகின்றன. இனி, இந்த நல்லெண்ணத்தைப் பற்றுக் கோடாகக் கொண்டு பெண்மை பற்றிய பல்வகை மதிப்பீடுகளை நாம் முறையாக ஆய்வுக்கு உட்படுத்தலாம்.

www.saivamonline.com

# 4. கரும் புள்ளிகள்

## சில உண்மைகள்

பெண்மைக்கு எதிரான மனம் கொண்டவன் அல்லன் கம்பன் என்பதையும், மேலாகப் பெண்மைக்குப் பெருமிதம் சேர்த்து மகிழவும் அவன் தயங்கமாட்டான் என்பதையும், மயன்மகள் மண்டோதரியின் பாத்திரப் புனைவில் கண்டு மகிழ முடிந்தது. கவிஞன் பற்றிய இந்த நல்லெண்ணத்தைப் பற்றுக்கோடாகக் கொண்டு, காப்பியக் கட்டமைப்பின் உள்ளே நுழைந்து, கம்பனின் பெண்மைக் கோட்பாடுகளை ஆய்வுக்கு உட்படுத்தலாம். அதற்கு முன்பாக, சில உண்மைகளைத் தெளிவுபடுத்திக் கொள்வது நல்லது.

## நன்மையும் – தீமையும்

இறைவன் படைப்பில் நன்மையும் தீமையும் கலந்தே அமையும். மனித குலத்தில், ஆடவர்களில் நல்லோரும் உளர். தீயவர்களும் உளர். இதுபோல் பெண்களிலும் நல்லோரும் தீயோரும் இருப்பது இயற்கை. நன்மைக்கும் தீமைக்கும், அறத்திற்கும் பாவத்திற்கும், மெய்மைக்கும் பொய்மைக்கும் இடையே நிகழும் போராட்டங்களையும், இறுதியில் தீமை வீழ்ச்சியுற்று நன்மை வாழ்வு பெறுவதையுமே எல்லா இதிகாசங்களும், காப்பியங்களும் வெவ்வேறு வகையாக உணர்த்தி நிறைகின்றன. இவ்வகையில், இராமகாதையும், நன்மைக்கும் தீமைக்கும் இடையே நிகழ்ந்த போராட்டத்

www.saivamonline.com

தையே மையமாகக் கொண்டு நடையிடுகிறது. இங்கேயும், இராமன் போன்ற நல்லவர்களும் இராவணன் போன்ற தீயவர்களும் நடமாடுகின்றனர். இதேபோல் சீதை போன்ற நற்குணப் பெண்களும், சூர்ப்பணகை போன்ற தீய குணப் பெண்களும் இடம் பெற்றுள்ளனர்.

## உளவியல் போக்கு

தீயவர்களை இழித்துரைத்தலும், நல்லவர்களைப் புகழ்ந்துரைத்தலும், உலகினர் வழக்கம். காப்பியங்களுக்கும் இது பொருந்தும். தீமையே வடிவான பெண்களையும், பெண் பாத்திரங்களையும், கவிஞனும் காப்பிய மாந்தர்களும் இழித்துரைப்பது தவிர்க்க இயலாதது. என்றாலும், பெண்மை சித்திரிப்பு எனின் இழிப்புரைகளிலும் கூட ஒரு எல்லை கடவாமை வேண்டும் என்று சமூகம் எதிர்பார்க்கிறது. ஒரே குற்றத்திற்கு ஓர் ஆணுக்குத் தரும் அதே தண்டனையை ஒரு பெண்ணுக்கும் வழங்க முடிவதில்லை. எந்த நிலையிலும் பெண்மை பற்றிய புனைவில் கவிஞனுக்கு ஓர் எச்சரிக்கை உணர்வும், நிதானமும் இருத்தல் இன்றியமையாததாகிறது. கம்பன், சமூகம் சார்ந்த இந்த உளவியல் போக்கை நுனித்தறிந்தவனாகவே காணப்படுகிறான்.

## தேவையற்ற ஐயங்கள்

பெண்மைக்குக் கவிஞன் நேரடியாகவும், தன் கதை மாந்தர் வாயிலாகவும், சூட்டி மகிழும் புகழ் மகுடங்கள் ஏராளம். இராமகாதையில் இவ்வாறான பெண்மை உயர்ச்சியை எல்லாம் தொகுத்து, கம்பனின் பெண்ணியக் கொள்கைகளை வடித்தெடுப்பதற்கு முன்னாக, பெண்மைக்கு எதிரான பேச்சுரைகள், இழிப்புரைகள், செயல்கள், காப்பியத்தில் இடம் பெற்றிருந்தால், அவற்றைத் தேடிக் கண்டு, அவற்றிற்கான காரணங்களை ஆராய்வது இன்றியமையாததாகிறது. இத்தகு ஆய்வை நடத்தி முடித்துக்

www.saivamonline.com

கவிஞன் பெண்மைக்கு எதிரானவன் அல்லன் என்பதை உறுதி செய்து கொள்ளாது, பெண்மை பற்றிய உயர்ச்சிகளைத் தொகுத்தல் கூடாது. அங்ஙனம் செய்தால், தேவையற்ற ஐயங்கள் பல நம் முன்னே தோன்றிக் கவிஞனை ஒரு முரண்பாடு உடையவனாகக் கருத வைத்துவிடும். உளவியல் அடிப்படையிலும் இவ்வணுகுமுறையே நேரிதாக அமையும்.

## கவிஞன் பொறுப்பு

பெண்மைக்கு எதிரான ஏச்சுரைகளும், இழிப்புரைகளும், கம்பனில் இல்லாமல் இல்லை. காப்பியப் போக்கில் தீமைக்குணம் உடைய பெண்களின் செயல்களாலும், உரைகளாலும் பாதிக்கப்பட்ட பிற பாத்திரங்கள், அவர்களை எள்ளி நகையாடுதலும், இழித்துரைத்தலும் உணரத் தக்கவையேயாகும். அவற்றைப் பெரிதாகக் குறை கூறுவார் இருக்க முடியாது என்றாலும், பெண்மைக்கு எதிரான பாத்திரங்களின் செயல்கள் மற்றும் பேச்சுக்களில் எல்லை கடந்த போக்குக் காணப்படுமானால், சமூகம் சற்றே துணுக்குறும். இதுவன்றி, சமூகம் சார்ந்த விருப்பு வெறுப்புக்களின் போக்கில், நேரடியான மற்றும் மறைமுகமான பெண்மை பற்றிய இழிமொழிகள் அமைந்து விடுதலும் உண்டு. கம்பனின் இராமகாதையில், பெண்மையை இழித்துரைக்கும் இடங்கள் பலவற்றை முன்னிறுத்தித் தொடர்புடைய பாத்திரமோ கவிஞனோ எல்லை கடந்திருக்கிறார்களா என்று ஆராய வேண்டியுள்ளது. ஆய்வின் முடிவில், கவிஞனுக்குப் பெண்மையை இழித்துரைக்கும் உள்நோக்கம் ஏதும் இருந்திருக்கிறதா என்பதைக் கண்டு தெளிய வேண்டும். ஏனெனில், பாத்திரங்களின் கூற்றுக்களும், கவிஞனிடமிருந்து வந்தவைதாம். எனவே, பாத்திரங்களின் கூற்றுகளுக்கும் கவிஞனையே பொறுப்பாக்க வேண்டியுள்ளது.

www.saivamonline.com

## உணர்ச்சி வேகம்

கவிஞனும் ஒரு சமூக மனிதன்தான். நிகழ்வுகளினால் அவனும் பாதிக்கப்படுகிறான் என்பதும் உண்மையே. எனினும், காப்பிய நிகழ்வுகளின் மேல் பட்டாங்குத் தன் கருத்தை முன் எடுத்து வைக்கக் கவிஞனுக்கு உரிமை இல்லை என்பர் திறனாய்வாளர்கள். தன் கருத்து யாதாயினும், அதனைப் பிற பாத்திரங்களின் வழியே வெளிப்படுத்துபவனே சிறந்த படைப்பாளியாகக் கருதப் படுகிறான். இளங்கோவடிகள், தம் சமயக் கோட்பாடுகளை எடுத்துரைக்க ஒரு காவுந்தியையும், அறநெறிக் கோட்பாடு களை எடுத்துரைக்க ஒரு மாடல மறையோனையும் பயன் கொள்வார். கம்பனும், பரதனையும் அனுமனையும் வீடணனையும் பயன் கொள்வான். இவ்வரையறைகளை எல்லாம் கடந்து, கம்பன் ஏதேனும் ஓர் உணர்ச்சி வேகத்தில், தானே தன்னை முன்னிறுத்திப் பெண்மைக்கு எதிராகக் குரல் கொடுத்திருப்பானானால், அங்கே நாம் நின்று ஆராயக் கடமைப்பட்டிருக்கிறோம்.

## ஒரு முரண்பாடு

பெண்மை பற்றிய உயர் மதிப்பீடு கொண்டிருந்த கம்பன் காப்பியத்தில் ஓர் இடம் நெஞ்சை நெருடுகிறது. சீதாபிராட்டி, தாரை, மண்டோதரி முதலாய பெண் அரசியரை ஒளியூட்டி மகிழும் கம்ப நாடகத்தில் ஓர் இடம், சற்றே முரண்பாடாக நம் கருத்தில் நிறைகிறது. ஏன் இந்த முரண்பாடு? இதன் பின்புலம் யாதாக இருக்கும் என்ற நம் சிந்தனை ஓட்டத்தைப் பல்வேறு கோணங்களில் ஆராய்வது தேவையாக அமைகிறது.

நல்லாரும், தீயரும் என இரு திறத்தாரும் பெண்களில் உண்டு என்பதை உடன்பட்டுக் கதை நடத்தும் கம்பன், ஒட்டு மொத்தமாக ஓரிடத்தில் பெண் இனத்தையே இழித்துரைக் கிறான்.

www.saivamonline.com

பெண் என்பவள் யார்? தகுதி மிகப் படைத்த நம் முன்னோர் பலர், பெண்களை நாடி மணக்காது, தனித்து வாழ்ந்தது எதனால் என்ற, வினவப்படாத சில வினாக் களைத் தானே முன்னிறுத்திக் கொண்டு கம்பன் விடை தருவது, முரண்பாடு போல் தோன்றுகின்றது. கம்பன் மதிப்பீடு இவைதாம்.

**வஞ்சனை வடிவம்**

"வஞ்சனையின் மறு வடிவமே பெண்கள். அதனை உணர்ந்த காரணத்தால்தான், தகுதி மிகப் படைத்த சான்றோர் இவர்கள் நமக்குப் பற்றுக் கோடாக அமைவார் கள் என்பதை மறுத்து, அவர்களை மனத்தாலும் நினையாது விட்டனர்."

இக்கருத்தமைந்த பாடல் வரிகள், அயோத்தியா காண்டம், கைகேயி சூழ்வினைப் படலத்தில் கவிக் கூற்றாகவே இடம் பெறுகிறது.

> **"வஞ்சனை பண்டு மடந்தை வேடம்" என்றே**
> **தஞ்சு என மாதரை உள்ளலார்கள் தக்கோர்."** *(க. 1511)*

**பல வினாக்கள்**

"வஞ்சனையின் மறு வடிவமே பெண்கள்", என்பது கம்பனின் உள்ளார்ந்த கருத்தானால், சீதை முதலிய கற்பரசியரை அவன் போற்றிப் புகழ்வது முரண்பாடாக அமைந்துவிடுமே!

மனமாற்றமடைந்து தீமையைச் சார்ந்த கைகேயியைச் சித்திரிக்கும் நேரத்தில் உணர்ச்சிவசப்பட்டுக் கம்பன் இவ்வாறு மதிப்பீடு செய்துவிட்டான் என்று கற்பித்துக் கொள்ளலாமா?

உணர்ச்சியில் கவிஞன் இவ்வாறு மொழிந்து விட்டான் என்றால், அடிமனத்தில் கம்பன் பெண்மை பற்றிக் கொண்

www.saivamonline.com

டிருக்கும் மதிப்பீடு மோசமானதுதான் என்று ஏற்க வேண்டி வருமே. ஏற்க முடியுமா?

கேள்விகள் ஒன்றன்பின் ஒன்றாக நம்முன் எழுகின்றன. அவற்றுக்கு விடை காணும் முன்பு, கம்பன் உணர்ச்சிவயப் படக் காரணமாக அமைந்த காப்பிய நிகழ்வுகளை நினைவு கூர்தல் வேண்டும்.

## பாராட்டுரைகள்

மந்தரையின் சொல்லாற்றலால், கைகேயி மனம் மெல்ல மெல்ல மாற்றம் அடைகிறது. தன் கணவனிடம் இரு வரங்களையும் கேட்க உடன்படுகிறாள். அக்காலைக் கவிஞன் கைகேயியை இழித்துரைக்கக் காணோம். மாறாக அவளது மன மாற்றத்தின் பின்விளைவுகளை நினைவு கூர்ந்து மகிழ்கிறான்.

> **"தீய மந்தரை இவ்வுரை செப்பலும் தேவி**
> **தூய சிந்தையும் திரிந்தது"** *(க. 1483)*

எனப் படைக்கும் கம்பன், கைகேயியைத் "தேவி" என்றும், அவள், "தூய சிந்தையை யுடையாள்" என்றும் இசைந்து போற்றுகின்றான்.

## கம்பனின் பெருமிதம்

காப்பியப் போக்கு முழுதும் உணர்ந்து கதை நடத்தும் கவிஞனுக்கு, ஒரு பாத்திரத்தின் செயற்பாட்டால் ஏற்படும் பின்விளைவும் தெரிந்தேயிருக்கும். எனவே, கம்பன் கைகேயி மனமாற்றத்தின் பின்விளைவை நினைத்து அவள் மன மாற்றத்திற்குப் பாராட்டு மொழிகளையும் வழங்குகின்றான்.

> **"அரக்கர் பாவமும், அல்லவர் இயற்றிய அறமும்**
> **துரக்க நல்லருள் துறந்தனள் தூமொழி மடமான்;**
> **இரக்கம் இன்மை அன்றோ இன்றுஇவ் வுலகங்கள் இராமன்**
> **பரக்கும் தொல்புகழ் அமுதினைப் பருகு கின்றதுவே."**
> *(க. 1484)*

www.saivamonline.com

இங்குக் கைகேயியை, "தூமொழி மடமான்" என்று பாராட்டிப் பதிவு செய்யும் கம்பன், காப்பிய நோக்கம், அவள் மனமாற்றத்தால்தான் அமைந்தது என்பதை உடன்படுகிறான். மேலாக, இராமன் புகழை இவ்வுலகம் பருகி மகிழவும் அவளே காரணம் என்று பெருமிதப் படுகிறான்.

## ஒரு திகைப்பு

காப்பியப் போக்கில் ஒரு பாத்திரத்தின் மனமாற்றத் தைக் கதை நடத்திக் காட்டி, அப்பாத்திரத்தைப் புகழ்ந்து பேசி, அதன் விளைவுகளை அங்கீகரித்த கவிஞன், பல பாடல்களுக்கு அப்பால் மீண்டும் சினந்தெழுந்து அப் பாத்திரத்தின் மீது கொண்ட கோபத்தால் தன் கூற்றாகவே, "பெண்கள் வஞ்சனையின் மறு வடிவம்" என்று பேசுவது எவ்வகையில் ஏற்கத் தக்கதாகும்? என்ற வினா நம்முன் எழுகிறது. நாம் திகைத்து நிற்கிறோம்.

## தொடரும் இழிப்புரைகள்

மேலும் மேலும் இந்த முரண்பாடு வளர்ந்து கொண்டே போகிறது. கைகேயி வரம் கேட்ட பின், தயரதன் இறக்கும் இடத்தில் கம்பன் கைகேயியை,

**"தன் நேர் இல்லாத் தீயவள்"** *(க. 1524)*

என்று, கவிக்கூற்றாக ஏச்சுரைக்கிறான். இயற்கையே சினம் கொண்டதைச் சித்திரிக்கையில்,

**"கேகயத்து அரசன் பயந்த விடத்தை,**
**இன்னதோர் கேடு சூழ்**
**மா கயத்தியை............."** *(க. 1542)*

எனத் தன் கூற்றாகப் பதிவு செய்து கைகேயியை, "கேகயன் பெற்றெடுத்த விடம்" என்றும், அவள் ஒரு "கயமை யுடையாள்" என்றும் குமுறுகிறான்.

www.saivamonline.com

*தமிழ் இலக்கிய வரலாற்றில், ஆத்திரத்தின் விளைவாக, அருங்கொடையாகக், "கயவன்" என்ற ஆண்பாற் சொல்லுக்கு நிகராகக், "கயத்தி" என்ற பெண்பாற் சொல் கம்பன் வழி முதன்முதல் நமக்குக் கிடைக்கிறது.*

*மேலும், கைகேயியை,*

**"தீ அடங்கிய சிந்தையாள்"** *என்றும்,* *(க. 1547)*

**"இடை ஆன பாவி"** *என்றும்,*

**"வெம்பாவம் முற்றிய பேதை"** *என்றும்*

*கடுஞ்சொற்களால் கம்பன் கனன்று உரைத்துக் கதை நடத்துகிறான்.*

## தெய்வக் கற்பினள்

*கைகேயி சராசரி மானுடப் பெண் அல்லள். மானுடத்தின் மேம்பட்ட தெய்வத் தன்மையள் என்பதை உணர்ந்து உரைத்தவன் கம்பன். மந்தரை மனமாற்றம் உண்டாக்க வேண்டி, உறங்கிக் கிடக்கும் கைகேயியைக் கைகளால் தீண்டுகிறாள். கைகேயி கண் விழிக்கிறாள்.*

*இங்கே கம்பன்,*

**"தீண்டலும் உணர்ந்த அத் தெய்வக் கற்பினாள்"** *(க. 1450)*

*என்று வடித்துக் கைகேயியைத் தெய்வக் கற்பு உடையவள் என்று உணர்த்துகின்றான்.*

*தீண்டியவள், சொல்ல வருவது இன்னது என்பதனை, அவள் கூறாமலேயே உணரும் பேராற்றலையே கம்பன், "தெய்வக் கற்பு" என்று கூறியிருக்க வேண்டும் என்பது, "ஐயப்படாது...." என்று தொடங்கும் திருக்குறளால் தெளிவாகிறது.*

*கைகேயி, தெய்வக் கற்பினள் என்று பதிவு செய்ததை மறவாது போற்றி நின்று பல ஆயிரம் பாடல்களுக்கு அப்பால் இராமன் கூற்றாக,*

www.saivamonline.com

"தீயள் என்று நீ துறந்த என் தெய்வமும்" என்று அவளைத் தெய்வமாக உயர்த்தியும் காட்டுகின்றான்.

இவ்வாறாக, கைகேயியைத் "தெய்வக் கற்பினள்" என்றும், அவள் செயலால்தான் இராமன் புகழ் உலக மெலாம் பரவியிருக்கிறது என்றும் ஏற்றுப் போற்றும் கம்பன், பின் ஏன்? எதற்காகப் பெண் இனத்தையே "வஞ்சனையின் மறு வடிவம்" என்று இழித்துரைக்க வேண்டும்?

## ஓர் அளவு கோல்

இதற்கு விடைகாண, தமிழ் இலக்கியங்களின் மேல், ஒரு கண்ணோட்டம் செலுத்தியாக வேண்டும்.

கவிஞன், தாம் வாழும் சமூகம் எப்படிப்பட்டதாக இருந்தாலும், அதனுடன் தன்னை முற்றிலுமாக இணைத்துக் கொள்ளாது, அதிலிருந்து மேலெழுந்து சிந்திக்கும் ஆற்றல் உடையவனாகவே இருப்பான். அதுவே, அவனை நம் வணக்கத்துக்குரியவன் ஆக்குகிறது. இவ் அளவுகோல் தமிழ் இலக்கியம் படைத்த கவிஞர்கள் பலருக்கும் பொருந்தும்.

## சமூக முரண்பாடுகள்

கவிஞன் காண விரும்பும் சமுதாயம் ஒன்றாகவும், அவன் வாழும் சமுதாயம் ஒன்றாகவும் வேறுபட்டே நிற்கும். நின்று வந்துள்ளது என்பதற்குச் சான்றுகள் பல உண்டு.

கண்ணகியை, மாபெரும் பத்தினியாக இளங்கோ சித்திரிக்கிறார். ஆனால், அவள் வாழ்வைப் பறி கொடுத்த ஓர் அபலையாகவே சமூக நோக்கில் காணப்படுகிறாள்.

மணிமேகலையைப் பசிப்பிணி தீர்த்த அறச்செல்வி என்கிறது காப்பியம். மாதவி மகளாகப் பிறந்ததால்,

www.saivamonline.com

சமூகத்தில் ஓர் ஆடவனுக்கு மனைவியாக வாழ முடியாது, துறவு மேற்கொண்ட பெண்மையின் அவலம், சமூகத்தில் நிழலாடுகிறது.

பெண்மைக்குப் பேரிடம் தர முயலும் பாரதி கூட ஒரு நேரத்தில், சமூகத்தின் போக்கிலிருந்து விடுபட இயலாது, "பெட்டைப் புலம்பல்" என்று, பெண்களை நெகிழ்ந்துரைக் கிறான்.

### கம்பன் சினம்

கம்பனின் நிகழ்காலச் சமூகத்தில், பெண்ணுக்குப் பெரிய மரியாதை ஏதும் இருந்திருக்க வாய்ப்பில்லை. கவிஞன் விருப்பம் பெண்மையை உயர்த்திச் சிறப்பிக்க வேண்டும் என்று இருந்தாலும், அவன் வாழும் சமூகத் தாக்கத்தால், ஆங்காங்கே பெண்மை பற்றிய சமூகம் சார்ந்த மதிப்பீடுகள், அவனையும் அறியாது வெளிப்பட்டு விடலாம். கம்பன் சினம், இவ்வாறு கொப்பளித்து வந்திருக்கலாம் என்று கருதுவது ஒன்று.

இரண்டாவதாக, வேறு ஒரு வகையில் சிந்திக்கலாம்.

### சமூகத் தாக்கம்

கவிஞனுக்குக் காப்பியம் நடத்துவதில் பல சிக்கல்கள் உண்டு. தன் விருப்பம் யாதாயினும், சமூக விருப்பங்களுக் கும் மரபுகளுக்கும் அவன் அடிபணிந்தே ஆக வேண்டும். தீயவன் என்று நன்கு உணர்ந்த ஒருவன் இறந்து விடுகிறான். இடுகாட்டில் அவனுக்கு இரங்கல் கூட்டம். நாம் என்ன செய்ய இயலும்? அவன் தீமைகளை உள்ளடக்கிக் கொண்டு, பலரோடும் இணைந்து நாமும் நாலு நல்ல வார்த்தைகள் சொல்லி நிற்கிறோம். இச்செயல், நம்மை மீறிய சமூகத் தாக்கத்தால் அமைவது. இதேபோல் உணர்ந்த நன்மையையும் சில நேரங்களில் சமூகத்தோடு இணைந்து, தீமை என்றே நாம் வழி மொழிய வேண்டி வரும்.

www.saivamonline.com

கைகேயி, தெய்வத் தன்மையள். அவள் மனமாற்றமே, இராமன் புகழுக்குக் காரணம் என்று தெளிய உணர்ந்த கவிஞன், அவள்மீது அளப்பரிய மரியாதையால் முன்னே புகழ் மொழிகளை அடுக்கியிருக்க வேண்டும்: ஆனால், சமூகம் பின்விளைவுகளைப் பற்றி எல்லாம் ஆலோசிக்கும் திறன் படைத்தது அன்று. ஒரு பெண், அதிலும் ஒருவன் மனைவி, அவள் கணவன் மரணத்திற்கே காரணமாகிறாள் என்று அறியும் ஒரு சமூகம், அவள் எவ்வளவு பெரியவ ளானாலும் அவளை ஏற்காது இழிசொற்களால் தூற்றவே செய்யும்.

## திருஷ்டிப் பொட்டு

அவ்வாறு கைகேயியைத் தூற்றும் ஆத்திரம் கொண்ட ஒரு சமுதாயத்தில் நாம் அன்னியப்பட்டு நின்றால், சமூகம் நம்மையே ஐயுறும் என்ற நியாயமான அச்சத்தால் கம்பன் பத்தோடு பதினொன்றாக நின்று, கைகேயியை ஏசியிருக்க வும் கூடும். இவ்விரண்டாவது கருத்தே வலிவுடையதாகத் தோன்றுகிறது.

எனவே, பெண்மை பற்றிய பொது மதிப்பீட்டில் கம்பன் குறையுடையவன் அல்லன் என்றே துணிய வேண்டியுள்ளது. இவ்விடம் ஒன்றைத் தவிர, கம்பன் நேரடியாகப் பெண்மையை இடித்துரைக்கும் இடங்கள் ஏதும் காப்பியத்தில் இடம் பெறவில்லை. எஞ்சிய பலவும் பாத்திரங்களின் கூற்றுக்களாகவே பெரும்பாலும் அமை கின்றன. அவற்றை இனி ஆய்வு செய்வது பொருந்தும். எனவே கைகேயி என்ற பாத்திரத்தின் மேல் கரும்புள்ளி ஒன்றைக் குத்தியதாகக் கருதாது, கவிஞன் அவள் முகத்தில் இட்ட திருஷ்டிப் பொட்டாகவே இதனைக் கருத வேண்டி யுள்ளது.

www.saivamonline.com

## வசிட்டன் கூற்று

மந்தரை சூழ்ச்சிப் படலத்தில், வசிட்டன் இராமனுக்குக் கூறும் அறிவுரைகளை வரிசைப்படுத்தி உரைக்கும் கம்பன், வசிட்டன் கூற்றாக ஒரு பாடலைப் பதிவு செய்கிறான்.

**"தூமகேது புவிக்கு எனத் தோன்றிய**
**வாம மேகலை மங்கைய ரால்வரும்**
**காமம் இல்லை எனின், கடும் கேடு எனும்**
**நாமம் இல்லை; நரகமும் இல்லையே."** *(க. 1427)*

புகைக் கொடி போன்ற தோற்றமுடைய ஒரு வால் நட்சத்திரத்தைத் "தூமகேது" என்பர். அது வானில் தோன்றினால் பேரழிவுகள் பல மண்ணில் நிகழும் என்பது வானியலாரும் உடன்பட்டது. புறநானூற்றிலும் "தூமகேது" பற்றிய குறிப்பு உள்ளது. பெண்கள் எத்தகையவர்கள் என்பதை இராமனுக்கு அறிவுறுத்த வந்த வசிட்டன், பெண்களை அழிவு செய்யும் "தூமகேது"வுடன் ஒப்பிட்டுப் பேசுகிறான். சீதையை மணந்து மகிழ்ந்திருக்கும் இராமனிடம், வசிட்டன் கூறிய இவ்வறிவுரைக்கு இராமன், எந்த விடையும் கூறியதாகக் குறிப்பு ஒன்றும் இல்லை. இராமனுக்கு வசிட்டன் அறிவுரையில் எடுத்துக்காட்டிய பெண்மை பற்றிய மதிப்பீட்டை, இராமன் ஏற்கவும் இல்லை; மறுக்கவும் இல்லை.

## அழிவு சக்தியா?

நாடாள்வானுக்கு மற்றும் பொதுவாக, ஓர் ஆண் மகனுக்கு, இம்மை வாழ்வில் பெருங்கேடும், மறுமை வாழ்வில் நரகமும் அமைய வேண்டுமானால், அவை அவனுக்குப் பெண்கள் பால் வைக்கும் காமத்தால் வந்து சேர்ந்து விடும் என்கிறான் வசிட்டன். அறிவுரை கூறியவன் அமைச்சரினும் மேலானவன். தயரதனுக்கும் இராமனுக்கும் ஞானம் கற்பிக்கும் ஆசிரியன். கம்பன் வாக்கில் கூற

www.saivamonline.com

வேண்டுமானால், வசிட்டன் "பிழைப்பு இல் செய்தவம் வருந்தினான்". அத்தகு தவம் வல்ல முனிவன் இராமனை வளர்த்து ஆளாக்கியவன்; உலகியல் முற்றும் உணர்ந்தவன்; ஞான நூல் பல கற்றறிந்தவன். அவன் கூற்றாகப் பெண், "ஓர் அழிவு சக்தி" என்ற கூற்று வருமானால், அதனைப் புறந்தள்ளி மேற்செல்ல இயலாது.

## ஏற்கத்தக்கதா?

தயரதனே, இராமனுக்கு முடிசூட்டும் முடிவை எடுத்த பின் வசிட்டனை அழைப்பித்து, முடிசூடிக் கொள்ளப் போகும் இராமனுக்கு "நல் உறுதி வாய்மையும் சொல்லுதி பெரிது" என்று கேட்டுக் கொள்ளுகிறான். வசிட்டன், இராமன் வளமனை சேர்ந்து, அவனுக்கு எடுத்துரைக்கும் பல நீதிகளின் நிறைவில் மேற்குறித்த பெண்மை பற்றிய எச்சரிக்கையை அவன் விடுக்கிறான். அமைதி நிறைந்த கோசலத்தில், அவன் அறிவுரை கூறிய நேரம் வரை பெண்களால் ஏற்பட்ட கேடு எதுவும் நிகழவில்லை. கைகேயி மனம் மாறி வரம் கேட்ட நிகழ்வு, இதற்குப் பின்னேதான் அமைகிறது என்றால் வசிட்டனின் பெண்மை பற்றிய மதிப்பீடு ஏற்கத்தக்கதா? புறந்தள்ளத்தக்கதா? என்ற வினா எழுகிறது.

## வசிட்டன் மகிழ்ச்சி

இதே வசிட்டன், இராமன் வில்லொடித்துச் சீதையை மணக்கவிருப்பதை அறிந்து மகிழ்கிறான். சீதை இராமனுக்குக் கிடைக்கப் பெற்றதை அறிந்து மகிழும் வசிட்டன்,

> **"எங்கள் செய் தவத்தினில் இராமன் என வந்தோன்**
> **சங்கினொடு சக்கரமுடைத் தனிமுதற் பேர்**
> **அம்கண் அரசு ஆதலின் அவ்அல்லி மலர் புல்லும்**
> **மங்கை இவள்ஆம் என வசிட்டன் மகிழ்வுற்றான்."** *(க. 1148)*

www.saivamonline.com

என்று கம்பன், அவன் மனமகிழ்ச்சியைப் பதிவு செய்கிறான். திருமாலே அயோத்தியில் அரசாள இராமனாக வந்துள் ளான் என்பதை உணர்ந்த வசிட்டன் அவனுக்கு மாலை சூடுபவன், தாமரையில் தங்கும் திருமகளாகவே இருத்தல் வேண்டும் என்று துணிகிறான். அரச செல்வத்தை முன்னரே எய்திய இராமனிடம், 'இன்றே திருமகள் வந்து சேர்ந்துள் ளாள்' என்று, உள் மகிழ்கிறான். சீதை வரவையும் இராமன் மணத்தையும் ஏற்றுப் போற்றும் வசிட்டன், பெண்மையை இழித்துரைக்கும் பண்பினன். அல்லன் என்பது தெரிகிறது.

## உலக இயற்கை

இதே வசிட்டன், கைகேயி கேட்ட வரத்தால் மயங்கித் தயரதன் வாடும்போது, அவன் அருகில் வருகிறான். தயரதன் அளப்பரிய துயரில், வசிட்டனை வணங்கி, 'நீ கைகேயிக்கு அறிவுரை கூறுக' என வேண்டுகின்றான். பரதன் வேண்டு மானால் முடிசூடிக் கொள்ளட்டும். ஆனால் இராமன் காடேகாதவாறு அவளை மனமாற்றம் செய்து வா என்று கெஞ்சுகிறான். வசிட்டன் அறிவுரை கூறியும் கைகேயி தன் நிலையில் மாற மறுக்கிறாள். அக்காலை வசிட்டன் வெகுண்டு கைகேயியை இழித்தும் பழித்தும்

**"பெண்ணோ தீயோ மாயாப் பேயோ**
**கொடியாய் நீஇம்**
**மண்ணோடு உன்னோடு என்ஆம்**
**வசையோ வலிதே"** *(சு. 1649)*

என்று அவளைப் பெண் அல்லள் என்றும், சுட்டெரிக்கும் நெருப்பு என்றும், சாதலற்று நிரந்தரமாய் வாழும் பேய் என்றும், கொடியவள் என்றும் பலபடப் பேசுகின்றான். தயரதனுக்குத் தவறு இழைத்து விட்டாள் என்று நம்பும் வசிட்டன், தவறிழைத்த ஒருத்தியை இழித்தும் பழித்தும் பேசுவது, புரிந்து கொள்ளக் கூடியதே. அது உலகத்து இயற்கையும் ஆகும்.

www.saivamonline.com

## வேறு பொருள்

ஆனால், இராமனுக்கு அறிவுரை கூறும் வசிட்டன், ஒட்டுமொத்தமாகப் பெண்களை எல்லாம் "தூமகேது" என்று தூற்றுவது, பெண்மையை இழித்துரைக்கும் நிலை தாமே. இவ்வாறு, வசிட்டனைப் பேச வைத்த கம்பனுக்கும், பெண்மை பற்றிய உயர்ந்த எண்ணம் எப்படியிருந்திருக்க முடியும் என்ற வினா எழுதல் இயற்கையே.

நற்குல மகளான சீதை வரவை மகிழ்வுடன் ஏற்றுப் போற்றியும், தீய மனம் படைத்துக் கணவன் சாக்காட்டுக்குக் காரணமாக நிற்பவளை இழித்துரைத்தும் பேசும் வசிட்டன் நிலையில், முரண்பாடு ஏதும் இல்லை. நன்மையைப் போற்று வதும், தீமையைத் தூற்றுவதும், சான்றோர் செயல்களே ஆகும். எனவே, வசிட்டன் இராமனுக்குக் கூறிய அறிவுரைக்கு, வேறுபொருள் கண்டாக வேண்டும்.

## தீங்கு ஏதும் இல்லை

தனி மனிதன், பெண் நாட்டம் மிக்கவனாய் காமம் கொண்டு பல பெண்களை நாடிச் சென்று மகிழ்ந்தால், அவன் காமத்தால் வரும் அழிவு அவனுடன் நின்று போகும். ஆனால், நாடாளும் அரசனுக்குச் சில கட்டுப்பாடுகள் வேண்டும். அவன், காமம் மீதூர்ந்து, பல பெண்களையும் நாடும் மனம் உடையவனாக வாழ்ந்தால், அவன் விரும்பும் பெண் ஒருத்தி வாயிலாகவே பகைவர் அவனை வீழ்த்தி விடுவர். வள்ளுவரும், நாடாள்வோரை எச்சரிக்குமிடத்து,

> **'காதல காதல் அறியாமை உய்க்கிற்பின்**
> **ஏதில ஏதிலார் நூல்,'** *(திரு. 440)*

எனப் பிறர் அறியாது அவன் பெண்ணை அனுபவித்துக் கொள்ள, அதிகாரம் தருகிறார். பஞ்சமா பாதகங்கள் எனப்படும் களவு, பொய், காமம், கோபம், கொலை என்னும் ஐந்தில் காமமும் ஒன்றாகக் குறிக்கப்படுகிறது. காதல்

www.saivamonline.com

மனைவியோடு துய்க்கும், காமத்தைக் குறை சொல்வார் இலர். "வாம மேகலை மங்கையர்" என்ற அலங்கார அடை மொழிகளால் அன்னார், குலமகளிர் அல்லர் என்ற குறிப்பும் அமைகிறது. எனவே, கம்பன் இங்கே வசிட்டன் கூற்றில் வைத்துப் பெண்மைக்குத் தீங்கிழைத்து விட்டான் என்று கூறல் பொருந்தாது.

## இராமன் அறிவுரை

வசிட்டரிடம் தான் கற்ற பாடத்தை இராமன் மறவாமல் நெஞ்சகத்தில் இறுத்திச் சிந்தித்திருக்க வேண்டும். காடேகி, சீதையைப் பிரிந்து வாலியை வதைத்துச் சுக்ரீவனுக்கு கிஷ்கிந்தை அரசுரிமையை வழங்குகின்றான். அக்காலை சுக்ரீவனுக்கு இராமன் நீண்ட பல அறிவுரைகளைக் கூறு கின்றான். வசிட்டன் இராமனுக்குக் கூறிய அறிவுரைகள், அறநூல்களின் பிழிவாக அமைந்தன. ஆயின், இராமன் சுக்ரீவனுக்குக் கூறும் அறிவுரைகள், அவன் அனுபவத்தி லிருந்து பெறப்பட்டவையாக அமைகின்றன. இவ்வறிவுரை களில் பெண்மை பற்றிய ஓர் எச்சரிக்கை இடம் பெற்றுள்ளது.

> **"மங்கையர் பொருட்டால் எய்தும்**
> **மாந்தர்க்கு மரணம் என்றல்**
> **சங்கை இன்று உணர்தி வாலி**
> **செய்கையால் சாலும், இன்னும்**
> **அங்கவர் திறத்தினானே**
> **அல்லலும் பழியும் ஆதல்**
> **எங்களின் காண்டி அன்றே**
> **இதற்கு வேறு உவமை உண்டோ."** *(கி. 4127)*

## கவிதையின் உள்ளீடு

இராமன் கூற்றாகக் கம்பன், இவ்வறிவுரைகளைச் சுக்ரீவனுக்கு வழங்கச் செய்கிறான். "மங்கையர் பொருட்

www.saivamonline.com

டால் எய்தும் மாந்தர்க்கு மரணம்" என்ற தொடர் கண்டு அச்சப்படவோ, ஆவேசப்படவோ, பெண்மை இழிப்பு என்று ஆரவாரிக்கவோ, இதில் ஒன்றுமில்லை. "வாள் எடுத்தவன் வாளால் சாவான்" என்பது பழமொழி. வாள் ஒரு கூரிய கருவி. அதைச் சரியாகப் பயன் கொண்டால் நன்மை தரும். தவறாகப் பயன் கொண்டால் அழிவை உண்டாக்கும். பெண் வெறும் போகப் பொருள் என்றும், இன்பச் சுரங்கம் என்றும் கருதுவார் அறியார். அவளைச் சரியாகக் கையாளாவிடில், அவளால் மரணமும் கூடும் என்பதே, கவிதையின் உள்ளீடு.

## இழிப்புரை அன்று

வாலி உருமையிடம் தவறாக நடந்து கொண்டான் என்று, கம்பனில் குறிப்பில்லை. ஆயினும், அவளை வாலி தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தான். அனுமன் உரைத்த "உருமை என்று இவர்க்கு உரிய தாரமாம், அருமருந்தையும் அவன் விரும்பினான்" என்ற மொழிகள், இராமன் சினத்தைத் தூண்டின. வாலி வதம் நடந்து முடிந்தது. அரசியல் துறையில் பெண்களாலும் ஒருவனுக்கு மரணம் வரக்கூடும் என்பதையே, கம்பன் அவ்வாறு குறித்துள்ளான். மேலும், தொடர்ந்து வரும் செய்திகள் இக்கருத்துக்கு அரண் சேர்க்கின்றன. 'மங்கையர்களால் அல்லல்களும் பழிகளும் வரும் என்பதை எங்களைப் பார்த்துத் தெரிந்து கொள்' என்கிறான் இராமன். 'கூனியும், கைகேயியும் பெண்கள்தாம். என்றாலும், அவர்களால் நாங்கள் உற்ற துயரை அறிந்தால் பெண்களிடம் என்றும் விழிப்பாக இருத்தல் வேண்டும், என்பதை நீ உணர இயலும்' என்கிறான். இது பெண்மை பற்றிய எச்சரிக்கையே அன்றி, இழிப்புரையாக அமையாது. தனி மனிதர்கள் நிலை யாதாயினும் ஆட்சிக் கட்டிலில் இருப்போர்க்கு இவ் அறிவுரை பெரிதும் தேவைப்படும்.

www.saivamonline.com

## தீய பெண்டிர்

அச்சமும் நாணமும் மடமும் பயிர்ப்பும் கொண்ட சீதையையும் மண்டோதரியையும் படைத்துக் காட்டும் கம்பன், தீமையே வடிவான சில பெண்களையும் படைத்துக் காட்டத் தவறவில்லை. பெண்கள் என்பதாலேயே அவர்கள் எல்லோரும் நல்லவர்கள் என்றோ, குற்றமற்றவர்கள் என்றோ, கருதிவிட இயலாது. பெண்களிலும் பெருந்தீங்கு புரிவார் உளர். நினைத்துப் பார்க்கவும் மாட்டாத கொடுமை உடையவர் பலர். எனவே, பெண்மைக்கு எதிரான பதிவுகள் வரும்போதெல்லாம், பெண் இழிக்கப்பட்டுவிட்டாள் என்று கூக்குரல் இடுவதில் பொருள் இல்லை. கம்பன் கூற்றிலும், வசிட்டர் மொழியிலும், இராமனது வெளிப்பாட்டிலும் பெண்மை இழிவுபடுத்தப்பட்டுள்ளதாகவே சாதித்தால், அன்னார் மேற்குறித்த தீமையே வடிவான பெண்மையையும் நினைதல் வேண்டும்.

## பாவம் பெண்

பெண் விடுதலை, மற்றும் பெண் விடுதலை குறித்த குறிக்கோள் உடையார் முன் வைக்கும் வாதம் ஒன்று உண்டு. "பெண்" என்பதற்காக மட்டும் பிரித்து, எந்தச் சலுகைகளையும் வழங்க முன் வருவதை ஏற்க மாட்டோம் என்பது அவர்கள் தரப்பு வாதம். ஆணுக்கு நிகர் பெண்கள் என்பதால், எங்களைச் சரிசமமாகப் பாவிக்க வேண்டுமே அன்றி, பால் வேறுபாடு காரணமாகச் சிறப்புச் சலுகை பெறுவது கூட, ஒருவகையில் பெண்மை தமக்குத் தாமே விலங்கிட்டுக் கொள்வதாக அமைந்துவிடும் என்பது அவர்கள் அச்சம். ஒருவகையில், பெண்மை பற்றிய இக்கொள்கையில் நியாயம் இருக்கவே செய்கிறது. ஊனமுற்றவர்கள் கூடத் தங்களை, அது காரணமாகப் பிரித்து இரக்கம் காட்டுதலை விரும்புவது இல்லை. "பாவம் பெண்" என்ற பரிதாப மொழி, அவர்களால் வெறுத்தே ஒதுக்கப்படுகிறது.

www.saivamonline.com

## பெருந்தகை

*பெண்ணியப் பார்வையில், இவ்வாறு அமையும் சில கூற்றுக்கள், விமர்சனத்துக்கு உட்படுத்தப்படுகின்றன. அவற்றுள் ஒன்று,*

**"துண்எனும் வினைத்தொழில் தொடங்கி யுளளேனும்**
**பெண்என மனத்திடை பெருந்தகை நினைத்தான்,"** *(க. 374)*

*என வரும் கவிக் கூற்றாகும். தாடகை வதைப் படலத்தில், தாடகை ஆரவாரித்து சினந்து வேல்கொண்டு எறிவேன் என முன் வந்த போதும், இராமன் அவளோடு போர் தொடங்க விரும்பவில்லை. கொடுமைக் குணம் மிக்கிருந் தாலும், வடிவில் பெண்ணாக இருப்பதால் இராமன் அவள் மேல் அம்பு எய்ய விரும்பியிருக்கவில்லை. இராமன் மன நிலையையே கம்பன், மேலே பதிவு செய்கிறான். அவள், "பெண்" என்று மனத்தில் நினைத்தமை இழிவு பற்றியதன்று என்பதை நிலைநாட்டவே, கம்பன், அவனைப் "பெருந்தகை" என்று அடையாளம் காட்டினான். வடிவத்தில், பெண் போல் நின்றாலும், தாடகை எத்தகையவள் என்பதைக் கம்பன், விரிவாக எடுத்துரைக்கத் தவறவில்லை.*

## கொடிய தாடகை

*பெண் வடிவில் இருந்தாலும், தாடகை கொடிய குணங்கள் பல கொண்டிருந்தாள்.*

**"......................இன்உயிர்**
**கொன்று உழல் வாழ்க்கையள்**
**கூற்றின் தோற்றத்தள்."** *(க. 359)*

*என்றும்,*

**"எண் உருத் தெரிவு அரும் பாவம் ஈண்டி ஓர்**
**பெண்உருக் கொண்டெனத் திரியும் பெற்றியாள்."** *(க. 360)*

*என்றும்,*

www.saivamonline.com

**"முன்உலகு அளித்து முறை நின்ற உயிர் எல்லாம்**
**தன்உணவு எனக்கருது தன்மையினள்...."** *(க.365)*

*என்றும் கூறப்படும் கொடுமையே வடிவானவள் அவள். வேல் கொண்டு தன்னை எறிய முற்பட்டபோதும், இராமன் போர் தொடங்காமை சமூகத்தில் பெண்மைபால் நிலவும் பரிவே அன்றி, அதில் இகழ்ச்சிக்கு இடமே இல்லை.*

## கோசிகன் வாதம்

*கோசிக முனி, மேலும் அவள் கொடுமைகள் பலவற்றையும் விரிவாக எடுத்துரைத்து,*

**"மன்னும் பலஉயிர் வாரி தன் வாய்ப் பெய்து**
**தின்னும் புன்மையின் தீமை ஏதோ!– ஐய–**
**பின்னும் தாழ் குழல் பேதைமைப் பெண் இவள்**
**என்னும் தன்மை எளிமையின் பாலதே."** *(க. 381)*

*என்று கூறி, "இவளைப் பெண்" என்று கோடலே பிழை என்கிறான். ஆணா, பெண்ணா என்பது உருவத்தில் இல்லை; செயலில்தான் உள்ளது என்பது கோசிகன் வாதம்.*

## சமூகப் பண்பாடு

*இத்தனை கூறிய பிறகே, இராமன் தாடகை மேல் அம்பு தொடுக்க இசைகிறான். அப்போது கூட, இது என் ஆசாரியன் கட்டளை என்பதாலும், அது பிழையாக இருந்தாலும் அவன் இடுவதால் அதுவே அறம் என்றும் புதிய கொள்கை ஒன்றை நினைக்கிறான்.*

**"ஐயன் அங்கு அது கேட்டு அறன் அல்லவும்**
**எய்தினால் அதுசெய்க என்று ஏவினால்**
**மெய்ய நின் உரை வேதம் எனக்கொடு**
**செய்கை அன்றோ அறம் செயும் ஆறு"** *(க. 383)*

*என்று உளங்கொண்டு, பின் அவள் மேல் அம்பு எய்து வீழ்த்துகிறான். பெண் என நினைத்தது, சமூகம் சார்ந்த*

www.saivamonline.com

பண்பாடு. அம்பு ஏவியது, ஆசாரியன் கட்டளைக்காக. இதில் இராமன் பிழை ஏதும் இல்லை. இருந்தும் காப்பியத்தில் தாடகை வதத்தை நினைவு கூர்ந்து, தீய கூனி இராமனை இகழ்ந்துரைக்கிறாள்.

**"ஆடவர் நகையுற ஆண்மை மாசுஉற**
**தாடகை எனும் பெயர்த் தையலாள் பட**
**கோடிய வரிசிலை இராமன்"** *(க. 1456)*

என்பது அவள் இகழ்ச்சி உரை. பெண் ஒருத்தி பார்வையில் தாடகை வதம் பாவம் என்று கூறப்படுமானால், பெண் என இராமன் நினைந்து, போர் தொடாது இருந்த நிலை, உன்னதமானதாக ஏற்கப்பட வேண்டும். படவே, பெண் என நினைந்ததில், பெண்மையை அவமதித்த கூறு, ஒன்றும் இல்லை என்றே நிறைகிறது.

## பிழைத்தனை பாவி

இதனை ஒத்த பகுதி ஒன்று, வாலி வதைப் படலத்திலும் வருகிறது. சுக்ரீவன், வாலியைப் போருக்கு அழைக்கிறான். வாலி, எதிர்கொள்ளக் கிளர்ந்து எழுகிறான். அவன் துணைவி தாரை, அவனை விலக்க முயன்று, பலபடப் பேசுகிறாள். இறுதியில், இராமன் என்பான் துணை பெற்றே, நின் தம்பி, நின்னை எதிர்க்கத் துணிந்துள்ளான் என்பதை, என்பால் அன்புடையவர்கள் எனக்கு எடுத்துரைத்தனர் என்கிறாள்.

**"அன்னது கேட்டவள் அரச ஆயவற்கு**
**இன்உயிர் நட்பு அமைந்து இராமன் என்பவன்**
**உன்உயிர் கோடலுக்கு உடன்வந்தான் என**
**துன்னிய அன்பினர் சொல்லினார்"** *(க. 3964)*

என்று தாரை உரைத்ததும், வாலி உள்ளத்தே இருந்த இராமன் பற்றிய உயர்ந்த மதிப்பீட்டால், அவன் தாரை உரைத்தமை பிழை என்று கருதுகின்றான். கருதி,

www.saivamonline.com

"உழைத்த வல் இருவினைக்கு ஊறு காண்கிலாது
அழைத்து அயர் உலகினுக்கு அறத்தின் ஆறு எலாம்
இழைத்தவற்கு இயல்புஅல இயம்பி என் செய்தாய்
பிழைத்தனை பாவி! உன் பெண்மையால்" (க. 3965)

என்று சினந்துரைக்கிறான். "பிழைத்தனை பாவி உன் பெண்மையால்" என்ற தொடருக்கு, இராமனைப் பற்றி வேறு ஓர் ஆண்மகன், இவ்வாறு கூறியிருந்தால், அவனை இந்நேரம் கொன்றிருப்பேன். நீ பெண்ணாக இருப்பதால், பிழைத்தாய் என்பது ஒரு பொருள்.

## இழிப்புரை அன்று

உலகறியாமையும், உண்மை காண மாட்டாமையும் உடைய பெண் நீ என்பதால், இராமனைப் பற்றிப் பிழையாக உரைத்தனை என்பது வேறு ஒரு பொருள். வாலி, தன் கோப உரையின் முடிவில், "உடன் வந்தாரையும் கருத்து அழித்து வருவன் கலங்கல்" என்று அன்பு மீதூர தாரைக்கு ஆறுதல் மொழி புகன்றதாக நிறைவதால், இரண்டாவது பொருளே பொருத்தமாகப் படுகிறது. இங்கேயும் பெண்மையால் பிழைத்தனை என்பதில், இழித்துரைக்கும் நோக்கம் ஏதும் கம்பனுக்கு இருந்திருக்க நியாயம் இல்லை.

## தசரதன் துயரம்

கம்பன் காப்பியத்தில், தசரதன் ஓர் அவலம் நிறைந்த பாத்திரமாகவே படைக்கப்பட்டுள்ளான். திருமாலை மகனாக அடையும் பேறு வாய்த்திருந்தும், அவன் வாழ்வில் அமைதி நிலவவில்லை. பேரன்பு செலுத்தி வந்த துணைவி கைகேயி கேட்ட வரங்களால், அவன் வாழ்வில் துயரம் சேர்கிறது. மகனைப் பிரிகிறான். காதல் மனைவியே அவனுக்கு எமன் ஆகிறாள். அளவற்ற கோபத்தின் உச்சியில் நின்று மனைவியை "இவள் என் தாரம் அல்லள்" என்று துறக்கிறான். அவள் வயிற்றில் பிறந்த பரதனையும் "தன்

www.saivamonline.com

மகன் அல்லன்'' என்று கூறி வெறுத்து ஒதுக்குகிறான். அளவற்ற சோகத்தின் உச்சியில் கைகேயியை அவன் பலபட இழித்துரைக்கிறான். பெண்மை மீதே அவன் பெரும் வெறுப்புக் கொள்கிறான். கோசல நாட்டில் இரண்டு பெண்களின் செயல்களால், சோகம் சூழ்கிறது.

## நல்ல நாடு

பல பெண்களோடு பட்டத்து அரசியர் மூவரையும் பெற்று வாழ்ந்தவன் தசரதன். என்றாலும், அவன் புரக்கும் கோசலமும் அவன் வாழும் அயோத்தி மாநகரமும் நெறி திறம்பாத ஒழுக்கத்தில் தலைநின்றன. தசரதன் ஆளும் நாட்டை வளப்படுத்தும் ஆற்று வளம் கூற வரும் கம்பன், முன்னதாகக் கோசலத்தை நமக்கு அறிமுகம் செய்விக் கிறான். ஆடவர்களும் பெண்களும் தத்தம் ஒழுக்கங் களிலிருந்து பிறழாத நாடு கோசலம் என்பது, அவன் கூற வந்தது. அதற்காக அவன் கூறும் ஒரு பாடலில்,

> **“ஆசலம்புரி ஐம்பொறி வாளியும்**
> **காசுஅலம்பு முலையவர் கண் எனும்**
> **பூசல்அம்பும் நெறியின் புறம் செலாக்**
> **கோசலம்''** *(க. 12)*

என்று அந்நாட்டை அறிமுகப்படுத்துகிறான். நீர் வளத்தால், நிலவளத்தால் உயர்ந்திருப்பது, ஒரு நாட்டின் சிறப்புக்குப் போதுமானதன்று. மக்கள் மனவளம் பெற்றிருக்கும் நாடே, உன்னதமானது என்பது கவிஞன் கருத்து. “எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி நல்லை; வாழிய நிலனே,'' எனப் புற நானூற்றிலும் ஔவையார் இக்கருத்தை முன்மொழிகிறார்.

## ஆடவர் ஒழுக்கம்

ஐம்பொறிகளே நாம் பெறும் அறிவிற்கு வாயில்கள். அவற்றை நெறிப்படுத்தி நுகர்வோர், இறைமைக் குணம் பெற்றவராகக் கருதப்படுவர். இறைவனைப் “பொறிவாயில்

www.saivamonline.com

ஐந்தவித்தான்" என்பார் வள்ளுவர். ஐந்து பொறிகளின் வழியாகச் செல்லும் ஐம்புல ஆசைகளாகிய குதிரைகளை, அறிவு என்னும் துரட்டியால், நெறிப்படுத்தி நடத்த வல்லவன், வீட்டுலகடைதல் எளிது என்பதும் அவர் கருத்து. தூய துறவிகளை அவர், "ஐந்தவித்தார்" என்று குறிப்பார். பொறிகளை, அவை விரும்பிய இடத்திற்குச் செல்லவிடாது, நன்மையின்பால் செலுத்தவல்ல ஆற்றலையே வள்ளுவர், அறிவு என்று மதிக்கிறார். பொறி களைப் புலன் வழி செலவிட்டுத் துன்புறுபவர்கள் ஆடவர்களே. தயரதன் ஆளும் கோசலத்தில் குற்றம் புரிவதற்கு ஏதுவான ஐம்பொறிகளாகிய அம்புகளைப் புறம் போகாது பாதுகாக்கும் வல்லமை உடையோராய் அங்கே ஆடவர்கள் வாழ்ந்தார்கள்.

## பூசல் அம்பு

பெண்களின் கண்கள், போர் செய்யும் அம்புகளாகக் கருதப்படுவன. பெண்கள் கண்களும், அவற்றின் வெளிப் பாடுகளாகிய நோக்கங்களும் எத்தகையன என்பதைத் தமிழ் இலக்கியங்கள், நயம்பட எடுத்துரைக்கின்றன. ஆடவர் களுக்கு ஐம்பொறிகளின் கட்டுப்பாட்டை உரைத்த கம்பன், பெண்களுக்கு மட்டும் கண்கள் ஒன்றை மட்டுமே கட்டுப் பாடாக வைத்துக்கொள்ள அறிவுறுத்துகிறான். பெண்களின் கண்களை அவன், போர் செய்ய வல்ல அம்புகள் என்ற பொருளில் "பூசல் அம்பு" என்று குறித்துச் செல்கிறான். எந்த ஒரு நாட்டில், பெண்களின் கண்கள் புறம் செல் கின்றனவோ, அந்த நாட்டில் ஒழுக்கம் குறையும் என்பது கவிஞன் மதிப்பீடு. ஆடவர்களுக்கு ஐம்பொறிகளால் வந்துறும் தீங்கு பெண்களுக்குக் கண்களால் மட்டுமே வந்து சேரும் என்று கூறுவது, பெண்மையை இழிப்பதாகாது. ஒரு வகையில் கவிஞன் பாதுகாவல் செய்வதாகவே இதனைக் கொள்ள வேண்டும்.

www.saivamonline.com

## வேசையர் உள்ளம்

தயரதன், நாடாளும் சிறப்பைச் சொல்லவரும் கம்பன், அவன், ஆளும் நாட்டில், வெள்ளம் கரை கடந்து செல்வ தில்லை. பறவைகள் பல திசைகளில் பறப்பதில்லை. விலங்குகள் கால்போன போக்கில் நாற்றிசையும் ஓடுவ தில்லை என்று அடுக்கிவிட்டு, அந்நாட்டில் வாழும் விலை மாதர்கள் உள்ளங்களும் கூட பலவழிகளில் செல்லாது, ஒரு வழியில் சென்றதாகக் கூறி முடிக்கிறான்.

> **"வெள்ளமும், பறவையும் விலங்கும் வேசையர்**
> **உள்ளமும் ஒருவழி ஓட நின்றவன்"** *(க. 173)*

பொருட் பெண்டிர், பலவாறு சிந்திக்கவல்லவர்கள். அன்னார் உள்ளங்களையும் ஒருவழி செலுத்தும் ஆணை வலியும், ஆட்சிச் சிறப்பும் மிக்கவனாகத் தயரதன் திகழ் கின்றான் என்பதில், விலைமாதர்களையும், நல் வாழ்விற்குத் திருப்பும் முயற்சி அரும்பியிருப்பது தெரிகிறது. எல்லை கடப்பன பலவற்றையும் ஓர் எல்லைக்குள் கொண்டு வர வல்ல ஆற்றல் மிக்கவனாகத் தசரதன் இருந்தும், தன் அந்தப்புரத்தில் எல்லை கடந்து சென்ற இரண்டு பெண்கள் மனத்தை அவனால் கட்டுப்படுத்த இயலவில்லை. இதுவே அயோத்தியின் பேரவலம்.

## சிறியர் செயல்

கோசலத்து உழவர்கள் களை எடுப்பதற்காக வயல் களுக்குச் செல்கின்றனர். வழியில் கிடைத்த கள்ளை உண்ட மயக்கமும் தெளிந்திலர். பயிர்களுக்கு இடையே மண்டிக் கிடக்கும் மலர்களைப் பறிக்க முனைகின்றனர். ஆனால் முடியவில்லை. ஒவ்வொரு மலரும் அவர்களுக்குத் தத்தம் மனைவியரின் கண்களாகவும் கைகளாகவும் கால்களாகவும் முகம் மற்றும் வாய் போன்றும் காட்சி தருகின்றன. அவற்றை அகற்றிவிட்டால், தங்கள் துணைவியர் அழகுக் காட்சி

www.saivamonline.com

மறைந்து போய்விடுமே என்ற எண்ணத்தில் அவற்றைப் பறித்து வீச மனமில்லாது நின்றனர். இதற்கு ஓர் ஒப்புமை சொல்ல வந்த கம்பன்,

> **"பெண்கள்பால் வைத்த நேயம்**
> **பிழைப்பரோ சிறியர் பெற்றால்,"** *(க. 41)*

என்று ஒரு தொடர் பெய்கிறான்.

## கவிஞன் தவம்

பெண்கள் பால் அன்பு செய்வது சிறியர் செயல். எனவே, பெரியோர் பெண்களை வெறுத்து ஒதுக்குவர் என்பன போன்ற ஓர் எண்ணத்தை, இத்தொடர் தோற்று விக்கிறது. பெண்ணை ஆராதிக்கும் மனமும், உயர்த்தும் விருப்பமும் உடையவனாகக் கவிஞன் இருந்திருப்பானா னால், இத்தகு மேற்கோள் வந்திருக்க முடியாது என்பது பெண்கள் முன்வைக்கும் வாதம். காப்பியங்கள், பெரும் குறிக்கோள்களைக் கொண்டிலங்குவன. தமிழ்க் கவிதைகள் பலவும் நேரடியாகவோ மறைமுகமாகவோ சமூகத்திற்கு அறிவூட்டும் பொறுப்புணர்வில் பிறப்பவை. அவற்றின் வாழ்வும் நிலைபேறும் இந்தச் செம்மாப்பில் தலை நிற்பன. இன்புறுத்துதல் புற நோக்கமாயினும் அறிவுறுத்தலே கவிதை யின் உண்மையான பலம். கம்பனைப் போன்ற உலகியல் அறிவும் சமூகப் பொறுப்புணர்வும் மிக்கவர்களுக்குக் கவிதை ஒரு தவம். வேள்வியாக அன்னார் காவியம் படைத்தனர். புல்லைக் காட்டி, மானை அருகழைப்பது போல, கற்பனையும், வருணனையும், உவமையும், உருவகமும் எல்லாம் மனிதனை அழகுணர்ச்சியில் ஈர்த்து, அவனுக்கு அறிவு கொளுத்தவே என்பது தெளிவு.

## கம்பனும் வள்ளுவனும்

கம்பனும் வள்ளுவனும், பலவிடங்களில் ஒத்த கருத்துக் கொண்டுள்ளனர். வள்ளுவரின் அறம் பற்றிய ஒரு

www.saivamonline.com

தொடருக்குக் கம்பன் ஆயிரம் பாடல்களில் அழகோவியம் தீட்டிக் காட்டுவான்.

**‘அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது’** *(திரு. 45)*

என்பார் வள்ளுவர். இல்லறப் பண்பு அன்பு. அதன் பயன், அறன் என்பது அவர் குறிக்கோள். ஆணும் பெண்ணும் கூடித் தொடங்கும் இல்லறத்தில், முதல் அறமாக வள்ளுவர் அன்பையே முன்னிறுத்துவார். எனவே, கம்பனும் பெண்கள் பால் அன்பு வைத்தலைக் குறை கூற முன்வரவில்லை. விளக்கில் எரியும் தீ வணக்கத்துக்குரியது, அடுப்பில் எரியும் தீ பசியாற்ற வல்லது, என்பதற்காக அதனைக் கூரை மீது வைப்பர் அறிவிலிகள். எதனை, எங்கே வைக்க வேண்டும்; எதனை எங்கே துய்க்க வேண்டும் என்ற அறிவு நிரம்பாதார் அன்பு, சிறுமையில் முடியும். காமத்தைப் புறம் பொசிந்து காட்டுதல், சிறியர் செயல். அதனால்தான், கடமையாற்றும் இடத்தில் காம உணர்வில் திளைத்தாரைக் கம்பன் சிறியர் என்கிறான். இங்கே பெண் மீது குற்றம் கூறுவது கம்பனுக்கு நோக்கமன்று. பெண் இன்பத்தில் தடுமாறும் பேதையர்க்கு உரைத்தது இது. கழி காமத்தால் வீழ்ந்த சச்சந்தன் வரலாறு, நம் நெஞ்சில் நிழலாடுகிறது. ஒரு மனைவி மீது கொண்ட அதிகமான காமத்தால், அரசியலில் அந்தப்புரத்தையும், அந்தப்புரத்தில் அரசியலையும் நடத்தி வீழ்ச்சி பெற்றவன் தயரதன்.

## தயரதன் சினம்

அவன் விருப்பத்துக்கு மாறான வரங்களை வற்புறுத்திப் பெற்றுக்கொண்ட கைகேயி மேல் தயரதன் கொண்ட ஆத்திரம், புரிந்து கொள்ளத் தக்கதாகவே அமைகிறது.

பெண்களே இனி இந்த உலகில் இல்லை என்ற நிலையை உண்டாக்கி, கூரிய வாளால் பெண்குலத்தையே

www.saivamonline.com

*கொன்றொழித்து, நானும் கீழோர் வீழும் நரகிடை வீழ்வேன் என்று ஆத்திரப்படுகிறான்.*

**"நாரியர் இல்லை இஞ் ஞாலம் எங்கும் என்ன**
**கூரிய வாள்கொடு கொன்று நீக்கி, யானும்**
**பூரியர் எண்ணிடை வீழ்வேன்"** *(சு. 1516)*

*ஆத்திரத்தின் ஊடே அறிவின் வெளிச்சமும் தெரிகிறது. செயலுக்குப் பின்னே ஒரு விளைவு உண்டு என்பது, "பூரியர் எண்ணிடை வீழ்வேன்" என்பதால், நினைவுகூரப்பட்டுள்ளது.*

## விடத் தீ

*கைகேயியின் காலில் விழுந்து தயரதன் கெஞ்சுகிறான். இராமன் காடு செல்லாதிருக்க மட்டுமாவது அனுமதி வழங்க யாசிக்கிறான். இடையிடையே இன்மொழி பேசுகிறான்.*

**"பெண்ணே வண்மைக் கேகயன் மானே..."** *(சு. 1522)*

*என்று பாராட்டுரை வழங்கி,*

**"மண்ணே கொள்நீ மற்றையது ஒன்று மற"** *(சு. 1522)*

*என்று வேண்டுகோள் வைக்கிறான்.*

*கைகேயி சிறிதும் அசைந்து கொடுக்கவில்லை. முன் தந்த வரத்தை இப்போது நீ தர மறுத்தால் உன் வாய்மைக்கு ஒரு தாழ்ச்சி வாராதோ என்று கூறி வரத்தை மாற்றிக் கொள்ள மறுக்கிறாள். மீண்டும் சினத்துக்குத் தாவிய தயரதன்,*

**"நச்சுத் தீயே பெண்உரு**
**அன்றோ? எனநாணா**
**முச்சற்றார் போல்"** *(சு. 1525)*

*கீழே சரிகின்றான். பெண்ணை, விஷ நெருப்பு என்று கூறி, கோபத்தை வெளிப்படுத்துகிறான்.*

www.saivamonline.com

## கொல்லுதியோ நீ...

இராமன் பிரிவால், சாவது உறுதி என்று அறிந்த தயரதன், உலகியல் பேசிப்பார்க்கிறான். உடலும் உயிருமாக ஒன்றி வாழ்ந்த கணவன் மனைவியர்களில், மனைவிமார்கள் பலரும் தங்கள் கணவன் இறப்புக்கு முன்னே தாம் சாவதையே விரும்பி நின்றனர். இன்று வரை, உன்னைத் தவிர, கட்டிய கணவனைக் கொன்று வாழ்ந்தவர் இல்லை. நீ இப்போது என்னைக் கொல்வாயோ என்று அங்கலாய்க் கிறான்.

> **"ஒன்றா நின்ற ஆர் உயிரோடும் உயர் கேள்வர்**
> **பொன்றா முன்னம் பொன்றினர் என்னும் புகழ் அல்லால்**
> **இன்றோர் காறும் எல்வளையார்தம் இறை யோரைக்**
> **கொன்றார் இல்லை; கொல்லுதியோ நீ"** *(க. 1531)*

எனக் கொதித்து வீழ்கிறான்.

மேற்குறித்த தயரதனின் சோகத்தில் பிறந்த பெண்மை பற்றிய இழிமொழிகள் எல்லாம், பெண்மைக்கு இட்ட கரும்புள்ளிகள் தாமே. கவிஞன், இவற்றைத் தவிர்த்திருக்கக் கூடாதா? ஏன் இத்தகு இழி சொற்களைப் பேசத் தயரதனை அனுமதித்தான், என்றெல்லாம் நம்முள்ளே வினாக்கள் எழுதல் இயற்கையே.

## ஆத்திர மொழிகள்

விருப்பு வெறுப்பற்ற, தெளிந்த சிந்தை உடையார் வெளிப்படுத்தும் கருத்துக்களை மட்டுமே சமூகம் உண்மை என்று ஏற்றுப் போற்றும். கம்பனே எடுத்துக்காட்டுவது போல், பித்தர்களும் பேதையர்களும் உரைக்கும் உரைகளைச் சமூகம் பெரிதாக எடுத்துக் கொள்வதில்லை. பெரிதும் காதல் கொண்டு நம்பிக்கை பூண்டிருந்த தன் காதல் மனைவி, ஒரே இரவில் மனமாற்றம் அடைந்து தன் எண்ணத்துக்கு மாறாகச் செயற்பட்டதைத் தயரதனால் நம்ப

www.saivamonline.com

முடியவில்லை. அவன் பேதலித்துப் போய்விடுகிறான். கெஞ்சலும் மிஞ்சலுமாக அவன் அரற்றல்கள் வெளிப்படு கின்றன. நாட்டு மக்களுக்கு நாளை இராமன் முடிசூடுவான் என அறிவித்தவன், நாளை இராமனைக் காட்டுக்கு அனுப்பினால் சமூகத்திற்கு அதன் காரணங்களை விளக்க வேண்டிய கடப்பாடு உடையவன். வாய்மையிலிருந்து பிறழ்ந்து விடக் கூடாது என்ற மெய்ம்மை எண்ணம் சான்றவன். இவை எல்லாம் சேர்ந்த தடுமாற்றத்தின் உச்சியில் பாதிக்கப்பட்டவனின் ஆத்திரமொழிகளாகவே இவற்றை ஒதுக்கிவிடவேண்டுமேயன்றி, அர்த்தமுடையதாக எண்ணி வருந்த வேண்டுவதில்லை.

## கவிஞன் உரிமை

உணர்ச்சி வேகத்தில் அன்பின் நிறைவில் ஒருவன் தன் மனைவியைத் “தெய்வம்” என்று கூறுவதால் அவள் தெய்வ மாவதில்லை. அதேபோல், ஆத்திரத்தின் உச்சியில் அவளைப் பேய் என்பதால் அவள் பேயாகி விடுதலும் இல்லை. பொருள் பொருளாகவே இருக்கிறது. மனித மன பேதங் களால், அனுபவ வெளிப்பாடுகளால், மதிப்பீடுகள் மட்டுமே மாறுபடுகின்றன. கதை நடத்தும் கவிஞன், பெண்மை பற்றிய உயர்ச்சி மொழிகளைப் பதிவு செய்ய எவ்வளவு உரிமை உடையவனோ, அதே அளவு பழிச் சொற்களையும் அவன் பதிவு செய்யும் உரிமை படைத்தவன். எனவே, கம்பன் பெண்மைக்கு இழுக்குச் சேர்த்துள்ளான் என்ற குற்றச் சாட்டுக்கள் யாவும் வலியிழக்கின்றன.

## காரணமாது?

கைகேயியை இழித்துரைக்கும் பாத்திரங்களின் ஆத்திரங்களைப் புறந்தள்ளிவிட்டு இறுதியில் கம்பன் அவளை ஒரு தெய்வத்தன்மை உடைய மாதரசியாகவே உயர்த்திக் காட்டுகிறான். சமூகத்தோடு ஒட்டி நின்று

www.saivamonline.com

பாத்திரங்களின் கூற்றாகவும் தன் உரையாகவும் இழி மொழிகள் பலவற்றைக் கைகேயிபால் வீசும் கம்பன், தொடக்கம் முதலே எளிதில் இனங்கண்டு கொள்ள இயலாத சில பூடகத் தொடர்களை ஆங்காங்கே பதிவு செய்கிறான். எல்லாப் பெண்களையும் போன்றவள் அல்லள் கைகேயி. அவள் ஒரு "காரண மாது" என்பதை நுட்ப உணர்வு படைத்தவர்களால் மட்டுமே புரிந்து கொள்ள முடிகிறது. எந்த ஏச்சுரைகளுக்கும் இழிமொழிகளுக்கும் துலங்காது தான் கொண்ட குறிக்கோளில் அவள் தலை நிற்கிறாள். தயரதன் ஏச்சு, பரதன் சினம், வசிட்டன் இழிப்புரை, ஒன்றிலும் அவள் முகமாற்றம் கூட அடையாது தெளிந்த சிந்தனையுடையவளாகவே காணப்படுகிறாள். கைகேயியின் செயல்கள் ஒரு திட்டமிட்ட நாடகம் என்பதை கம்பன் வழி நின்று உற்றறியும் போதே நம்மில் பலரால் உணர முடிகிறது. கம்பன் கையாளும் உட்குறிப்புடைய பூடக மொழிகள், சிந்தனைக்கு உரியன.

## பிள்ளையார் சுழி

நாடகத் திருப்பத்தின் முதல் காட்சியில் சீற்றம் கொண்ட கூனியைக் கம்பன் அறிமுகப்படுத்துகிறான்,

**"தோன்றிய கூனியும் துடிக்கும் நெஞ்சினாள்**
**ஊன்றிய வெகுளியாள்; உளைக்கும் உள்ளத்தாள்**
**கான்று எரி நயனத்தாள் கதிக்கும் சொல்லினாள்;**
**மூன்று உலகினுக்கும் ஓர் இடுக்கண் மூட்டுவாள்."** *(க. 1446)*

அவள் கொடியவள் என்பதற்குப் பல அடையாளங்களை அடுக்கிய கம்பன், பூடகமாக அவள் காட்சியில் தோன்றிய தைச் சித்திரிக்க வருகிறான்.

**"இன்னல்செய் இராவணன்**
**இழைத்த தீமைபோல்**
**துன்னருங் கொடுமனக்**
**கூனி தோன்றினாள்"** *(க. 1445)*

www.saivamonline.com

இராவணன் செய்த தீமைகள் யாவும் ஓர் உருக்கொண்டது போல் கூனி எதிர்வந்து தோன்றினாள் என்பதன் பின்னே ஒரு நாடக உத்தி நிற்கிறது. இராவணன், இங்கு ஏன் நினைவு கூரப்படுகிறான்? இராவண வதத்திற்கு இவள் வருகையால் தான் பிள்ளையார் சுழி இடப்படுகிறது போலும்.

## தெய்வக் கற்பினாள்

கூனி ஆத்திரமுற்று, இன்னது நடக்கிறது என்பதையே அறியாது உறங்கிக் கிடக்கும் கைகேயி சீறடிகளைத் தன் இரு கைகளாலும் தொட்டு எழுப்பினாள். கம்பன் கைகேயி யின் விழிப்பைத்,

> **"தீண்டலும் உணர்ந்த அத்**
> **தெய்வக் கற்பினாள்"** *(க. 1450)*

என்று அரிய, உள்பொருள் நிரம்பிய, சொற்களால் பதிவு செய்கிறான். "தீண்டலும்" உணர்ந்த என்ற தொடருக்குக் கண் விழித்த, என்பது வெளிப்படைப் பொருள். கூனி தன் கால்களைத் தொட்டவுடனேயே அவள் கூற வந்தன. இவை என்பதை அவள் கூறாமுன்னரே உள்ளுணர்வால் உணர்ந்தனள் என்பது குறிப்புப் பொருள். அதனால்தான் கம்பன், "உணர்ந்த கைகேயி" என்று தொடர் அமைக்காது, "தெய்வக் கற்பினாள்" என்று அடையாளம் காட்டுகிறான். தெய்வத் தன்மை என்பது, ஒருவர் கூறவந்ததை, அவர் கூறுமுன்னரே உணரும் ஆற்றல் என்பது, வள்ளுவர் குறித்தது. மேலும் நால்வகைப் பெண்மைக் குணத்துள் ஒன்று, பயிர்ப்பு என்பது. அது தொடு உணர்ச்சியால், தொட்ட ஸ்பரிசம் இன்னாருடையது என்பதை அறியும், பெண்மையின் பேராற்றல். இதனாலும் கூடக் கம்பன், அவளைத் "தெய்வக் கற்பினாள்" என்று பதிவு செய்திருக்கக் கூடும். என்றாலும், ஒரு பழி சூழும் நாடகத் தொடக் கத்தில் இத்தகு பாராட்டு மொழிகள் தேவையற்றவை.

www.saivamonline.com

*மீறி, கம்பன் ஆளுவதால், அவை, உட்பொருள் உடைய தாகின்றன.*

## சிந்தனைக் குறிப்பு

*மேலும், கதை நடையிடுகிறது. கூனியின் சாகசச் சொற்களால் கைகேயி மனம் மாறுகிறாள்.*

**"தீய மந்தரை இவ்வுரை**
**செப்பலும் தேவி**
**தூய சிந்தையும் திரிந்தது"** *(க. 1483)*

*என்று, அவள் மனமாற்றத்தைக் கூறியதோடு அமையாது அம்மாற்றத்திற்கான பின்விளைவுகளையும், ஒரு சேரப் பதிவு செய்கிறான்.*

**"சூழ்ச்சியின் இமையோர்**
**மாயையும் அவர் பெற்ற**
**நல்வரம் உண்மையாலும்**
**ஆய அந்தணர் இயற்றிய**
**அருந்தவத் தாலும்"** *(க. 1483)*

*என்று பேசி, பாடலை நிறைவு செய்கிறான். இமையவர் செய்த மாயை; அவர் பெற்ற நல்வரம்; அந்தணர் இயற்றிய அறம்; முதலியன உரிய வாழ்வு பெற, இம்மனமாற்றம் நிகழ்ந்ததாகக் கம்பன் குறிப்பது ஆழ்ந்த சிந்தனைக்கு உரியது.*

## சிறந்த தீயாள்

*மேலும், முன்னரே கண்டது போல கைகேயியின் மனமாற்றத்தால்தான் இன்று உலகம் இராமன் புகழைப் பருக முடிந்தது என்றும் பறைசாற்றுகின்றான். தீமை குறித்த மனமாற்றம் என்று கம்பன் கருதியிருந்தால், இப்பாடலில் கைகேயியை அவன் "தூமொழி மடமான்" என்று புகழ்ந் துரைத்திருக்க இயலாது. கம்ப நாடகத்தில் மேலும் ஒரு புதிராக இது அமைகிறது. மேலும், கைகேயி தயரதனிடம்*

www.saivamonline.com

*கூனி உரைத்தவாறு இரு வரங்களைக் கேட்கிறாள். அதனைப் பதிவு செய்யும் கம்பன்*

**"ஏய வரங்கள் இரண்டின் ஒன்றினால் என்**
**சேய் அரசு ஆள்வது சீதை கேள்வன் ஒன்றால்**
**போய் வனம் ஆள்வது எனப் புகன்று நின்றாள்"** *(க. 1504)*

*என்று, கவிதையை நீட்டித்து அவள் யார் என்பதைக் கூறி நிறைவிக்குமிடத்துப் பூடகச் சொற்கள் பெய்கிறான். யார் அவள்?*

**"தீயவை யாவையினும் சிறந்த தீயாள்,"** *(க. 1504)*

*புரியாத புதிராக, இத்தொடர் அமைகிறது. தீயவள் என்றால் புரிந்து கொள்ள முடிகிறது. சிறந்த தீயாள் என்றால் எப்படிப் பொருள் காண்பது. தீமையின் ஊடே ஒரு சிறப்பு உண்டு என்று, கருத வேண்டும் என்று தோன்றுகிறது.*

## ஆழ்ந்த உள்ளம்

*கைகேயியின் திடமனத்தையும் ஆழ்ந்த உள்ளத்தையும் இனங்காண மேலும் ஓர் இடம் அமைகிறது. கேகய நாட்டிலிருந்து அயோத்தி மீண்ட பரதன், இராமனைக் காணாது பெரிதும் வருந்தி, தாய் கைகேயியைக் கண்டு தந்தை எங்கு உள்ளான் என்று வினவுகின்றான். சிறிதும் பதட்டமின்றிக் கணவனை இழந்த துயரின் அடையாளம் கூட இல்லாது,*

**"தேன்அமர் தெரியலான் தேவர் கைதொழ**
**வானகம் எய்தினான் வருந்தல் நீ"** *(க. 2145)*

*என்று உரைக்கின்றாள். பரதன் வெகுண்டு பலபட உரைத்த பின் இராமன் காடேகக் காரணம் வினவுகிறான். அதற்கும் கைகேயி,*

**"வாக்கினால் வரம்தரக் கொண்டு மைந்தனைப்**
**போக்கினேன் வனத்திடை போக்கிப் பார் உனக்கு**

www.saivamonline.com

**ஆக்கினேன் அவன்அது பொறுக்க லாமையால்**
**நீக்கினான் தன்உயிர் நேமி வேந்து"** *(க. 2166)*

என்று உரைத்து நிற்கக் காண்கிறோம். மாபெரும் மாற்றங்கள் நிகழ்ந்துவிட்ட போதும், பழி பலவகையில் தன்னைச் சூழ்ந்த போதும், மகன் பரதன் வெகுண்டு உரைத்த போதும், அமைதி காக்கும் கைகேயியை அந்த வளாகத்தில் இராமன் ஒருவன் மட்டுமே புரிந்து கொண்டிருப்பான் என்று தெரிகிறது. பிறருக்கு அவள் செயல் வியப்பாகவே அமைகிறது.

## ஓர் உள்ளீடு

இராமனைக் காட்டிலிருந்து மீட்டுவர பரதன் படையுடன் புறப்படுகின்றான். அவனொடு அரச மாதேவியரும் உடன்வர விழைகின்றனர். குற்றவுணர்வுடையவளாகக் கைகேயி இருந்திருந்தால் அவளும் வர இசைந்திருக்க மாட்டாள். அவளும், உடன் எழுகிறாள். கங்கையைக் கடக்கும் போது கைகேயி சிறிதும் முக வாட்டமின்றி இருந்தாள் என்கிறான் கம்பன். மேலும் கவிக் கூற்றாகக் கம்பன் கைகேயியை,

**"........கழல் கால்மாயன்**
**நெடுமையால் அன்று அளந்த உலகு எலாம்**
**தன் மனத்தே நினைந்து செய்யும்**
**கொடுமையால் அளந்தாள்."**

*(க. 2370)*

என்று கூறி, கதை நடத்துகிறான். உலகளந்த திருமாலுடன், அவள் செயலை ஒப்பிடுவதிலும் ஓர் உள்ளீடு தெரிகிறது.

## நீண்ட சிந்தனை

கைகேயி கேட்ட வரங்கள் இரண்டு. தயரதன் அவற்றை வழங்கிய போதும், பரதன் நாட்டு ஆட்சியை ஏற்க இசைந்திலன். கைகேயி மீண்டும் பரதனை நாடாள வேண்டும்

www.saivamonline.com

என்று வற்புறுத்தவில்லை. நினைத்திருந்தால் அவளால் அவனை வற்புறுத்தியிருக்க முடியும். இராமன், காடு செல்வது மட்டுமே நடந்தது. அதில் கைகேயி நிறைவடைந்தவளாகவே காணப்படுகிறாள். ஒன்று புரிகிறது. அவள் உள் விழைவு பரதனுக்கு நாட்டாட்சிப் பெற்றுத் தருவது அன்று. இராமனைக் காட்டுக்கு அனுப்புவது ஒன்றே அவள் குறிக்கோளாக இருந்திருக்கிறது. அதில் ஏன் கைகேயிக்கு அத்தனை நாட்டம். நீளச் சிந்திக்கிறோம்.

## பெண்மை அறிவு

தேவியர் மூவரில், அரச மரபில் வந்தவள் கைகேயி ஒருத்தி மட்டுமே. அயோத்தியில் அறிவுபூர்வமாகச் சிந்திக்க வேண்டிய தயரதன், இராமன் மேல் அன்பு பூண்டு நிற்கிறான். இராமன், தாடகையை வதம் செய்ததிலோ, அவன் கால் துகள் பட்டு அகலிகை சாபவிமோசனம் பெற்றதிலோ, சிவ தனுசை முறித்துச் சீதையை மணந்ததிலோ தசரதன், இவன் யாராக இருக்கக்கூடும் என்று சிந்திக்கவில்லை. அளப்பரிய அன்பு அறிவை மறைத்துவிட்டது. ஆனால், இங்கே வளரும் இராமன் மானுடன் அல்லன்; திருமாலே என்று, இனங்கண்டு கொண்ட ஒருத்தி, கைகேயி மட்டுமே. அன்பில் திளைத்திருக்க வேண்டிய பெண்மை அறிவில் தலைநிற்கிறது.

## தெய்வ நங்கை

இராமன், அவதார நோக்கம், கைகேயிக்குத் தெரிந்திருக்க வேண்டும். தீயரை அழித்து நன்மையை வாழ்விக்க வந்தவனை, கோசல நாட்டு ஆட்சி என்ற சிறுவட்டத்தில் அடைத்தல் கூடாது என்பது அவள் உள்ளம். அன்பு பூண்ட தயரதன், இராமனை வெளியில் அனுப்ப ஒரு போதும் உடன்பட மாட்டான். விசுவாமித்திரன் அழைத்த போதும், பரசுராமன் வழிமறைத்த போதும் அவன் கொண்ட கலக்கம்

www.saivamonline.com

நன்கு புலப்படலாயிற்று. காலம் பார்த்து இராமனை அவன் அவதார நோக்கமாகிய இராவண வதத்தை நோக்கிச் செலுத்தக் காத்திருந்த கைகேயியிக்குத் தயரதன், முடிசூட்டு விழா அறிவித்ததும், கூனி கிளர்ந்து எழுந்ததும் வாய்ப்பாக அமைந்தன. காய்களை முறையாக நகர்த்திப் பழியைத் தன் மேல் வலியச் சுமந்து கொண்டு, இராமாவதார நோக்கத்தைத் திட்டமிட்டு நடத்தி முடித்த, தெய்வ நங்கை கைகேயி.

## தெய்வத்தின் தெய்வம்

இராமன், பரம்பொருள்; அவனே தெய்வம். நிறைவில் தயரதன் வருகையில் இராமன் அவனை நோக்கி, "தீயள் என்று நீ துறந்த, என் தெய்வமும்" என்று கைகேயியைத் தெய்வம் என்று குறிக்கிறான். தெய்வ இராமனால், தெய்வம் என்று இனங்கண்டுகொள்ளப்பட்ட கைகேயி, "தெய்வத்தின் தெய்வமாக" உயர்கிறாள். கம்ப நாடகத்தில் பெண்மைக்கு முடிசூட்டு விழா நடந்த அரிய இடங்களில் இதுவும் ஒன்று. இப்போது கம்பனின் பழைய கூற்றை நினைவு கூரலாம்.

**"அரக்கர் பாவமும், அல்லவர் இயற்றிய அறமும்**
**துரக்க நல்லருள் துறந்தனள் தூமொழி மடமான்;**
**இரக்கம் இன்மை அன்றோ இன்று இவ்வுலகங்கள் இராமன்**
**பரக்கும் தொல்புகழ் அமுதினைப் பருகுகின்றதுவே"**

*(க. 1484)*

இந்த கம்ப நாடகத்தின் நிறைவில், கைகேயி கற்பார் நெஞ்சில் சிம்மாசனம் இட்டு அமர்கிறாள். இராமன் வேண்டுகோளை ஏற்றுத் தயரதனும், அவளை மனைவி யாகவும் பரதனை மகனாகவும் ஏற்கிறான். பழிப்புரைகளால், பட்டை தீட்டப் பெற்றுப் பெண்மை, வைரமாக ஒளி வீசுகிறது. கம்பனில், பெண்ணியம், கர்வம் கொண்டு தலை நிமிர்கிறது.

www.saivamonline.com

## உடன் உறை நோய்

இராமகாதையில் இடம்பெறும் மிகப் பெரிய திருப்பு முனைப் பாத்திரம் சூர்ப்பணகை. இராமன் பழி பூணவும், இராவணன் வதம் நிகழவும், சீதை சிறையிருக்கவும், நிருதர் குலம் முற்றாக அழியவும் மூல காரணமாக விளங்கியவள் அவள். கம்பனே அவளை அறிமுகப்படுத்தும் போது அவள் கொடுமைகளை வரிசைப்படுத்தியே அறிமுகம் செய் கின்றான்.

**"நீல மா மணி நிற நிருதர் வேந்தனை**
**மூல நாசம் பெற முடிக்கும் மொய்ம்பினாள்,**
**மேலைநாள் உயிரொடும் பிறந்து தான்விளை**
**காலம் ஓர்ந்து உடன் உறை கடிய நோய் அனாள்"** *(க. 2739)*

இராவணனைக் குலத்தோடு வேரறுக்க வந்தவள். உடம்பொடு உடன் பிறந்து, காலம் பார்த்து வெளிப்பட்டு, உயிர்கொள்ளும் கொடிய நோய் போன்றவள்.

## கழிகாம நெஞ்சம்

பண்டை நாள் கணவனை இழந்து விரக தாபத்துடன் காட்டில் நியமிப்பாரின்றிச் சுற்றித் திரியும் சூர்ப்பணகை இராமனை முதன்முதலில் காண்கிறாள். அவன் அழகை நாணம் சிறிதுமின்றிக் கண்களால் அள்ளி ஆரப் பருகு கின்றாள். பருகி, நீளச் சிந்தித்து, எப்படியும் இவன் நீண்ட மார்பகத்தைத் தழுவியே தீருவேன். இயலாது போனால், அமுதத்தாலும் காக்க முடியாத சாக்காட்டை எய்துவேன் என்று காம நெஞ்சம் கள்வெறி கொள்கிறது.

**"...................... இருந்தவன் நெடிய மார்பகம்**
**ஒன்றுவென் அன்றுஎனின் அமுதம் உண்ணினும்**
**பொன்றுவென் போக்கு இனி அரிது."** *(க. 2759)*

என்றெல்லாம் அவள் எண்ண ஓட்டங்களைக் கம்பன் படம் பிடித்துக் காட்டுகிறான். இதே, அரக்கி வடிவில் சென்றால்

www.saivamonline.com

ஒருவேளை இராமன் தன்னை மறுத்து விடுவானோ என்று அஞ்சுகிறாள். அஞ்சி ஓர் அழகிய இளமகள் வடிவம் கொள்கிறாள்.

**வஞ்ச மகள்**

பெண்மையின், பொய்ம்மை வேடத்தில்தான் எத்தனை அழகு. கம்பன் சொற்களில் அவள் நடையழகு நெஞ்சில் நிறைகிறது.

**"பஞ்சி ஒளிர், விஞ்சு குளிர் பல்லவம் அனுங்க,**
**செஞ் செவிய கஞ்சம் நிகர், சீறடியள் ஆகி**
**அம் சொல் இள மஞ்ஞை என அன்னம் என மின்னும்**
**வஞ்சி என நஞ்சம் என வஞ்ச மகள் வந்தாள்."** *(க. 2762)*

ஆலகால விடம் அழகு வடிவம் பெற்று அன்னம் போல் நடை நடந்து இராமன் முன் வந்தது. கற்பகம் பெற்றெடுத்த ஒளிமிக்க கொடி ஒன்று மேனி நலம் சிறந்து காமத்தால் நிறைந்து தேன் போன்ற மொழி கொண்டு மான் போன்ற விழி பெற்று மயில் வந்தது போல சூர்ப்பணகை வந்தாள். இந்தப் பொய்யான மாயத் தோற்றத்திற்குள் இருக்கும் கொடுமைகளை முற்றாக உணர்ந்த கம்பன், அவள் செயல்கள் குறித்துச் சற்றே கடுஞ் சொற்களை ஆங்காங்கே பதிவு செய்கிறான். இராமன் சூர்ப்பணகை உரையாடலுக் கிடையே, பெண்மையை உயர்த்தியும் இழித்தும் அமையும் உரையாடல்கள் பல வருகின்றன.

**"......அறிதற்கு ஒவ்வா**
**நல்நுதல் மகளிர் சிந்தை**
**நல்நெறிப் பால அல்ல"** *(க. 2775)*

என்று, இராமன் மனத்தில் நினைந்து பின் உரையாடுவ தாகவும்,

**"தாம் உறு காமத் தன்மை தாங்களே உரைப்பது என்பது**
**ஆம் என ஆவது அன்றால் அருங்குல மகளிர்க்கு அம்மா"**
*(க. 2776)*

www.saivamonline.com

சாத்தான் வேதம் ஓதியது போலப் பெண்மைக் குணமே இல்லாதவள் பெண் இயல்பு பேசியதாகவும் பல பதிவு களைச் செய்து கதை நடத்திச் செல்கிறான். பெண்கள் சிந்தை, நன்னெறியில் செல்வதில்லை என்ற இராமன் சிந்தனை, அவன் அனுபவத்தின் வெளிப்பாடாகலாம்.

## எதிர் விளைவுகள்

சூர்ப்பணகை— இராமன் உரையாடல்களும், இராமன் எல்லாம் உணர்ந்தவனாக இருந்தும் தன் தகுதிக்கு மீறிய உரையாடலில் சிக்குண்டு தவிப்பதையும், பெண்மையின் காமமும், காமம் நிறைவேறத் தடை ஏற்படும் போது பெண்மை வெகுண்டு எழுதலும், தடைகளை உடைத்தெறிய முயலும் முயற்சியும், அது தோற்றுத் தண்டனை பெறலும், பாதிக்கப்பட்ட பெண்மை மீண்டும் வெற்றி பெறத்தக்க துணை நாடி எழலும், போராட்டங்களும், பேரழிவும் எல்லாம் அடுத்தடுத்து நடந்து முடிவதைக் கம்பன் விரிவாகவே பேசிக் காட்டி கற்பார்க்கு எச்சரிக்கைக் கொடி ஏற்றுகின்றான். விதியின் போக்கில் நிகழும் செயல்களும் சூர்ப்பணகை மானபங்கப்படுத்தலும் பிறவும் எல்லாம் மூல இலக்கியப் பதிவுகளாகவே கம்பனில் அமைகின்றன. பெண்மையின் பெருமிதங்களைத் தேடித் தொகுக்கும் ஒரு முயற்சியில் நன்மையே சிறிதும் கலவாத ஒரு தீய பெண்மையை அதன் செயல்களை விரிவாகக் கற்பார் முன் நிறுத்துவது கூட சில நேரங்களில் எதிர்விளைவுகளை உண்டாக்கக் கூடும். சூர்ப்பணகையின் கீழ்மையை விஞ்சிய, கம்பனின் பெண்மையைச் சிறுமைப்படுத்தும் போக்கு ஒன்றும், கம்பனில் இல்லை என்பதை உறுதியாகச் சொல்ல முடியும்.

## அக்கினிப் பிரவேசம்

கம்பனின் இராம காதையில் பெண்மைக்கு எதிரான சித்திரிப்பு என்று பலராலும் பேசப்படுவது, சீதையின்

www.saivamonline.com

அக்கினிப் பிரவேசமாகும். மூல இலக்கியமாகிய, வான் மிகத்திலும், இந்திய மொழிகளில் அமைந்த இராமகாதை களிலும், சிறு சிறு மாற்றங்களுடன் சீதையின் அக்கினிப் பிரவேசம் படம் பிடித்துக் காட்டப்படுகிறது. இராமகாதை யில் பின் வந்தவர்களால் பெரிதும் விமர்சனத்துக்கு உட்படுத்தப்பட்ட பகுதியும், இதுவாகவே இருக்க முடியும். கௌசிகன் வளமனையில் அகலிகை கல் உரு நீங்கி உயிர் பெற்று எழுந்தபோது, அவளைத் தூயவள் என்று பரிந்துரை செய்து கணவனோடு கூட்டி வைத்த இராமன், சீதையின் மீட்சியில் சினம் கொள்வதும், அவளை ஏற்க மறுப்பதும் புரியாத புதிராகவே அமைகின்றன. ஏதோ, ஒரு கதையில் வரும் காட்சி அமைப்பு என்று இதனை ஒதுக்கி விட முடியாது. இராமகாதை இந்திய மக்கள் வாழ்வோடு பின்னிப் பிணைந்து கிடப்பது.

## கடும் விமர்சனங்கள்

பெண்மைக்கு உரிமை வேண்டிப் போராடுவாரும் பெண் தரப்பு வாதங்களை முன் எடுத்து வைக்க முயல்வாரும், இலக்கியச் சித்திரிப்புக்களைப் பற்றி நின்றே தம்மை மெய்மைப்படுத்திக் கொள்ள முயற்சி செய்கின்றனர். காப்பியக் காட்சிகளின் மேல் எழும் விமர்சனங்கள் காப்பியம் படைத்தானையும் சென்று பற்றுகின்றன. பெரும்பாலும் கவிஞர்கள் பலரும் ஆண்களாகவே அமைந்து விட்டதால், அவர்கள் பெண்ணியப் பார்வையாளர்களால் கடும் விமர்சனத்துக்கும் கண்டனத்திற்கும் ஆட்படுத்தப்படு கின்றனர். இராம காதையில் வரும் சீதையின் தீச்சோதனை யில் நல்லவேளை கம்பன் சிக்கிக் கொள்ளவில்லை. காட்சிப் பதிவுகளில் கவிஞன் ஒட்டுறவு இல்லாமலேயே கதை நடத்துகிறான். என்றாலும், நடந்து முடிந்து சித்திரிப்பில் இடம் பெற்ற இத்தடத்தை, நின்று நிதானித்து ஆராய வேண்டிய கடமை நம்முன்னே வந்து சேர்கிறது.

www.saivamonline.com

## சீதையிடம் அனுமனை அனுப்புதல்

இராவண வதம் முடிகிறது. தன்னை வந்து வணங்கிய வீடணனை எடுத்துத் தழுவி அவனுக்கு நீதிகள் சிலவற்றை எடுத்துரைத்து இராமன் வாழ்த்துகிறான்.

**"உரிமை மூவுலகும் தொழ உம்பர் தம்**
**பெருமை நீதி அறன்வழிப் பேர்கிலாது**
**இருமை ஏய் அரசாளுதி ஈறு இலாத்**
**தரும சீல என்றான்– மறை தந்துளான்."** *(சு. 9963)*

வாழ்த்துக் கூறிய உடன் அடுத்து இராமன் நினைவுக்கு வருபவள் சீதையே. அனுமனை அழைத்து வெற்றிச் செய்தியைப் போய் அவளிடம் தெரிவித்து வருக, எனப் பணிக்கிறான்.

**"இப்புறத்து இன எய்துறு காலையில்**
**அப்புறத்ததை உன்னி அனுமனை**
**துப்பு உறச் செய்ய வாய் மணித் தோகைபால்**
**செப்புறு இப்படிப் போய் எனச் செப்பினான்."** *(சு. 9965)*

அனுமனிடம், இச்செய்தி சொல்லி விடும் வரை கூட இராமன் நெஞ்சில் சீதை பால் அன்பு மிக்கிருந்ததே அன்றி சினம் ஏதும் இருந்ததற்கு அடையாளம் இல்லை. "சீதைபால் சென்று, தெரிவித்து வா" என்றோ, என் துணைவி பால் சென்று தெரிவித்து வா என்றோ கூறாது, இராமன், "பவளம் ஒத்த செவ்வாயையும், தோகை விரித்தாடும் மயிலை ஒத்த சாயலையும் உடையாளிடம் வெற்றிச் செய்தி சொல்லி வா" என்றே பணிக்கிறான். அவன் உரைத்த அந்த விநாடி வரை சீதை அவன் நெஞ்சில் அழகு ஓவியமாகவே நிறைந்திருந்தாள் என்பதற்கு இதுவே சான்று. சீதை பற்றிய இவ்வருணனை, கவிக்கூற்று என்பதை; நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

www.saivamonline.com

### மங்கல வாழ்த்து

விரைந்து, அசோக வனம் சேர்கிறான் அனுமன். சென்று அவளை வணங்கி, "கோடை வெம்மையில் நீர் பெறாது வாடும் முளைவிட்ட சிறுசெடிக்கு நீர் வார்த்தது போன்று, அவள் உள்ளம் தளிர் விடுமாறு வெற்றிச் செய்தியை அனுமன் மகிழ்வுடன் தெரிவிக்கிறான்.

**"ஏழை சோபனம் ஏந்திழை சோபனம்**
**வாழி சோபனம் மங்கல சோபனம்**
**ஆழி ஆன அரக்கனை ஆரியச்**
**சூழி யானை துகைத்தது சோபனம்"** *(க. 9967)*

என்ற அனுமன் மகிழ்ச்சியில், மங்கலம், மங்கலம் என்ற வாழ்த்து மொழிகள் மீண்டும் மீண்டும் வருகின்றன.

### சீதை மகிழ்ச்சி

சீதை பெருமகிழ்ச்சி கொள்கிறாள். முன்பு நீ இராமன் தூதனாக வந்த போது, 'விரைவில் சிறையிலிருந்து மீட்பேன்' என்று பேசியவாறே இன்று என்னைச் சிறை நீக்கினாய். மகிழ்வூட்டும் மங்கல வாழ்த்துக்களையும் சொன்னாய். உனக்கு என்ன வகையில் நன்றிக்கடன் செலுத்துவது என்று முடிவு காண மாட்டாமையின், உன்னிடம் உரையாடவும் இது நேரம் வரை இயலவில்லை என்று சீதை பேசுகிறாள். வெற்றிக்களிப்பும் அனுமன்பால் நன்றியும் அவள் நெஞ்சில் நிறைந்திருக்கின்றன.

### மன வணக்கம்

அன்பு மனம் இராமன் வெற்றியில் மகிழ்ந்தாலும், இவ்வெற்றிச் செய்தியை அறிவித்த அனுமனுக்கு நன்றிக் கடனாக எத்தகு "பேறு" நல்குவது என்று அறியாத சீதை, அனுமனை நோக்கி,

**"உலகம் மூன்றும் உதவற்கு ஒரு தனி**
**விலை இலாமையும் உன்னினென் மேல் அவை**

www.saivamonline.com

**நிலை இலாமை நினைந்தனென் நின்னை என்**
**தலையினால் தொழவும் தகும்– தன்மையோய்.''** *(சு. 9979)*

என்று, அடிமனத்தில் பூத்த அளப்பரிய அன்பில் நயமொழி பேசுகிறாள். "விலை மதிப்பற்ற உதவிகளைச் செய்பவர் களுக்கு, ஏதேனும் ஒரு விலை மதிப்பிடக்கூடிய பொருளைப் பரிசாக அளிப்பது உரிய சிறப்பாகாது. ஒரு வகையில் உதவியைக் குறைத்து மதிப்பிட்டதாகவும் அமைந்துவிடும். விலை மதிப்பு உடையதும், நிலைபேறு இல்லாததுமாகிய இவ்வுலகத்தையே பரிசளிப்பது விலை மதிப்பற்றதும் என்றும் நிலைபேறு உடையதுமாகிய உன் உதவிக்கு நிகராகாது'' என்று தெளிந்த மனமுடையாள் சிந்தித்து உரைத்தாள். மதிப்பற்ற உதவிக்கு நன்றி செலுத்த ஒரே வழி, உதவியவர்களை வணங்குவதுதான். சீதையும் இதனையே நினைக்கிறாள். இருப்பினும் தாய் எனக் கருதி என்னை வணங்கும் இவனை வணங்குவதை அனுமனே ஏற்க மாட்டான். பின் எப்படி நன்றி சொல்வது? "நின்னை, என் தலையினால் தொழவும் தகும்'' என்று பேசி நிறை கிறாள். அவனை வணங்கவே, நெஞ்சம் நினைக்கிறது. வெளிப்பட அதனை நிகழ்த்தாமல் மன வணக்கம் செலுத்தி மகிழும் சீதையின் பண்பாடு கற்பாரைச் சிந்திக்க வைக்கிறது.

## கூனியின் கொடுமை

வாழ்த்துப் பெற்ற அனுமன் இதுகாறும் சீதையைச் சூழ்ந்து நின்று, வருத்தி வந்த அரக்கியர்கள் மேல் கடும் கோபம் கொள்கிறான். "என் தாய் அனைய திரிசடை ஒருத்தியை விடுத்து ஏனைய அரக்கியரை நகத்தால் பிளந்து எமனுக்கு இரையாக்குவேன்'' என்று, சீறுகிறான். அவன் சீற்றம் கண்டு அரக்கியர் சீதைபால் தஞ்சம் அடைகின்றனர். "அன்னை நின்பாதமே விடலம்; மெய்ச்சரண்.'' என்று அஞ்சி உரைக்கின்றனர். சீதை, அவர்கள் அச்சம் தவிர்த்து

www.saivamonline.com

மாருதி முகம் நோக்கி, "இவ்வரக்கியர் என்ன கொடுமை செய்து விட்டார்கள்? இராவணன் உரைக்கச் சொன்ன வற்றை என்பால் உரைத்தவர்கள் இவர்கள். எய்தவன் இராவணன். இதற்கு நீ வெகுளத் தேவை இல்லை" என்று பேசிய சீதையின் நெஞ்சில் சோகம் கப்புகிறது. "எல்லாத் துன்பங்களும் நான் செய்த செயல்களால் எனக்கு வந்துற் றன. அப்படியே இங்குள்ள அரக்கியர்கள் எனக்குத் துன்பம் இழைத்திருந்தாலும் இவர்கள், கூனியை விடவும், கொடிய வர்கள் அல்லரே" என்கிறாள் சீதை. சீதை கைகேயியை எந்த துன்பத்திலும் கடிந்து கொண்டவள் இல்லை. தங்களுக்கு உற்ற துன்பங்களுக்கு மூல காரணமானவள் இன்னார் என்பதைத் துன்புற்ற மனம் இனம் கண்டு கொள் கிறது. பின்னே கைகேயியை இராமன் தாய் என ஏற்றுப் போற்றுவதற்குக் கம்பன் செய்யும் பாதுகாவல்களில் இதுவும் ஒன்று.

## 'சீரொடும் தா நம தேவியை...'

இராமன், அனுமன் மீண்டும், திரும்பி வாராமை, கண்டு வீடணனை அருகழைத்து, "வீடண சென்று தா நம தேவியைச் சீரொடும்" என்று பணிக்கிறான். இராமன் அரசியல் அறிவைக் கம்பன் இனங்காட்டும் இடங்களில் இதுவும் ஒன்று. வெற்றிச் செய்தி சொல்லி அனுப்பிய அனுமனைச் சீதையை அழைத்து வருமாறு இராமன் பணிக்கவில்லை. சீதையைச் சிறையெடுத்த இராவணன் மடிந்தவுடன் வெற்றி பெற்ற இராமன் இலங்கை அரசுக்குத் தலைவன் ஆகிறான். எனினும் முன்னர் அடைக்கலம் நாடி வந்தபொழுதே, இலங்கை ஆட்சியை வீடணனுக்கு வழங்கி முடியும் சூட்டினான் இராமன். இந்நிலையில் வீடணன் இலங்கை வேந்தனாகத் திகழ்கிறான். இலங்கை வேந்தன் ஒருவனால் சிறைவைக்கப்பட்ட சீதையை இன்னொரு

www.saivamonline.com

இலங்கை வேந்தனே மீட்டுத் தன்பால் கொண்டு வருதலே அரசப் பெருமிதம் என்று இராமன் கருதியிருக்க வேண்டும். சீதையை என்றோ, மனைவியை என்றோ கூறாது 'நம தேவி' என்று உரைத்த இராமன் கூற்றில் நுட்பம் நிறைந்திருத்தலை உணர முடியும்.

## யார் தவறு?

விரைந்து அசோகவனம் சேர்ந்து சீதையை வணங்கி வீடணன்,

**"வேண்டிற்று முடிந்த தன்றே வேதியர் தேவன் நின்னை**
**காண்டற்கு விரும்பு கின்றான் உம்பரும் காண வந்தார்."**

*(க. 9990)*

என, அழைக்க வந்த செய்தியைச் சீதையிடம் தெரிவிக்கிறான். இராமன் "தா நம தேவியைச் சீரொடும்" என்று கூறியதற்கு, இன்னது அவன் உள்ளம் என்று தெரியாது,

**"பூண்தக்க கோலம் வல்லை**
**புனைந்தனை வருத்தம் போக்கி**
**ஈண்டுக் கொண்டு அணைதி என்றான்;**
**எழுந்தருள் இறைவி!"** *(க. 9990)*

என வேண்டி நின்றான். "சீரொடும்" என்ற, இராமன் பணிமொழிக்கு வீடணன், "கோலம் புனைந்த அழகொடு" என்றே பொருள் கொண்டிருக்க வேண்டும். வெற்றி வீரன் மனைவியைப் பலர் முன் அழுக்கடைந்த தோற்றத்தில் அழைத்து வருதல் முறையன்று என்று வீடணன் எண்ணியதில் குற்றம் ஏதும் இல்லை. வீடணன் செயல் தவறு என்றால், அதற்குத் தன் விருப்பம் இன்னது என்பதைப் பட்டாங்கு வீடணன் புரிந்து கொள்ளுமாறு உரைக்கத் தவறிய இராமன்மேல் தான் தவறு கூற வேண்டும்.

## விழுமியது அன்று

சீதை, வீடணனினும் நன்றாக இராமன் உள்ளம் அறிந்தவள். மேலும், தான் மாற்றான் சிறையில் இருந்து

www.saivamonline.com

வாடிய கோலத்தை, இராமனும் மற்றவர்களும் காணவே அவள் விரும்பினாள். அறிவு நிரம்பிய சீதை, உலகியல் அறிந்தவளாய் வீடணனுக்கு மறுப்பு உரைக்கிறாள்.

**“யான் இவண் இருந்த தன்மை**
**இமையவர் குழுவும் எங்கள்**
**கோனும் அம்முனிவர் தங்கள்**
**கூட்டமும் குலத்துக்கு ஏற்ற**
**வான்உயர் கற்பின் மாதர்**
**ஈட்டமும் காண்டல் மாட்சி;**
**மேல்நிலைக் கோலம் கோடல்**
**விழுமியது அன்று– வீர!”** *(க. 9991)*

என்கிறாள். வீடணன், தான் புரிந்து கொண்டவாறு கோலங் கொண்டு வருதலே “நீலக்குன்று அன தோளினான் தன், பணியின் குறிப்பு” என்று வற்புறுத்துகிறான். அதற்கு மேலும் மறுக்கமாட்டாதவளாய்க் கணவன் விருப்பம் இதுவே போலும் என்று கருதி கோலம் புனைய உடன்படுகிறாள்.

## இராமன் சினம்

கோலம் புனையப்பட்ட சீதை வான மடந்தையர் வானரர் மற்றும் அரக்கர் சூழ இராமன் இருப்பிடம் நோக்கி அழைத்து வரப்படுகிறாள். முன்னாக வீடணன் இராமனிடம் சென்று சேர்கிறான். சீதையைக் காண இருமருங்கும் கூடிய கூட்டத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் இலங்கை வீரர்கள் கோல் கொண்டு வீசி கூட்டத்தைக் கட்டுப்படுத்த முயன்றனர். இந்நிலையில், பெரும் கலக ஓசை எழுந்து இராமன் செவிகளில் விழுந்தது. இராக்கத வீரர்கள் நிகழ்த்திய தடியடியால் இராமன் வெற்றிக்குத் துணை நின்ற வானர வீரர்கள் எழுப்பிய அவலக் குரலாக அவை இருந்திருக்க வேண்டும். ஓசைக்குக் காரணம் குறித்து இராமன் கேட்க, முனிவர்கள் நிகழ்ந்தவாறு எடுத்துரைத்த னர். சீதையைக் காண ஆர்வங் கொண்டிருந்த அன்பு

www.saivamonline.com

*நிறைந்த இராமன் நெஞ்சில் ஆத்திரம் குடிபுகுந்தது. அவன்,*

**"நனி இதழ் துடித்திட நகைத்து வீடணன்—**
**தனை எழ நோக்கி, "நீ தகாத செய்தியோ?"** *(சு. 10002)*

*என்று சினத்துடன் வினாத் தொடுக்கிறான். நிகழ்ந்தது இன்னது என்று உணராத வீடணன் இராமன் சீற்ற மொழி களால் குலைந்து போய் நிற்கிறான். இதற்குள் சீதை இராமன் இருப்பிடத்தை நெருங்கி வருகிறாள்.*

## அனுமனுக்கு வாழ்த்து

*சீதை மகிழ்ச்சி மீதுர மீண்டும் அனுமன் உதவியைப் பாராட்டி மகிழ்கிறாள். கற்புக்குத் துயரிலிருந்து மீட்கும் ஆற்றல் உண்டு என்று உறுதி பூணுகிறாள்.*

**"சீலமும் காட்டி என் கணவன் சேவகக்**
**கோலமும் காட்டி என் குலமும் காட்டி இஞ்**
**ஞாலமும் காட்டிய கவிக்கு நாள் அறாக்**
**காலமும் காட்டும் கொல் என் கற்பு?"** *(சு. 10007)*

*என்று அனுமனுக்குச் 'சிரஞ்சீவி' வாழ்வுக்கு வாழ்த்துரைக் கிறாள். இதற்குள்ளாக, இராமன் கோலம் அவள் கண்முன் வருகிறது.*

## இராமனைக் காணுதல்

*சீதை கண் எதிரே இராமன் நிற்கிறான். கம்பன் ஆழ்வார்களில் சொல் எடுத்து,*

**பச்சிலை வண்ணமும் பவள வாயுமாய்க்**
**கைச்சிலை ஏந்தி நின்றானைக் கண்ணுற்றாள்,** *(சு. 10008)*

*என்று காட்சி விரிக்கிறான். சீதை இராமனைத் தொழுது, ஏக்கம் நீங்குகின்றாள்.*

**"பிறப்பினும் துணைவனை, பிறவிப் பேர் இடர்**
**துறப்பினும் துணைவனை, தொழுது 'நான் இனி**

www.saivamonline.com

**மறப்பினும் நன்று; இனி மாறு வேறு வீழ்ந்து**
**இறப்பினும் நன்று' என ஏக்கம் நீங்கினாள்.** *(க. 10010)*

*நீண்ட நாள் பிரிந்திருந்த இராமன் இலங்கையில் முதன் முதலாகச் சீதையைக் காண்கிறான். கம்பன் ஓர் அற்புதமான காட்சியை முன்னிறுத்தி, இலக்கிய உத்தியைப் புதுப்பிக் கிறான்.*

## கேட்ட வருணனை

*இராமன் சீதையைக் கண்ட போது சீதை அவனுக்கு எப்படி எல்லாம் காணப்பட்டாள் என்பதைக் கம்பன் ஒரு பாடல் வழி காட்டுகிறான்.*

**"கற்பினுக்கு அரசினை பெண்மைக் காப்பினை**
**பொற்பினுக்கு அழகினை புகழின் வாழ்க்கையை**
**தற்பிரிந்து அருள்புரி தருமம் போலியை**
**அற்பின்அத் தலைவனும் அமைய நோக்கினான்."** *(க. 10011)*

*பெண்மை பற்றிய வருணனைகள் என்பது கம்பனுக்கு ஒன்றும் கை வராத கலை அன்று. எனின், இந்தப் பாடலில் அப்படி என்ன நயம் வந்துவிட்டது என்பது பொருத்தமான ஐயமே. இராமகாதையை ஊன்றிக் கற்றவர்களுக்கும், மனப்பாட சக்தி வல்லவர்களுக்கும் இச்சீதையின் வருணனை வரிகள் வேறு எங்கோ ஒலித்தது போன்ற எண்ணம் வரும். உண்மைதான். இதே வருணனை, சீதையை நோக்கியதாகச் சில ஆயிரம் பாடல்களுக்கு முன்னே, கம்பனால் முன் வைக்கப்பட்டுள்ளது.*

## இராவணன் காட்சி

*நாம், நம் நினைவைப் பின்னோக்கித் திருப்பினால், ஆரணிய காண்டத்து இராவணன் சூழ்ச்சிப் படலத்தில் நம் கவனம் பதியும். மாயமானாக வந்த மாரீசன் வஞ்சனையால் இராமனும் இலக்குவனும் அடுத்தடுத்துச் சீதையைத் தனி யிடத்தில் விதி வசத்தால் விட்டுப் பிரிகின்றனர். சீதை*

www.saivamonline.com

தனித்திருக்கிறாள். அக்காலை இராவணன் தவக்கோலம் பூண்டு, சீதை இருப்பிடத்தைச் சார்கிறான். சீதையும், "இவன் தவ முனிவன் போலும்", என்று கருதி, எதிர்கொள்ளப் பர்ணசாலையை விட்டு வெளி வருகிறாள். இராவணன் சீதையை முதல் முதல் நேரில் காண்கிறான். இந்தக் காட்சி விரிவைக் கூற வந்த கம்பன்,

> **"வெற்பிடை மதம் என வெயர்க்கும் மேனியன்**
> **அற்பின்நல் திரைபுரள் ஆசை வேலையன்**
> **பொற்பினுக்கு அணியினைப் புகழின் சேக்கையைக்**
> **கற்பினுக்கு அரசியைக் கண்ணின் நோக்கினான்"** *(க. 3344)*

என்று கவிதை புனைகிறான்.

## கம்பன் நினைவாற்றல்

ஒத்த தன்மையுடைய ஒரே மாதிரியான வருணனை களைப் பதிவு செய்யும் கம்பனுக்கு, ஒரு நோக்கு இருந்திருக்க வேண்டும். இராவணன் முதல் முதலில் சீதையைக் கண்ட போது எத்தகையளாக இருந்தாளோ, அதே நிலையில் சிறிதும் மாற்றம் இன்றி மாற்றான் சிறையில் இருந்தும் மாசு மறுவற்றவளாகத் திகழ்கிறாள் என்பதைக் கற்பாருக்கு உணர்த்த இராமன் காட்சியிலும் அதே பொருளுடைய தொடர்களைப் பதிவு செய்கிறான். கவிதைத் தொடர்ச்சியும் நினைவுத் தடமும் அறாது காட்சிகளைப் புனையும் திறமும், பெண்மை எல்லாத் தடைகளையும் தாண்டி மாசு மருவற்றுத் திகழும் பெருமிதம் உடையது என்பதையும் கவிஞன் பதிவில் கண்டு வியக்கிறோம்.

## திட்டமிட்ட நாடகம்

காவியம் கற்பார் நெஞ்சில் சீதை மாசு மறுவற்றவள் என்பதைக் கம்பன் நிறுவிய போதும், அன்புப் பார்வை பார்த்த இராமன் ஒரு நொடியில் அதனை மாற்றிக் கொண்டு, சீதையை இழிமொழிகள் பேசி, அவள்

www.saivamonline.com

நெஞ்சத்தைத் தீயால் சுடுகிறான். காப்பியப் போக்கில் புரிந்து கொள்ள இயலாத புதிராக இப்பகுதி அமைகிறது. பெண்மை முகத்தில் அள்ளி வீசப்பட்ட கரும்புள்ளிகளாக அவன் வார்த்தைகள் அமைகின்றன. சீதையைப் போலவும், சீதையைச் சூழ்ந்து நின்றார் போலவும், காப்பியம் கற்பாரும் பெரிதும் திகைத்துப் போகின்றனர். சற்று முன் கூட அன்புப் பார்வை பார்த்தவன் வாயிலிருந்து இவ்வளவு விரைவாகச் சீற்ற மொழிகள் எவ்வாறு பிறந்தன? ஏன் பிறந்தன? என்பன புரிந்து கொள்ளத்தக்கனவாக இல்லை. இத்தனைக் கும் இடையிலும், இராமன் சுடுமொழிகளால் சிறிதும் துலங்காது இலக்குவன் மட்டும் நிற்பது ஏதோ ஒட்டுமொத்த மான திட்டமிட்ட ஒரு நாடகமாக இருக்குமோ என்று நம்மை ஐயுற வைக்கிறது.

## இராமன் சுடுமொழி

திடீரென்று, இராமன், படமெடுத்த பாம்பு போலச் சீற்றமுடன் நோக்கி,

> **"ஊண் திறம் உவந்தனை ஒழுக்கம் பாழ்பட**
> **மாண்டிலை முறை திறம்பு அரக்கன் மாநகர்**
> **ஆண்டு உறைந்து அடங்கினை அச்சம் தீர்ந்து இவண்**
> **மீண்டது என் நினைவு எனை விரும்பும் என்பதோ"** *(க. 10013)*

என்றெல்லாம் சீதை உள்ளம் எரியக் கொடுமொழிகளைக் கொட்டுகிறான். அவள் ஊண் உண்டதையும் ஒழுக்கம் பாழ் பட்டதையும் இராமன் எங்குக் கண்டான், எப்படி உணர்ந் தான் என்பன புரியாத புதிராக உள்ளன.

## புலவர் புந்தியான்

"மாற்றான் பாதுகாவலில், இதுநாள் இருந்த நீ அச்ச மின்றி என்பால் மீண்டு வந்துள்ளாய்; உன்னை நான் விரும்பி ஏற்பேன் என்று கருதுகின்றாயோ? உன்னை மீட்டுப் போக நான் கடலில் அணைகட்டி, இங்கு வர

www.saivamonline.com

வில்லை; பழியிலிருந்து என்னை மீட்டுக்கொள்ளவே வந்துள்ளேன்.''

> ''பெண்மையும் பெருமையும் பிறப்பும் கற்பு எனும்
> திண்மையும் ஒழுக்கமும் தெளிவும் சீர்மையும்
> உண்மையும் நீ எனும் ஒருத்தி தோன்றலால்
> வண்மைஇல் மன்னவன் புகழின் மாய்ந்தவால்'' *(க. 10017)*

என்றெல்லாம் பலபடச் சீதையை இராமன் தூற்றி உரைக்கின்றான். மேலும் சினந்து.

> ''......உன் ஒழுக்கச் செய்தியால்
> சாதியால் அன்று எனின்
> தக்கது ஓர் நெறி
> போதியால் என்றனன்'' *(க. 10019)*

''உன் ஒழுக்கக் கேட்டுக்கு ஒன்று நீ செத்தொழிதல் வேண்டும். அன்றேல் என் கண்முன் நில்லாது நீ விரும்பும் எங்காவது சென்று விடு'' என்று, கொதிக்கிறான். பாட்டை முடிக்கும் கம்பன், ''புலவர் புந்தியான்'' என்று நிறைவிக்கிறான். இவ்வாறு, கொடுமொழி கூறியவன், குழம்பிய சிந்தையனாகவே இருக்க முடியும்; இருக்க வேண்டும் என்று கற்பார் சீதை தரப்பில் நின்று எண்ணும் போது, கம்பன் அவன் அறிவு நிரம்பிய சிந்தையான் என்று புதுமை செய்கிறான் என்றால், இராமன் ஏச்சுரைகளுக்குள் ஏதோ ஓர் உள்ளீடு உண்டு என்பதைக் கவிஞன் உணர்த்த முயற்சி செய்வதாகவே இனங்காண வேண்டும்.

## தீ மூட்ட வேண்டுதல்

சீதை எதிர்பாராத நேரத்தில் கணவன் வாயிலிருந்து புறப்பட்ட இழிமொழிகளால், பெரிதும் இடிந்து போகிறாள். விரக்தியின் உச்சியில்,

> ''எத்தவம் எந் நலம் என்ன கற்பு நான்
> இத்தனை காலமும் உழந்த ஈது எலாம்

www.saivamonline.com

**பித்து எனல் ஆய் அவம் பிழைத்ததாம் அன்றே**
**உத்தம நீ மனத்து உணர்ந்தி லாமையால்"** *(க. 10025)*

என்று வாய்விட்டு அரற்றுகிறாள். "யாருக்காக நான் இத்தனை நாள் உயிர் வாழ்ந்திருந்தேனோ, அவனே என்னை ஐயுற்று, பலர் முன் இழி சொற் கூறித் தூற்றிய பின், இனி நான் உயிர் வாழ்வதில் பொருள் ஒன்றும் இல்லை. நீயும் 'செத்து ஒழி' என்று கட்டளை இட்டு விட்டாய். விதியின் விருப்பமும் அதுவாகவே உள்ளது" என்று கூறி, இலக்குவனை நோக்கி, "இடு தீ" என்று வேண்டுகிறாள். சற்றே தடுமாறிய இலக்குவன், அண்ணன் இராமனை நோக்க, இராமனும் கண் சாடை காட்டி அனுமதி தருகிறான். இலக்குவன் மனம் தளர்ந்து கண்ணீருடன் அண்ணன் கட்டளை வழி சீதை வேண்டியவாறு தீ மூட்டுகிறான். சீதையும், மூட்டிய தீயின் அருகே சென்று சேர்கிறாள்.

## இராமன் கலங்காமை

சீதை தீயருகில் சென்றதும், அவள் எடுத்த முடிவையும் இராமன் அதனைத் தடுத்து நிறுத்தாமையும் கண்டு வேதங்களும் தருமமும் உயிர்க் குலங்களும் வாய்திறந்து அரற்றின. அவள் தீயை வலம் வரத் தொடங்கியதும்,

**................... வான்முதல்**
**உலகமும் உயிர்களும் ஓலமிட்டன;**
**அலம் வரல் உற்றன; அலறி 'ஐய இச்**
**சலம் இது தக்கிலது' என்னச் சாற்றின** *(க. 10032)*

இந்திரன் தேவியர் முதலாய வானத்து மங்கையர் எல்லாம் வானிடை நின்று அரற்றினர். இவர் மட்டுமின்றி,

**"நடுங்கினர் நான்முகன் முதல நாயகர்**
**படம் குறைந்தது படி சுமந்த பாம்பு; வாய்**
**விடம் பரந்துளது என வெதும்பிற்றால் உலகு**
**இடம் திரிந்தன சுடர் கடல்கள் ஏங்கின."** *(க. 10034)*

www.saivamonline.com

விண்ணும் மண்ணும் நடுங்கிய போதும், காதல் துணைவி தீப் புகவிருப்பதைக் கண்டும் இராமன் கலங்கா திருத்தல் கற்பாருக்கு வியப்பைத் தருகிறது.

## கம்பனின் நுட்பம்

மும்முறை வலம் வந்து கணவன் இராமன் நின்றிருந்த பக்கம் திரும்பி, தன் இறுதி வணக்கத்தை அவனுக்குச் செலுத்திவிட்டுக் கொழுந்து விட்டு எரியும் தீக்கடவுளை நோக்கி,

> **"மனத்தினால் வாக்கினால் மறு உற்றேன் எனின்**
> **சினத்தினால் சுடுதியால் தீச் செல்வா"** *(க. 10035)*

என்று கூறி வணங்கித் தீயில் பாய்கிறாள். அடுத்த கணம், சீதை கற்பின் திறத்தால் தீ அவிந்தது; கண்டோர் விம்மிதம் உற்றனர்; முக் கரணங்களுள் மனத்தையும் வாக்கையும் குறித்த சீதை, மெய்யாகிய உடலைக் குறித்திலள். கம்பன் வேண்டுமென்றே அதனை விடுத்துப் பெண்மையை உயர்த்திப் பிடிக்கிறான். அவள் உடலுக்கு ஒரு மாசு நேர்ந் திருந்தால், அவள் இந்நேரம் உயிருடன் எதிர் வந்திருக்கவே மாட்டாள். உலகத்துக்கும், கணவனுக்கும், தான் தூயவள் என்பதை மெய்ப்பித்துக்காட்ட, மனமும் வாக்குமே அமையும் என்பது கம்பன் வழங்கும் நுட்பமாக அமைகிறது.

## கற்புத் தீ

தீ அவிந்ததும், கற்பரசியாகிய சீதையை உள்ளங்கையில் ஏந்தியவாறு தீக்கடவுள் மேலெழுகிறான். சீதையின் கற்புத் தீயால் தீக்கடவுள் மேனி கருகிற்று. சீதை யாதொரு தீங்கும் இன்றி மேல் எழுந்ததைக் கண்டு, இதுவரை பதைத்து நின்றவர் எல்லாம் மகிழ்ந்து நாணம் பாராது ஆனந்தக் கூத்து ஆடினர்.

> **"திரிந்தன உலகமும் செவ்வை நின்றன;**
> **பரிந்தவர் உயிர்எலாம் பயம் தவிர்ந்தன;**

www.saivamonline.com

**அருந்ததி முதலிய மகளிர் ஆடுதல்**
**புரிந்தனர், நாணமும் பொறையும் நீங்கினார்"** *(க. 10039)*

*கம்பனும் அவர்கள் மகிழ்ச்சியில் கலந்து மகிழ்கிறான்.*

## தீக்கடவுளை வினவுதல்

*சீதையைக் கரையில் இறக்கிவிட்டுத் தீக்கடவுள் அவளை நோக்கி,*

**"கனிந்துஉயர் கற்பு எனும் கடவுள் தீயினால்**
**நினைந்திலை என் வலி நீக்கினாய் என**
**அநிந்தனை அங்கி நீ அயர்வு இல் என்னையும்**
**முனிந்தனை ஆம் என முறையிட்டான்"** *(க. 10040)*

*என்று கம்பன், அவன் அஞ்சி உரைத்த மொழிகளைப் பதிவு செய்கிறான். இராமன், தீக்கடவுள் அருகில் நெருங்கி மேலும் கல்மனம் படைத்தவனாய் "நீ யார்?; நீ கூறி நிற்பன யாவை?; நெருப்பிலிருந்து வெளிப்பட்டு இக்குற்றம் உடைய வளைச் சுட்டெரிக்காது நீ ஏன் காப்பாற்றினாய்?; இவ்வாறு, இவளைக் காக்குமாறு யார் உனக்குக் கட்டளை இட்டது?" என்றெல்லாம் சுற்றி நின்று, இச்சோகத்தைக் காணும் அனைவர் செவிகளிலும் விழுமாறு வினவுகிறான். மனைவி, உயிர் பிழைத்தமைக்கு மகிழாது மேலும் கொடுமை பயக்கும் மொழிகளை வினவி நிற்கும் இராமன் இரக்கமற்றவனாகவே நமக்குத் தோற்றம் தருகிறான்.*

## தீக்கடவுள் அறிவுரை

*தீக்கடவுள், இராமனுக்கு மறுமொழி கூறத் தொடங்கு கின்றான். "நான்தான் தீக்கடவுள்; இதோ நிற்கும் இத் தாய் அனையாளின் கற்பாகிய பெரு நெருப்பு, என்னைச் சுட்டெரித்தது; அதனைப் பொறுக்க மாட்டாது, நான் மேல் எழுந்து வந்தேன்; மற்றவர் ஒழுக்கங்களுக்கெல்லாம் சான்று பகரும் உனக்கு, இங்கு நடந்தன கண்ட பின்பும் ஐயம் தீர்ந்திலதோ?" என்று விடை தருகிறான். மேலும், தேவர்*

www.saivamonline.com

களுக்கு ஆகுதி வழங்க வேள்வி வேட்பதற்கும், மகளிர் தம் திறத்தில் மயங்கினார் என்று ஐயுற்றாரைத் தெளிவிப்பதற் கும், அக்கினியாகிய நானே இடமாவேன் என்று வேதங்கள் உரைப்பனவற்றை நீ அறிய மாட்டாயா?

**"ஐயுறு பொருள்களை ஆசு இல் மாசு ஒரீஇக்**
**கையுறு நெல்லி அம் கனியின் காட்டும்என்**
**மெய்யுறு கட்டுரை கேட்டும் மீட்டியோ**
**பொய்உறா மாருதி உரையும் போற்றலாய்!"** *(க. 10044)*

என் உரை கேட்டும், பொய்மையற்ற அனுமன் தூது சென்று வந்து சீதை தூயள் என்று உரைத்த உரையையும் கேட்டும், நீ இன்னும் இவளைக் குற்றமற்றவள் என்று நம்பி ஏற்றுக் கொள்ள முன்வர மாட்டாயா என்று தீக்கடவுள் இராமனை முன்னிலைப்படுத்தி உரைக்கிறான்.

## சீதையை ஏற்றல்

பலபடத் தீக்கடவுள் பேசி நிறைவாக, "இவ்வளவு நிகழ்ந்த பின்பும் நீ சீதை குற்றமற்றவள் என்று நம்ப மறுத்தால், ஒருவேளை இவள் சீற்றம் கொள்ளக்கூடும். அங்ஙனம் இவள் சீறினால் மழை பொழியாது; வானம் பொய்க்கும்; இப்பூவுலகு இரண்டாகப் பிளந்து போகும்; பொறை என்னும் பண்பும் அறமும் நெறி திறம்பும்; உலகு உய்தி பெறுதல் இல்லை; மலர்மிசை வாழும் பிரமனும் செத்தொழிவான்" என்று எடுத்துரைத்து, இராமனைச் சிந்திக்க வைக்கிறான். நிறைவாக இராமன் மனமாற்றம் உற்றவன் போல்

**"அழிப்பில சான்று நீ உலகுக்கு ஆதலின்**
**இழிப்பு இல சொல்லி நீ இவளை யாதும் ஓர்**
**பழிப்பு இலள் என்றனை பழியும் இன்று இனிக்**
**கழிப்பிலள் என்றனன் கருணை உள்ளத்தான்."** *(க. 10048)*

www.saivamonline.com

என்று பேசி, சீதையைக் குற்றமற்றவள் என்று ஏற்க இசைகிறான். பிரமனும், சிவபெருமானும் விண்ணில் தோன்றி, இராமனுக்கு நல்லுரை புகல்கின்றனர்.

சிவபெருமான் பணிக்கத் தயரதன் மீண்டும் புவிக்கு வந்து, சீதையை அணுகி,

**"நங்கை மற்று நின் கற்பினை உலகுக்கு நாட்ட**
**அங்கி புக்கிடு என்று உணர்த்திய அது மனத்து அடையேல்**
**சங்கை உற்றவர் பெறுவதும் உண்டு அது சரதம்**
**கங்கை நாடுடைக் கணவனை முனிவுறக் கருதேல்."**

*(க. 10072)*

என உலகியல் காட்டிச் சீதைக்கு இன்னுரை வழங்கு கின்றான். மேலும், பொன்னைத் தீயில் பெய்வது, அது தூயது என்பதைக் காட்டுவதற்காகத்தான். கற்பரசி என்று உன்னை உலகுக்குக் காட்டவே, இராமன் இதனை நிகழ்த்தி யுள்ளான். இலங்கையில் நீ சிறையிருந்ததால், இங்கேயே உன் தூய்மையை வெளிப்படுத்த வேண்டும் என்பது அவன் எண்ணமாகலாம் என்றும், தயரதன் சீதைக்கு மென் மொழிகள் கூறினான். இத்தனைக்கும் பிறகு, சீதை ஏதும் பேசுவாள் என்று நாம் எதிர்பார்த்தால், இந்தக் காட்சியைக் கம்பன் முடித்து விடுகிறான். அவளை, நடந்து முடிந்த நிகழ்வுகள் குறித்து ஒன்றும் பேசவிடாது, காட்சியை நிறைவு செய்தமையே பல ஐயங்களை நம்முன் தோற்றுவிக்கின்றன. அவள் உடன்பட்டோ மறுத்தோ சில சொல் கூறியதாகக் கம்பன் நிறைவு செய்திருந்தால், அறிஞர் உலகம் இத்தீச் சோதனை மேல் அத்துணை நாட்டம் காட்டியிருக்காது.

## வினாக்களின் அணிவகுப்பு

கம்பனில் பெண்ணியம் பற்றிய ஆய்வில் சீதைக்கு அமைந்த இந்த நெருப்புச் சோதனை, ஒரு கேள்விக்குறி யாகவே முன்னிற்கிறது. மூலக்கதைச் சித்திரிப்பு, கதை நடந்த காலம், தமிழில் கம்பன் இதனைப் படைத்த காலத்தில்

www.saivamonline.com

*நிலவிய சமூக அமைப்பு, காலகாலமாகப் பெண்மை பற்றி நிலவிவரும் ஆடவர் மனோபாவங்கள் என்று பலவற்றைக் கருத்திற் கொண்டே, இத் தீச்சோதனையின் உண்மையான பின்புலத்தைக் காண இயலும். எந்தச் சோதனைக்கும் ஆட்படுத்தாது, உடலால் களங்கப்பட்டு, கல்லுரு நீங்கித் தன் முன் நின்ற அகலிகையை, நெஞ்சத் தூய்மையுடையவள் என்று ஏற்ற இராமனுக்குச் சீதையை ஏற்கத் தயக்கம் ஏன்? ஆடவர்கள் கற்புக்கு ஏன் இத்தகு சோதனைகள் நிகழ்த்தப் படுவது இல்லை? இந்நிகழ்வு ஆண் ஆதிக்கச் சமூகத்தின் அநீதி அல்லவா? இராமன், சீதைத் தீப்புக முயன்றபோது, ஏன் தடுத்து நிறுத்தவில்லை என்பன போன்ற வினாக்கள் நம்முன் அணிவகுக்கின்றன.*

## முதல் வாதம்

*முதலாவதாக தயரதன் கூறியதுபோல், சந்தேகம் கொண்டவர்கள் தங்கள் ஐயங்களைத் தீர்த்துக் கொள்வது உலக இயற்கையே. எனவே, இராமனுக்கே, சீதை தூயவள் தானா என்ற ஐயம் இருந்தது. அதற்காகவே இத் தீச் சோதனையை அவன் தடுத்து நிறுத்த முன்வரவில்லை என்பது ஒன்று.*

*இது பொருந்துவது அன்று. தூது சென்று வந்த அனுமன் மொழிகளால் இராமன், சீதையின் கற்புக்குக் களங்கம் நேரவில்லை என்பதை உறுதி செய்து கொண்டான். கம்பன் சுந்தர காண்டத்து நிறைவில், திருவடி தொழுத படலத்தில்,*

**திண்திறல் அவன்செயல் தெரிய நோக்கினான்;**
**'வண்டு உறை ஓதியும் வலியள் மற்று இவன்**
**கண்டதும் உண்டு; அவள் கற்பும் நன்று' எனக்**
**கொண்டனன், குறிப்பினால் உணரும் கொள்கையான்.**

*(க. 6029)*

www.saivamonline.com

என இராமன் மன உணர்வைத் தெள்ளத் தெளிவாகப் பதிவு செய்துள்ளான். சீதை கற்பு உணர்ந்து, இராமன் தோள்கள் விம்மின. மலர்க் கண்களும் மலர்ந்தன. உள்ளத் துயர் நீங்கியது. சீதைபால் இராமனுக்குக் காதல் பெருக்கு எடுத்தது.

## பொருத்தமற்ற வாதம்

இவ்வுணர்வு போர் நிறையும் வரை கூட மாற்றம் பெறவில்லை. சீதைக்கு வெற்றிச் செய்தி சொல்லி வருமாறு அனுமனிடம் பணித்த போதும், சீதைபால் அன்பு மீதூர, "துப்புறச் செய்ய வாய் மணித் தோகைபால் செப்புறு" என்று அவள் ஒழுக்கத்தில் சிறிதும் ஐயம் இலனாய் இன்மொழிகள் அடுக்குகிறான். அதே மனநிலையுடன், வீடணனிடமும் சென்று 'தா நமதேவியை' என்று அரசப் பெருமிதத்துடன் 'நம தேவி' என்று தன்மைப் பன்மை முன் னிறுத்தி அவளைத் தன் தேவி என்றே கருதியிருந்திருக் கிறான். இடையில், சீதையை அழைத்து வரும்போது ஏற்பட்ட நிகழ்வுகளால் அவன் உள்ளம் சீற்றம் கொண்டிருந்தபோதும் சீதை எதிர் வரக் கண்டபோது அது மறைந்துவிடுகிறது. கம்பன், 'அன்பின் அத்தலைவனும் அமைய நோக்கினான்,' எனப் பதிவு செய்வதால், அதுவரை கூட இராமனிடம் சீதையைப் பற்றிய எவ்வித ஐயமும் இருந்திருக்கவில்லை என்பது உறுதியாகிறது. எனவே, இராமன் தனக்குற்ற ஐயம் தீர்த்துக் கொள்ளவே தீச்சோதனைக்கு உடன்பட்டான் என்பது பொருத்தமற்ற வாதமாக நின்று தேய்கிறது.

## உலகத்தார் ஐயம்

இரண்டாவதாகக் கூறப்படும் காரணம், சீதை குற்றமற்றவள் என்பதைத் தான் முற்றாக உணர்ந்திருந்த போதிலும், காமுகன் இராவணன் சிறையில் பத்துத் திங்கள் தங்கியிருந்த சீதை, கற்புக் கெடாது இருந்தாள் என்பதற்கு

www.saivamonline.com

என்ன உத்திரவாதம் என்ற, உலகினர் ஐயத்தைத் தீர்க்கவே, இராமன் தீச்சோதனைக்கு உடன்பட்டான் என்பது. தன் அருகில் அரசு கட்டிலில் அமர வேண்டியவள் சீதை என்ப தால், அவள் உலகத்தார் ஐயத்திற்கு அப்பாற்பட்டவளாகத் திகழ வேண்டும் என்று இராமன் கருதியிருக்க வேண்டும் என்றும் எண்ண இடமுண்டு.

## வலிமையற்ற வாதம்

உலகம் என்பது உயர்ந்தவர்களையே குறித்து வழங்கப் படும் ஒரு சொல். இதுபற்றி உலகம் என்ன கருதும் என்றால், உலகத்துச் சான்றோர் என்ன கருதுவர் என்பதே பொருள். கீழோர் உளத்து எழும் ஐயங்களை எல்லாம் ஒருகாலும் தீர்த்து வைத்தல் இயலாது. இலங்கையில் உயர்ந்தோர் வரிசையில் வைத்துப் போற்றத் தக்கவர் மூவர். ஒருவன் அறிஞன் வீடணன். இரண்டாமவள் கற்பரசி மண்டோதரி. மூன்றாமவள் திரிசடை. இம்மூவரில் எவருக்கும் சீதையின் கற்புப் பற்றிய ஐயம் சிறிதும் எழுந்ததாகக் காப்பியத்தில் குறிப்புக்கள் இல்லை. மாறாக அவள் கற்புக் குறித்த புகழுரைகள் பலவும் இடம் பெற்றுள்ளன. மண்ணகத்தவர் அல்லாத விண்ணகத்தார் அனைவரும் தம் தெய்வீக ஆற்றலால் சீதையின் கற்பினை அறிந்தே இருந்தனர். ஒரு கற்பரசிக்கு உற்ற துயரால்தான் இராவணன் வீழ்ந்தான். இலங்கை அழிந்தது என்பதை இலங்கையில் வாழும் அரக்கரும் உணர்ந்திருந்தனர். வேகவதி வரலாறும் வழக்கில் நிலவியிருந்தது. கீழோர் ஐயம் இதனால் தீர்ந்திருந்தால் உத்தர காண்டத்தில் துணி வெளுக்கும் ஒருவன் தன் நாவால் சீதையை அழுக்காக்கியிருக்க மாட்டான்.

எனவே, சான்றோர் உலகம் நம்பிய சீதையின் கற்பைக் கீழோர் நம்புமாறு இத் தீச்சோதனையை நிகழ்த்த இராமன் விரும்பியிருக்க வேண்டும் என்ற வாதமும் வலிமை பெற்றிருக்கவில்லை.

www.saivamonline.com

## மூன்றாவது வாதம்

மூன்றாவதாக ஒரு காரணம் சிலரால் முன்வைக்கப் படுகிறது. இராமகாதையில் தொண்டு என்ற ஒரு சொல் இருக்குமானால் அச்சொல்லுக்கு முழுமையான விளக்கமாக வாழ்ந்தவன் இலக்குவன். தன் இன்ப துன்பங்கள் ஒன்றை யும் நோக்காது இராமனுடன் கானில் துணை நின்றவன். குகனாலும், பரதனாலும், சத்ருக்கனாலும் நெஞ்சாரப் புகழப்பட்ட வாய்மையாளன். மாரீசன் வதைப் படலத்தில் மாயமானாக வந்த மாரீசனைக் கண்டு மயங்கி சீதை, அதனைப் பிடித்துத் தருமாறு இராமனிடம் வேண்டுகிறாள். இலக்குவன் இது மாயமான் என்று எடுத்துரைத்தும், சீதை அதைப் பற்றித்தர இராமனை வற்புறுத்துகிறாள். அவள் ஊடல் தீர்க்க வேண்டி இலக்குவனைச் சீதைக்குப் பாது காவல் செய்திருக்குமாறு பணித்துவிட்டு, இராமன் மாய மான் பின் செல்கிறான். அது போக்குக் காட்ட, தொடர்ந்த இராமன், அம்பெய்து அதனை வீழ்த்துகிறான். மாரீசன், இராமன் குரல் எடுத்து உரக்கக் கத்திவிட்டு கீழே சாய் கிறான். இராமன் மாயை உணர்ந்து சீதை இருப்பிடம் நோக்கி விரைவதற்குள், சீதை பதட்டம் அடைந்து, இராம னுக்குத் தீங்கு நேர்ந்து விட்டதோ என்று ஐயுறுகிறாள். அவள் பதட்டம் கண்டு, இராமனுக்கு ஏதும் நேராது; இது அரக்கர் மாயை என்று இலக்குவன் எடுத்துரைக்கிறான். சீதை சினந்து, இலக்குவன் ஒழுக்கத்தில் ஐயமுற்றுப் பேசியதாகக் கம்பன்,

> "நின்ற நின் நிலைஇது
> நெறியிற்று அன்று எனா
> வன் தரு கண்ணினள்
> வயிர்த்துக் கூறுவாள்" (க. 3330)

என்று பதிவு செய்வான். இதற்கு மேலும் நிற்றல் முறையன்று என்று கருதிய இலக்குவன், சீதையைத் தனியே விட்டு விட்டு

www.saivamonline.com

இராமனைத் தேடிப் புறப்படுகிறான். சீதை தனிமையைப் பயன்படுத்தி வந்து இராவணன் அவளைச் சிறை எடுக்கிறான்.

## சில ஆதாரங்கள்

இராம இலக்குவர் சந்தித்து உரையாடும் நீண்ட உரையாடல்களில் ஓரிடத்தும் இலக்குவன் சீதை தன் ஒழுக்கத்தை ஐயுற்று உரைத்ததாகக் குறிக்கவில்லை. ஆனால், அறிஞனும் தம்பியை நன்கு உணர்ந்தவனுமாகிய இராமன், இன்ன மொழி சொன்னால் அல்லாது, இலக்குவன் அவளை விட்டுப் பிரிந்து வந்திருக்க மாட்டான் என்பதை அறிந்து கொண்டுவிட்டான். ஒழுக்கம் நிரம்பிய ஒருவனை ஒழுக்கம் அற்றவன் என்று இழித்துரைத்தால், அவன் உள்ளம் எத்தகு துயர் அடையும் என்பதைச் சீதைக்கு உணர்த்தவே, அவளை இராமன் ஒழுக்கம் அற்றவள் என்று கூறி, இலக்குவனை ஐயுற்றமைக்கு அவளுக்குத் தண்டனை வழங்கினான் என்பது அன்னோர் முன் வைக்கும் வாதம். அவர்கள் வாதத்திற்குத் துணையாக,

> **“என்னை நாயகன் இளவலை**
> **எண்ணலா வினையேன்**
> **சொன்ன வார்த்தை கேட்டு**
> **அறிவு இலள் எனத் துறந்தானோ”** *(க. 5082)*

என்ற சீதையின் நினைவை முன் வைக்கின்றனர்.

## மறுப்புரைகள்

சீதை இராவணனால் சிறை எடுக்கப்பட்ட பின்னர் நடந்த இராம இலக்குவர் உரையாடல்களில் யாதோர் இடத்தும் வெளிப்படையாகவோ மறைமுகமாகவோ சீதையின் ஐயமொழிகள் இராமனுக்குத் தெரிந்திருந்ததாகக் குறிப்பு ஒன்றும் இல்லை. இலக்குவனும் விதியை நொந்து கொண்டானே அல்லால், எங்கும் சீதை சுடுமொழி குறித்துச்

www.saivamonline.com

சிந்தித்ததாகக் கம்பன் காட்டவில்லை. கணவனுக்கு ஆபத்து வரும் நேரத்தில், தாய் அனைய சீதை கலங்கி உரைத்த ஐய உரைகளை, இவை அடிமனத்திலிருந்து வந்தவை அன்று என்று உணரும் ஆற்றல் மிக்கவன் இலக்குவன். எனவே, அது பற்றி அவன் கலங்கியிருக்க வாய்ப்பில்லை.

அப்படியே இராமன் கருதியிருந்தாலும், அவள் ஐயப்பட்டு உரைத்த மொழிகளுக்கு உரிய தண்டனையைப் பல்லாயிரவர் முன் வழங்க வேண்டிய நிலைமை தோன்றி யிருக்க முடியாது. அதற்கு வேறு சில களம் அமைத்திருக்கக் கம்பனால் முடியும்.

மேலும், சீதை, இலக்குவனை உரைத்த வார்த்தைகளை, அவளுக்கே உரைத்து, அவளை உணரச் செய்வது இராமன் நோக்கமாக இருந்தால்,

**"ஊண் திறம் உவந்தனை**
**ஒழுக்கம் பாழ்பட**
**மாண்டிலை...** *(க. 10013)*

என்று உரைத்ததோடு அமைந்திருக்கலாம். அவள் தீப் புக இராமன் இசைந்திருக்கத் தேவை எழுந்திருக்காது.

மேற்குறித்த காரணங்களை ஒருங்கு வைத்து ஆராயும் போது, மூன்றாவது வாதமும் பொருத்தமற்றதாகவே நிறை கிறது.

### சமூக உயர்ச்சி

அம்மூன்றும் இல்லை என்றால், இராமன் அக்கினிப் பரீட்சைக்கு உடன்பட்டு இருந்தமைக்கு வேறு உண்மையான காரணத்தைக் கண்டு தெளிய வேண்டும். இல்லையென்றால், ஆண் ஆதிக்கச் சமூகத்தில் பெண்ணுக்கு இழைக்கப்பட்ட அநீதி என்று இதனை உடன்பட வேண்டும். இரண்டாவது முடிவிற்கு வரும் முன், பெண்மை பால் நல்லெண்ணம்

www.saivamonline.com

கொண்டவனாகக் கம்பன் புலப்படுவதால், வேறு ஏதேனும் ஓர் உண்மையை நிலைநாட்ட இக்களத்தைக் கவிஞன் பயன் படுத்தியுள்ளானா என்று தேடிப்பார்க்க முயலலாம். கவிஞர்கள் எல்லாருமே, நிகழ்காலச் சமூகத்தின் அவலங் களை மட்டும் பதிவு செய்பவர்களாக இருக்க மாட்டார்கள். ஒரு சிலர் சமூகத்தை அதன் நிலையிலிருந்து உயர்த்திப் பிடிக்கும் எண்ணம் கொண்டிருப்பர். என்றோ நடந்த கதை; பதிவு செய்யப்பட்ட சம்பவங்கள்; இவற்றின் இடையே யும் கவிஞன் தன் முத்திரைகளைப் பதிக்க, ஏதேனும் முயற்சி மேற்கொண்டுள்ளானா என்று தேடிப்பார்ப்பதில் தவறில்லை.

## விதி வலி

தெய்வமாயினும், மானுடச் சட்டை தாங்கி நிலவுலகில் பிறந்து விட்டால், எல்லாருமே விதியின் கட்டுப்பாட்டில் தான் நின்றாக வேண்டியுள்ளது. கைகேயி கேட்ட வரங் களால் இராமன் காடு செல்ல நேர்ந்த போது, இலக்குவன் வெகுண்டு எழுகிறான். கைகேயி மேல் கடுஞ்சினம் கொள்கிறான். பரம்பொருள் அவதாரமாகிய இராமன் இலக்குவனை நோக்கி நடந்து முடிந்தன எல்லாம் "விதியின் பிழை" என்று சமாதானம் கூறுகிறான். உடன்படாத இலக்குவன் நான், "விதிக்கும் விதி ஆவேன்" என்று சீறு கிறான். பின் இராமன் வாசகம் கேட்டு அமைதி கொள் கிறான். கம்பன், அதே இலக்குவன் வாழ்வில் பட்டறிவு பெற்ற காலை, விதியை உடன்பட்டுப் பேசுவதாக அமைத் துக் காட்டுகிறான். சீதை வெகுண்டு இராமனைத் தேடிப் போ என்று வற்புறுத்திய போது இலக்குவன் பலபட மறுத்தும், மாயமான் வஞ்சம் தெரியாத அவள் பெண்மைக்கு இரங்கி, "வெஞ்சின விதியினை வெல்ல வல்லமோ" என்று உரைக்கிறான்.

www.saivamonline.com

## புனிதன் தீண்டுமோ?

பாற்கடலில் பிறந்த இலக்குமி, நிலவுலகில் சீதையாக வந்து அவதரித்துப் பல்வேறு துயரங்களில் சிக்கித் தவித்தாள். விதி அவள் வாழ்விலும் விளையாடுகிறது. இராவணன் அவளை, இராமனிடமிருந்து பிரித்துப் போய், இலங்கை அசோக வனத்தில் சிறை வைக்கிறான். திங்கள் பல கடந்தும் தன்னை மீட்க வாராமையின், அவள் தனித்திருந்து பலபட நினைந்து புலம்புகிறாள். இராவணன் பல நாளும் வந்து தன்னை ஏற்றுக்கொள்ளுமாறு அவளிடம் யாசிக்கிறான். முடிந்தவரை போராடிப் பார்த்தவள் இனி, கற்பைக் காக்க ஒரே வழி மரணமே என்ற முடிவுக்கு வருகிறாள். இன்னும் கூட இராமன் வந்து மீட்பானோ என்ற நம்பிக்கை ஒரு புறம், மறுபுறம் அவளை ஓர் அச்சம் வந்து பற்றிக் கொள்கிறது.

**"பொறை இருந்து ஆற்றி என் உயிரும் போற்றினேன்**
**அறை இருங் கழலவன் காணும் ஆசையால்"** *(சு. 5237)*

இராமனைக் காணும் ஆசையால், உயிர் தாங்கி வாழும் என்னை நாளையே அவன் மீட்டுச் சென்றாலும், அயோத்தி சென்றடைந்ததும் ஒரு சிக்கல் என் முன் நிற்குமே. அரக்கன் பாதுகாவலில் பலநாள் இருந்த என்னைத் தூய்மை கெடாதவள் என்று நம்பி, இராமன் என்னைத் தீண்ட முன் வருவானோ, மாட்டானோ என அடிமனத்தில் ஓர் அவலம் எழுகிறது.

## சமூக அச்சம்

இந்த அடிமன அவலம் மேலும் வளர்ந்து பூத உருக் கொள்கிறது. இராமன், ஒருநாள் வந்து சிறைமீட்டு அழைத்துச் சென்று, அரண்மனை வாயில் வந்ததும் என் பெண்மையை ஐயுற்று, நீ என் இல்லம் புகும் தகுதி உடையவள் இல்லை என்பானானால், அக்காலை நான்

www.saivamonline.com

என் கற்புடைமையை அவனுக்கு எவ்வாறு நிரூபித்துக் காட்ட இயலும் என்று பேரவலம் கொள்கிறாள். ஆண் ஆதிக்கச் சமூகத்தில் இந்த ஐயம் எல்லாப் பெண்களுக்கும் வரத்தக்கதே ஆகும்.

> **"அற்புதன் அரக்கர்தம் வருக்கம் ஆசு அற**
> **வில்பணி கொண்டு அருஞ் சிறையின் மீட்டநாள்**
> **இல்புகத் தக்கலை என்னில் யானுடைக்**
> **கற்பினை எப்பரிசு இழைத்துக் காட்டுகேன்."** *(சு. 5247)*

என்று ஐயுற்ற பேதை மனம் அவலத்தில் தவிக்கிறது. எந்தக் காட்சிகளை முன்னிறுத்தி, எவ்வளவு எடுத்துச் சொன்னாலும், என்னைக் கற்புடையவள் என்று அவன் ஏற்க மாட்டானோ என்ற சமூகஞ் சார்ந்த அச்சம் மேலெழுந்ததும், அவள் தற்கொலைக்கு முனைகிறாள். நல்ல வேளை மறைந்திருந்த அனுமன் அவளைக் காப்பாற்றுகிறான். கதை மேலே நடையிடுகிறது.

## ஓர் உரைகல்

தன் கற்பை உண்மை என்று எவ்வாறு இராமனை நம்ப வைப்பது என்று அவலமுற்றுக் கிடந்தவளுக்கு, இலங்கையில் ஓர் ஒளிக்கீற்றுக் கிடைக்கிறது. இராமன் உரைத்த தூது மொழிகளைச் சீதைபால் விடுத்து விடை பெற்ற அனுமன், இலங்கையைப் பேரழிவுக்கு உள்ளாக்குகின்றான். பெரிது முயன்று இறுதியில் இந்திர சித்தன் அவனைச் சிறைப்பிடித்து இராவணன் முன் நிறுத்துகிறான். நீண்ட வாக்குவாதங்களுக்குப் பின் இராவணன் அனுமன் வாலில் தீக் கொளுவக் கட்டளை இடுகிறான். அரக்கர் தீ வைக்கின்றனர். அரக்கர்கள் அனுமன் தண்டிக்கப் பட்டமைக் கேட்டு ஆரவாரித்தனர். சீதையிடமும், அனுமன் வாலில் தீக் கொளுவப்பட்டமையைக் கூறினர். கேட்ட சீதை;

www.saivamonline.com

**"............... உயிர் பதைத்தாள்**
**வேர்த்தாள், உலந்தாள், விம்மினாள், விழுந்தாள்,**
**அழுதாள், வெய்து உயிர்த்தாள்"** *(க. 5930)*

*என்று கம்பன் பதிவு செய்கிறான். அன்பு மனம் அவனைக் காக்கத் துடிக்கிறது. தன்னையே காத்துக் கொள்ள இயலாதாளுக்குத் திடீரென்று ஓர் ஒளி பிறக்கிறது. தீக் கடவுளை நினைக்கிறாள். அவனை மனத்தில் நினைத்து,*

**"நீயே உலகுக்கு ஒரு சான்று**
**நிற்கே தெரியும் கற்பு அதனில்**
**தூயேன் என்னின் தொழுகின்றேன்**
**எரியே அவனைச் சுடல்."** *(க. 5931)*

*என்று வேண்டுகோள் வைக்கிறாள். அவள் கற்பில் அனல் குளிர்கிறது. அனுமன் மகிழ்கிறான். சீதைக்கு ஒரு பற்றுக் கோடு வாய்க்கிறது. என் கற்பை உலகுக்குக் காட்ட உற்ற துணை இந்தத் தீக்கடவுள் என்று உறுதி பூண்கிறாள். சீதையை உடன் இருந்து அறிந்தவன் என்பதனாலும், அனுமன் உரைத்த வார்த்தையினால் அவளை ஒருவாறு உணர்ந்தவன் என்பதனாலும், இராமன் அவளை மீட்கும் முன்னரே உள்ளத்தில் ஒரு முடிவுக்கு வந்திருக்க வேண்டும் என்று கருத முடிகிறது.*

## மனித மனம்

*மனித மனத்தைப் போல் உற்ற ஒரு துணையும் இல்லை; மிகப் பெரிய பகையும் வேறு இல்லை. "உள்ளத்து அனையது உயர்வு" என்றும், "தன்னெஞ்சறிவது பொய்யற்க" என்றும், "உள்ளத்தால் பொய்யாது ஒழுகின்" என்றும், "உள்ளுவது எல்லாம் உயர்வுள்ளல்" என்றும் உள்ளத்தைப் பற்றி வள்ளுவனும் பலவாறு எடுத்துரைப்பான். சீதை உள்ளத்தில் ஒரு குற்ற உணர்வு குடிபுகுந்து விட்டது. குற்றமற்றவள் என்று நாட்ட அவளுக்குச் சாட்சிகள் யாரும் இல்லை.*

www.saivamonline.com

வெற்றி பெற்றுச் சீதையை மீட்டபின் இராமன் பெருந் தகவுடன் என் மனைவி கற்பரசியே என்று ஏற்றுக் கொள் கிறான். இலங்கைச் சமூகமும், அயோத்தி சமூகமும் நெஞ்சார அவளைக் கற்பரசி என்று ஏற்றுக் கொள்கிறது. அப்போதும் சீதை மனம் மகிழ்ச்சி கொள்ளுமா என்றால் இல்லை. அடிமனத்தில் புகுந்துகொண்ட குற்ற உணர்வை, அவளாகத் தோண்டி எடுத்துத் தூர வீசினால் உண்டே தவிர, பிறரால் ஒருகாலும் அடிமன அவலத்தை மாற்ற இயலாது. பேரறிஞனும் பெரும் பண்பினனுமாகிய இராமனுக்கு இது புரிந்திருக்கிறது.

**நாடகக் காட்சி**

சீதை அனுமனுக்கு ஆபத்து என்று அறிந்து அதிர்ச்சி உற்ற நேரத்திலேயே, அவனைக் காக்கத் தன் கற்பை முன்னிறுத்தித் தீக்கடவுளை ஏவல் கொண்டாள். மீட்சிப் படலத்தில் தன்னருகில் வரும் வரை, அவளை ஆதரவுடன் பார்த்தவன் திடீரென்று கடும்மொழிகளால் ஏசத்தொடங்கி, நீ கற்புக் குறைபாடு உடையவள் என்று அவளை ஆவேசப் படுத்துகிறான். முன் என் கற்பினை எப்படி நிலைநாட்டு வேன் என்று அஞ்சிக் கிடந்தாளுக்கு, அனுமனைக் காத்த அனுபவம் கை கொடுக்கிறது. தீக்கடவுளைத் துணைக்கு அழைக்கத் துணிந்து இலக்குவனிடம், தீ மூட்ட வேண்டு கிறாள். தான் நினைந்தவாறு காட்சிகள் அரங்கேறுவதை அறிந்த இராமன் தீ மூட்டுமாறு இலக்குவனுக்குச் சாடை காட்டி, இசைவளிக்கிறான். சீதை தீப்புகுந்து, குற்றமற்ற வளாய் வெளிவருகிறாள். மேலும், இராமன் தீக்கடவுளைக் குற்றம் சாட்ட, சீதை எதிரிலேயே உலகவர் கேட்கத் தீக் கடவுள் இவள் குற்றமற்ற கற்பினள் என்று பறைசாற்று கிறான். நாடகக் காட்சி நிறைகிறது.

இதுகாறும் அவலம் கொண்டு அரற்றிய சீதை தீக்கடவுள் சான்று கூறியவுடன் பேச்சொழிகிறாள்.

www.saivamonline.com

தான் கற்புடையவள் என அவள் தன்னை நிலை நாட்டிக் கொள்ள, சோதனைக் களமாகத் தீ மூட்ட அவளே உரைத்தாளே அன்றித் தீப்புக எவ்விதக் குறிப்பையும் இராமன் முன் வைக்கவில்லை.

## உளவியல் அணுகுமுறை

எனவே, சீதை, தனக்குத்தானே, தன்னைத் தூயவள் என்று உலகத்துக்குக் காட்டுவதை விட, உள்ளத்தால் சலனமற்று உணரவும், அவள் அடிமன அவலத்திலிருந்து அவள் விரும்பும் ஒரு தீர்வை முன்னிறுத்தி விடுபடவும், இராமனும், இலக்குவனும் திட்டமிட்டு நடத்திய நாடகத்தின் ஒரு காட்சிதான் இந்தத் தீச்சோதனை என்பது தெளி வாகிறது. எனவே, இராமனின் ஏச்சுரை யாவும், ஒரு தீர்வை நோக்கித் தானே செல்வதற்கு அமைக்கப்பட்ட நாடக உரை யாடல்களாகவே நிற்கின்றன. பெண்ணைப் புறச்சிறையி லிருந்து இராமன் மீட்டான். கவிச்சக்கரவர்த்தி கம்பனோ அடிமன அவலச் சிறையிலிருந்தும் அவளை மீட்டெடுத்துப் பெண்மைக்குப் பேரழகு சேர்க்கிறான். பெண்மை முகத்தில் குத்தப்பட்ட கரும்புள்ளியோ, இத் தீச்சோதனை என்று ஐயுற்று வெதும்பிய நமக்கு இது பெண்மைக்குக் கம்பன் தீட்டிய நெற்றித் திலகமாய் ஒளிர்வது தெரிகிறது. இராம காதையில் கரும்புள்ளிகள் போல் தோற்றம் தந்த பல பகுதி களை விரிவாக ஆய்வுக்கு உட்படுத்தி இனங்கண்ட நாம், கம்பன் பெண்மைக்குச் சூட்டிய புகழ் மகுடங்களை அடுத்த இயலில் ஆராயலாம்.

www.saivamonline.com

## 5. புகழ் மகுடங்கள்

### கம்பனின் நல்லெண்ணம்

"**கம்**பனில் பெண்ணியம்" குறித்த இந்த ஆய்வில் பெண்மை பற்றிய கம்பனின் மதிப்பீடுகளை முன் இயல்களில் முறையாக ஆய்ந்து தெளிந்தோம். வேதகாலம் முதல் கம்பன் வாழ்ந்த காலம் வரை பாரத சமுதாயத்திலும் சிறப்பாகத் தமிழ்ச் சமுதாயத்திலும் குறிப்பிட்டுச் சொல்லத் தக்க பெரிய உரிமைகள் எவற்றையும் பெண்கள் பெற்றிருக்கவில்லை என்பதை வரலாற்றுப் போக்கில் கண்டு தெளிய, "கம்பன் காலம் வரை – பெண்கள்" என்ற முதல் இயல் துணையாயிற்று. தங்கள் கணவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதில்கூட அவர்களுக்கு எந்த உரிமையும் வழங்கப் பட்டிருக்கவில்லை. கற்பனைக் கூறுகள் நிறைந்த அக இலக்கியச் சித்திரிப்புக்களிலும் கூட அவர்கள் உரிமை பெற்றிருந்ததாகப் புனைவுகள் இல்லை. இந்த அடிமை நிலையிலிருந்து பெண்மையை மீட்டெடுக்க வேண்டும் என்ற உண்மையான நல்லெண்ணம் கம்பனுக்கு இருந்தது.

### இராமன் கதை

பெண்களை வெறும் போகப் பொருளாகக் கருதிய, தான் வாழ்ந்த ஆணாதிக்கச் சமூகத்திற்கு எதிராகப் போர்க் கொடி உயர்த்தவும், நெறி திறம்பிய, காமஞ்சார்ந்த வாழ்விலிருந்து ஆடவர்களை மீட்டு நல்வழிப்படுத்தவும், ஒரு பெண் ஓர் ஆண் மகனோடு மட்டுமே வாழ வேண்டும்

www.saivamonline.com

அதுவே கற்புடைமை என்று கருதியிருந்த சமுதாயத்தில் ஓர் ஆண்மகனும், ஒரு பெண்ணுடன் மட்டுமே வாழ வேண்டும் என்ற உயர் நெறியை நிலைநாட்டவும் விரும்பிய கம்பன், இவற்றிற்காகவே இராமகாதையைத் தன் காப்பியக் கரு வாகத் தேர்வு செய்து கொண்டான் என்பதைக் "கம்பனின் கதைக் கரு" என்ற இரண்டாவது இயல் நிறுவிக்காட்டி நிறைந்தது.

## நடுநிலைப் பண்பு

பெண்மை பற்றிய சித்திரிப்பில், ஒருபால் கோடாத நடுநிலை எண்ணம் கொண்டிருந்தவன் கம்பன் என்பதை நிறுவிக் காட்ட மூன்றாவது இயலாகிய "ஒரு பாத்திரப் புனைவில் கம்பன்" என்ற இயல் முன் வைக்கப்பட்டது. நன்மையைச் சார்ந்து நின்ற நற்குண, நற்செய்கைகள் மிக்க சீதை போன்ற பாத்திரங்களையோ, தீமையைச் சார்ந்து நின்ற கீழ்மையும் கயமையும் உடைய சூர்ப்பணகை போன்ற பாத்திரங்களையோ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளாது, தீமையைச் சார்ந்து நின்ற நல்லியல்புகள் மிக்க மண்டோதரி பாத்திரப் புனைவில் கம்பனின் பெண்மை பற்றிய புனைவு கள் முற்றாகச் சீர்தூக்கி ஆராய்ந்து முன்னிறுத்தப்பட்டன.

## நெற்றித் திலகம்

கதை நடந்த காலத்தில் காப்பியப் பாத்திரங்களாலும், கதை புனையப்பட்ட காலத்தில் கவிஞனாலும் பெண்மை காயப்படுத்தப்பட்டுள்ளதா என்ற ஆய்வு மூன்றாவதாகக் "கரும்புள்ளிகள்" என்ற தலைப்பில் விரிவாக மேற் கொள்ளப்பட்டது. கம்பனே பெண்மையை இழித்துரைக்க நேர்ந்தமைக்கான பின்புலம், கைகேயி பாத்திரப் படைப்பின் மேல் பிற பாத்திரங்களால் வீசப்பட்ட இழிப்புரைகள், சீதையைத் தீப்புக வைத்த இராமனின் ஏச்சுரைகள் எல்லாம் பெண்மை முகத்தில் இடப்பட்ட கரும்புள்ளிகளாக நின்றன.

www.saivamonline.com

கைகேயியின் செயல்கள் சராசரி மனிதர்களின் மதிப்பீடு களைக் கடந்த உள்நோக்குடையன என்பதை நிறுவிக்காட்டி அவளைத் தெய்வமாக நம் முன் நிறுத்திய போதும், இராமன் நிகழ்த்திய தீச்சோதனை, சீதை அடிமன அவலத்தை துடைத்தெறிய வேண்டி, அவன் நிகழ்த்திய திட்டமிட்ட நல்லெண்ண நாடகம் என்பதை நிறுவிக்காட்டிய போதும், கம்பனின் கை வண்ணத்தில் கரும்புள்ளிகள் நெற்றித் திலகமாய் அழகு பெற்றமை நம்மை வியப்பில் ஆழ்த்தின. தீமையே வடிவான சூர்ப்பணகை பாத்திரத்தை நியாயப் படுத்தாத கம்பனின் நல்லெண்ணம், கவிஞன் மீது நம்பிக்கையை மிகுத்தது.

## முதல் குரல்

நிரலே இவற்றைக் கண்டு தெரிந்தபின் கம்பன் பெண்மைக்குச் சூட்டியுள்ள புகழ் மகுடங்களை இவ்வியலில் விரிவாகக் கண்டு மகிழலாம். இராமகாதை காலத்தாலும், தேயத்தாலும், தமிழ் மண்ணின் மரபுகளோடு முற்றாக ஒன்றி வாராதது என்றாலும், இயன்றவரை தமிழ் மண்ணின் மரபுகளுக்கு ஏற்பக் கதையில் சிறு சிறு மாற்றங்களைச் செய்து கொண்டு கம்பன் கதை நடத்தியிருப்பதை மூலக் கதையோடு கம்பனை ஒப்பிட்டுப் பார்க்க வல்லவர்களால் மட்டுமே உணர இயலும். கம்பன் நிகழ்த்திய கதை மாற்றங்கள் பலவும் பெண்மைக்கு ஏற்றம் தரவே என்பது நினைவுகூரத் தக்கது. பாராட்டு மொழிகளாலும், சிறு சிறு குறிப்புக் களாலும், கதைப் போக்கில் நிகழும் சம்பவங்களின் மேல் பெண்மைக்கு அழகு சேர்க்கும் களங்கள் பலவற்றை அமைத் துக் கொண்டதன் வாயிலாகவும் கம்பன் பெண்மைக்குச் சூட்டியிருக்கும் புகழ் மகுடங்கள் ஏராளம். இந்த ஆய்வை முற்றாக நிறைவு செய்யும்போது, தமிழ் இலக்கியத் தடத்தில் பெண் விடுதலைக்கு முதல் குரல் கொடுத்த பெருமை கம்பனைச் சென்றடைதலை உணர முடிகிறது. அறிவும்,

www.saivamonline.com

ஆண்களுக்கு நிகரான ஆற்றலும் மிக்க பெண்மை உருவாக வேண்டும் என்பதில் கம்பன் கொண்டிருந்த பேரார்வம், நம்மை வணங்க வைக்கிறது.

## விரும்பிய சமூகம்

பெருங்காப்பியங்களில், காப்பியத் தலைவன் பிறந்த நாடு மற்றும், நகரங்களைப் புனைந்துரைப்பது மரபாக இருந்து வருகிறது. நாட்டு வளங்களில் இயற்கை எழில்களையும், நகர வளத்தில் மாடமாளிகைகளின் எழில்களையும் விரிவாகவே கவிஞர்கள் புனைந்துரைப்பர். கம்பனும் இவற்றை எல்லாம் புனைந்துரைத்தான் என்றாலும், தான் வாழும் சமுதாயமும், மக்களும் எத்தகைய எழுச்சியையும் உயர்ச்சியையும் பெற வேண்டும் என்ற தன் நல்லெண்ணங் களையும், எதிர்பார்ப்புக்களையும் பதிவு செய்ய நாட்டு நகரப் படலங்களைக் கம்பன் கூடுதலாகப் பயன்படுத்திக் கொண் டுள்ளான், தான் காண விரும்பிய உன்னதமான ஒரு சமூக அமைப்பை, தன் புனைவுகளில், இருப்பதாகக் காட்டி மகிழ்ந்த பெரிய மனம் கொண்டவன் கம்பன். இந்த நல் லெண்ணப் புனைவுகளில் அறிவு சார்ந்த, உரிமை நிறைந்த பெண்மையையும் அவன் இனங்காட்டத் தவறவில்லை.

## இரப்பார் இலாத நாடு

தயரதன் ஆளும் நாடு கோசலம். அதன் தலைநகர் அயோத்தி. இந்நகரத்தைக் காவல் செய்யவோ, மக்களுக்குப் பாதுகாப்புத் தருவதற்கோ அங்கே காவலர்களே இல்லை. ஏன் என்றால், அந்நகரில் கள்வர் எவரும் இல்லை. அதே போல் தயரதன் ஆளும் நாட்டில் கொடைவளம் கொண்டவர் எவரும் இல்லை. காரணம், கொடையைப் பெற்றுக் கொள்வார் எவரும் அயோத்தியில் இல்லை.

**"கள்வார் இலாமைப் பொருள் காவலும் இல்லை யாதும்**
**கொள்வார் இலாமைக் கொடுப் பார்களும் இல்லை..."** *(க. 165)*

www.saivamonline.com

என்று கம்பன் தான் காணவிரும்பும் ஓர் உயர்ந்த நகரத்தை அயோத்தி வருணனையில் இனங்காட்டுகிறான். கள்வரும், யாசிப்பவரும் இல்லாத நாடு ஒன்று, நாகரிகம் முதிர்ந்து விட்டதாகக் கருதப்படும் இன்றுவரை உலகில் தோன்ற வில்லை. இருந்தும் கம்பன் பெருமனம் கொண்டிருத்தலைக் காண முடிகிறது.

## எல்லோர்க்கும் கல்வி

"கல்வி கரையில; கற்பவர் நாள்சில" என்பதால் கல்வியில் முழுநிறைவு கண்டவர் எவரும் உலகில் இலர். அயோத்தியிலும் இதே நிலை. கல்வி முற்றும் கற்றவர் அயோத்தியில் இலர் என்று குறிப்பிட்டுச் சொல்லும் நிலை இல்லை. ஏன் என்றால், கல்லாதவர்கள் என்பவர்கள் எவருமே அந்நகரில் இருக்கவில்லை. செல்வர்கள் சிலர்; ஏழைகள் பலர் என்ற நிலையும் அயோத்தியில் இல்லை. காரணம், அந்நகரத்தில் வாழ்வார் அனைவரும் எல்லா விதமான செல்வ வளங்களையும் பெற்று வாழ்கின்றனர். சான்றோர் பெரிது முயன்றும் கல்வியும் செல்வமும் மனித குலம் முழுமைக்கும் இன்றுவரை சென்று சேரவில்லை. இந்நிலையில் கம்பன் நல்லெண்ணக் கற்பனையிலாவது அப்படி ஒரு நாடு இருந்திருப்பதாகக் காட்டுவது மகிழ்ச்சி தருகிறது.

> **"கல்லாது நிற்பார் பிறர் இன்மையின் கல்வி முற்ற**
> **வல்லாரும் இல்லை; அவை வல்லர் அல்லாரும் இல்லை.**
> **எல்லாரும் எல்லாப் பெருஞ் செல்வமும் எய்த லாலே**
> **இல்லாரும் இல்லை உடையார் களும் இல்லை..."** *(க. 166)*

என்ற புனைவு நமக்கு நம்பிக்கை ஊட்டி நிற்கிறது.

## கல்விச் சிறப்பு

கல்வியின் இன்றியமையாமையை நம் முன்னோர் நன்கு உணர்ந்திருந்தனர். குல வேறுபாடுகளால் நிலவியிருந்த

www.saivamonline.com

சமூக ஏற்றத் தாழ்வுகள் கூடக் கல்வியால் அகலும் என்ற நம்பிக்கை, கடைச்சங்க காலப் புற இலக்கியங்களில் ஊன்றப் பட்டுள்ளது. "கீழ்ப்பால் ஒருவன் கற்பின், மேற்பால் ஒருவ னும் அவன் கண்படுமே" என்றும், கற்றோர்க்கு "எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே" என்றும், "அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்" என்றும் கல்வியின் சிறப்புரைக்கும் இலக்கியத் தொடர்கள் பல உள்ளன. வள்ளுவரும், நாலடியார் பாடியோரும் கல்விச் சிறப்பையும், கல்லாமை யின் இழிவையும் விரிவாக எடுத்துரைத்தனர். இலக்கியத் துறையிலும், சமயத் துறையிலும் அறிவு நிரம்பிய மகளிர் மிகச் சிலர் வாழ்ந்திருந்த போதும், பெண்கள் கல்வியறிவு பெற்றுச் சிறக்க வேண்டும் என்று உரத்த குரல் எடுத்து அன்னார் பேசியதாகத் தெரியவில்லை. பொருட்பாலில் இடம் பெற்றிருப்பதால், கல்வி அரசர்க்கே உரியது, என்று திருக்குறளுக்கு உரை கண்டாரும் உளர். "கேட்டதாய்" என்ற குறள் தொடருக்குப், பெண் தானே உணரும் அறிவாற்றல் இலாதவள் என்றே பலர் உரை கூறி மகிழ்ந்தனர். கற்பனை யில், தான் காண விழைந்த நாட்டில், கம்பன் பெண் கல்விக்குக் குரல் கொடுத்துச் சமூகத்தின் விழிகளைத் திறக்கிறான்.

## பெண் கல்வி முதற்குரல்

நகரப் படலத்தில் "கல்லாது நிற்பார் பிறர் இன்மை யின்" என்ற பதிவால், அந்நகரத்தில் கல்லாதவர்கள் எவரும் இலர்; அனைவரும் கற்றவர்களே என்பது தெளிவாகிறது. எனவே, ஆண் பெண் என்ற பேதம் இல்லாது அனைவரும் கற்றறிந்தவர்களாக இருக்க வேண்டும் என்று விரும்பிய கம்பனின் நல்லெண்ணம் இங்கே வெளிப்படுகிறது. சிலர், "கல்லாது நிற்பார்" என்ற தொடருக்கு இது அந்நகரில் வாழும் ஆண்களை மட்டுமே குறித்து வந்தது என்று

www.saivamonline.com

வாதிடக் கூடும் என்று அஞ்சியே கம்பன், வெளிப்படையாகவே கவிஞன் நாட்டுப் படலத்துள்,

"பெருந் தடங்கண் பிறை நுதலார்க்கு எலாம்
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க்கு ஈதலும் வைகலும்
விருந்தும் அன்றி விளைவன யாவையே" (க. 67)

என்று தெளிவுபடப் பெண்கல்வியைப் பதிவு செய்து வைக்கிறான். "பிறை நுதலார்க்கு எலாம்" என்பதன் வழி, பெண்கள் எல்லாருக்கும் கல்வி நிரம்பியிருந்தமை பேசுகிறான். கல்வியோடு சொத்துரிமையிலும் அவர்கள் உரிய பங்கு பெற்றிருந்தமையை, அல்லது உரிமை பெற வேண்டும் என்பதைக் கம்பன், "பொருந்து செல்வமும்" என்ற தொடரால் நிலை நாட்டுகிறான். பின்வரும் "எல்லாரும் எல்லாப் பெருஞ் செல்வமும் எய்தலாலே" என்ற தொடரும் இதற்கு அரண் சேர்த்து நிற்கிறது.

## ஒரு சிறு குறை

தான் காண விரும்பிய நாட்டில், பெண்கள் யாவரும் கல்வி கற்றவர்களாகத் திகழ வேண்டும் என்று விரும்பிய கம்பன், தான் புனையும் பாத்திரங்களில் பெண்மை அறிவு பெற்றுத் திகழ்ந்ததற்கான அடையாளங்களைப் பெய்து வைத்துள்ளானா என்று தேடுகிறோம். காப்பியத்தின் நேர் முனைப் பெண் பாத்திரமான சீதை புனைவில், ஒரு சிறு குறை இருப்பது போல் ஓர் இடம் தோற்றம் தருகிறது. சுந்தர காண்டம், காட்சிப் படலத்தில், துயருற்றிருந்த சீதையைத் திரிசடை தேற்ற முற்படுகிறாள். அக்காலை சீதைக்கு விரைவில் நன்மைகள் வந்து சேரவுள்ளன என்பதைக் குறிப்பால் உணர்த்தும் தான் கண்ட கனவுகளையும், அவற்றால் விளையப் போகும் பயன்களையும் திரிசடை எடுத்து உரைக்கிறாள். "திருமகள், ஆயிரம் திரியிட்டு ஏற்றப்பட்ட

www.saivamonline.com

விளக்கு ஒன்றைக் கைகளில் ஏந்தியவாறு இராவணன் இல்லத்திலிருந்து வெளிப்பட்டு என் தந்தை வீடணன் அரண்மனையில் நுழைவதாக ஒரு கனவு இறுதியாக அமைந்தது" என்று கூறினாள். கேட்ட சீதை, மேலும் கண்ட கனவுகளை விளக்குமாறு ஆர்வத்துடன் திரிசடையிடம் வினவுகிறாள். 'முன் சொன்ன கனவு என்னுள் விரிந்த நேரத்தில் நீ என்னைத் துயில் எழுப்பி விட்டதால், மேலும் கனவுகள் காணும் வாய்ப்பு இல்லாது போயிற்று' என்றாள் திரிசடை. அறிவு நிரம்பாத சிறுமகள் போலச் சீதை, திரிசடையை நோக்கி, "நீ போய் மீண்டும் படுத்துறங்கி மீதிக் கனவுகளையும் கண்டு சொல்" என்று வேண்டுகிறாள்.

> **"அன்னையே அதன்குறை காண்என்று ஆயிழை**
> **இன்னமும் துயில்கஎன இருகை கூப்பினாள்."** *(க. 5121)*

என்பன கம்பன் பதிவு செய்யும், சீதையின் பேதமை உணர்த்தும் தொடர்கள்.

## அறியாமையில் கிளைத்த அறிவு

சனகன் திருமகளும், காகுத்தன் மனைவியுமாகிய இலக்குமி எனப்படும் சீதைக்கு இதுகூடவா தெரிந்திருக்காது. விடுபட்ட கனவின் தொடர்ச்சியை, மீண்டும் உறங்கிக் காண இயலும் என்று கருதும் பேதைமை படைத்தவளா அவள்? இவளைக் கல்வியும், அதனால் கூர்தீட்டப் பெற்ற அறிவும் உடையவள் என்று எவ்வாறு ஏற்க இயலும் என்ற வினா நம்மில் சிலருக்கு எழுதல் கூடும். பெண்மைக்கு என்று பல மெல்லிய குணங்களையும், தனி இயல்புகளையும் இறைவன் படைத்துள்ளான். அவற்றுள் மடம் என்பதும் ஒன்று. உரையாசிரியர் இதற்குக் "கொளுத்தக் கொண்டு, கொண்டது விடாமை" என்று இயல்புரைத்தனர். புரியுமாறு விளக்க வேண்டுமானால் அது ஒருவகை அறியாமை. அறியாமைக் குணம் அறிவுடைமைக்கு எதிரானதல்லவா

www.saivamonline.com

என்றால், எல்லாரும் எல்லாம் அறிந்திருக்க வேண்டும் என்ற நியதி ஒன்றும் இல்லை. அது இயல்வதும் அன்று. பாண்டிய மன்னனோடு வாக்குவாதம் நிகழ்த்தித் தன் கணவன் குற்றமற்றவன் என்பதை நிறுவி, தெய்வங்களை எல்லாம் ஏவல் கொண்டவள் கண்ணகி. அவளே, தன் கணவனுடன் மதுரை நோக்கிப் புறப்பட்டு, பூம்புகார் எல்லைக் கடவாமுன் கணவனை நோக்கி, "மதுரை மூதூர் வந்து விட்டதா?" என்று வினவும் போது, அறியாமையின் ஊடே ஓர் அழகு மிளிர்வதைக் காண முடிகிறது. மேலும், துன்பத்தின் உச்சி யில் நின்று விடிவு பிறக்காதா என்று ஏங்கி நிற்கும் பெண்மணியின் பேதலிப்பு என்பதை உணரும்போது சீதை கூற்று அறியாமை என்று ஆகாது. இந்த அழகைச் சித்திரிக்கும் ஏராளமான சான்றுகள் தமிழ் இலக்கியங்களில் உண்டு. நுண்ணிதின் உணர்வார்க்கு மட்டுமே, பேதைமை ஊடே ஓர் அறிவும் அழகும் உண்டு என்பது தெரியவரும். எனவே, கம்பன் இந்நிலைக்களத்தில் பெண்மையை அறிவுக் குறைபாடு உடையதாகப் படைத்து விட்டான் என்ற குற்றச் சாட்டு வலியிழந்து விடுகிறது.

## அறிவில் தங்கிய அறியாமை

சீதையின் அறிவு நிறைந்த பெண்மை வெளிப்பாட்டை முழுமையாக நிறுவுவதற்கு மேலும் பல களங்கள் கம்பனுக்குத் துணையாக அமைகின்றன. தற்கொலைக்கு முயலும் அளவு, கற்பினைக் காத்துக்கொள்ள வேறு வழியில்லை என்ற நிலை அடைகிறாள் சீதை. அக்காலை மறைந்திருந்த அனுமன் அவள் முன் தோன்றி இராமதூதன் நான் என்று அறிமுகம் செய்து கொண்டு, அவள் நம்பிக்கை யையும், உயிரையும் மீண்டும் தளிர்க்கச் செய்கிறான். அனுமன் வழங்கிய இராமன் கணையாழியை ஏற்றுத் துயர் தீர்க்கிறாள் சீதை. அனுமன் அவள் தேறுமாறு அறிவு

www.saivamonline.com

நிரம்பிய நம்பிக்கை மொழிகளை அவளிடம் தெரிவிக்கிறான். இறுதியில் அறிவே வடிவான அனுமன் உணர்ச்சி வயப்பட்டு, சீதையைத் தானே மீட்டு இராமன் முன் நிறுத்த வேண்டும் என்று கருதுகிறான். சீதையை நோக்கி, "அன்னையே என் தோள் மேல் விரைந்து ஏறுங்கள்; ஒரு நொடியில் இராமன் முன் தங்களைக் கொண்டு போய்ச் சேர்க்கின்றேன்" என்று விண்ணப்பிக்கிறான்.

## சீதையின் நயவுரைகள்

ஆயிரம் துன்பங்களில் உழன்று, மாற்றான் சிறையிலிருந்து விடுபட்டு, எங்ஙனமாயினும் தன் கணவனைச் சென்று சேர்தல் வேண்டும் என்று துடித்து நிற்பவள் சீதை. அனுமன் வேண்டிய நிலை, சிறை மீளும் அரிய வாய்ப்பு. அதை எளிதில் நிறைவேற்றும் ஆற்றல் அவனுக்கு உண்டு என்பதையும் அவள் அறிந்திருந்தாள். என்றாலும், சோகத்தின் இடையே உணர்ச்சி மீதூர்ந்த நிலையிலும் பெண்மை அறிவில் தலைநிற்கும் வல்லமை உடையது என்பதை நிறுவக் கம்பன் இக்களத்தைப் பயன்படுத்திக் கொள்கிறான். சீதை அனுமன் உரை கேட்டு, தாய் முன் நிற்கும் கன்று போன்ற அன்புடையானை நோக்கி, அனுமனே,

> **'அரியது அன்று நின் ஆற்றலுக்கு ஏற்றதே**
> **தெரிய எண்ணினை செய்வதும் செய்தியே.'** *(க. 5356)*

என்று பேசி அவன் அன்பினையும், ஆற்றலையும் இசைத்து மகிழ்கிறாள். அனுமன் அறிவின் ஊடே பேதைமை தங்கும் நேரத்தில், பெண்ணின் பேதைமையிலிருந்து அறிவு புறப்பட்டு மேல் எழுதலைக் கம்பன் இனம் காட்டுகிறான். நீ விரும்பியவாறு உன் தோள் மேல் ஏறி, இலங்கையிலிருந்து மீளுதல் உரிய செயல் அன்று என்று என் அறிவு எடுத்து உரைக்கிறது என்று பேசுகிறாள்.

www.saivamonline.com

**“உரியது அன்று என ஓர்கின்றது உண்டு அது என்**
**பெரிய பேதைமைச் சில்மதிப் பெண்மையால்”** *(சு. 5356)*

என்ற கம்பன் வரிகள் அழகும் ஆழமும் நுட்பமும் செறிந்தனவாக அமைகின்றன. பெண் பெரும் பேதைமை உடையாள்; சிற்றறிவு படைத்தாள் என்று கருதுவாரைக் கம்பன் நகையாடுகிறான். பேரறிவு படைத்த ஆண்மகன் அனுமனுக்குப் பெரிய பேதைமையும், சிறிய அறிவும் படைத்த பெண்மை அறிவுரை கூறும் அழகில் கம்பன் அறிவு நிறைந்த பெண்மையை உயரத் தூக்கி நிறுத்துகிறான்.

## அனுபவ அறிவு

அறிவு என்பது எல்லா உயிரிலும் பிறப்பிலேயே அமைந்து கிடப்பது. கல்வி, அறிவைக் கூர் தீட்டும் ஒரு சாணைக்கல் போன்றது. அறிவின் கூர்மை கல்வியால் மட்டுமே அமையாது. துறை சார்ந்த அனுபவங்களாலும் சீர்மை பெறும். கல்வி கற்றும் உலகியல் கல்லாதாரை அறிவில்லாதவர் என்று வள்ளுவன் வேறுபடுத்திக் காட்டுவான். இராமன் அவலக் குரல் கேட்டு, இராமனுக்குத் தீங்கு செய்ய எவராலும் இயலாது என்ற அறிவு தலை சாய்ந்த நேரத்தில், உணர்வு மீதூரப் பதட்டத்துடன் செயல் பட்டு, இலக்குவனை இராமன் குரல் வந்த திசையில் வற்புறுத்திச் செலுத்தி, விலங்கிட்டுக் கொண்ட பெண்மை, அவ்வனுபவத்தால், மீதூர்ந்த அறிவால் நிதானமாகச் செயற் படுவதை இங்கே கம்பன் வேறு பிரித்துக் காட்டுகிறான். சீதையின் அறிவு வெளிப்பாட்டைத் தனித்தனியே மூன்று கோணங்களில் கம்பன் நிறுவிக் காட்டும் இடம் இது. இந்த அறிவுடைமை, சீதையின் அறிவுடைமையின் அடை யாளமாக மட்டும் அமையாமல் பெண் குலத்திற்கெல்லாம் கம்பன் வழங்கும் அறிவுக் கொடையாகவும் அமைந்து விடுகிறது.

www.saivamonline.com

## பெண்மையின் நல்லெண்ணம்

அனுமனே, நீ வேண்டியவாறு நான் உன் தோள்மீது ஏறிக் கொள்கிறேன். என்னைச் சுமந்து கொண்டு நீ விண்வழியில் கடலைத் தாண்டிப் பயணிக்கும் போது, அரக்கர்களுக்கு அது தெரிந்து போய், நின்மேல், கொடிய அம்புகளைச் செலுத்துவார்களானால் அப்போது நீ மிகவும் தடுமாறும் நிலை வந்து சேர்ந்து விடாதா? அக்காலை, நீ உன்னைக் காத்துக் கொள்வதோடு, என்னையும் காக்க வேண்டிய இடர்ப்பாடு வந்து சேருமே. எனவே, நின் வேண்டுகோளை ஏற்க இயலாதவளாக நான் இருக்கிறேன், என்று பேசும் சீதை உரைகளில், பின்விளையப் போவதை முன்னதாகவே உணரும் அறிவின் கூர்மை நிழலாடுகிறது. கம்பன் இதனை நயம் மிகுந்த சொற்களால்,

> **"வேலையின் இடையே வந்து வெய்யவர்**
> **கோலி நின்னொடும் வெஞ்சரம் கோத்த போது**
> **ஆலம் அன்னவர்க்கு அல்லை எற்கு அல்லையால்**
> **சாலவும் தடுமாறும் தனிமையோய்"** *(சு. 5357)*

என்று புனைகிறான். உதவ முன் வருபவர்களுக்கு, தனக்கு உதவுவதால் ஒரு துன்பம் வந்துவிடக் கூடாது என்று கருதும் பெண்மையின் நல்லெண்ணத்தையும் சீதை உரையில் காண முடிகிறது. தனிமையோய் என்ற குறிப்பில் என்னை மீட்கும் முயற்சி பலர் கூடியே அமையும் என்பதையும் கம்பன் குறிப்பிடுகிறான்.

## இராமாவதாரத் தத்துவம்

இரண்டாவதாகச் சீதை, அனுமனே, உன் தோள் மீது ஏறிய, என்னை நீ பத்திரமாக மீட்டு விடுவதாகவே வைத்துக் கொள். அப்போதும் குறைகள் வந்துசேரும். ஒன்று; இராவணனால் கவரப்பட்ட என்னை மீட்கும் ஆற்றலும் பொறுப்பும் என் கணவன் இராமனுக்கு உண்டு. அச்

www.saivamonline.com

*செயலை நீ நிகழ்த்துவாயானால், மனைவியை மீட்க இயலாதவன் என்ற தாழ்வு அமைவதோடு, இராமன் வில்லுக்கும் பழி வந்து சேரும். இரண்டாவதாக; இச் செயலால் உனக்குப் பழி வந்து சேர்ந்துவிடுமோ என்று அஞ்சுகிறேன். யாரும் அருகில் இல்லாத நேரத்தில் வஞ்சித்து என்னைச் சிறை எடுத்த கீழ்மை உடையவன் இராவணன். அவன் சிறையிலிருந்து, யாரும் அற்ற நேரத்தில், நீ என்னை மீட்க முனைந்தால் இராவணன் செய்த பிழையையே நீயும் செய்ததாக ஆகி விடாதா? அச்செயல் பிறரை வஞ்சித்து அபகரிக்கும் நாயின் கீழ்மைச் செயல் அல்லவா? எனவே, இம்முயற்சியைக் கைவிடுக என அறிவு நிரம்பிய அன்பு மொழி புகல்கிறாள் சீதை. விளைவுகளின் வெற்றியை விடச் செயல்கள் நேரிதாக இருக்க வேண்டும் என்ற இராமாவதார அடிப்படைத் தத்துவம் இங்கே நிழலாடக் காண்கிறோம்.*

**'அன்றியும் பிறிது உள்ளது ஒன்று ஆரியன்**
**வென்றி வெஞ் சிலை மாசுணும் வேறு இனி**
**நன்றி என் பதம் வஞ்சித்த நாய்களின்**
**நின்ற வஞ்சனை நீயும் நினைத்தியோ?'** *(சு. 5358)*

*என்பது கம்பன் சித்திரிப்பு. "வஞ்சித்த நாய்களின்" என்ற தொடரால் சீதை ஆத்திரம் கொண்டிருப்பதைக் காட்டி, அக்காலையும் அறிவு தடுமாறாத சீதையின் பெருங்குணத்தைக் கம்பன் அறிய வைக்கிறான்.*

## நயம் மிக்க அணுகுமுறை

*சீதை மூன்றாவதாகக் கூறும் மறுப்புரை பெண்மை சான்ற பெருமிதம் மிக்கதாக அமைகிறது. அனுமனே, பார்வையில் நீ ஒரு குழந்தையாகவே திகழ்கிறாய். நீயும் என்னைத் தாய் எனக் கருதும் பண்பினன். அதனால் நான் மேலும், கூற வேண்டுவது ஒன்றுண்டு. நாளும் நாளும் வளர்ந்தோங்கும் வீரம் மிக்க என் கணவன் மேனியை*

www.saivamonline.com

மட்டுமே தீண்டிய யான், உலகத்தார் பார்வையில் ஐம்பொறி களும் வளர்ச்சி பெற்ற ஓர் ஆண்மகனாகத் திகழும் உன் மேனி தீண்டக் கூசுகின்றேன். சீதையின் உரைகளில் காணப்படும் அறிவுடைமையும், சமூகம் சார்ந்த பெண்மைப் பண்பாடும், நயம் மிக்க அணுகுமுறையும் பெண்மைக்குச் சிறப்புச் சேர்ப்பனவாக அமைகின்றன. "தோள் மேல் ஏறுக" என்று அனுமன் வேண்டிய உடன் சீதை நெஞ்சில் பெண்மை பற்றிய இவ்வெண்ணமே முதலில் தோன்றி யிருக்க வேண்டும். இதனை முன்னதாகச் சீதை கூறியிருந் தால் அனுமன் நெஞ்சம் குலைந்திருப்பான். எனவே, எஞ்சிய இரு செய்திகளைச் செவிமடுக்கும் விருப்பம் குறைந்து போயிருக்கும். எனவே உளவியல் சார்ந்த சீதை மறுப்புரை கள் அறிவு நிரம்பிய பெண்மைச் சித்திரிப்பாகக் கம்பனில் துலங்கக் காண்கிறோம்.

**"வேறும் உண்டு உரை அது கேள் மெய்ம்மையோய்**
**ஏறு சேவகன் மேனி அல்லால் இடை**
**ஆறும் ஐம்பொறி நின்னையும் ஆண் எனக்**
**கூறும் இவ்வுருவத் தீண்டுதல் கூடுமோ"** *(க. 5363)*

சீதையின் மூன்றாவது மறுப்புரையாகக் கம்பன் பதிவு செய்யும் அரிய பாடல் இது.

## பண்பெனப்படுவது

தமிழில் பண்பு என்று ஓர் அரிய சொல் உண்டு. இதற்குக் கலித்தொகை என்ற கடைச்சங்ககால இலக்கியம், "பாடு அறிந்து ஒழுகுதல்" என்று பொருள் விரிக்கிறது. பாடு என்ற சொல் பெருமை என்ற பொருள் தருவது. தொடர்புடைய இருவருக்கு இடையே புலப்பட்டுத் தோன்றும் இவ்வரிய ஒன்றை இனங்காண்பது எப்படி? தொடர்புடையார் தங்கள் தங்கள் பெருமை சிறுமைகளுக்குத் தகத் துலங்கும்போது பண்பு வெளிப்பட்டு அழகு பெறும்.

www.saivamonline.com

ஆசிரியன் வகுப்பறையில் உள்நுழையும் போது, மாணவன் எழுந்து நிற்கிறான். ஆசிரியன் அறைக்குள் தலைமை ஆசிரியர் நுழையும் போது ஆசிரியர் எழுந்து நிற்கிறார். எழுதல், அமர்தல்களில் பண்பாடு இல்லை. எதனை யார் எப்போது மேற்கொள்ளுதல் என்ற அறிவில் பண்பாடு சிறந்து நிற்கிறது. சமூக அமைப்பில் ஒரு மாற்றம் வரும்வரை கணவன் வருகையில் மனைவி எழுவது பண்பாடு. மனைவி வருகை கண்டு கணவன் எழுவது நகைப்பாய் முடிவது. படிந்து கிடக்கும் சமூக அமைப்பைச் சார்ந்த இச்செயல் களில் பெண் அடிமைத்தனம் நிலவுவதாக வாதிடுதல் பொருந்துவது அன்று.

## மாசென்று வீசினேன்

சமூகம் போற்றி வரும் நிகழ்காலப் பண்பாடு களைப் பதிவு செய்தல் கவிஞர் கடன். ஆண்கள் இயற்ற வேண்டுவன என்று சிலவற்றையும், பெண்களுக்கு உரியன என்று சிலவற்றையும் சமூகம் வரையறை செய்துள்ளது. அறிவு நிரம்பிய பெண்மை, ஆணுக்கு நிகரான ஆற்றல் கொண்டிருந்த போதும், அதனை அவன் செய்தலே தகுதி என்று பெருமிதத்துடன் கம்பன் அடையாளம் காட்டுகிறான். அனுமனே, தீமை வாழ்வு வாழும் இலங்கையை மட்டு மன்றி, அளவின்றி நீண்டு கிடக்கும் எல்லா உலகங்களை யும், கற்புத்திறம் கொண்ட என்னால் ஒரு சொல் கூறிச் சுட்டெரிக்க முடியும். அவ்வாறு செய்தல், என்னை இலங்கை யிலிருந்து மீட்கும் கடமை உடைய என் கணவன் இராமனின் வில்லாற்றலுக்கு இழுக்காக முடியுமே என்று நான் அமைதி காத்துள்ளேன் என்கிறாள் சீதை.

> **"செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க**
> **செய்யாமை யானும் கெடும்"** *(திரு. 466)*

என்பான் வள்ளுவன். அறிவு நிரம்பிய பெண்மை சமூகம் சார்ந்த மரபு காத்து நின்று பெருமிதம் கொள்கிறது.

www.saivamonline.com

"அல்லல் மாக்கள் இலங்கையது ஆகுமோ
எல்லை நீத்த உலகங்கள் யாவும் என்
சொல்லினால் சுடுவேன் அது தூயவன்
வில்லின் ஆற்றற்கு மாசு என்று வீசினேன்" *(க. 5362)*

என்ற கம்பன் வரிகளில் பெண்மையின் அறிவுச் சிறப்புப் பளிச்சிடக் காண்கிறோம்.

## உரிமைக் குரல்

பெண்மை, ஆணின் கட்டுப்பாட்டுள் நின்ற சமகாலத்திலும், பெண்ணை ஆணுக்கு அறிவுரை கூறும் ஆற்றல் உடையவளாக, அறிவு நிரம்பியவளாகக் கம்பன் காட்டத் தவறுவது இல்லை. முன் எடுத்துக் காட்டியவாறு, ஒருத்திக்கு ஒருவன் என்ற ஆடவர் கற்பை வற்புறுத்தும் பெண்ணாகச் சீதை முன் நிறுத்தப்படுகிறாள். திருவள்ளுவரின் காமத்துப் பால் சித்திரிப்புக்களில், நாடக வழக்காக இக்கருத்தை வள்ளுவர் முன்மொழிந்திருந்த போதும், அதை நடைமுறையில் ஒரு பாத்திரத்தின் கூற்றாக முன்னிறுத்தி, மெய்ம்மை சான்ற பெண்ணின் உயர்வுகளைக் கம்பனே முன் மொழிகின்றான். திருமாலின் பத்து அவதாரங்களில், வேறு வேறு அவதாரங்களில் அவன் பெண் உறவுகள் யாதாக இருந்தாலும், இராமாவதாரத்தில் ஒருத்திக்கு ஒருவனே என்பதைத் திருமால் உடன்பட்டிருக்கிறான். சீதையைக் கைப்பிடித்த திருமண காலத்தில் அவன் தனக்கு அளித்த உறுதிமொழியை மறவாது நினைவுகூர்ந்து, சீதை அனுமன் வழி இராமனுக்கு நினைவூட்ட முனைவது பெண்மைத் தடத்தில் புதிய முயற்சியாகவே அரும்புகிறது.

"வந்து எனைக் கரம் பற்றிய வைகல்வாய்
இந்த இப்பிறவிக்கு இருமாதரைச்
சிந்தையாலும் தொடேன் என்ற செவ்வரம்
தந்த வார்த்தை திருச் செவி சாற்றுவாய்" *(க. 5378)*

www.saivamonline.com

பணிவு கலந்த மென்மொழிகளாகச் சீதை கூற்றைக் கம்பன் புனைந்திருந்த போதும், ஆடவர் ஒழுக்கத்தை வற்புறுத்தும் பெண்மையின் உரிமைசார்ந்த அறிவு வெளிப்பாடாகவே இக்களம் அமைகிறது.

## இராவணன் மாயை

பெண்மையின் பேர் ஒழுக்கத்தையும், நுண் அறிவையும் கம்பன் தானே படைத்துக் கொண்ட மாயா சனகப் படலத்தில் அழகுறப் பதிவு செய்து வைத்துள்ளான், சீதையை அடையப் பலவாறு முயன்றும் இராவணனால் வெற்றி பெற இயலவில்லை. அக்காலை மகோதரனிடம் இராவணன் ஆலோசனை கலக்கிறான். மருத்தன் என்ற அரக்கனைச் சனகனாக உருமாற்றிச் சீதை முன் நிறுத்தி ஒரு நாடகம் நடத்த அவன் ஆலோசனை கூறுகிறான். அவ்வாறே செய்த இராவணன், மாயாசனகனைச் சீதை முன் நிறுத்துகிறான். உருவ ஒற்றுமை கண்டு, அவன் தன் தந்தையே என்று நினைக்கும் சீதை அவனைக் கண்டு பலபட அரற்றுகின்றாள். இராவணன் நிகழ்த்தும் திட்டமிட்ட வஞ்சகத்தால், மாயாசனகன் இராவணன் கருத்துக்கு இசையுமாறு சீதைக்கு அறிவுரை கூறுகிறான்.

**"இன்று இது நேராய் என்னின்**
**என்னை என் குலத்தினோடும்**
**கொன்றனை ஆதி"** *(க. 7692)*

என்றும்,

**"....... அமரர்க்கும் அரசன் ஆவான்**
**தேவியாய் இருத்தல் தீதோ"** *(க. 7693)*

என்றும் அவன் பேசும் உரைகளால், உணர்ச்சியில் சாம்பிக் கிடந்த பெண்மை விழிப்படைந்து அறிவில் தலை நிற்பதைக் கம்பன் இனிது இனங்காட்டுகிறான்.

www.saivamonline.com

## கிளர்ந்தெழும் பெண்மை

உலகியலில், எந்த ஒரு தந்தையும், திருமணமான தன் மகளை அயலான் ஒருவனுக்கு உடன்படுமாறு உரைக்க முன் வர மாட்டான். தோற்றத்தால் பெண்மையை ஏமாற்ற முயன்ற இராவணன், அவனைப் பேசவிட்டதன் வழி தான் ஏமாற்றம் அடைகிறான். அறிவு நிரம்பிய சீதை கைகளால் காதுகளைப் பொத்திக் கொள்கிறாள். உடல் வியர்க்கிறாள். உடல் தள்ளாடுகிறாள். பெருஞ்சினம் கொள்கிறாள். இப் பதட்டம் நிறைந்த சூழ்நிலையிலும் விழிப்படைந்த பெண்மை அறிவு நலத்தோடு,

**"இவ்வுரை எந்தை கூறான்**
**இன்னுயிர் வாழ்க்கை பேணி**
**செவ்வுரை அன்று இது"** *(க. 7695)*

என்று தெளிகிறாள். நீ என் தந்தை அல்லன். ஒரு வேளை அப்படியே இருந்தாலும், ஒருநாளும் உன் உரைக்கு நான் ஒருப்படமாட்டேன்.

**"நீயும் நின் கிளையும் மற்று**
**இந் நெடுநிலை வரைப்பும் நேரே**
**மாயினும் முறைமை குன்ற**
**வாழ்வெனோ வயிரத்திண் தோள்**
**ஆயிர நாமத்து ஆழி**
**அரியினுக்கு அடிமை செய்வேன்**
**நாயினை நோக்கு வேனோ**
**நாண் துறந்து ஆவி நச்சி."** *(க. 7698)*

என்று அருமொழிகள் பேசி, மாயாசனகன் கூற்றைப் புறந் தள்ளி, சீதை நிமிர்கிறாள். சோகமும், பதட்டமும் நிறைந்த நேரங்களிலும் பெண்ணால் அறிவுபூர்வமாகச் செயல்பட முடியும் என்பதையும், செயல்பட வேண்டும் என்பதையும் கம்பன் இங்கே நிலைநாட்டிச் சிறக்கிறான்.

www.saivamonline.com

## காதல் மணம் – ஒரு பார்வை

அறிவுடையவளாகப் பெண் சிறந்தால், தனக்கு உற்ற துணைவனைத் தேர்ந்து கொள்ளும் திறன் தானே அவளுக்கு அமையும். காலகாலமாகத் தனக்கு உரிய கொழுநனைத் தானே தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமையை, இந்தியச் சமுதாயமோ, தமிழ்ச் சமுதாயமோ பெண்மைக்கு வழங்க முன் வரவில்லை. பெற்றோர்கள் முடித்து வைக்கும் மரபு வழிப்பட்ட திருமணங்களையே பாதுகாவலானது என்றும், பெண்ணுக்கு நலம் பயப்பது என்றும் இன்றுவரை கூடச் சமூகம் நம்பியுள்ளது. இலக்கியச் சித்திரிப்புக்களைத் தவிர சமூக வாழ்வில் காதல் திருமணங்கள் பெருமளவில் நடைபெறும் சூழ்நிலை இன்று வரை உருவாகவில்லை. காதல் திருமணம் செய்து கொண்டவர்கள் கூட, தங்கள் பிள்ளைகள் காதலித்து மணம் கொள்வதில் பெரிதாக விருப்பம் காட்ட மறுக்கின்றனர். ஆழ்ந்த அன்பின் மேல் அமையாது, மேல் எழுந்த உணர்வில் காதல் திருமணங்கள் பலவும் அமைவதால், அவை பலவும் இடை முறிந்து இற்று விடுகின்றன. இந்த அனுபவம் கூட, காதல் திருமணங்களுக்கு ஒப்புதல் வழங்குவதில், சமூக நோக்கம் கொண்ட, கற்றறிந்தோர் பலருக்கும் தயக்கத்தை ஏற்படுத்துகின்றன.

## வரவேற்கத்தக்க முயற்சி

தோல்விகள் சிலவும், இடைமுறிவுகளும் ஆங்காங்கே நிகழினும், பெண்ணுரிமைகளை நிலைநாட்டுவதில் காதல் திருமணங்களுக்கே சமூகம் முன்னுரிமை தந்தாக வேண்டும். மகளிரும் இதில் ஊன்றி நின்று போராடும் மனம் கொண்டவர்களாகத் திகழ வேண்டும். அறிவு சார்ந்த பெண்மை, காதல் மனங்களில் தோற்றுவிடுவதற்கு வாய்ப்புக்கள் மிகவும் குறைவு. இன்று தமிழ்ச் சமுதாயத்தில் நிலவும்

www.saivamonline.com

மனோநிலை சிறிதும் இல்லாத காலத்திலேயே கம்பன், இராமன்—சீதை திருமணத்தைக் காதல் திருமணமாகக் காட்ட முயன்றுள்ள முயற்சி வரவேற்கத்தக்க ஒன்றாகும். மூல இலக்கியத்தில் இல்லாத காதல் களத்தைத் துணிந்து படைத்துக்கொண்டு, இராமனும் சீதையும் ஒருவரை ஒருவர் திருமணத்துக்கு முன்னரே கண்டு காதல் கொண்டனர் என்று காட்டுகிறான்.

## இலக்கியங்களின் வாழ்வு

சங்க இலக்கியப் பாடல் தொகையில் ஏறத்தாழ நான்கில் மூன்று பங்குப் பாடல்கள் அகத்திணை பற்றி எழுந்தன. முன்னரே குறித்துக்காட்டியது போல் தமிழர் அக இலக்கியக் காதல் மணம் ஒருவரை ஒருவர் விரும்பிக் கூடும் காந்தருவ மணத்தோடு ஒத்தது. சித்திரிப்புக்கள் பலவும் அவ்வாறே அமைந்தன. அகநானூறு, நற்றிணை, குறுந் தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, மற்றும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் சிலவற்றுள் வரும் குறிஞ்சித் திணை அழகொழுக உரிமை சான்ற காதல் மணங்களையே சித்திரிக் கின்றன. திருமணத்துக்கு முற்பட்ட உடல் உறவை என்றும், வாழ்க்கையில் தமிழர் சமுதாயம் அனுமதித்திருக்க வாய்ப்பே இல்லை, என்றாலும், சமூகம் அதை விரும்பியிருந்திருக்க வேண்டும். வாழ்க்கையில் கிடைக்காதவற்றை இலக்கியங்கள் சித்திரித்துக் காட்டுவதாலேயே அவை வாழ்வு பெற்று நிற்கின்றன. காதல் சித்திரிப்புக்களைப் பொருத்தவரை இலக்கியமும், வாழ்வும் ஒன்றோடு ஒன்று முரண்பட்டே நின்றன.

## கம்பனுக்கு முன் காதல் மணங்கள்

சமூக இலக்கியம் பாடவந்த இளங்கோவடிகள் இந்த முயற்சியில் ஈடுபட்டிருக்க வேண்டும். அவர் நினைத்திருந் தால், கோவலன், கண்ணகி திருமணத்தைக் காதல் திருமண

www.saivamonline.com

மாகக் காட்டியிருக்க முடியும். பெண்மைக்குப் பல உரிமை களை வழங்க வந்த அவராலேயே சமூகத்தில் ஒரு காதல் திருமணத்தைப் படைத்துத் தரக் கூடவில்லை. சமயம் சார்ந்த மனநிலை தடை பயந்திருக்கலாம். அல்லது நெடுநாள் கூடி வாழாது, இடையில் பிரிந்து, காமவாழ்வு மேற்கொண்ட கோவலன் செயற்பாடுகள் காரணமாக மலரினும் மெல்லிய தாகக் கருதப்படும் காதலை இளங்கோவடிகள் இத்தடத்தில் ஒளியூட்ட விரும்பாதிருக்கலாம். என்றாலும், சிலப்பதிகாரக் கானல்வரி பற்றி ஆய்ந்தோர் கோவலன், கண்ணகி திருமணமும் காதல் திருமணமே என்று தம் ஆசை பற்றி நிலைநாட்ட முயன்றுள்ளனர். அதை ஏற்பார் இல்லை. கோவலன் மாதவியை நாடிச் சென்றதில் ஒருதலையான அன்பே காணப்படுகிறது. முதல் மனைவி இருக்கவும், இரண்டாவது ஒருத்தியை நாடுவதில் காதல் கூறுகள் இருந்தாலும், அவற்றைக் காதல் மணங்கள் என்று ஏற்க இயலாது. வள்ளித் திருமணம் போன்ற தெய்வத் திருமணங் களுக்கு இதனால்தான் தத்துவ விளக்கம் தரவேண்டி வந்தது. கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டை ஒட்டிய பகுதியில் நிகழ்ந்த சுந்தரர், பரவையார் திருமணத்தைச் சேக்கிழார் காதல் சான்ற கலப்பு மணமாகச் சித்திரிப்பதற்கு முன்னாகவே கம்பன் இராமன் சீதை மணத்தில் காதலைப் பெய்து சமூகப் பெண்மைக்கு உரிமை சார்ந்த ஒளியூட்டி மகிழ்கிறான்.

## கம்பனுக்கு நன்றி

உண்மையில் இராமன் சீதை திருமணம் காந்தருவ மணத்தை ஒத்ததாக அமையவில்லை. அன்னோர் தனி யிடத்தில் சந்தித்துக் காதல் கொண்டதாகக் குறிப்புக்கள் இல்லை. மாறாக, சிவதனுசுவை நாணேற்றும் வீரன் ஒருவனுக்கே சீதை மாலையிடுவாள் என்று தந்தை

www.saivamonline.com

*அறிவிப்புச் செய்திருந்தான். பல தேயத்து மன்னர்கள் முயன்று தோற்றனர். அவர்களுள் ஒருவன் நாணேற்றி யிருந்தால், அவனுக்குத்தான் சீதை மாலை சூட்டியிருக்க வேண்டும். ஒருதலைக் காதலாகிய அசுர மணத்தின் சாயல் இத்தடத்தில் உண்டு என்று கம்பனுக்கு நன்றாகவே தெரியும். தெரிந்தும் சீதை இராமன் மணத்தைக் காதல் மணமாகக் காட்ட முயன்ற முதல் முயற்சியில் கம்பன் பெண்மைக்கு உரிமை வழங்கும் கருத்துடையவனாக இருந்தமை உறுதி யாகிறது. பெண்ணியச் சிந்தனையாளர்கள் கம்பனுக்கு நன்றி செலுத்தும் கடமை உடையவர்கள்.*

## அவளும் நோக்கினாள்

*பாலகாண்டம் மிதிலைக் காட்சிப் படலத்தை, சீதையின் மணம் காதல் மணமே என்பதை நிலைநாட்டப் பயன் கொள்கிறான் கம்பன். சனகன் அரண்மனை வளாகத்தில், சீதை தன் கன்னிமாடத்தின் மேல் முற்றத்தில் அழகோவிய மாக நிற்பதை நமக்கு முதன்முதல் காட்டுகின்றான். அவள் அழகில் "செஞ்சொல் கவி இன்பம்" நிறைந்திருப்பதாகக் கூறும் கவிநயம் மகிழ்ச்சி தருகிறது. ஆண் அன்னங்களும், பெண் அன்னங்களும் மகிழ்ந்து விளையாடும் காட்சி கண்டு மகிழ்ந்திருக்கும் நேரத்தில் வீதி வழி இராமன் வருகை அமைகிறது. கன்னி மாடத்தின் நிலா முற்றத்திலிருந்து கீழே பார்க்கும் பெண்மைப் பார்வையும், ஏறுநடையிட்டு நிமிர்ந்து வரும் ஆடவன் பார்வையும் எதிர்பாராது ஒன்றில் ஒன்று கலந்தன.*

**"எண்ணரும் நலத்தினாள் இனையள் நின்றுழி**
**கண்ணொடு கண்ணிணை கவ்வி ஒன்றை ஒன்று**
**உண்ணவும் நிலைபெறாது உணர்வும் ஒன்றிட**
**அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்."** *(க. 514)*

*கவ்வி என்றும் உண்ணவும் என்றும், உணர்வும் ஒன்றிட என்றும், வரும் கம்பனின் பதிவுகள் பெரிதும் அருமைப்பாடு*

www.saivamonline.com

உடையன. "நோக்குதல்" என்ற சொல் தமிழ்க் காதல் இலக்கியங்களில் காமம் கனிந்த பார்வை என்றே பொருள் தரும். முதலில் ஆடவன் காதல் குழைத்துப் பார்த்த பின்னரே, பெண்ணும் தன் கருத்து வெளிப்படுத்துவாள் என்பதை, "அவளும் நோக்கினாள்" என்று உம்மை பெய்து கம்பன் நாகரிகம் காட்டுகின்றான். விரைந்த காதல் உணர்வையும், அதன் பாதிப்பையும் கம்பன்,

**"வரிசிலை அண்ணனும் வாள் கண் நங்கையும்**
**இருவரும் மாறிப் புக்கு இதயம் எய்தினார்"** *(க. 516)*

என்ற தொடரால் பதிவு செய்து காட்டுகிறான்.

## கம்பனின் பரிவு

காதலைப் பதிவு செய்த போதிலும் கதை நடத்துவதில் கம்பனுக்குத் தடைகள் வருகின்றன. காதலித்தவன் ஒருவனாக வில் நாணேற்றியவன் ஒருவனாகிப் போனால் காதல் புனைவு பொருளற்றுப் போய் விடுமே. தான் வீதியில் கண்டு காதலித்தவன் வில் ஒடித்தால் மட்டுமே மணப்பேன், பிறர் எனின் இறப்பேன் எனச் சீதை நினைவதாகக் கம்பன் களம் அமைக்க வேண்டி வருகிறது. சீதையின் தோழி, வில் ஒடித்தவனைக் கண்டு விரைந்து வந்து அவன் அடையாளங் களைச் சீதைக்கு எடுத்துரைக்கிறாள்.

**"மராமரம் இவை என வலிய தோளினான்**
**அரா அணை அமலன் என்று அயிர்க்கும் ஆற்றலான்**
**இராமன் என்பது பெயர் இளைய கோவொடும்**
**பராவ அரு முனியொடும் பதிவந்து எய்தினான்"** *(க. 724)*

என, இளவல் ஒருவனுடனும், முனிவன் ஒருவனுடனும் வந்தவன் என்று நீலமாலை அடையாளப் படுத்தியதால், சீதை, வில்லையொடித்தவன் தான் காதலித்தவனே என்று இனம் கண்டு மகிழ்கிறாள்.

www.saivamonline.com

**"கோமுனி உடன்வரு கொண்டல் என்றபின்**
**தாமரைக் கண்ணினான் என்ற தன்மையால்**
**ஆம் அவனே கொல் என்று ஐயம் நீங்கினாள்"** *(க. 727)*

என்று கம்பன் செய்யும் பதிவில் அவள் ஐயம் தீர்ந்து தெளிந்தமை புலனாகிறது.

**"சொல்லிய குறியின் அத் தோன்றலே அவன்**
**அல்லனேல் இறப்பன் என்று அகத்துள் உன்னினாள்."** *(க. 728)*

தடுமாற்றமும், உறுதியற்ற நிலையும் நிலவிய நிலைக் களத்திலும் கூட, இராமன் சீதை காதலைப் பதிவு செய்த கம்பனின் துணிவில் அவன் பெண்மை பற்றிய பரிவுணர்வு வெளிப்படுகிறது.

## கற்பின் நின்றன காலமாரி

கம்பன் சிறு சிறு புனைவுகளின் ஊடேயும், சில நிகழ்வு களின் இடையேயும் எல்லாம், வாய்ப்பு அமையும் இடங் களில் பெண்மையைப் பெருமிதப்படுத்தி மகிழ்கிறான். பெண்மையின் கற்பு என்னும் பண்பு உன்னதமானது. இக் கற்புடை மகளிர் விண்ணையும், மண்ணையும் ஏவல் கொள்ளும் வல்லமை மிக்கவர்கள். வள்ளுவனும், தெய்வத் தினும் மேலாகக் கருதிக் கணவனை வழிபடும் மகளிர் கட்டளை இட்டால் மேகமும் மழையைப் பெய்விக்கும் என்று அன்னார் சிறப்பினை விளக்குவான். கற்பினை மனத்தின் உறுதி என்ற பொருளில் 'கற்பெனும் திண்மை' என்பான் அவன். பெண் என்ற சொல் சங்க நூல்களிலும், குறளிலும் பெரும்பாலும் மனைவி என்ற பொருளிலேயே வழங்கப் பட்டுள்ளது. பெண்மையிலும் பெரிதாகக் கருதத்தக்க பொருள் உலகில் வேறு ஒன்றும் இல்லை என்பது வள்ளுவன் மதிப்பீடு. நாட்டின் மழை வளம் அரசன் ஆட்சிச் சிறப்பாலும், மகளிர் கற்பொழுக்கத்தாலும் அமையும் என அறநூல்கள் கூறுகின்றன. கம்பனும், இராமன் பிறந்த

www.saivamonline.com

*கோசல நாட்டின் சிறப்புரைக்கையில், கற்புடை மகளிர் சிறப்புரைக்கிறான்.*

> **"பொற்பின் நின்றன பொலிவு பொய் இலா**
> **நிற்பின் நின்றன நீதி மாதரார்**
> **அற்பின் நின்றன அறங்கள் அன்னவர்**
> **கற்பின் நின்றன கால மாரியே"** *(க. 90)*

*என்ற பதிவில், பெண்கள் அன்பு பற்றுக் கோடாகவே அறங்கள் தழைக்கும் என்றும், அன்னார் கற்பின் சிறப்பால் தான் பருவமழை பொழியும் என்றும் உறுதிப்படுத்திப் பெண்மைக்கு மகுடம் சூட்டுகிறான்.*

## தாய்மையில் பெண்மை

*பெண்மையின் பருவங்கள் ஏழு என்று உலாநூல்கள் எடுத்துரைக்கும். வேறுபட நோக்கினால் பெண்மையின் தலையாய பருவங்களை அல்லது நிலைப்பாடுகளை நான்காகப் பகுக்கலாம். மகள், சகோதரி, மனைவி, தாய் என்பன அவை. மற்ற மூன்று நிலைகளிலும் ஒருவேளை பெண் வெற்றி பெறாது போயினும் தாய் என்னும் நிலையில் அவள் வென்று உயர்வாள். அருளாளர்கள் பலரும் இதுபற்றியே இறைவனுக்கு இணையாகத் தாயை முன்னிறுத்தி உரைத்தனர். கம்பனுக்கு மேற்குறித்த நான்கு நிலைகளிலும் பெண்மையைச் சித்திரிக்கக் காப்பியம் இடம் தந்தது. கம்பனும், தயரதன் அரசியல் பண்புரைக்கும் போது "தாய் ஒக்கும் அன்பில்" என்று அன்புடைமைக்குத் தாயை உவமை காட்டுகிறான்.*

*கோசல நாட்டை வளப்படுத்தும் நதி "சரயு" என்பது. அதன் சிறப்புரைக்க வரும் கம்பன்,*

> **"சரயு என்பது தாய்முலை அன்னது இவ்**
> **உரவு நீர்நிலத்து ஓங்கும் உயிர்க்கு எலாம்."** *(க. 23)*

www.saivamonline.com

என்று சரயு நதியைத் தாய்மையுற்ற ஒரு தாயின் பால் சுரக்கும் மார்பகங்களுக்கு ஒப்பிடுகிறான். குழந்தை பசித்து அழும் முன்னரே நினைந்து பாலூட்டும் தாயை உவமை யாக்கியதன் மூலம் கோசல மக்கள் வாடாது வளம் சுரப்பது சரயு என்பது எடுத்துரைக்கப்பட்டது. தாய் முலைப்பால் குழந்தைக்கு உணவாவதோடு, மருந்தாகவும் அமையும் என்பர். சரயுவும் கோசல நாட்டு மக்களுக்கு உண்ண நீராக வும், உடல்நலம் பெற மருந்தாகவும் விளங்கி அருளும் கருணை மிக்கது என்கிறான் கம்பன். சரயு நதியின் புனைவில் தாய்மைக்குச் சிறப்பு வந்து சேர்கிறது. பரதன் வஞ்சின உரையில்,

**"தாய் பசி உழுந்து உயிர் தளர தான் தனி**
**பாய் பெரும் பாழ் வயிறு அளிக்கும் பாவி"** *(க. 2202)*

தீ எரி நரகத்து கடிது செல்வான் என்பதை எடுத்துரைக் கின்றான். தாய் பசித்திருக்கத் தான் உண்பான் பெரும்பாவி என்பதைக் கம்பன் அறநூல்களின் சாரமாக முன் வைக் கிறான். வள்ளுவனும் 'ஈன்றாள் பசி காண்பான் ஆயினும்' என்றவிடத்தில் தாயின் பசியைப் பார்த்திருக்கும் நிலை கொடிது எனப். பதிவு செய்கிறான்.

## தாரை வடிவில் தாயர் நினைவு

கிட்கிந்தா காண்டத்தில் தாய்மையை நினைவுகூரும் அழகிய இடம் ஒன்று உண்டு. இலக்குவன் பிற பெண்களை ஏறெடுத்தும் பார்க்காத பண்பினன்.

**"................ மெல்லியர் வளைந்த போது**
**போர்க்கரும் சீற்றம் பேர,**
**முகம் பெயர்ந்து ஒதுங்கிற்று அல்லால்**
**பார்க்கவும் அஞ்சினான் அப்**
**பனையினும் பெரிய தோளான்"** *(க. 4315)*

என அவன் நாணத்தைக் கம்பன் பதிவு செய்வான். களி மயக்கத்தில் இராமனுக்கு உரைத்த உறுதிமொழிகளை

www.saivamonline.com

*மறந்தான் சுக்ரீவன். சீதையை மீட்க உரிய காலத்தில் சுக்ரீவன் துணைக்கு வாராமை இராமன் நெஞ்சில் சினத்தை ஏற்றியது. இராமன் ஏவ, இலக்குவன் சுக்ரீவன் இருப்பிடம் நோக்கிச் சீற்றத்துடன் சென்று சேர்கிறான்.*

*கிட்கிந்தையில் அனைவரும் அஞ்சி நடுங்குகின்றனர். அனுமன், வாலியின் துணைவி தாரையை அழைத்து, இலக்குவனை எதிர்கொள்ளுமாறு வேண்டுகிறான். தாரை சினத்தொடு எதிர்வரும் இலக்குவனை எதிர்கொள்கிறாள். யாரோ ஒரு பெண் எதிர் நிற்பதை உணர்ந்து இலக்குவன் திகைத்து நிற்கிறான். இராமன் திருவடிகளை விட்டு சிறு பொழுதும் பிரியாத நீ இங்கு வருகை தந்தது யாது காரணம் என்று தாரை இனிய சொல் பேசுகிறாள். இவை யார் உரைகள்? என்று சிந்தித்த இலக்குவன் உள்ளத்தில் சினம் மாறி அருள் சுரக்கிறது. சற்றே தலையெடுத்து நோக்குகிறான். இளமையிலேயே கணவனைப் பிரிந்த அவள் விதவைக் கோலம் காண்கிறான். கம்பன் அற்புதம் செய்யும் இடம் இது. உடன் இலக்குவன் நெஞ்சில் தயரதனைப் பிரிந்து விதவைக் கோலத்தில் நம் அன்னையர் மூவரும் இப்படித் தானே இருப்பார்கள் என்ற நினைவு மேல் எழுகிறது. அவன் உள்ளம் அன்பில் நனைகிறது.*

**"ஆர் கொலோ உரை செய்தார் என்று**
**அருள்வர சீற்றம் அஃக**
**பார் குலாம் முழுவெண் திங்கள்**
**பகல் வந்த படிவம் போலும்**
**ஏர் குலாம் முகத்தி னாளை**
**இறைமுகம் எடுத்து நோக்கி**
**தார் குலாம் அலங்கல் மார்பன்**
**தாயரை நினைந்து நைந்தான்."** *(சு. 4319)*

*என்ற அரிய கம்பனின் பதிவில், பெண்மைக்கு, சிறப்பாகத் தாய்மைக்கு எத்தகைய பேராற்றல் உண்டு என்பதை இனங் கண்டு மகிழ முடிகிறது. ஒளி குன்றிய முழுமதி போல்*

www.saivamonline.com

அழகு மிகுந்து தாரை விளங்கினாள். அவளைத் தாயாகக் காணுகிறான் இலக்குவன். கணவனைப் பிரிந்து வாடும் பெண்களை, ஆடவர் சமுதாயம் தாயாகப் போற்றி வாழக் கற்க வேண்டுமென்று கவிஞன் சமூகத்திற்கு அறிவுரை கூறுகிறான்.

## உலகின் தம்மனை

மேலும் ஒரு படி போய், கம்பன் பெண்மைக்கு மகுடம் சூட்ட விரும்புகிறான். இன்னொருவன் மனைவியைத் தாய் எனக் கருதி மரியாதை செய்யக் கற்பிக்கிறான். இலங்கையில் அறநெறிகளின் வடிவமாகத் திகழ்பவன் வீடணன். இராமன் தூதனாக இலங்கை புகுந்த அனுமன், தன் வாலில் இராவணன் கொளுவிய தீயால் இலங்கையைச் சுட்டெரிக் கிறான். பெரிதும் அவமானம் எய்திய இராவணன், தன் அமைச்சர்களை அழைத்து ஆலோசனை கலக்கிறான். பலரும் பலவாறு இராவணன் விரும்பும் மொழிகளைப் பேசுகின்றனர். வீடணன் பேசும் வாய்ப்பில், பல நல்லறங் களைத் தன் அண்ணனுக்கு எடுத்துரைக்கிறான். அக்காலை அவன் கூற்றாகக்,

> **"கோநகர் முழுவதும் நினது கொற்றமும்**
> **சானகி எனும் பெயர் உலகின் தம்மனை**
> **ஆனவள் கற்பினால் வெந்தது அல்லது ஓர்**
> **வானரம் சுட்டது என்று உணர்தல் மாட்சியோ"** *(க. 6146)*

என்று கம்பன் பதிவு செய்கிறான். சீதையை உலகத்தவர் போற்றும் தாய் என்று குறிக்கிறான். கம்பனில் பெண்மை, தாய்மையில் சிறந்திலங்கும் காட்சிகளில், பெண்மை பெரு மிதம் கொண்டு தலைநிமிர்கிறது.

## கற்பனைப் புனைவு

கற்பனைப் புனைவுகளில் கவிஞன் நிலைப்பாட்டை ஆராய்வது பெரிய பயன் ஒன்றையும் தாராது. என்றாலும்,

www.saivamonline.com

*இடையிடையே கம்பன் பெய்யும் சில சிறு குறிப்புக்களில் நாம் நின்று சிந்தையைச் செலுத்த வேண்டியுள்ளது. இராமன் சிவதனுசுவை நாணேற்றி ஒடித்துச் சீதையை மணக்கவிருக்கிறான் என்ற செய்தி அயோத்தி மக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. நாடே திரண்டு திருமண அணி காணப் புறப்பட்டது. இடையில் ஆடவரும் மகளிரும் பூக் கொய்தும், புனல் ஆடியும் மதுவுண்டு மகிழ்ந்தும் களித்தனர். கவிஞனின் கற்பனைச் சிறகடிக்கும் கவிதைகளில் அலங்கார அணிவகுப்பாக அவை திகழ்வன. பூக்கொய் படலத்தில் ஓர் இனிய காட்சி. போர் எனின் பூரிக்கும் பொருப்பினை ஒத்த தோளையுடைய மன்மதனைப் போன்ற அழகன் ஒருவன் ஒரு மரக்கிளையில் மலர் கொய்து கொண்டிருந் தான். அவன் காதல் மனைவி, ஓசைப்படாது பின்பக்கமாக வந்து அவன் கண் புதைத்தாள். அவன் இன்னார் என்று அறியாது, கண்ணைப் பொத்தியது யார் என்று வினவி னான். அவன் கண்களிலிருந்து தன் கைகளை மீட்டெடுத்த அவன் காதலி சீற்றமடைந்து, நெருப்புப் போல் பெருமூச்சு விட்டு மாழ்கினாள் என்கிறது கவிதை.*

**"போர் என்ன வீங்கும் பொருப்பு அன்ன**
**பொலம் கொள் திண் தோள்**
**மாரன் அனையான் மலர் கொய்து**
**இருந்தானை வந்து ஓர்**
**கார் அன்ன கூந்தல் குயில்**
**அன்னவள் கண்புதைப்ப**
**ஆர் என்ன லோடும் அனல்**
**என்ன அயிர்த்து உயிர்த்தாள்."** *(க. 907)*

*என்பது கம்பனின் அழகோவியப் புனைவு.*

## உரிமை வெளிப்பாடு

*பின்புறமாக வந்து யாரோ ஒருவர் தன் கண்களைப் பொத்தினால் யாராயினும், பொத்தியது யார் என்று*

www.saivamonline.com

கேட்பது உலக இயற்கை. அதைத்தான் அவனும் கேட்டான். அவள் தன் பெயர் உரைத்து நான்தான் பொத்தினேன் என்று கூறாது சினந்து பெருமூச்சு விடக் காரணம் என்ன என்று சிந்திக்கிறோம். பெண்மையின் உரிமை சார்ந்த அன்பு புலப்பட்டுத் தோன்றுகிறது. ஆடவன் கண்களைப் பொத்தும் உரிமை காதல் மனைவிக்கே உரியது. அப்படியிருக்க நான் பொத்தியவுடன், என் பெயர் உரைத்து, நீதானே என்று அவன் வினவியிருந்தால் அவள் மகிழ்ந்திருப்பாள். அவ்வாறு உரையாது யார் என்று அவன் வினவியதன் பின்னே ஒரு குறிப்பு இருந்திருக்க வேண்டும் என்று அன்பில் பேதலித்த காதல் நெஞ்சம் அலமருகிறது. என்னைத் தவிர வேறு பெண்கள் சிலரும் நின் கண்களைப் பொத்தும் உரிமை உடையவர் போலும். அதனால்தான், நீ, அன்னாருள் இக்காலை கண் புதைத்தாள் இன்னார் என்று அறியாது வினவுகிறாய் என்று உரிமை சான்ற காதல் நெஞ்சம் சினத்தில் தங்குகிறது. தன் கணவன், தன்னைத் தவிர வேறு ஒருத்திக்கும் உரியன் என்ற சொல்லைத் தரிக்க விரும்பாத பெண்மையின் உன்னதம் உணர்த்தும் ஓவியமாக இக்காட்சி விரிகிறது.

## பிரிவினும் சுடுமோ?

கம்பன் காவியத்தில் மறக்க முடியாத ஒரு தொடர் "நின் பிரிவினும் சுடுமோ பெருங்காடு" என்பது. இராமன் இருக்கும் இடமே சீதைக்கு அயோத்தி என்பது தமிழகத்தில் நிலவும் பழமொழிகளுள் ஒன்று. விதி, பிடர் பிடித்து உந்த இராமன் காடு செல்லும் நிலை வந்துறுகிறது. அனைவரிடமும் விடைபெற்றுக் கொண்டு, இறுதியாக இராமன் சீதை இருப்பிடம் சேர்கிறான். இராமன் கோலம் கண்டு சீதை நடந்தன வினவுகிறாள். இராமன்,

"பொருஇல் எம்பி புவி புரப்பான் புகழ்
இருவர் ஆணையும் ஏந்தினன் இன்று போய்

www.saivamonline.com

**கருவி மாமழைக் கல் கடம் கண்டு நான்**
**வருவென் ஈண்டு வருந்தலை நீ."** *(சு. 1822)*

என்று நடந்தன சீதைக்கு உரைத்தான். முறையாக இவ்விடத்தில் ஒரு பெண், நீ என்ன குற்றம் இழைத்தாய்? காட்டுக்கு நீ செல்ல வேண்டிய காரணம் யாது? முடிசூட்டு விழா தடுத்து நிறுத்தப்பட்டது ஏன்? என்று கொதித்து இராமனை வினவியிருக்க வேண்டும். ஆனால் சீதை இவற்றுள் ஒன்றையும் உரைக்கவில்லை. வினவவில்லை. ஆயினும், அவளுக்கு ஒரு வருத்தம் வந்தது. இது குறித்து நீ வருந்த வேண்டா. நான் காடு சென்று வருகிறேன் என்று கூறிய இராமன் உரைகளே அவள் உணர்வை வருத்தியது.

**"நாயகன் வனம் நண்ணல் உற்றான் என்றும்**
**மேயமண் இழந்தான் என்றும் விம்மலள்**
**நீ வருந்தலை நீங்குவென் யான் என்ற**
**தீய செஞ்சொல் செவிசுடத் தேம்பு வாள்."** *(சு. 1823)*

கம்பனின் புனைவில் மனைவி ஒருத்தியின் ஆழ் மன விருப்பம் இன்னதாகத்தான் இருக்கும் என்பது சீதை வாயிலாக உலகுக்கு உணர்த்தப்பட்டுள்ளது.

## எது அறம்?

அறம் என்ற சொல் தமிழில் மிகுந்த பொருட்செறிவு உடையது இச்சொற்கு இது பொருள் என்று முற்றாகப் பொருள் விரித்தவர் எவரும் இலர். காரணம். அறம் என்பது பலவற்றை உள்ளடக்கி நிற்கும் அரிய ஒரு சொல். உணரப் படுவன எல்லாவற்றையும் சொற்களால் முழுமையாக விரித்துரைத்தல் ஒருகாலும் இயல்வது இல்லை. மனத் தூய்மையே எல்லா அறங்களும் என்று முதற்கண் வள்ளுவன் பொருள் உரைத்தான்.

**"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்"** *(திரு. 34)*

www.saivamonline.com

என்பது குறள். மனத்தூய்மை மட்டுமே அறம் ஆகிவிட முடியாது. அறம் நிகழ்வதற்கு உரிய களம் அது. என்றால் அறம்தான் யாது என்ற வினா மீண்டும் எழும். வள்ளுவன், செய்வன அறங்கள் என்பதை விடுத்துச் சில குற்றங்களைச் செய்யாதிருத்தலே அறம் என்று புது விளக்கம் தந்தான். பொறாமை, ஆசை, கடுங்கோபம், கொடுஞ்சொல் பேசுதல் முதலியவற்றிலிருந்து ஒருவன் விடுபட்டு, இவற்றைச் செய்யாது இருத்தலே நல்லறம் என்றான் வள்ளுவன்.

**"அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்**
**இழுக்கா இயன்றது அறம்"** *(திரு. 35)*

இவற்றை விடுதல் எளிதாக இல்லையே என்று வள்ளுவனை வினவி வேறு அறஞ் செய்யும் ஆறு இன்னது என்று எளிமைப்பட உரைத்திடச் சமூகம் வேண்டுகோள் வைத்தது. அக்காலை "இல்வாழ்க்கை"யை அறம் என்றும், பேரறம் என்றும் வள்ளுவன் முன் வைத்தான். அழுக்காறு முதலிய குணங் களிலிருந்து ஒருவனை அல்லது ஒருத்தியை விடுவிக்கும் ஆற்றல், ஆணும் பெண்ணும் இணையும் இல்லறத்திற்கே உண்டு என்பதைப் பெரிதும் நுட்பத்துடன் இனம் காட்டி வள்ளுவன் புதுமை செய்தான்.

**"அறன் எணப் பட்டதே இல்வாழ்க்கை"** *(திரு. 49)*

என்பது குறள் வரி.

## பாலைப் பாடல்கள்

இல்லறம் சிறப்புப் பெறுவது, காதலனைப் பிரியாமலும், இணைந்த கைகள் நெகிழாமலும் வாழும் வாழ்விலேயே அமைய முடியும் என்பதை இளங்கோவடிகளும் இனம் காட்டினார். எல்லாச் செல்வங்களும் நிறைந்திருந்தாலும், கணவன் ஓரிடத்திலும், மனைவி ஓரிடத்திலுமாக வாழும் வாழ்க்கை, நிறைந்த வாழ்வாக முடியாது. சங்க அகப் பாடல்களில் பாலை என்பது பிரிவுரைப்பது.

www.saivamonline.com

தொகையில் பாலைப் பாடல்களே மிகுதியாக உள்ளன. இந் நிலைக்களத்தில்தான் உண்மையான அன்பின் வெளிப் பாட்டை உள்ளவாறு புனைய இயலும். எனவே, ஒருநாள் கூட, கணவனைப் பிரிந்திராது வாழும் வாழ்வுக்கு மேலான பேறு பெண்மைக்கு வேறு இல்லை என்பதைக் கம்பன் சீதை வாயிலாக உணர்த்துகிறான். காடு வெம்மை நிறைந்தது. நீ அதன் கொடுமையைத் தாங்கமாட்டாய் என்று இராமன் எடுத்துரைத்தும், செல்வப் பெருவாழ்வில் வாழ்ந் திருந்த சீதை கணவன் துயரிலும் பங்கேற்று உடன் வர எழுகிறாள்.

> **"பரிவு இகந்த மனத்து ஒரு பற்று இலாது**
> **ஒருவு கின்றனை. ஊழி அருக்கனும்**
> **எரியும் என்பது யாண்டையது? ஈண்டு நின்**
> **பிரிவினும் சுடுமோ பெருங்காடு?"** *(க. 1827)*

என்று வினவும் சீதை அன்பில் பெண்மை உயர்ந்து நிற்கிறது. இன்ப துன்பங்கள், செல்வ வறுமைகள், ஏற்றத் தாழ்வுகள் யாதாயினும் பிரியா வாழ்வில் தங்குதலே பெண்மைக்கு உயர்வு என்பதைக் கம்பன் நிலை நாட்டு கிறான்.

## சுந்தர காண்டம்

இராம காதையில் சுந்தர காண்டத்துக்கு ஒரு சிறப்பான இடம் உண்டு. அது "சிறையிருந்தாள் ஏற்றம் கூறுவது இராமாயணம்" என்ற மதிப்பீட்டை நிறுவும் தளமாக அமைவது. சுந்தர காண்டம் என்பதன் பெயர்க்காரணம் பலவாறு ஆராய்ந்து உரைக்கப்பட்டாலும், அதுவே அழகிய கவிதைகளின் அணிவகுப்பாகக் கம்பனில் அமைகிறது. இறுதிக் காட்சியில் ஓரிரு இடங்களில் வருதல் அன்றி இராமன் இல்லாமலேயே நடையிடும் நீண்ட காப்பியப் பகுதி அது. இராமன் நேரடியாக வாராது போயினும், சுந்தர

www.saivamonline.com

காண்டம் அவன் புகழ் பேசவும், ஆற்றல் உரைக்கவும் தவறவில்லை. பிரிவுத் துயரில் வாடும் சீதையின் புனைவில் பெண்மை இயல்புகள் பலவற்றையும் கம்பன் இனங்காட்டி பெருமை சேர்க்கிறான். இராவணன் பாதுகாவலில், அசோக வனத்தில் தனிமைச் சிறையில் வாடும் சீதையின் தோற்றம், நினைவுகள், உரைகள் யாவும் பெண்மையின் பெருமிதங் களாக்வே கம்பனால் காட்டப்பட்டுள்ளன.

## விருந்தோம்பல்

ஆணும் பெண்ணும் கூடி நிகழ்த்தும் இல்லறத்தில் விருந்தோம்பல் சிறந்த அறமாக வற்புறுத்தப்படும். வள்ளுவன் இதனை ஒரு சமூக அறமாகவே கருதி இதற்குத் தனி அதிகாரம் வகுத்தான். பிற இனத்தாரிடையேயும் விருந்தோம்பல் உண்டு என்றாலும், தமிழர் நாகரிகத்தில் விருந்தோம்பல் பேரிடம் பெறுகிறது. ஆணும் பெண்ணும் கூடி நிகழ்த்தும் இல்லறத்தின் அடிப்படை நோக்கமே விருந்தோம்பல் செய்து சமூகத்துக்கு உதவுவதுதான் என்பது வள்ளுவன் மதிப்பீடு.

> **"இருந்துஓம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்துஓம்பி**
> **வேளாண்மை செய்தல் பொருட்டு"** *(திரு. 81)*

என்று விருந்தோம்பல் இன்றியமையாமை அவனால் பெரிதெடுத்துப் பேசப்பட்டது. தமிழ்ப் பெண்களின் குருதி ஓட்டத்தில் கலந்திருக்கும் உயிர்ப் பண்புகளுள் ஒன்றாக விருந்தோம்பல் அமைகிறது. கணவனைப் பிரிந்து வாடிய தால் இழந்தன எவை எவை என்பதைப் பேசிக்காட்டும் கண்ணகி,

> **"அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்**
> **துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்**
> **விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை"**
>
> (சிலம்பு : 16 : 71–73)

www.saivamonline.com

என, விருந்தோம்பலையும் நினைவு கூர்கிறாள். இளங்கோ, தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடல் என்று அதன் சிறப்புரைக்கிறார். தமிழர் வாழ்வில் விருந்தோம்பல் பெற் றிருந்த சிறப்பை இளையான்குடி மாற நாயனார் மற்றும் அப்பூதி அடிகளார் வாழ்வின் மேல் வைத்துச் சேக்கிழாரும் நெஞ்சுருகப் புனைந்து காட்டியுள்ளார்.

## நீயும் பிரிந்துளாய் கொலோ?

ஆண் தனித்துச் சில அறங்களைச் செய்தல் கூடும். பெண்ணுக்கும் அது பொருந்தும். விருந்தோம்பல் என்னும் அறம் ஆணும், பெண்ணும் கூடியே நிகழ்த்தப் பெறுதல் வேண்டும். அப்போதுதான் அது முழுமையும் அழகும் பெற இயலும். வாலியால் அடித்துத் துரத்தப்பட்ட சுக்ரீவன் தனித்து வாழும் மலைப்பகுதிக்கு இராம, இலக்குவர் இருவரையும் அனுமன் அழைத்து வருகிறான். சுக்ரீவன் இராமனுக்கு விருந்து படைக்கிறான். காய் கனி கிழங்குகள் முதலியவற்றைக் கொண்டு வந்து படைப்பவர் எல்லாம் ஆண்களாக இருப்பதைக் கண்டு ஐயுற்ற இராமன் சுக்ரீவனை நோக்கி,

> **"பொருந்து நன்மனைக்கு உரிய பூவையைப்**
> **பிரிந்துளாய் கொலோ நீயும் பின்"** *(க. 3820)*

என்று வினாத் தொடுக்கிறான். சுக்ரீவன் மனைவி உருமை அக்காலை வாலி காவலில் இருப்பதை அனுமன் உணர்த்து கிறான். விருந்தோம்பலில் பெண் முன்னின்று உணவு படைத்தல் நிகழ்தல் வேண்டும். அங்கே அவள் வாராமை யால் இராமன் ஐயுற்று வினவுகின்றான். எனில், இக்களத்தில் அவள் பெரிதும் இன்றியமையாதவள் என்பது போதருகிறது.

## பெண்மை விழைவு

பெண் துணை இல்லாது ஆண் விருந்தோம்பல் இயலாது. முயன்றாலும் அது நிறைவாக அமையாது

www.saivamonline.com

என்பதை இராமன் ஐய உரை உணர்த்திற்று. இதிலிருந்து சீதையோடு இணைந்து, நாட்டிலும், இயன்றவரை, காட்டிலும் விருந்தோம்பலில் தலை நின்றவன் இராமன் என்பது பெறப்படுகிறது. அதுபோல் ஓர் ஆண்மகனுக்கு அன்புகாட்டி அருகிருந்து உண்பிப்பவள் மனைவியே. "அறுசுவை உண்டி அமர்ந்து இல்லாள் ஊட்ட" என்று கவிஞர்களும் உரைத்துப் போந்தனர். புறஞ் சேரி மாதரி இல்ல வளாகத்தில், தானே மெல்விரல்கள் சிவக்க உணவு சமைத்து, குமரி வாழைக் குருத்திலை விரித்து கோவலன் அருகிருந்து கண்ணகி அவனை உண்பித்தமையை இளங்கோ வும் சிலம்பில் பேசிக் காட்டுவார். துயரின் உச்சத்தில் கூடத் தன் இல்லறக் கடமைகளை இயற்ற இயலாது போனமை பற்றி வாடும் சீதையின் இல்லறப்பண்பு மகளிர்க்கு முன் உதாரணமாக அமைகிறது.

**"அருந்தும் மெல்லடகு ஆர்இட**
**அருந்தும் என்று அழுங்கும்**
**விருந்து கண்டபோது என்உறுமோ**
**என்று விம்மும்"** *(க. 5083)*

என்ற பதிவில் கம்பன் பெண்மையின் உள்ளார்ந்த விழைவு களை இனங்காட்டி மகிழ்விக்கிறான்.

## வள்ளுவனும் கம்பனும்

வள்ளுவனும் கம்பனும் தமிழர் உயர் மரபுகளைப் பதிவு செய்வதில் பெரிதும் ஆர்வம் காட்டும் இயல்பினர். ஒரு பெண் தரும் இன்பம் இத்தகையது என்பதை வார்த்தை களால் உரைத்தல் இயலாது என்பர். ஒருவாறு அதனை உணர்த்த வள்ளுவன் முயன்றுள்ளான். ஓர் ஆண்மகன் தான் பெரிது முயன்று அமைத்த தன் இல்லத்தில் தன் துணைவியோடு இணைந்து வாழ்கிறான். அக்காலை அவன் பெரிதும் விரும்பும் உறவினர்களும் நண்பர்களும் அவன்

www.saivamonline.com

இல்லம் வருகின்றனர். தானும், துணைவியுமாய் அவர் களுக்கு விருந்து படைத்து, அவர்களோடு உண்டு மகிழ் கிறான். அப்போது அவன் எய்தும் இன்பம், ஒரு பெண் ணிடம் பெறும் இன்பத்திற்கு இணையானது என்று வள்ளுவன் புதுமை செய்கிறான். ஒரு பெண் தரும் இன்பத் திற்கு இணையாக விருந்தோம்பி மகிழும் இன்பத்தை முன் வைத்தமை அரிய குறிப்புடையது. தமிழர் வாழ்வில் விருந்தோம்பல் தந்த மகிழ்வை இதனினும் மேலாக எவராலும் எடுத்துரைக்கவும் இயலாது.

**"தம்மில் இருந்து தமதுபாத் துண்டற்றால்**
**அம்மா அரிவை முயக்கு"** *(திரு. 1107)*

என்பது வள்ளுவனின் வைர வரியாகும். கம்பனும் காப்பியத்தில் வாய்ப்பு அமையும் போதெல்லாம் விருந்தோம்பலைச் சிறப்பிக்கத் தவறுவது இல்லை. அனுமன் வழங்க இராமனின் கணையாழியைப் பெற்று மகிழும் சீதையின் இயல்பு உரைக்கும் கம்பன், கணையாழி தந்த மகிழ்வைக் கூறுமிடத்து,

**"இருந்து பசியால் இடர் உழந்தவர்கள் எய்தும்**
**அருந்தும் அமுது ஆகியது அறத்தவரை அண்மும்**
**விருந்தும் எனல் ஆகியது வீயும் உயிர் மீளும்**
**மருந்தும் எனல் ஆகியது வாழி மணி ஆழி"** *(சு. 5295)*

என்று உவமைகளை அடுக்குகிறான். அறத்தவரை அண்மும் விருந்து என மீண்டும் விருந்தோம்பலை நினைவுகூரும் கவிஞன் மனம் கற்பார்க்கு மகிழ்வைத் தருகிறது.

## உயர் மதிப்புக்கள்

கணவன் பணியின் பொருட்டு மனைவியைப் பிரிந்து செல்வது தவிர்க்க இயலாத கடமையாகிறது. அவன் அக்காலை பணிகளின் வேகத்தில் பொழுதினைக் கழித்து விடுவான். ஆயின், பிரிந்திருக்கும் பெண் அக்காலை,

www.saivamonline.com

கணவனின் நல்லியல்புகளையும், குணநலன்களையும் நெஞ்சிற்குக் கொண்டு வந்து, சீர் தூக்கிப் பார்த்து மகிழ்வு அடைவாள். கணவன் அருகிருக்கும் நேரத்தில் புலப்படாத அவனது உயர் பண்புகள் பிரிவில் உயர்ந்து தோன்றும். பிரிவை விரும்பிப் பாடிய சங்கப் புலவர்களுக்கு, நெஞ்சத்து உணர்வுகளைப் புனையப் பாலைத் திணையே களம் அமைத்துத் தந்தது. இராமனைக் குறித்த பழைய நினைவு களைப் பதிவு செய்யும் கம்பன், அந்நினைவுகளின் வழிப் பெண்மையின் பெருங்குணங்களை இனங்காட்டி மகிழ் கிறான். கணவன், மனைவி இருவரும், உள்ளத்தில் ஒருவர் பால் ஒருவர் உயர்ந்த மதிப்புக் கொண்டிருத்தல் வேண்டும். இந்த உயர் மதிப்பில்தான் இல்லற இன்பமும், நிறைவும் கால்கொண்டு நிற்கும். சிறு குறைகளைப் புறந்தள்ளி, ஒருவர் மற்றொருவரின் உயர் பண்புகளை மட்டுமே ஆராதிக்கப் பழகினால் இல்லறம் இன்ப மயமாக அமையும். இத்தகைய உயர் மதிப்பீடுகள் இராமனைப் பற்றிச் சீதை நெஞ்சில் நிறைந்திருந்தமையைக் கம்பன் பலபட முன்னிறுத்திக் காட்டுகின்றான்.

## பண்பில் மகிழ்ந்த சீதை

நாளை காலை இராமன் முடிசூடுவான் என்பது கேட்டுப் பெரிதும் மகிழ்ந்தாள் சீதை. கைகேயி மனமாற்றத் தால் யாவும் தலைகீழாக மாறின. கைகேயி இராமனை அழைத்து, கோசல ஆட்சி உனக்கு இல்லை. உன் தம்பி பரதனே ஆள்வான் என்று உரைக்கிறாள். எவரும் துளக்க முற்றுச் சினமும் சீற்றமும் கொள்ளும் களம் இது. இராமன் கைகேயி உரை கேட்டுச் சிறிதும் கலங்கவில்லை. அவன் முகம் சிறிதும் வாட்டம் கொள்ளவில்லை. மாறாக முன்பிருந்த அவன் முகமலர்ச்சி, ஏமாற்றத்திலும், மேலும் சிறந்து மும்மடங்காகப் பொலிந்தது. அவன் மனவலிமை சீதையை வியப்புக்கு உள்ளாக்கியது. எவ்வளவு பெரிய

www.saivamonline.com

மனம், எத்தகைய உள்ள உறுதி என்ற நினைவில் அவள் மனம் தங்குகிறது. பழமையை அசைபோடும் சீதை நெஞ்சில் இராமன் முகம் மலர்கிறது.

**"தெம் மடங்கிய சேண் நிலம் கேகயர்**
**தம் மடந்தை உன் தம்பியது ஆம் என**
**மும் மடங்கு பொலிந்த முகத்தின்**
**வெம் மடங்கலை உன்னி வெதும்புவாள்"** *(சு. 5087)*

என்று அவன் நெஞ்சுறுதியில் நெகிழ்ந்து, பிரிவுக்கு வாடுகிறாள். மேலும், கம்பன் இராமன் பற்றற்ற பண்பினை,

**"மெய்த் திருப்பதம் மேவு என்ற போதிலும்**
**இத்திருத் துறந்து ஏகு என்ற போதிலும்**
**சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரை**
**ஒத்திருக்கும் முகத்தினை உன்னுவாள்"** *(சு. 5088)*

எனச் சீதை நினைவு கூர்ந்து மகிழ்வதாகக் கவிதை புனை கிறான். குளத்தில் பூத்த தாமரை, நேரம் செல்லச் செல்ல வாட்டமுறும். அவன் முகத்துக்கு அதனை உவமை கூறினால் மனமாற்றமும் சிந்தனை ஓட்டமும் தொடரும் போது முகமலர்ச்சியில் மாற்றம் நேரலாம். சித்திரத்தில் எழுதப்பட்ட செந்தாமரையின் மலர்ச்சி என்றும் மாறாது ஒரு தன்மை பெற்றிருப்பது. இராமனும் என்றும் துளங்காது, நிகழ்ந்த மாற்றங்களை ஏற்றுப் போற்றும் பண்பினன் என்பதை உவமை உறுதி செய்கிறது.

## மனித உறவுகள்

மனித உறவுகள் பற்றிய ஆய்வு இன்று பெரிதாக நிகழ்த்தப்படுகிறது. உலகளாவிய நிலையில் தனிச்சிறப்புப் பெற்று வளர்ந்து வருகிறது. உறவையும், நட்பையும் வள்ளுவரும் பெரிதெடுத்துப் பேசுகிறார். நட்பினைப் பல்வேறு கோணங்களில் விளக்கி, அதன் சிறப்புரைக்கத் தன் நூலுள் அதிக இடத்தை அதற்கு ஒதுக்குகிறார்.

www.saivamonline.com

ஆடவர்களிலும், மேலாக உறவுகளைப் போற்றி நிற்கும் குணம் உடையவள் பெண். கணவன் வழிவந்த உறவுகளை மிக விரைவில் தன் உறவாகக் கருதி மகிழ அவளால் இயலும். தன் பிறப்பு வழி உறவுகளையும் கணவன் மதித்துப் போற்றவே அவள் பெரிதும் விரும்புவாள். காலப்போக்கில் பிறப்பு வழி வாராத நட்பினரையும் உறவாகக் கருதும் மனவளர்ச்சி உருவாக வேண்டும். உலகம் முழுவதையும் நட்பாக்கிக் கொள்வதைக் காட்டிலும் சிறந்த அறிவு வேறு இல்லை என்பதை, 'உலகம் தழீஇயது ஒட்பம்' எனத் திருவள்ளுவரும் பதிவு செய்வார். ஓர் ஆண்மகன் தன் நண்பனை நட்புநிலையில் வைத்து அவன் பெயர் சொல்லி அழைப்பான். நண்பன் இல்லத்திற்கு வந்தால், குழந்தைகள் மாமன் என்றோ, சித்தப்பா என்றோ உறவுமுறை பாராட்டும். துணைவியோ அவனை, "அண்ணன்" என்று அழைப்பாள். நட்பும் உறவும் ஒன்றில் ஒன்று கலந்தே அமையும். வள்ளுவனும் கணவனுக்கும் மனைவிக்கும் இடையே நிலவும் உறவை,

> **"உடம்பொடு உயிரிடை அன்ன மற்றன்ன**
> **மடந்தையொடு எம்மிடை நட்பு"** *(திரு. 1122)*

என்று அவ்வுறவை நட்பு என்று நனி நாகரிகமாகப் பதிவு செய்வான்.

## உறவுப்பாலம்

மனித குலத்திற்கு இடையே உறவுப் பாலங்கள் அமைப்பதில் கம்பனுக்குப் பெரிதும் நாட்டம் உண்டு. நம் முன்னோர் மானுட உறவை மட்டுமல்லாது மானுடருக்கும் இறைவனுக்கும் இடையேயும் உறவுப் பாலம் அமைத்து மகிழ்ந்தார்கள். தந்தை மகன் உறவாகவும், ஆண்டான் அடிமை உறவாகவும், ஒத்த நிலையில் தோழமை உறவாக வும், தலைவன் தலைவி உறவாகவும், வேறுபடவும் சைவ,

www.saivamonline.com

வைணவ அருளாளர்கள் உறவுமுறை காட்டிக் கவிதைகள், காவியங்கள் செய்தும் மகிழ்ந்தனர். மன்னர் மகனாகிய இராமனும், வேட்டுவர் குலத்துக் குகனையும், வானரர் குலத்துச் சுக்ரீவனையும், அரக்கர் குல வீடணனையும் முதலில் நட்புப் பாராட்டிப் பின்னர் உடன் பிறந்தவர்களாக ஏற்றுப் போற்றி மனித உறவுகளை மலரச் செய்தான். பறவை இனத்துச் சடாயுவைத் தன் தந்தையாக உறவு கொண்டு, மகன் நிலையில், அவன் மறைந்தபோது ஈமக் கடன்களையும், செய்யும் பெரிய மனம் இராமனுக்கு இருந்ததைக் கம்பன் பெருமிதத்தோடு குறிப்பிடுவான்.

## இராமனின் சமூக உறவுகள்

தன் கணவன் உயர் பண்புகள் பலவற்றுள்ளும் அவன் கொள்ளும் சமூக நல்லுறவில் பெண் மனம் பெரிதும் மகிழும். ஏன்எனின், பெண்மை உறவுகளைப் போற்றிக் கொள்வதில் உள்ளார்ந்த ஈடுபாடு கொண்டது. இராவணன் காவலில் தனித்திருந்து சிந்திக்கும் சீதைக்குப் பல ஆண்டு களுக்கு முன் தன் கணவன், அமைத்த உறவுப்பாலம் நினைவுக்கு வருகிறது. முன்பு ஒருநாள் குகன் உதவியோடு இராமன் நாவாயில் கங்கையைக் கடக்க முற்படுகிறான். குகன் நாவாயை ஓட்டுகிறான். இலக்குவன் வில்லை ஊன்றியவாறு துயரத்தோடு அமர்ந்துள்ளான். சீதை மரவுரி தரித்தவளாய் இராமன் அருகில் இருக்கிறாள். இராமன் குகன் வேண்டாமலேயே, அன்னார் இருவரையும் குகனுக்கு உறவுமுறை கற்பித்து அறிமுகப்படுத்துகிறான். குகனே! இதோ இவன் என் தம்பி இலக்குவன். இனி இவன் உனக்கும் தம்பிதான். நான் உனக்குத் தோழன் என்று கூறாது, நீ எனக்கு உற்ற தோழனாகிறாய் என்கிறான். என் அருகில் இருக்கும் என் மனைவி சீதை இனி உனக்குக் கொழுந்தி முறையாகிறாள், என்று பெருந்தகவுடன் கூறி

www.saivamonline.com

அறிமுகம் செய்வித்து இராமனால் மகிழ முடிகிறது. அந்தப் பெருந்தன்மையை நினைவு கூர்ந்து,

**“ஆழ நீர்க் கங்கை அம்பி கடாவிய**
**ஏழை வேடனுக்கு எம்பி நின் தம்பி, நீ**
**தோழன் மங்கை கொழுந்தி எனச் சொன்ன**
**வாழி நண்பினை உன்னி மயங்குவாள்.”** *(க. 5091)*

சீதை பேதலித்து மாழ்குவதாகக் கம்பன், பெண்மையின் பெருமிதம் காட்டிக் கதை நடத்துகிறான்.

## வேதியன் ஆசை

ஆசையே துன்பங்களுக்கெல்லாம் மூலம் என்று வடக்கில் இருந்து ஒரு குரல் எழுந்து உலகெல்லாம் பரவிற்று. தமிழர்கள் அதனை அவா என்று குறித்தனர். அன்பு போற்றத்தக்க உயிர்க்குணம். அது, தன்னிடம் இருப்பதைத் தன்னால் அன்பு செய்யப்பட்டாருக்கு வழங்க வைக்கும் உயர் குணம். ஆசை, கடியப்பட வேண்டிய தீய இயல்புகளுள் ஒன்று. அது பிறரிடம் இருக்கும் ஒன்றை, எப்படியாவது தனதாக்கிக்கொள்ள விரையும் பிழையைச் செய்விப்பது. அறத்திற்கு மாறான தீய குணங்கள் ஆகிய பொறாமை, ஆசை, கோபம், கொடுஞ்சொல் என்பன ஒன்றிலிருந்து ஒன்று பிறக்கும் தீய பண்புகள். இவை அழிவில் மனிதனைக் கொண்டு போய்ச் சேர்க்கும். மனிதர்கள் அளவிற்கு அதிகமாக ஆசைப்படும்போது, அறிவுடையார்க்கு அது நகைப்பைத் தரும். நாடு துறந்து இராமன் காடு நோக்கி இளவலோடும், துணைவியோடும் நடையிடுகிறான். எதிரில் எதிர்ப்பட்டு அந்தணன் ஒருவன் வணங்குகிறான். இராமன், மேய்ந்து கொண்டிருக்கும் சில பசுக்களை அவனுக்குத் தானமாக வழங்குகிறான். ஆசை மீதூர்ந்த அந்த வேதியன் மேய்ந்து கொண்டிருக்கும் ஆன்கூட்டத்தின் மிகுதி கண்டு மேலும் பசுக்களை வேண்டுகிறான். அவன் ஆசை கண்டு

www.saivamonline.com

உள்ளுள் நகைத்த இராமன் அவன் வேண்டும் விருப்ப அளவை வினவுகிறான். தள்ளாடிய அந்தணன் தன் கையில் பிடித்திருந்த கோலைக் காட்டி, இதனை நான் தூக்கி வீசுவேன். அது சென்று விழும் இடத்திற்கு இடைப்பட்ட இடத்தில் இருக்கும் பசுக்களை எல்லாம் எனக்குத் தருக என ஆசை மீதூர வேண்டுகிறான். இராமன் உடன்படு கிறான். முதுமையின் தள்ளாட்டத்திலும், ஆசை மீதூர அந்தணன் கோல் எடுத்து வீச முயன்ற போது இராமன், அவன் ஆசைக்கு இரங்கி ஒருமுறை சிரித்தான். அந்தச் சிரிப்பைச் சீதை தன் நெஞ்சில் படம் பிடித்து வைத்திருந் தாள். அதனை நினைவு கூர்ந்து சீதை மனம் பேதலிப்பதைக் கம்பன் பதிவு செய்து காட்டுகின்றான்.

> **"பரித்த செல்வம் ஒழியப் படரும் நாள்**
> **அருத்தி வேதியற்கு ஆன்குலம் ஈந்து அவன்**
> **கருத்தின் ஆசைக் கரை இன்மை கண்டு இறை**
> **சிரித்த செய்கை நினைந்து அழும் செய்கையாள்."** *(க. 5094)*

## என்ன நகை இது?

இராமன் முகத்தில் விரிந்த அந்தச் சிரிப்பு, இவனுக்கு இது தேவைதானா என்ற எள்ளல் பற்றி அமைந்ததா, இந்த வயதில் இவனுக்கு ஏன் இவ்வளவு மாடுகள் என்ற அவன் பிள்ளைமைத் தன்மை பற்றி எழுந்ததா இவற்றைப் பராமரிக்கும் ஆற்றல் அற்றவனுக்கு ஏன் இத்துணை ஆசை என்று அவன் பேதமை கருதி உருவானதா? இவ்வாசை முற்றும் இவன் அறியாமையின் விளைவு என்று எண்ணி அவன் மடமை பற்றித் தோன்றியதா என்றெல்லாம் பிரித்தறியமாட்டாத நகை இராமன் முகத்தில் தோன்றி யிருக்க வேண்டும். ஆத்திரம் கொள்ள வேண்டிய நிலைக் களத்தில் அன்பு மீதூர நகைத்த கணவன் அருஞ்செயல் மறக்க இயலா ஓவியமாக அவள் மனத்திரையில் நிழலாடியதைக் கம்பன் காட்டி மகிழ்கிறான். மாறுபட்ட

www.saivamonline.com

நற்பண்புகளால் ஓர் ஆண்மகன் பெண்மையை ஈர்க்க இயலும் என்று கம்பன் பெண்மை பற்றிய ஒரு மதிப்பீட்டை முன்னிறுத்துகிறான். சீதையின் நினைவுகளின் ஊடே அவள் பெண்மையை மதிப்பிட்டு மகுடம் சூட்டி மகிழ்ந்த கம்பன், காப்பியத்தின் அறநெறிப் பாத்திரமாகிய அனுமன் வழிப் பெண்ணியத்தைப் படம் பிடிக்கத் தொடங்குகிறான்.

## சீதையே என உணர்தல்

இலங்கையின் பல இடங்களிலும் முயன்று தேடியும் சீதையைக் காணாது வாடிய அனுமன், கடைசி முயற்சியாக அசோகவனம் புகுகிறான். அரக்கியர் காவலுக்கு இடையே அழகிழந்த ஓவியம் போல் தோற்றம் கொண்ட பெண் ஒருத்தியைக் காண்கிறான். அமர்ந்திருந்த அப்பெண்ணின் கண்களிலிருந்து கண்ணீர்ப் பெருக்கெடுத்து ஓடிப் பின் காய்ந்த அடையாளங்கள் காணப்பட்டன. வெல்லமாட்டாத வலிமைமிக்க அரக்கியர் அப்பெண்ணைச் சூழ்ந்து காவல் காத்து நிற்கின்றனர். இவ்வடையாளங்கள் சிறை வைக்கப் பட்டிருக்கும் சீதையாகவே அவள் இருக்க வேண்டும் என்ற உறுதியை அனுமனுக்குத் தருகின்றன.

> **"கடக்கரும் அரக்கியர் காவல் சுற்றுளார்**
> **மடக்கொடி சீதையாம் மாதரே கொலாம்"** *(க. 5132)*

என்று கருதிய அனுமன், இராமன் தன்பால் சொல்லியிருந்த, சீதையின் அடையாளங்களைத் தான் கண்ட பெண்ணொடு பொருத்திப் பார்க்கிறான். அவை பலவும் பொருந்தி வரக் காண்கிறான். உள்ளத்தால் தீயவனாகிய இராவணன், கமலக் கண்ணனாகிய இராமனின் உள்ளுறை உயிர் போன்ற சீதையை இங்கே ஒளித்து வைத்துள்ளமை அறிந்து அவன் வியப்பில் ஆழ்கிறான்.

> **"எள்ளரும் உருவின்அவ் இலக்கணங்களும்**
> **வள்ளல்தன் உரையொடு மாறு கொண்டில**

www.saivamonline.com

**கள்ளவாள் அரக்கன்அக் கமலக் கண்ணனார்**
**உள்நிறை உயிரினை ஒளித்து வைத்தவா"** *(சு. 5133)*

என்று வியப்பில் ஆழ்ந்த அனுமனுக்குச் சீதையைக் கண்டதும், ஒரு புதிய சிந்தனை தோன்றுகிறது.

## யாவர் இவர்?

தொடக்கம் முதலே, அறிஞன் அனுமன் இராம இலக்குவர் இருவரையும் மானுடராகவே கருதுகிறான். கோசல நாட்டு மன்னன் தயரதன் பெற்றெடுத்த பிள்ளைகளாகவே எண்ணமிடுகிறான். கிட்கிந்தா காண்டம், அனுமப்படலத்தில் முதன் முதல் அவர்களை அனுமன் கண்டவுடன் தன் நெஞ்சில் நினைந்தவற்றைப் பதிவு செய்யும் கம்பன்,

**"சிந்தையில் சிறிது துயர் சேர்வுற தெருமரலின்**
**நொந்து அயர்த்தவர் அனையர் நோ உறச் சிறியர் அலர்**
**அந்தரத்து அமரர் அலர் மானிடப் படிவர்"** *(சு. 3756)*

என்று அன்னாரை மானிடராகவே உணர்ந்ததாகக் கம்பன் காட்டுகிறான். மேலும், அவர்கள் தன்னை நோக்கி நெருங்கி நடந்து வரக் காண்கிறான். வெப்பத்தைக் கனலும் கானகத்துக் கற்கள் எல்லாம், நடந்து வரும் இராம இலக்குவர் பாதங்களுக்கு ஊறு செய்தில. மேலும், அவர்கள் செந்தாமரை மலர் போன்ற பாதங்கள் தம்மீது படும் போதெல்லாம் அக்கற்கள் ஊறு விளைவிக்காது குழைந்து கொடுத்தன. அவர்கள் இருவரும் செல்லும் திசைகளில் எல்லாம் வளர்ந்து கிடக்கும் மரங்களும், உள்ளீடற்ற புற்களும் இவர்களைத் தொழுவது போல தலை சாய் கின்றன. எனவே, இவர்கள் தருமத்தின் வடிவில் தோன்று கின்றனர். இவர்கள் அறக்கடவுளராக இருப்பரோ என்று ஐயுறுகிறான்.

www.saivamonline.com

"காய்எரி கனலும் கற்கள்
கள்ளுடை மலர்களே போல்
தூயசெங் கமல பாதம்
தோய்தொறும் குழைந்து தோன்றும்
போயின திசைகள் தோறும்
மரனொடு புல்லும் எல்லாம்
சாய்வுறும் தொழுவபோல் இங்கு
இவர்களோ தருமம் ஆவார்" (க. 3762)

என்பது கம்பன் பதிவு.

## தேவரே இவர்

மேலும் அவர்கள் அருகில் நெருங்கிவர, அவர்கள் தோற்றம் அனுமன் மேனியிலும், உள்ளத்திலும் பல மாற்றங்களை விளைவிக்கின்றன. அவன் உள் எலும்புகள் யாவும் உருகத் தொடங்கின. உள்ளத்து அவர்கள்பால் பெருங்காதல் கிளர்ந்தெழுந்தது. அன்பு அளவின்றி மேலெழுந்தது. இவற்றிற்கெல்லாம் காரணம் எதுவாக இருக்கும் என்று ஐயுற்று, அறிய மாட்டாதவனாக அனுமன் திகைக்கிறான். மானுடர் எனக் கருதியவன், சிறிது தேறி தரும வடிவினர் என்று தெளிந்தான். பின் ஏற்பட்ட உள்ளுணர்வுகளால் இராம, இலக்குவர்களை,

"துன்பினைத் துடைத்து மாயத்
தொல்வினை தன்னை நீக்கி
தென்புலத்து அன்றி மீளா
நெறி உய்க்கும் தேவரோதாம்" (க. 3763)

என்று அவர்களைத் தேவர்களாக இருப்பார்களோ என்று அனுமன் மேலும் சிறிது உயர்வாக எண்ணிப் பார்க்கிறான். வாலியை வீழ்த்துவதற்கு உரிய தக்க வீரர்கள் இவர்கள் என்ற எண்ணத்திலேயே அவன் மதிப்பீடுகள் அமைகின்றன. இவற்றிற்கு எல்லாம் மேலாக அனுமன், இராமனைத்

www.saivamonline.com

*திருமாலாக இவன் இருப்பானோ என்று எண்ணும் இடம் ஒன்றும் வாய்க்கிறது.*

## சுக்ரீவன் ஐயம்

*அனுமனின் அறிவு நிரம்பிய உரைகள் இறுதியில் இராமனுக்கு, வாலி மேல் பெருஞ்சினத்தைத் தோற்று விக்கின்றன. சுக்ரீவன் மனைவியை வாலி விரும்பி யிருந்தான் என்பது போன்ற "தொனி"யை அனுமன் உரை தோற்றுகிறது.*

**"உருமை என்று இவற்கு உரிய தாரமாம்**
**அரு மருந்தையும் அவன் விரும்பினான்"** *(கி. 3852)*

*என்று அனுமன் கூறக் கேட்டவுடன், இராமன் உள்ளத்தில் கடும்சினம் மூண்டதற்கான காரணத்தைக் கம்பன் ஆழமாகப் பதிவு செய்கிறான்.*

**"ஈரம் நீங்கிய சிற்றவை சொற்றனள் என்ன**
**ஆரம் வீங்கு தோள் தம்பிக்குத் தன் அரசு உரிமைப்**
**பாரம் ஈந்தவன் பரிவு இலன் ஒருவன் தன் இளையோன்**
**தாரம் வெளவினன் என்றசொல் தரிக்குமாறு உளதோ"**
*(கி. 3854)*

*அண்ணன் தம்பி உறவைப் பெரிதும் உயர்வாகக் கருதும் கருத்துக் கொண்ட இராமனுக்கு, தம்பி மனைவியை அண்ணன் விரும்பினான் என்பது பெருஞ்சினத்தை மூட்டி யதில் தவறு இல்லை என்பது கம்பன் வாதம். இந்தச் சினத் தின் உச்சியில் இராமன், பின் விளைவுகளைப் பற்றி எண் ணாமல் சுக்ரீவனுக்கு ஓர் அவசர வாக்குறுதி வழங்குகிறான்.*

**"உலகம் ஏழினோடு ஏழும்வந்து அவன் உயிர்க்கு உதவி**
**விலகும் என்னினும் வில்லிடை வாளியின் வீட்டி**
**தலைமையொடு நின் தாரமும் உனக்கு இன்று தருவென்"**
*(கி. 3855)*

*தலைமையோடு, தாரத்தையும் இன்றே மீட்டுத் தருவேன் என்ற வாக்குறுதி சுக்ரீவனுக்கு மகிழ்ச்சி தந்தபோதும்,*

www.saivamonline.com

அளவற்ற வலிமை மிக்க அண்ணன் வாலியை வெல்லும் ஆற்றல் இராமனுக்கு இருக்குமா என்று அவன் அனுமனிடம் ஐயுற்று வினவுகிறான்.

## நெடுமாலே இவன்

அனுமன், சுக்ரீவன் கொண்ட ஐயத்தை வெளிப்படையாகவே பேசுகிறான்.

> **"உன்னினேன் உன்தன் உள்ளத்தின் உள்ளதை உரவோய்**
> **அன்ன வாலியைக் காலனுக்கு அளிப்பது ஓர் ஆற்றல்**
> **இன்ன வீரர்பால் இல்லை என்று அயிர்த்தனை"** *(கி. 3858)*

ஆயின், நீ கொண்ட ஐயம் தேவையற்றது என்று சுக்ரீவனைத் தெளிவிக்க வேண்டிய பொறுப்பு அனுமன்பால் நிற்கிறது. அக்காலை, அவனைத் தெளிவுறுத்த, இராமன் உடல் தோற்றங்களால் திருமாலாகவே இருத்தல் வேண்டும் என்று தம் நம்பிக்கையை வெளிப்படுத்துகிறான்.

> **"சங்கு சக்கரக் குறி உள தடக்கையில் தாளில்**
> **எங்கும் இத்தனை இலக்கணம் யாவர்க்கும் இல்லை**
> **செங்கண் விற்கரத்து இராமன் அத்திரு நெடு மாலே**
> **இங்கு உதித்தனன் ஈண்டு அறம் நிறுத்து தற்கு"** *(கி. 3859)*

என்று பேசி, சுக்ரீவனைத் தெளிவுறுத்த முயல்கிறான். "இராமன் அத்திரு நெடுமாலே" என்று தேற்றேகாரம் பெய்து கம்பன் பேசினும் அனுமன் முற்றாக இராமன் திருமாலின் அவதாரம்தான் என்பதை உறுதி செய்து கொண்டுவிட்டதாகக் கூற இயலவில்லை. காரணம், ஒன்று, சுக்ரீவன் அச்சம் நீக்க உரைத்த இடமும் அமையமும் பற்றியது. இரண்டு, எங்கும் இத்தனை இலக்கணம் யாவர்க்கும் இல்லை என்ற குறிப்பு. இவ்வாறான அடையாளம் உடையார் பலர் உளர். எனினும், இவனிடம் இவை கூடுதலாகக் காணப்படுவதாகவே அனுமன் உரைக் குறிப்பு அமைகிறது. இராமன் மராமரங்களை எய்தமை, வாலிவதம்

www.saivamonline.com

நிகழ்த்தியமை முதலியன கண்டு ஒருவாறு இவன் திருமாலாகத்தான் இருக்க வேண்டும் என்று எண்ணியிருந்த அனுமன் மதிப்பீடு, அவன் அசோகவனத்தில் சீதையைக் கண்டபின் நூற்றுக்கு நூறு உறுதியாகிவிடுகிறது. கம்பன் திட்டமிட்டுப் பெண்மைக்கு மகுடம் சூட்டும் இடங்களில் இதுவும் ஒன்று.

## சீதை வாயிலாக இராமனை அறிதல்

இவள் சீதையே என்று உறுதி செய்து கொண்டு அனுமன் மகிழ்ச்சி அடைகிறான். இராவணன் ஒரு பாவி. மூன்று உலகங்களின் மகிழ்வையும் தன் அடாத செயல்களால் ஒருசேரப் போக்கியவன் அவன். தன் உயிரைத் தானே மாய்த்துக் கொள்ளவே சீதையை அவன் சிறை எடுத்து வைத்திருக்கிறான். அவை எங்ஙனம் இருந்தாலும் இருக்கட்டும். இதோ, இவ்வசோகவனத்தில் இருப்பவள், தாமரை மலரில் வீற்றிருப்பவளாகிய திருமகளே என்று ஐயம் சிறிதுமின்றித் திடமான முடிவிற்கு வருகிறான். ஒன்றிலிருந்து ஒன்றை உணர்வதை வடநூலார் அருத்தாபத்தி நியாயம் என்பர். நெருப்புக் கண்ணில் புலனாகாதவிடத்தும், புகை கண்டு, நெருப்பு உண்டு என்று அனுமானம் செய்து கொள்வது போல், சீதையைத் திருமகள் என்று உறுதி செய்து கொண்ட உடனேயே, மின்னல் வெட்டுப் போல் அனுமன் உள்ளத்தில் ஓர் ஒளி பிறக்கிறது. இவள் திருமகள் என்பதால் இவளை மணந்த இராமன் திருமால் என்பது உறுதி என்று ஐயம் தெளிகிறான்.

> **"............ அரவணைத் துயிலின் நீங்கிய**
> **தேவனே அவன் இவள் கமலச் செல்வியே."** *(க. 5134)*

என்ற தொடர்கள் பெண்மைச் சிறப்புரைக்கும் பெருமிதம் கொண்டன. இராமனை இவன் மனிதனோ, தருமத்தின் வடிவோ, தேவனோ என்றெல்லாம் பலவாறு அனுமன்

www.saivamonline.com

ஐயுற்றுப் பின்னர்த் திருமால் என்று தெளிந்தான். சீதையை முதல் பார்வையிலேயே இவள் திருமகளே என்று முடிவு செய்கிறான். அறிஞன் அனுமன் கருத்தும், உரைகளும் எல்லாம் கவிஞனின் கருத்து வெளிப்பாடுகள் என்பது அறிஞர் கண்டது. எனவே, கவிஞன் அனுமன் வழிப் பெண்மைக்குப் பெருமை செய்த இடமாகவே இதனை இனங்காண வேண்டியுள்ளது.

## அறத்திற்கு ஈறு இல்லை

சீதையைக் கண்டு இவள் இலக்குமியே என்று இனங் கண்ட அனுமன், சீதையின் தோற்றங்களைப் பலவாறு மதிப்பிட்டு உரைக்கும் உரைகளும், அவன் எண்ணங்களும் பெண்மை பற்றிய கம்பனின் உயர் மதிப்பீடுகளாக அமை கின்றன. அழுக்கேறிய மணிபோல் இவள் காணப்படுகிறாள். ஒளி வீசும் திங்கள், சூரிய ஒளியால் தன் ஒளி குன்றியது போல் சீதை தோற்றம் உள்ளது. எனவே, இவள் கற்புக்கு இங்கே இறுதி வரவில்லை. இராமன் மேல் இவள் கொண்ட காதலும் குற்றமாகிவிடவில்லை என்று அனுமன் மகிழ் கிறான். அந்தத் தெளிவின் இறுதியில், அறத்துக்கு ஈறு உண்டோ என்று அனுமன் சிந்திப்பதாகக் கம்பன் கவிதையை நிறைவு செய்கிறான். அரிய குறிப்புக்கள் அமைந்தது அத்தொடர்,

> **"மாசுண்ட மணி அனாள் வயங்கு வெங்கதிர்த்**
> **தேசுஉண்ட திங்களும் என்னத் தேய்ந்து உளாள்**
> **காசுண்ட கூந்தலாள் கற்பும் காதலும்**
> **ஏசுண்டது இல்லையால் அறத்துக்கு ஈறுஉண்டோ"** *(சு. 5136)*

அறத்தின் வாழ்வும், அழிவும் எல்லாம் பெண்களின் கற்பொழுக்கத்தைச் சார்ந்தே அமைவன என்பது கம்பன் மதிப்பீடு.

www.saivamonline.com

## பெருமிதச் சார்புகள்

அடுத்துக் கம்பன், பெண்மையின் பெருமிதங்களுக்குச் சார்பு எது என்பதை ஆராய்கிறான். பெண்மையின் அறிவும், ஆற்றலும், பண்பும், கற்பும், பிறவுமாகிய நற்குண நற் செய்கைகள் யாவும் அவள் அறிவுப் பற்றுக் கோடாக உள்நின்று எழுகின்றனவா? அல்லது அவள் பற்றி வாழும் சார்பின் தாக்கத்தால் உருவாகின்றனவா என்பதை உணர்த்தக் கவிஞன் முனைகின்றான். இவ்வினாவிற்கு விடை காண்பது எளிதன்று என்று கம்பன் உணர்ந்தே யிருக்கிறான். எனவே, இருதரப்பு வாதங்களை முன்வைத்து, வினாத் தொடுப்பான் போல் விடை காணும் பொறுப்பை நம்மிடமே விட்டுவிடுகிறான். பெண்ணின் பெருமிதங்கள் அவள் கைப் பிடிக்கும் கணவன் ஆற்றலால் உருவாதல் கூடும். பெண்ணின் மன உறுதியாலும் அவை அமைதல் கூடும். பெண் பிறந்து வந்த குலப் பெருமிதங்கள் கூட அவள் உருவாவதற்குக் காரணமாக அமையலாம்.

> **"புனைகழல் இராகவன் பொன் புயத்தையோ**
> **வனிதையர் திலகத்தின் மனத்தின் மாண்பையோ**
> **வனைகழல் அரசரின் வண்மை மிக்கிடும்**
> **சனகர்தம் குலத்தையோ யாதைச் சாற்றுகேன்."** *(க. 5137)*

மேற்குறித்த மூன்றில், ஒவ்வொன்றின் சார்பால் கூடப் பெண்மை உருவாக்கப்படக் கூடும். சீதைக்கோ மேற்கூறிய மூன்றும் சிறந்துள்ளன. எனவே, அவள் பண்பில் தலை நிற்பதில் வியக்க ஒன்றும் இல்லை என்பது கவிஞன் கருத்தாக அமைகிறது.

## நங்கையர் மனத்தவம்

பெண்மையை மேலும், மேலும் உயர்த்திப் பிடிக்கக் கம்பன் விரும்புகிறான். காமுகன் ஒருவன் கட்டுப்பாட்டில் ஒன்பது திங்கள், இனி நாம் மீட்கப்படுவோம் என்ற

www.saivamonline.com

நம்பிக்கை தளர்ந்தவிடத்தும், தன் கற்பினைப் பாதுகாத்து இருந்த திறம் அனுமனை வியக்க வைக்கிறது. தான் பிறந்து, வளர்ந்த கிட்கிந்தையில் வாழும் பெண்மை பற்றிய மதிப்பீடு அவன் நெஞ்சில் இழையோடியிருக்கலாம். ஒப்பீட்டின் முடிவில் சீதையின் மனஉறுதி அவனை மலைக்க வைக்கிறது. "உண்ணாது நோற்கும்" தவமுனிவர்களை அவன் மனம் நினைவு கூர்ந்து பார்க்கிறது. தீயிடை நின்றும், புலன்களை அடக்கியும், உணவு, நீர் முதலியனவற்றை நீத்தும், ஒரு நோன்பு நோற்கும் முனிவர்களின் தவம் பெரிதே என்று அவன் அறிகிறான். ஆனால், துறவில் தலை நிற்காது, பெண் ஒருத்தி, சூழ்நிலைகளை வென்று மனத்தால் உயர்ந்து நிற்பதை அனுமன் எண்ணும் போது, தவமுனி வர்கள் அவன் மதிப்பீட்டில் பின்னுக்குத் தள்ளப்படுகின்ற னர். கம்பன் பெண்மையை தவமுனிவர்களின் ஆற்றல் களுக்கும் மேலான ஆற்றல் மிக்கது என நிறுவிக் காட்டி மகிழ்கிறான்.

> **"வெங்கனல் மூழ்கியும் புலன்கள் வீக்கியும்**
> **நுங்குவ அருந்துவ நீக்கி நோற்பவர்**
> **எங்குளர் குலத்தின் வந்து இல்லின் மாண்புடை**
> **நங்கையர் மனத் தவம் நவிலற் பாலதோ"** *(சு. 5140)*

வைதிக மதங்கள், சிறப்பாகச் சைவமும், வைணவமும் பெண்மைக்குத் துறவு நிலை பேசுவதில்லை. பெண்மைத் துறவை அவை ஏற்பதும் இல்லை; வற்புறுத்துவதும் இல்லை. கடவுள் மறுப்புச் சமயங்கள் பெண்ணுக்கு வீடு பேறு இல்லை என்றன. அவள் மறுபடியும் ஆணாகப் பிறந்து, துறவில் தலைநின்றால் மட்டுமே வீடு பேறு வாய்க்கும் என்று அவை வற்புறுத்தி உரைத்தன. வைதிக மதங்கள் பெண்மைக்குத் துறவை வற்புறுத்தாமைக்குக் காரணம் அவள் பெண்ணாகப் பிறந்திருப்பது ஒன்றே போதுமானது. எந்நிலையிலும் தனக்கென்று வாழாத பெண்மை வாழ்வே

www.saivamonline.com

ஒரு துறவுக்கு ஒப்பானது. எனவே, அவள், தனியே துறந்து வாழ்தல் என்ற நிலை தேவை அற்றது என்பது வைதிக மதங்களின் குறிக்கோளாக இருந்து வந்துள்ளது.

## காண நோற்றிலன்

அளவற்ற அன்பின் உச்சியிலும், சோகத்தின் நிறைவி லும் அறியாமை தோன்றுதல் இயற்கை. சீதைபால் கொண்ட உயர் மதிப்பீட்டால், அவன் உள்ளத்தே கிளர்ந்தெழுந்த நல்லன்பில் அனுமனின் அறிவு மனத்திலும் ஒரு பிள்ளைமைக் குணம் தோன்றுகின்றது. எங்கும் காண இயலாத ஒரு பெருந் தவத்தைப் பெண்மை இங்கே நிகழ்த்திக் கொண்டுள்ளது. சீதை மட்டும் அல்லள்; இங்கே குடிப்பிறப்பு, நாணம் முதலியனவும் சீதையோடு இணைந்து கடுந்தவம் புரிந்து உயர்கின்றன. இவற்றை எல்லாம் கண்டு களிக்கும் பேறு இராம தூதனாகிய எனக்குக் கிடைத்தது. இவற்றைக் காண இராமன் தவம் செய்திருக்கவில்லை என்று அனுமனின் அன்பு மனம் பேதலிக்கிறது. கம்பனின் உயர் மதிப்பீட்டில், பெண் பிறந்த குலமும், பெண்ணுடன் உடன்பிறந்த நாணமும் கூட முடிசூட்டிக் கொள்கின்றன.

> **"பேண நோற்றது மனைப் பிறவி பெண்மை போல்**
> **நாணம் நோற்று உயர்ந்தது நங்கை தோன்றலால்**
> **மாண நோற்று ஈண்டு இவள் இருந்தவாறு எலாம்**
> **காண நோற்றிலன் அவன் கமலக் கண்களால்"** *(க. 5141)*

பெண்மைக்கு வந்துற்ற இப்பெருஞ் சிறப்புக்கு எது காவல் அரணாக அமைந்தது என்பதை ஆராய முற்படும் கம்பன், பலவற்றை முன்னிறுத்தி முடிவு தெரிவிக்காது வியப்பில் நிறைகிறான்.

> **"தருமமே காத்ததோ சனகன் நல்வினைக்**
> **கருமமே காத்ததோ கற்பின் காவலோ**
> **அருமையே அருமையே யார்இது ஆற்றுவார்"** *(க. 5143)*

www.saivamonline.com

பெண்மைக்குத் துணை அறம், இரண்டாவதாகப் பெற்றோர் இயற்றும் நல்வினைகள். மூன்றாவதாகக் கற்பு. இவையெல்லாம் துணை நிற்பினும், இவற்றைப் பற்றுக் கோடாகக் கொண்டு ஒருமை மனத்தோடு எழுந்து நிற்கும் ஆற்றல் நினைத்துப் பார்க்கவும் மாட்டாத பெண்ணின் மன உறுதியைச் சார்ந்ததாகிறது. இது, அருமையிலும் அருமை யானது என்று கம்பன் வியக்கிறான். பெண்மைப் பெரு மிதங்களுக்கு எவை எவை துணை செய்வன என்பது கம்பனால் முன்வைக்கப்படும் அருமை கண்டு வியக்கிறோம். ஒருகாலும் அறத்தைத் தீவினையால் வெல்ல முடியாது என்ற உண்மையை அனுமன் சிந்தனைகள் நம்முள் எழச் செய்கின்றன.

## அனுமன் வாழ்த்து

சீதை இருப்பிடம் தேடி இராவணன் வருகிறான். அனுமன் மரத்தில் ஒளிந்திருந்து காண்கிறான். காமுகன் முன் குலமகள் அஞ்சிக் குலைவது கண்டு அனுமன் அளவற்ற துயர் அடைகிறான்.

**"கூசி ஆவி குலைவுறு வாளையும்**
**ஆசையால் உயிர் ஆசு அழிவானையும்**
**காசுஇல் கண் இணை சான்று எனக் கண்டனன்**
**ஊசல் ஆடி உளையும் உளத்தினான்."** *(சு. 5167)*

அன்பு நெஞ்சம், இப்பாதகனால் பெண்மைக்குத் தீங்கு ஒன்றும் வரல் கூடாது என்று விரும்பி நெஞ்சார வாழ்த்துக் கூறுகிறது.

**"வாழி சானகி வாழி இராகவன்**
**வாழி நான்மறை வாழியர் அந்தணர்**
**வாழி நல்லறம் என்று உற வாழ்த்தினான்**
**ஊழி தோறும் புதிது உறும் கீர்த்தியான்"** *(சு. 5168)*

இராவணன் சீதையை இரந்து நின்றதும், சீதை கடுமொழி களால் இராவணனுக்கு உரைத்த மாற்றங்களும், பின்

www.saivamonline.com

அவளே அவனுக்கு உரைத்த நயமொழிகளும், சீற்றமுற்று இராவணன் பேசிய பேச்சுக்களும், மறைந்திருந்த அனுமன் உள்ளத்தில் எழுந்த சீற்றமும், இராவணன் மீண்டும் சீற்றம் தவிர்ந்து சீதையை இரந்து நின்று உரைத்தனவும், அவன் அச்சுறுத்தலும், அரக்கியர் சீதையை அதட்டி நின்றமையும் எல்லாம் தொடர் நிகழ்வுகளாகக் காட்சிப் படலத்தில் கம்பனால் பதிவு செய்யப்பட்டுள்ளன. சீதைக்கு உள்ள துயரமும், அவள் உள்ள உறுதியும் கம்பனால் இப்பகுதியில் பலபட விரித்துரைக்கப்பட்டுள்ளன. அதன் திறம் பெரிது.

## மனப் பேதலிப்புகள்

பெண்மையின் பெருமிதங்களைப் புனைவதற்கு மட்டுமல்லாது, பெண்மை பேதலிப்புகளைப் புனையவும், கம்பனுக்குச் சீதை பாத்திரம் இடந்தந்து நிற்கிறது. அன்பும், கிளர்ந்து எழும் ஆவேசமும், மகிழும் நொடியில் மாற்ற முறும் சோகமும், அறிவும், உணர்வு மிகும்போது தலைப் படும் அறியாமையும், நினைவும், தொடர்ந்து வரும் மறதியும் எனப் பெண்ணுள் மாறி மாறி எழும் மனநிலைகள் ஏராளம். இராமன் கணையாழியைச் சீதைபால் வழங்கி அவளை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்துகிறான் அனுமன். அவசரப்பட்டு அனுமன் என் தோள் மீது ஏறுக என்று வேண்டுகோள் வைத்தபோது, அறிவே வடிவாய் நின்று சீதை உரைத்த வாசகங்கள் முன்னரே காட்டப்பட்டன. அனுமன் வியந்து இனி நான் இராமனிடம் யாது கூற வேண்டும் என்று சீதையிடம் வினவுகிறான். அறிவில் தலைநின்ற சீதை, இராமன் நினைவில் உணர்வில் தலைப்படுகிறாள்.

## மன்னன் ஆணை

அனுமனே, இன்னும் ஒரு மாதம் மட்டுமே காத்திருப்பேன். அதற்கு மேல் ஆவி தரிக்கும் ஆற்றல் என்பால் இல்லை. இது வெறும் உரை அன்று. இராமன்

www.saivamonline.com

மேல் ஆணை. இதனை மறவாது சென்று இராமனிடம் உரைப்பாய் என்கிறாள்.

> **"இன்னும் ஈண்டு ஒரு திங்கள் இருப்பல் யான்**
> **நின்னை நோக்கிப் பகர்ந்தது நீதியோய்**
> **பின்னை ஆவி பிடிக்கிலேன் அந்த**
> **மன்னன் ஆணை இதனை மனக்கொள் நீ"** *(க. 5373)*

தான் நினைத்ததை உறுதியானது என்று காட்ட, பிறர் ஒருவர் மேல் சத்தியம் கூறும் பெண்மையைக் கம்பன் முன்னிறுத்து கிறான்.

## வீரம் காக்க வேண்டுதல்

நான் இராமனின் மனைவி, ஒரு வேளை இராமன் அவ்வாறு கருதாது நின்றாலும், கருணை என்பது அவன் மனத்தில் இல்லாது வரண்டு போனாலும் கூட அனுமனே தன் வீரத்தைக் காத்துக்கொள்ள நான் வேண்டியதாக இராமனிடம் தெரிவித்து விடு என்பது கணத்தில் மாறிவரும் சீதையின் அடுத்த கூற்று.

> **"ஆரம் தாழ்திரு மார்பற்கு அமைந்தது ஓர்**
> **தாரம்தான் அலளேனும் தயா எனும்**
> **ஈரம்தான் அகத்து இல்லை என்றாலும், தன்**
> **வீரம் காத்தலை வேண்டு."** *(க. 5374)*

அளவற்ற நம்பிக்கையின் ஊடே 'பொள்' எனத் தோன்றும் பெண்மையின் அவநம்பிக்கையைக் கம்பன் பதிவு செய்யும் இடம் இது.

## இளையவனுக்கு ஒரு செய்தி

ஒருவேளை இராமன் என்னை மீட்க வராவிட்டாலும் இளையவனாகிய இலக்குவனுக்கு நான் உரைத்ததாக ஒரு வார்த்தை கூறிவிடு. இராமன் கட்டளைப்படி அன்று என்னைத் தனிமையில் காவல் செய்திருந்தவன் அவனே. அவன் காவல் இகழ்ந்தமையால்தான் நான் சிறைப்பட்டேன்.

www.saivamonline.com

*நான் சிறைப்படக் காரணமாக இருந்தவனுக்கே என்னைச் சிறை மீட்கும் கடமை உரியது என்று அனுமனே அவனிடம் கூறுவாயாக என்கிறாள் சீதை. இலக்குவன் காவல் இழக்கவே காரணமானவள் இவளே. கணவன் மேல் எழும் அவநம்பிக்கை இலக்குவன் பால் பரிவாக மாறுகிறது.*

**"ஏத்தும் வென்றி இளையவற்கு ஈது ஒரு**
**வார்த்தை கூறுதி மன் அருளால் எனைக்**
**காத்து இருந்த தனக்கே கடன் இடை**
**கோத்த வெஞ்சிறை வீடு என்று கூறுவாள்"** *(சு. 5375)*

*உரியவரை விடுத்து அடுத்தவர்பால் உதவி நாடும் பெண்மை யின் பொய்யான சினத்தைக் கம்பன் பதிவு செய்யும் அழகிய காட்சியாக இது அமைகிறது.*

## நீர்க்கடன் செய்திடுக

*மீண்டும் சீதை மனம் முன் உரைத்ததன் மேல் பதிகிறது. ஒரே மாதம்தான் பெண்மையைக் காத்து நிற்கும் இத் தவத்தை என்னால் இயற்றி நிற்க இயலும். அதற்குள் இங்கு இராமன் வரமுடியவில்லை என்றால், அயோத்தி மீளும் போது இடைவரும் கங்கை நதியில், எனக்கு இறந்த பின் செய்ய வேண்டிய கடன்களை அவனைச் செய்து விடுமாறு நான் தெரிவித்ததாக அனுமனே கூறுவாயாக என்கிறாள்.*

**"திங்கள் ஒன்றின் என் செய்தவம் தீர்ந்ததால்**
**இங்கு வந்திலனே எனின் யாணர் நீர்க்**
**கங்கை யாற்றங் கரை அடியேற்கும் தன்**
**செங்கையால் கடன் செய்க என்று செப்புவாய்"** *(சு. 5376)*

*இராமன் ஈமக் கடன் செய்தல் வேண்டும் என்பது அல்ல சீதை உள்ளம். விரைந்து வந்து மீட்க வேண்டும் என்பதை உணர்த்தும் பெண்மையின் சாகச மொழிகளைக் கம்பன் இனங்காட்டி மகிழ்விக்கிறான்.*

www.saivamonline.com

## மாமியர்க்கு வணக்கம்

என்பால் அன்புமிக்க மாமியர் மூவர்க்கும் சீதை மரணத்தைத் தழுவும் நிலையில் தன் வணக்கங்களைத் தெரிவித்தாள் என்பதை என் கணவன் இராமனிடம் கூறித் தெரிவிக்கச் செய்வாயாக. ஒருவேளை என்பால் கருணை யற்றவனாகிய அவன் மறந்தாலும், என் வணக்கங்களை அவர்கள் மூவருக்கும் அனுமனே நீயாகிலும் உரைத்து விடு என்பன சீதையின் துன்ப வாசகங்கள்.

**"சிறக்கும் மாமியர் மூவர்க்கும் சீதை ஆண்டு**
**இறக்கின்றாள் தொழுதாள் எனும் இன்ன சொல்**
**அறத்தின் நாயகன்பால் அருள் இன்மையால்**
**மறக்கும் ஆயினும் நீ மறவேல் ஐயா"** *(சு. 5377)*

கணவன் மேல் கொண்ட சினம் மாமியர் மேல் பரிவாக மாறும் பெண் உளவியலைக் கம்பன் இனங்காட்டும் இடமாக இது அமைகிறது.

## மறுமையிலும் அவனே

அனுமனே, ஒருவேளை நான் இராமன் வரவுக்காகக் காத்திருந்து, அவன் என்னை வந்து மீட்காது போனால், நான் மடிவது திண்ணம். தீவினை உடையவளாகிய நான் வேண்டிக் கொண்டதாக ஒன்றை நீ இராமனிடம் உரைப்பா யாக. நான் மீண்டும் பிறந்து வந்து அவன் திருமேனியை, மறு பிறவியிலாவது தீண்டி என் தீவினை தீர வணங்கி வேண்டியதாகக் கூறு என்கிறது சீதையின் பேதமைப்பட்ட மனம்.

**"ஈண்டு நான் இருந்து இன் உயிர் மாயினும்**
**மீண்டு வந்து பிறந்து தன் மேனியைத்**
**தீண்டலாவது ஒர் தீவினை தீர் வரம்**
**வேண்டினாள் தொழுது என்று விளம்புவாய்"** *(சு. 5379)*

www.saivamonline.com

இற்றைக்கும், ஏழ் ஏழ் பிறப்பிற்கும் அவனே கணவனாக வருதல் வேண்டும் என்ற பெண்மையின் ஏக்கத்தையும் கம்பன் பதிவு செய்யத் தவறவில்லை.

## பெற்றோர்க்கு வணக்கம்

நிறைவாகச் சீதைக்குத் தன் தந்தை தாயர் நினைவு தோன்றுகிறது. அனுமனை நோக்கி, என் தந்தை, தாய் முதலாகிய என் உறவினர்களுக்கும் என் வணக்கங்களை நீயே தெரிவிப்பாயாக. குரங்கினத் தலைவனாகிய சுக்ரீவனிடம், என், அழகிய தோளை உடையவனாகிய இராமனை, மேலும் காவல் செய்து, அயோத்திக்கு முடிசூட்டி உதவுமாறு என் விருப்பத்தை அவனிடம் தெரிவிப்பாயாக என்று வேண்டுகிறாள்.

> **"எந்தை யாய் உதவிய கிளைஞர் யார்க்கும் என்**
> **வந்தனை விளம்புதி கவியின் மன்னனை**
> **சுந்தரத் தோளனைத் தொடர்ந்து காத்துப் போய்**
> **அந்தமில் திருநகர்க்கு அரசன் ஆக்கு."** *(சு. 5382)*

என்று அவள் விருப்பத்தை முன்வைத்துப் பெண்மை தனக்குக் கிடைக்காத வாழ்வு, தன் கணவனுக்காவது கிடைத்தல் வேண்டும் என்று விரும்பும் விருப்பத்தை இனங்காட்டி, சீதையின் மாறுபட்ட மன உணர்வுகளை நிறைவுக்குக் கொண்டு வருகிறான்.

## தென்திசை வணக்கம்

சீதையைக் கண்டு, இராமன் உரைத்த தூது மொழிகளை உரைத்து அனுமன் மீண்டும் இராமன் இருப்பிடம் திரும்புகிறான். சீதையின் கற்பு நிலையைக் குறிப்பால் உணர்த்த விரும்பிய அனுமன், இராமன் முன் எய்தி அவன் திருவடிகளை வணங்காது, சீதை சிறையிருக்கும் தென் திசையில் தன் தலையை வைத்து நிலத்தில் தோய்ந்து வணங்குகின்றான்.

www.saivamonline.com

"எய்தினன் அனுமனும் எய்தி ஏந்தல் தன்
மொய்கழல் தொழுகிலன் முளரி நீங்கிய
தையலை நோக்கிய தலையன் கையினன்
வையகம் தழீஇ நெடிது இறைஞ்சி வாழ்த்தினான்." *(க. 6028)*

*அவன் செயல் கண்டு இராமன் மகிழ்கிறான். சீதை கற்புக்குத் தீங்கு ஏதும் இல்லை என்பதை அனுமன் செயல்களால் உணர்கிறான்.*

'வண்டு உறை ஓதியும் வலியள் மற்று இவன் கண்டதும்
உண்டு; அவள் கற்பும் நன்று' எனக் கொண்டனன்." *(க. 6029)*

*எனக் கம்பன் இராமனின் குறிப்பு உணரும் ஆற்றலை இனங் காட்டுகின்றான். இம் மகிழ்ச்சியில், இராமனுக்கு,*

"வீங்கின தோள் மலர்க் கண்கள் விம்மின
நீங்கியது அருந்துயர் காதல் நீண்டதே" *(க. 6030)*

*என அவனுக்குற்ற மகிழ்ச்சி வெளிப்பாடுகளையும் கம்பன் பதிவு செய்யத் தவறவில்லை.*

## பலரைக் கவர்ந்த பாடல்

*அசோகவனத்தில் சீதையைக் கண்டு வந்து, அனுமன் அச்செய்தியை இராமனிடம் உரைத்த பகுதி, சுந்தர காண்டத்தின் மணிமுடியாக விளங்குவது. கம்பனின் அழகு மிகுந்த ஆழம் நிறைந்த கவிதைகளின் அணிவகுப்பு என்று இப் பகுதியைக் குறிப்பிடலாம். பெண்மைக்குக் கம்பன் மணிமுடி சூட்டும் அரிய இடங்கள் சிலவற்றுள் இதனையும் ஒன்றாகக் குறிப்பிடலாம். கம்பனின் இராம காதையைப் படித்தவர்களும், பேசக் கேட்டவர்களும், பிறரும் அறிந்த அனுமனின் உட்பொருள் நிறைந்த கூற்றாக வரும்,*

"கண்டெனன் கற்பினுக்கு அணியைக் கண்களால்
தெண்திரை அலைகடல் இலங்கைத் தென்னகர்
அண்டர் நாயக இனி துறத்தி ஐயமும்
பண்டுள துயரும் என்று அனுமன் பன்னுவான்." *(க. 6031)*

www.saivamonline.com

என்ற அழகிய கவிதை முதற்கண் அமைகிறது. தமிழ் அறிஞர் களையும், மேடைத் தமிழ் வல்லுநர்களையும் பெரிதும் கவர்ந்த கம்பன் கவிதை இது.

## "கண்டெனன்" சொல்லழகு

அனுமன் செயல் கண்டு இராமன், இவன் சீதையைக் கண்டதும் உண்டு, அவள் கற்பும் நன்று எனக் குறிப்பினால் உணர்ந்தான். அல்லாது வேறு ஒன்றும் அவன் அனுமனை வினவவில்லை. அவன், வினவாவிடினும், இராமனின் ஆர்வ மனநிலையை நன்கு உணர்ந்த அனுமன், உரைக்க வேண்டும் செய்திகள் பலவிருந்தும் முதன் முதல் **"கண்டெனன்"** எனத் தான் சீதையைப் பார்த்தேன் என்பதை முதன் முதலாக உரைக்கிறான். அனுமன் நான் என்றோ, சீதையை என்றோ, இலங்கையில் என்றோ தொடங்கி யிருந்தால் அடுத்து வரும் வார்த்தைக்காக இராமன் ஏக்கமுற்றிருக்க வேண்டும். எழுவாயை முன்னிறுத்தாமலும், யாரை என்ற வினாவிற்கு உரிய விடையான செயப்படு பொருளை இணைக்காமலும், பயனிலையை மட்டும் அனுமன் முன்மொழிந்தான். வினை முற்றுக்கள் ஒரு நீண்ட தொடரின் அனைத்துப் பொருள்களையும் காட்டி நிற்கும் செறிவுடையன என்ற இலக்கண நூலார் கோட்பாடு இங்கே முற்றும் பொருந்தி நிற்கிறது. அடுத்துச் சீதையை என்று தொடர்ந்திருந்தால், அவள் கற்பினைப் பற்றிய ஐயம் எழுந்திருக்கும், எனவே, கற்பினுக்கு அணியை என்ற அருந்தொடர் சேர்க்கிறான்.

## கண்களால் பொருட்சிறப்பு

அடுத்து வரும் "கண்களால்" என்ற சொல் தேவை யற்றது போல் தோன்றும். "கண்டெனன்" என்பதிலேயே "கண்களால்" என்ற பொருள் அமைந்து கிடக்கும்போது, மிகு சொல்லாக அறிஞன் அனுமன் "கண்களால்" என

www.saivamonline.com

வேறு ஒரு சொல் பெய்தது, உட்குறிப்பு மிக்கது. கண்களால் என்பது அனுமன் கண்களால் என்று பொருள் தர வந்தது அன்று என்றால், வேறு என்ன நோக்கத்திற்காக வந்தது என்ற வினா எழும். கற்பு என்பதும் கற்புடைமை என்பதும் காட்சியால் தெரிய வருவன அன்று. பின் சீதை கற்பினுக்கு அணியாகத் திகழ்கிறாள் என்று உரைத்த அனுமன் அதற்குச் சான்றாகக் "கண்களால்" என்ற சொல்லை முன்னிறுத்து கிறான். அவள் கற்பில் தலை நிற்பதை அன்னை சீதையின் களங்கமற்ற கண்களால் அவன் அறிந்தான் என்பதே பொருளாக அமைகிறது. உள்ளத்தின் உண்மையையும், களங்கத்தையும் உள்ளவாறு புலப்படுத்த வல்லவை கண்களே.

> "அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
> கடுத்தது காட்டும் முகம்" (திரு. 706)

என்பார் வள்ளுவர். முகம் எனினும் கண்களையே அவர் குறிப்பால் உணர்த்தினார் என்பது உரைகளால் அறியப் பட்டது.

## என் பெரும் தெய்வம்

சீதை கற்புக்கு களங்கம் இல்லை என்று அனுமன் உரைத்த வாசகங்களால் அறிஞன் இராமன் அவள் தூய்மையை உள்ளவாறு ஓர்ந்து கொண்டான். அனுமன் மேலும் தொடர்கிறான். இராமனே, சீதை, மணந்து கொண்டவனாகிய உனது "பெருந்தேவி" என்ற முறையிலும், களங்கம் வாராது தலைநிற்கிறாள். மனைவி என்ற நிலையில் மட்டும் சிறவாது, உன்னைப் பெற்றெடுத்த தயரதனுக்கு உற்ற மருமகள் என்ற நிலையிலும் புகழ் பூத்துக் காணப் படுகிறாள். மிதிலையை ஆண்டுவரும் மன்னன் சனகனின் மகள் என்ற நிலைமைக்கும் களங்கம் வாராது பெருமித் தோடு இலங்கையில் திகழ்கிறாள் என்று அடுக்கிக்கொண்டே

www.saivamonline.com

போகிறான். திருமணத்திற்குப் பின் பெண் மூன்று நிலையில் பெருமையும், புகழும் பெற்று வாழ்ந்து காட்ட வேண்டும் என்பது கம்பன் விருப்பம். முதலில் மனைவி, இரண்டாவது மருமகள், மூன்றாவது மகள். நல்ல மனைவியாகத் திகழும் பல பெண்கள், கணவனைப் பெற்ற மாமனை மதித்து ஒழுகுவதில்லை. ஆனால், பிறந்த வீட்டுக்கும், பெற்ற தந்தைக்கும் இசைந்த மகளாக வாழ்ந்து காட்டுவர். கணவனிடம் போராடி அவன் வெறுப்புக்கு ஆளாகி மற்ற இரண்டு இடங்களிலும் பெருமை பெற்று நிற்கும் பெண்கள் சிலர். தந்தைக்கு மட்டும் நல்லவளாகப் பெருமை சேர்த்து வாழும் சில பெண்கள் கணவனுக்கும், மாமனுக்கும் அன்பில்லாதவராக வாழ்தலும் உண்டு. பெண் மேற்குறித்த மூன்றிடத்திலும், அவர்கள் அன்புக்கு உரியவளாகவும், அவர்தம் பெருமையைக் காத்து ஒழுகுபவளாகவும் அமைந்தால் அது பெண்மையின் உன்னத நிலையாகும். அனுமன் இங்கே ஒரு நுட்பம் சேர்க்கிறான். மூன்று நிலையிலும் தலைமை சான்றாள் யார் என்ற வினாவிற்குச் சீதை என்றே நிறைவு செய்திருக்க வேண்டும். அவனோ, என் பெரும் தெய்வம் ஐயா என்று முடிக்கிறான். கம்பன் கூற வரும் நுட்பம் இதுதான். ஒரு பெண் மனைவி, மருகி, மகள் என்ற மூன்று நிலையிலும் வெற்றி பெற்றால் அவள் உலகத்தார் பார்வையில் தெய்வமாக உயர்ந்து விடுகிறாள் என்பதே அது. சேக்கிழாரும், சோழன் மகள் என்ற நிலையிலும், பாண்டியன் மனைவி என்ற நிலையிலும் சிறந்து நின்ற மங்கையர்க்கரசியாரை,

**"மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்"**

என்று போற்றி நிற்கிறார். கம்பனின் பெண்மை பற்றிய ஒரு சிறந்த மதிப்பீடாகவே இக்கவிதை நிறைகிறது.

www.saivamonline.com

## கற்பின் களி நடனம்

*சில குணங்கள், சில பண்புகள், சில உறவு முறைகள் வார்த்தை எல்லைக்குள் வாராத பொருட்சிறப்பு மிக்கன. அன்பு, பண்பு, தாய்மை முதலிய சொற்களின் உண்மையான பொருள்ஆழத்தை வெறும் வார்த்தைகளால் எடுத்துரைக்க முடிவதில்லை. முடிந்தாலும் அவை முழுமை பெறுவதில்லை. வாழ்ந்து காட்டி வரலாறு படைத்த சிலரால் சில சொற்களுக்குப் புதிய பொருள் சேர்ந்து கொள்கிறது. அரிச்சந்திரன் வரலாறு, வாய்மை என்ற சொல்லுக்குள் இத்தனை நுட்பம் இருந்திருக்கக்கூடுமா என்ற வியப்பைத் தருகிறது. உண்மைக்குக் காந்தியடிகள் வலி சேர்க்கிறார். பாரியைக் கண்டு, "கொடை" என்ற சொல் கர்வம் கொள்கிறது. தாய்மையை அழகுறுத்துகிறார் கோச்செங்கட் சோழன் அன்னை கமலவதி. சான்றோர் என்ற சொல்லை வள்ளுவரை முன்னிறுத்தியே விளக்க முடிகிறது. பொறுமை என்றால் தருமன் முன் வருகிறான். இவர்களும், இவர்கள் போன்ற பிறரும் தங்கள் வாழ்க்கை முறைகளினால் சில வார்த்தைகளுக்கு மகுடம் சூட்டிவிடுகின்றனர். அப்படித் தான் சிறையிருந்த சீதையின் பெண்மைச் சிறப்பால், இப்பிறப்பு, இரும் பொறை, கற்பு என்ற மூன்றும் பெருஞ் சிறப்புப் பெற்று விட்டன. அனுமன் சொல்வழி கம்பன் நம்மை வியப்பில் ஆழ்த்தும் இடம் இது.*

**"விற்பெருந் தடந்தோள் வீர**
**வீங்குநீர் இலங்கை வெற்பில்**
**நற்பெருந் தவத்தள் ஆய**
**நங்கையைக் கண்டேன் அல்லேன்**
**இற்பிறப்பு என்பது ஒன்றும்**
**இரும்பொறை என்பது ஒன்றும்**
**கற்புஎனும் பெயரது ஒன்றும்**
**களிநடம் புரியக் கண்டேன்."** *(க. 6035)*

www.saivamonline.com

*மகிழ்ச்சி மீதூரும் போது மனிதன் ஆனந்தக் கூத்து ஆடுகிறான். சீதை தந்த செம்மாப்பால் புது அழகு பெற்று முடி சூடிக்கொண்ட பெண்மையின் முப்பண்புகளும் எழுந்து ஆடிய ஆனந்தத் தனிக் கூத்தில் சீதை காணாமல் போய்விட்டாள் என்பது கம்பனின் நயம். பண்பு தலை யெடுத்து விடும் போது, பண்புடையப் பொருள் அதனுள் மறைந்து விடும். இந்த அழகிய உண்மையை அனுமன் விளக்கிப் பெண்மைக்குப் பேரழகு சேர்க்கிறான்.*

## தவம் செய்த தவமாம் தையல்

*இராவணன் சீதையைக் கரம் பற்றித் தூக்கித் தன் தொடை மீது வைத்துக் கொண்டு வான்வழி இலங்கை சென்றான் என்று பிறமொழியில் எழுந்த இராமகாதைகள் பலவும் புனைந்தன. கம்பன், இலக்குவன் கானில் அமைத்த பர்ணசாலையைப் பெயர்த்தெடுத்துக் கொண்டு, சீதையை விண்வழி இராவணன் சிறை எடுத்துச் சென்றான் என்று தமிழர் பண்பிற்கு இசைந்த காட்சி அமைத்தான். சீதை அதே பர்ணசாலையில் தவநிலையில் வாழ்ந்திருந்ததை நேரே காண்பவன் அனுமன்.*

**"வேலையுள் இலங்கை என்னும்**
**விரிநகர் ஒருசார் விண்தோய்**
**காலையும் மாலை தானும்**
**இல்லதோர் கனகக் கற்பச்**
**சோலை அங்குஅதனில் உம்பி**
**புல்லினால் தொடுத்த தூய**
**சாலையில் இருந்தாள்"** *(க. 6037)*

*என்று காட்சியை விரித்த கம்பன் அனுமன் கூற்றாகச் சீதை என்று முடிக்காது, பிராட்டிக்கு ஒரு பட்டம் வழங்குகின் றான். "தவம் செய்த தவமாம் தையல்" என்பது அது. தவம் என்பதே ஓர் அரிய சொல். உற்ற நோய் நோன்றலும் உயிர்க்கு உறுகண் செய்யாமையும் தவத்தின் இலக்கணங்கள்*

www.saivamonline.com

என்பான் வள்ளுவன். தவம் என்பது உலகவர் உய்திபெறத் தாம் மேற்கொள்வது. அத்தகு தவம், தானே தவம் இயற்றிப் பெற்ற பேறாகத் திகழ்பவள் சீதை என்பது கம்பன் மதிப்பீடு களில் ஒன்று.

## இயற்கைப் பேரரண்

சீதையைச் சிறை எடுத்துச் சென்ற இராவணன் பலகாலும் அவளைப் பணிந்தும், இரந்தும் மனத்தால் அவள் தன்னை ஏற்க வேண்டும் என்று காத்திருக்கிறான். விரும்பாத பெண்ணைத் தீண்டினால் நின் தலைகள் சிதறுண்டு போகும் என வேகவதி கொடுத்த சாபம் ஒன்றும் இராவணனுக்கு உண்டு. மேலும் அவன் சீதையை இன்று வரை தீண்டவில்லை என்பதற்குச் சான்றுகள் பலவும் உள்ளன. பிரமன் படைத்த இந்த உலக உருண்டை இன்னும் பிளந்து போய் விடவில்லை. ஆதிசேடன் முடிகள் இதுநாள் வரை கிழிந்து போகவில்லை. கடல் கொந்தளித்து இன்னும் மேலெழுந்து உலகை அழிவு செய்யவில்லை. வானத்துச் சுடர்கள் ஒன்றும் விண்ணிலிருந்து தரையில் வந்து வீழ்ந்து விடவில்லை. வேதங்களின் பொருளும், செயல்களும் முற்றும் அழிந்து விடவும் இல்லை. இவற்றால் எல்லாம் நீ, சீதையை இராவணன் இன்று வரை தீண்டவில்லை என்பதை உணரலாகுமே என்கிறான் அனுமன். கற்புடைப் பெண்மைக்குக் களங்கம் வருமானால் இயற்கையே சீற்றம் கொள்ளும் என்பது கம்பன் கணிப்பு.

> **"தீண்டிலன் என்னும் வாய்மை திசைமுகன் செய்த முட்டை**
> **கீண்டிலது அனந்தன் உச்சி கிழிந்திலது எழுந்து வேலை**
> **மீண்டில சுடர்கள் யாவும் விழுந்தில வேதம் செய்கை**
> **மாண்டிலது என்னும் தன்மை வாய்மையால் உணர்தி மன்னோ"**
>
> *(க. 6039)*

பெண்மை பேணிக்காத்த பெருங் கற்பினையும், அதற்கு இயற்கை துணைநின்ற தன்மையினையும் அனுமனின் இனிய உரைகள் எடுத்து இயம்புகின்றன.

www.saivamonline.com

## வானத்துப் பெண்கள் வாழ்வு

மண் உலகப் பெண் ஒருத்தியின் பெண்மைச் சிறப்பால் வானத்துத் தெய்வ மகளிர்களுக்கும் பெருஞ்சிறப்புக்கள் வந்துற்றன என்பது கம்பனின் அடுத்த மதிப்பீடு. வணங்குதற் குரிய விண்ணக மாதரசியர்களான இந்திரன் பெருந்தேவி, பிரமன் பெருந்தேவி கலைமகள் முதலானோர் எல்லாம், முன்பு இருந்ததினும் மேலான சிறப்பைப் பெற்றார்கள். சிவன் இடப்பாகத்திருந்த மலைமகள் தற்போது பெண்மைக்கு உற்ற பெருமிதத்தால் சிவன் முடிமேல் ஏறிக் கொண்டாள். தாமரை மலர் மேலிருந்த இலக்குமி, திருமால் மார்பிலிருந்து மேலேறி, அவன் ஆயிரம் மணிமுடிகளின் மேல் அமர்ந்து கொண்டாள்.

**"சோகத்தாள் ஆய நங்கை கற்பினால் தொழுதற்கு ஒத்த**
**மாகத்தார் தேவிமாரும் வான்சிறப்பு உற்றார் மற்றைப்**
**பாகத்தாள் இப்போது ஈசன் மகுடத்தாள் பதுமத்தாளும்**
**ஆகத்தாள் அல்லள் மாயன் ஆயிரம் மௌலி மேலாள்"**

*(சு. 6040)*

கம்பன் காவிய அழகில், மானுடப் பெண்மையின் சிறப்பால், தெய்வ மங்கையர்க்கும் சிறப்பு வந்து சேரும் என்பது நிழலாடுகிறது.

## கோசலையின் அன்பு

காப்பியத் தலைவியாகிய சீதையை முன்னிறுத்திக் கம்பன் பல்வேறு நிலைகளில் அவளுக்குப் புகழ் மகுடங்கள் சூட்டி அழகுறுத்தியது போல், சில காட்சிகளில் மட்டும் வரும் மகளிர் சிலரையும், அவர்தம் உயர் பண்புகளுடன் கவிஞன் ஒளியூட்டிக்காட்டத் தவறவில்லை. தயரதனின் முதல் தேவி கோசலை. அவள் இராமனைப் பெற்றெடுக்கும் புண்ணியப் பேறு பெற்றவள். மந்தரை சூழ்ச்சிப் படலத்தில் கோசலை பால் ஓடிவந்து மங்கையர் நால்வர் இராமன் முடிசூடப் போகும் செய்தியை மகிழ்ச்சியுடன் தெரிவிக் கின்றனர்.

www.saivamonline.com

**"மன்நெடுங் கழல் வந்து வணங்கிட**
**பல்நெடும் பகல் பார் அளிப்பாய் என**
**நின்நெடும் புதல்வனை நேமியான்**
**தொல்நெடும் முடி சூட்டுகின்றான்"** *(க. 1402)*

*என்று அவர்கள் உரைத்த செய்தி கேட்டு முதலில் மகிழ்ந்த கோசலை, உடன், தயரதன் இதனால் முடி துறக்க நேருமே என உணர்ந்து பெரிதும் துணுக்கம் உறுகிறாள். மனைவி, தாய் என்னும் இருநிலைகளில் பெண்மை எவ்வாறு துலங்கும் என்பதைக் கம்பன் காட்டும் இடம் இது.*

**"சிறக்கும் செல்வம் மகற்கு எனச் சிந்தையில்**
**பிறக்கும் பேர் உவகைக் கடல் பெட்பு அற**
**உறக்கும் மா வடவைக் கனல் ஆனதால்**
**துறக்கும் மன்னவன் என்னும் துணுக்கமே."** *(க. 1403)*

*பெண்கள் மகன் பெறும் சிறப்புக்களில் மகிழ்ந்தாலும், கணவனுக்கு வரும் தாழ்ச்சியில் நிலை குலைந்து போய் விடுவர் என்பதைக் கவிஞன் உலகியல் அறிவுடன் இனங் காட்டுகிறான்.*

## நால்வர்க்கும் வேற்றுமை மாற்றினாள்

*அடுத்துக் கோசலையை நகர் நீங்கு படலத்தில் கம்பன் நிறுத்திக் காட்டுகிறான். கைகேயி இட்ட கட்டளை கேட்டு, அவளிடம் விடை பெற்ற இராமன் கோசலை இருப்பிடம் சேர்கிறான். அவன் தோற்றம் கண்டு ஐயுற்ற கோசலை நெடுமுடி புனைதற்கு இடையூறு உண்டோ என்று இராமனிடம் வினவுகிறாள். இராமன் அவளைக் கைகூப்பி வணங்கி,*

**"..................... நின் காதல் திருமகன்**
**பங்கமில் குணத்து எம்பி பரதனே**
**துங்க மாமுடி சூடுகின்றான்."** *(க. 1608)*

*என்று குறிப்பாக நடந்தன உரைக்கிறான். உரை கேட்ட கோசலையின் மனநிலை நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது.*

www.saivamonline.com

*பெற்ற மகனுக்கு வரவேண்டிய அரசுரிமை, மாற்றாள் மகனுக்குக் கைமாறும் நிலையில், எல்லாத் தாயரும் நிலை குலைதல் இயற்கை. கோசலையோ,*

**"முறைமை அன்று என்பது ஒன்று உண்டு மும்மையின்**
**நிறை குணத்தவன் நின்னினும் நல்லனால்**
**குறைவிலன் எனக் கூறினாள்"** *(க. 1609)*

*என்று கம்பன் அவள் உயர் பண்பைப் பதிவு செய்கிறான். மூத்தவன் இருக்க இளையவன் முடி சூடுதல் ஒரு முறைமை இல்லாத செயல் என்பதற்கு மேலான சினச் சொற்கள் வேறு ஒன்றும் அவளிடமிருந்து பிறக்கவில்லை. என் கணவன் எடுத்த முடிவு எதுவானாலும் அதில் ஒரு நியாயம் இருக்கும் என்று உணர்ந்தவள், அவன் எடுத்த முடிவை ஏற்றுப் போற்றுபவளாகப் பரதன் பண்புகளைப் புகழ்ந் துரைக்கிறாள். பெற்ற மகனை விட, வளர்த்த மகன் உயர்ந்த வன் என்று அங்கீகாரம் செய்யும் பெண்மையை வியந்த கம்பன்,*

**"................. நால்வர்க்கும்**
**மறுஇல் அன்பினில்**
**வேற்றுமை மாற்றினாள்"** *(க. 1609)*

*என்று அவளைப் புகழ்ந்து பேசுகிறான். அதுவரை இராமன் காடு செல்லப் பணிக்கப்பட்டமை அறியாத கோசலை, அதனை உணர்ந்து பெரிதும் துயர் அடைகிறாள். மன்னன் கருணை இருந்தவாறு நன்று என்பதற்கு மேலாக அவள் துயர மொழிகளில் தயரதனோ, கைகேயியோ பழித்துரைக்கப் படவில்லை. இராமனைக் கான் ஏகும் போது என்னையும் உடன் கொண்டு போ என்று வேண்டுகிறாள். இராமன், தயரதனுக்கு உற்ற துணையாக நீ நாட்டில் வாழ்வதே முறை என்பதை எடுத்துரைக்க அவளும் ஒருவாறு அமைதி அடைகிறாள்.*

www.saivamonline.com

## கம்பனின் கழிவிரக்கம்

*கைகேயி மாளிகை சென்று கணவன் உற்ற துயர் நிலை அறிந்து புலம்பும் கோசலை மொழிகள் கற்பாரை மனம் நெகிழ்விப்பன. கணவன் சாவதும் உறுதி. மகன் கான் புகுவதும் உறுதி என்பது அறிந்து அவள் பெருந்துயர் கொள் கிறாள். கம்பனே கைவிதிர்த்துத் துன்புறும் இடம் இது.*

**"போவாது ஒழியான் என்றாள்**
**புதல்வன் தன்னை கணவன்**
**சாவாது ஒழியான் என்று**
**உள்ளம் தள்ளுற்று அயர்வாள்**
**காவாய் என்னாள் மகனை**
**கணவன் புகழுக்கு அழிவாள்**
**ஆ! ஆ! உயர் கோசலை ஆம்**
**அன்னம் என் உற்றனளே."** *(க. 1658)*

*அரச வாழ்வு என்று மகிழ்ந்திருக்க ஒன்றுமில்லை. எல்லாம் ஒரு நொடிக்குள் தலை கீழாக நடந்து முடிந்துவிடும். எல்லாச் சூழ்நிலையிலும் பெண்மை துளங்காது நின்று, நிகழ்வுகளின் போக்கில் தன்னை இணைத்துக் கொண்டே வாழ்தல் வேண்டும் போலும்.*

## பரதனுக்குப் புகழாரம்

*கணவனை இழந்த துயரில் சாம்பிக் கிடந்த கோசலை யைக் காண பரதன் வருகிறான். அவள் பாதங்களில் வீழ்ந்து பரதன் அழுது புலம்புகிறான். அவன் துயர் கண்டு,*

**"நிலம் பொறை ஆற்றலன் நெஞ்சம் தூய்து"** *(க. 2196)*

*எனக் கோசலை நினைக்கிறாள்.*

**"மையறு மனத்து ஒரு மாசு உளான் அலன்**
**செய்யனே என்பது தேறும் சிந்தையாள்"** *(க. 2197)*

*என்று அவள் உயர் மனத்தைக் கம்பன் இனம் காட்டுகிறான். கைகேயி செய்த வஞ்சம் நீ அறியாயோ என்று அவள்*

www.saivamonline.com

*பரதனை வினவுகிறாள். அதில் ஓர் உட்பொருள் இருப்ப தாகக் கருதிப் பலபடப் பரதன் சூளுரைக்கிறான். அவன் நேர்மையை முற்றாக உணர்ந்த கோசலை,*

**"முன்னை நும் குல முதலுளோர்கள் தாம்**
**நின்னை யாவரே நிகர்க்கும் நீர்மையார்"** *(க. 2220)*

*என்று பாராட்டி உரைக்கிறாள். மீட்சிப் படலத்தில் பரதன் பண்பில் நெகிழ்ந்தவள்,*

**"எண்ணில் கோடி இராமர்கள் என்னினும்**
**அண்ணல் நின் அருளுக்கு அருகு ஆவாரோ"** *(க. 10181)*

*என்று புகழ்ந்து உரைக்கிறாள். சிலவாய காட்சிகளில் மட்டும் வந்தாலும் கோசலை பெண்மைப் பண்பில் தலை நிற்கக் காண்கிறோம்.*

## சுமித்திரை பண்பாடு

*தயரதனின் மூன்றாவது பெருந்தேவி சுமித்திரை. இலக்குவனையும், சத்துருக்கனையும் ஈன்றெடுத்த பெருமைக்கு உரியவள். நகர் நீங்கு படலத்தில் இராமன் அவளிடம் விடை பெற்றுக் காடு செல்ல, இலக்குவனுடன் அவள் இருப்பிடம் வருகிறான். கைகேயி அனுப்பிய ஏவல் மகளிர் மரவுரியுடன் அங்கே வந்து சேர்கின்றனர். இலக்குவன் அதனைப் பெற்றுக் கொண்டு தாய் சுமித்திரையை வணங்குகின்றான். வணங்கிய மகனுக்கு அவள் கூறும் அறிவுரை உன்னதமானது. இலக்குவனே, இராமன் செல்லும் காடே உனக்கு இனி அயோத்தி மாநகர். இராமனே நம் எல்லோர்க்கும் அரசன். சீதையே தாய். இவ்வாறு எண்ணி, உடன் இவ்விடம் விட்டு நீ புறப்படு என்கிறாள்.*

**"ஆகாதது அன்றால் உனக்கு அவ்வனம் இவ் அயோத்தி**
**மாகாதல் இராமன் நம் மன்னவன் வையம் ஈந்தும்**
**போகா உயிர்த் தாயர் நம் பூங்குழல் சீதை என்றே**
**ஏகாய் இனி நீ இவ்வயின் நிற்றலும் ஏதம் என்றாள்."** *(க. 1751)*

www.saivamonline.com

என்ற சுமித்திரை உரைகளைக் கம்பன் வடித்துக் காட்டுகிறான்.

## அடியாரின் ஏவல் செய்

சுமித்திரை இலக்குவனை நோக்கி மேலும் சில சொல் புகல்கிறாள். மகனே, நீ, இராமன் பின் காட்டுக்குச் செல்வாயாக. தம்பி என்ற உரிமை பாராட்டாதே. அடியன் போல் குற்றேவல் செய்வாயாக. இராமன் காட்டு வாழ்வை முடித்துக்கொண்டு நாடு திரும்பினால் நீயும் திரும்பி வா. அவன் வாரா நிலை வந்தால், அவனுக்கு முன்னே நீ இறந்து படுவாயாக எனக் கூறி அவள் விழி நீர் சிந்தினாள்.

**"பின்னும் பகர்வாள் மகனே இவன்பின் செல் தம்பி**
**என்னும் படி அன்று அடியாரின் ஏவல் செய்தி**
**மன்னும் நகர்க்கே இவன் வந்திடின் வா அது அன்றேல்**
**முன்னம் முடி என்றனள் வார்விழி சோர நின்றாள்."** *(க. 1752)*

சில காட்சிகளில் மட்டுமே வரும் சுமித்திரையின் அன்பும் பண்பும், அவள் இராமன் பால் வைத்திருக்கும் ஈடுபாடும் கண்டு நாம் வியப்படைகிறோம். இலக்குவனுக்கு அவள் இடும் கட்டளைகளில் நம் புருவங்கள் உயர்கின்றன. மறக்க இயலாத துன்பத்திலும் தெளிவு கொண்ட பெண்ணரசி யாகச் சுமித்திரை நம் உள்ளத்தில் நிலை பெறுகிறாள்.

## தாயினும் இனியள்

தீமைக்கு இடையேயும் நன்மை ஒன்று பிறக்கவும், தழைத்திருக்கவும் கூடும் என்பதற்குச் சான்று கூறி நிற்கும் பாத்திரம், வீடணன் மகளாகிய திரிசடையின் பாத்திரம். இலங்கையில் நிகழும் கதைப் பகுதிகளில் ஒருசில காட்சி களில் மட்டுமே அவள் வருகிறாள். என்றாலும், இன்றியமை யாத பெண்மைப் பாத்திரமாக அவள் கற்பார் நெஞ்சில் நிறைகிறாள். காட்சிப் படலத்தின் தொடக்கத்தில் கம்பன் அவளை முதன் முதல் அறிமுகம் செய்கிறான். திரிசடை

www.saivamonline.com

*அன்பில் தாயினும் இனியள் என்று அவள் அன்புடைமை மொழிகிறான். அவள் திருத்தமுற்ற இன்சொற்களுக்கு உரியவள். சீதையைத் தனக்கு உற்ற அன்பினளாகக் கருது பவள். சீதை, அரக்கியர் அனைவரும் கள்ளுண்டு உறங்கும் ஒருநாளில், தன் புருவமும், கண்ணும் இடம் துடிப்பதாகக் கூறித் திரிசடையிடம், வரப் போகும் நன்மை யாதாக இருக்கும் என்று வினவுகிறாள். அவள் சீதைக்கு மங்கல வாழ்த்துக்கள் கூறி இது நன்மை தருவதே, இதன் பலன்,*

**"உன்துணைக் கணவனை உறுதல் உண்மையால்"** *(சு. 5104)*

*என்று முன்னதாக நம்பிக்கையூட்டி, உன் நிறம் பசப்பு நிறம் அடையவும், நின் உயிர்த் தளிர்க்கவும், மிக்க அன்பு கொண்ட பொன்னிற வண்டு ஒன்று உன் செவியருகே வந்து ரீங்காரம் இட்டுச் சென்றது. அதன் பலன் இன்னது என்று ஆராய்ந்தால் உன் கணவனால் அனுப்பப்பட்ட தூதுவன் ஒருவன் உனக்கு நல்ல செய்தி கொண்டு வருவான் என்பதையே இது காட்டுகிறது.*

**"ஆயது தேரின் உன் ஆவி நாயகன்**
**ஏயது தூது வந்து எதிரும் என்னுமால்**
**தீயது தீயவர்க்கு எய்தல் திண்ணம் என்**
**வாயது கேள் என மறித்தும் கூறுவாள்."** *(சு. 5106)*

*என்பன கம்பன் புனைவுகள். "தீயது தீயவர்க்கு எய்தல் திண்ணம்" என்ற அவள் நம்பிக்கையூட்டும் மொழிகள் அவள் அறநெஞ்சத்தைப் பறை சாற்றி நிற்கின்றன.*

## கனாத்திறம் உரைத்தமை

*சீதையே நீ உறங்காத காரணத்தால் நினக்குக் கனவுகள் ஏதும் காணும் வாய்ப்பு இல்லை. நான் சற்றே உறங்கிய போது சில கனவுகள் கண்டேன். அவற்றினையும், அவற்றால் விளையும் பயன்களையும் கூறுவேன், கேட்டுக்கொள் என்று கூறி அவற்றைத் திரிசடை உரைக்கிறாள். பத்துத் தலை*

www.saivamonline.com

*களிலும் எண்ணெய் தேய்த்தவாறு, கழுதைகளும், பேய்களும் பூட்டப்பட்ட தேர்மீது ஏறி, சிவந்த நிற ஆடையுடுத்தவனாய், தென்புலம் நோக்கிப் பயணம் செய்தான். அவனுடன், அவன் பிள்ளைகளும், சுற்றத்தினரும், பிறரும் அதே தென் திசையில் இராவணன் பின் போயினர். இராவணன் வளர்க்கும் வேள்வித் தீ அவிந்தது. அவன் தீபம் எரிந்திருந்த மாளிகைகள் பிளவுபட்டன. பெண் யானைகள் மதம் சொரிந்தன. அரண்மனை முரசங்கள் ஒலிப்பார் இல்லா மலும் பேரிசை எழுப்பின. மேகக் கூட்டங்கள் இல்லாம லேயே வானம் இடியோசை எழுப்பிற்று. இரத்த மழை பொழிந்தது. விண்மீன்கள் சிதறி வீழ்ந்தன. பகல் பொழுதில் இருள் சூழ்ந்தது. அரக்கர் சூடிய கற்பக மாலைகள் புலால் நாற்றம் வீசின. அரக்கிமார் தாலிகள் தாமே அறுந்து அன்னார் மார்பிடை வீழ்ந்தன.*

## கனவின் பயன்கள்

*மேலும் ஓர் அற்புதக் கனவு வந்தது. வலிமை மிக்குடைய இரண்டு ஆண் சிங்கங்கள், மலைப்பகுதி யிலிருந்து புலிக் கூட்டங்களுடன் புறப்பட்டு வந்து, அளவற்ற வலிமை மிக்க யானைகள் உறையும் காட்டைச் சுற்றி வளைத்தன. அவ்வியானைகளை அவை கொன்றொழித்தன. இடையே இருந்த மயில் ஒன்று அக் கூட்டத்துடன் இயைந்து சென்றது.*

**"வன்துணைக் கோள் அரி இரண்டு மாறு இலாக்**
**குன்றிடை உழுவைஅம் குழுக்கொண்டு ஈண்டியே"** *(க. 5118)*

*என்றும்,*

**"வரம்பிலா மதகரி உறையும் அவ்வனம்**
**நிரம்புற வளைந்தன நெருக்கி நேர்ந்தன**
**வரம்பறு பிணம் படக் கொன்ற மாறுஇலாப்**
**புரம்புக இருந்தது ஓர் மயிலும் போயதால்."** *(க. 5119)*

www.saivamonline.com

திரிசடை கண்ட கனாக்களும், வெற்றிக்கான பலன் உரைத்த திறமும், அவள் பெண்மை அறிவுக்குப் பெருஞ்சான்றாய் அமைந்தன.

## சீதையின் வணக்கம்

பிரமாத்திரத்தால், இராம இலக்குவர் வீழ்ந்து கிடக்கும் படுகளம் கண்டு, அவர்கள் உயிருக்கு இறுதி வந்துற்றதாகக் கருதி சீதை ஆற்றாது அழுது அரற்றுகிறாள். அக்காலை, தேடிய தவமே அன்ன திரிசடை அருகில் வந்து, இவை யாவும் மாயை, இராம இலக்குவர் மாய்ந்திலர் என்பதை உறுதிபட எடுத்துரைக்கிறாள். சீதையே இவை யாவும்,

**"............... நெறி இலரால் ஆய மா மாயம்"** *(க. 8693)*

என்றும்,

**"புண்டரீகற்கு உண்டோ இறுதி"** *(க. 8694)*

என்றும், சிறு குளத்துக்குள் சென்று கடல் அகப்படுதல் உண்டோ என்ற பொருளில்,

**"கூவலில் புக்கு வேலை கோட்படும்"** *(க. 8698)*

என்று வினாத் தொடுத்து ஐயம் தீர்க்கிறாள். சீதை ஒருவாறு தேறி,

**"அன்னை நீ உரைத்தது ஒன்றும்**
**அழிந்திலது ஆதலானே**
**உன்னையே தெய்வமாக் கொண்டு**
**இத்தனை காலம் உய்ந்தேன்."** *(க. 8700)*

என்று ஆறுதல் அடைகிறாள். சீதை இராவணன் சிறையில் உயிர் தரித்து வாழ்ந்திருந்தமைக்குத் திரிசடையின் அன்பும் ஆதரவுமே துணையாய் அமைந்தன. சீதையே, "உன்னைத் தெய்வமாகக் கொண்டேன்" என்று பேசும் பெருமைமிக்க பெண்ணரசியாகத் திரிசடை இராமகாதையில் நம் நெஞ்சில் நிறைகிறாள்.

www.saivamonline.com

## ஒழுக்கச் சார்பு அறிவே

பெண்மை பற்றிய மதிப்பீட்டில் வாலி வதைப்படலத்தில் அமையும் இராமன் வாலி உரையாடல்களுக்கு இடையே சில குறிப்புக்களைக் கம்பன் பெய்கிறான். தருமத்தையும், பெருந்தகவுகளையும் கொண்டிருந்தும் வாலியே நீ சிறிதும் ஆராயாது, உன் அருமைத் தம்பியின் ஆருயிர்த் தேவியை அடைய முயன்றாய். அதுவே நீ செய்த பெருங்குற்றம் என்று இராமன் எடுத்துரைக்கிறான். வாலி, இராமன் குற்றச் சாட்டுக்குப் பதில் உரை தருகிறான். இராமா, நின் மானுடச் சாதிக்கு எய்தியது போன்றவை அல்ல எங்கள் உறவு முறைகள். பிரமன் இத்தகு ஒழுக்கங்களோடு எங்களைப் படைத்திருக்கவில்லை என்கிறான்.

> **"ஐய நுங்கள் அருங்குலக் கற்பின் அப்**
> **பொய்யில் மங்கையர்க்கு ஏய்ந்த புணர்ச்சி போல்**
> **செய்திலன் எமைத் தேமலர் மேலவன்"** *(கி. 4046)*

என்று வாலி பேசுவதாகக் கம்பன் பதிவு செய்கிறான். அப்போது ஒழுக்கம் என்பது பிறப்புப் பற்றியது அன்று. அது அறிவைப் பற்றி நின்று எழுவது. இத்தனை நீதி அறிந்த நீ குலமரபு பேசி, தவறுக்குச் சமாதானம் காட்டுவதை ஏற்க இயலாது என்று பதில் உரை தருகிறான்.

> **"பொறியின் யாக்கையதோ புலன் நோக்கிய**
> **அறிவின் மேலதன்றோ அறத்தாறுதான்"** *(கி. 4050)*

என்ற கம்பனின் வரிகளில், பெண்மை சார்ந்த ஒழுக்கத்தில் வழுவியவர்கள், பிறப்புப் பற்றிய மரபு கூறித் தம் பிழையை நியாயப்படுத்த முயல்வதைக் கம்பன் கண்டிக்கிறான். ஒழுக்கம் அறிவு சார்ந்த நிலையில் பேணப்பட்டே ஆக வேண்டும் என்பது கம்பன் கட்டளையாகிறது.

www.saivamonline.com

## பெண்மைக் காவல்

*இராமன் அம்பினால் உயிர் தடுமாறி வீழ்ந்த வாலி, இராமனைப் பலபட ஏச்சுரைக்கிறான். அவற்றிடையே பெண்மை பற்றிய அரிய குறிப்பு ஒன்றைக் கம்பன் பெய்கிறான். நீ கானில் புறப்பட்டு வந்து வாழ்ந்திருந்த நெடிய காலங்களில் அறத்துக்கு மாறாக நடந்து கொள்ள வில்லை. காரணம், உன்னருகில் சீதை இருந்தாள். அவளை இராவணன் பிரித்தெடுத்துச் சென்ற பின் நீ என்னை அம்பெய்து வீழ்த்தியிருக்கிறாய். இத்தவறு சீதை உன் அருகில் இல்லாமையால் நிகழ்ந்திருக்க வேண்டும். அவள் அருகில் இருந்திருந்தால் நீ இதனைச் செய்திருக்க மாட்டாய். உன் திகைத்த செயல் அவள் பிரிவால் அமைந்ததே என்று பேசுகிறான்.*

> **"ஆவியைச் சனகன் பெற்ற**
> **அன்னத்தை அமிழ்தின்வந்த**
> **தேவியைப் பிரிந்த பின்னை**
> **திகைத்தனை போலும் செய்கை"** *(க. 4020)*

*என்ற வாலி கூற்றை ஒழுக்கமற்றவன் உரை என்று தள்ளாது அவன் கூற்றின் மெய்ப்பொருள் காண்பது கடமையாகிறது. பால் இது, நீர் இது என்று பிரித்துரைக்கும் திறமுடையாள் சீதை என்பது பற்றிக் கவிஞன் அவளை அன்னம் என்று குறித்தான் என்பர் ஆய்வறிஞர்கள். ஆடவர் ஒழுக்கமும், செயல்களில் காணப்படும் ஒழுங்கும் யாவும் அருகிருக்கும் பெண்மைச் சார்பால் அமைவன என்பது ஏற்கத்தக்கதே யாகும். சமூக ஒழுங்கு ஆணும் பெண்ணும் கூடி வாழும் நல்ல நிலத்தில் பாதுகாப்பாகவே அமையும். எனவே, ஆடவர்களின் ஒழுக்க வாழ்வும், நெறிபிறழ்ந்த நடத்தைகளும் பெண்மையின் அருகிருப்பு மற்றும் பிரிவுகளால் அமைவன என்பதை உணர்தல் வேண்டும். தீமையை அழிக்க இறைவன் புறப்பட்ட எல்லா இடங்களிலும், அவன் தேவியை விடுத்துத்*

www.saivamonline.com

தனித்தே சென்றதாகப் புராணங்கள் உரைத்து நிற்றலும் இக்கருத்தை உறுதி செய்கிறது.

## ஒளி வட்டத்துக்குள் பெண்மை

கம்பன் தான் பாட எடுத்துக் கொண்ட இராமன் கதையில் பெண்மைக்குச் சூட்டி மகிழ்ந்த புகழ் மகுடங்கள் பலவற்றையும் மேலே விரிவாக ஆய்வுக்கு உட்படுத்தி மகிழ்ந்தோம். மரபின் எல்லைகளைக் கருத்தில் கொண்டு கம்பன் புனைந்திருக்கும் பெண்மை கற்பார் நெஞ்சில் பெருமிதம் சேர்த்துக் கொலு வீற்றிருக்கிறது. தான் வாழ்ந்த நிகழ்காலச் சமூக எண்ணங்களையும், பெண்மை பற்றிய மதிப்பீடுகளையும் அப்படியே ஏற்றுப் போற்றாது, தடைகளை உடைத்தும், புது மரபுகள் படைத்தும், பெண்மையை உயர்த்திப் பிடித்து, மேல் எடுத்துச் செல்வதில் கம்பன் காட்டியிருக்கும் கரவற்ற மெய்யான ஆர்வம் நம்மைப் புல்லரிக்க வைக்கிறது. நீண்ட காலப் பெண் அடிமைத் தடத்தைத் தகர்த்து, ஒளி வட்டத்துக்குள் பெண்ணைக் கரம் பிடித்து அழைத்து வந்தப் பெரியவனை நோக்கிப் பெண்மை நன்றியோடு கரம் குவித்து மகிழ்கிறது. தமிழர் சமூக வரலாற்றில் பெண்மை வாழ்க்கைத் தடத்தில், ஒரு பெரிய திருப்பத்தின் முதல் அடையாளங்கள் பலவும் கம்பனிலேயே நிழலாடுகின்றன. நன்றியுணர்வுடன் அவன் சூட்டிய புகழ் மகுடங்களால் பெண்மை நிறைகிறது.

www.saivamonline.com

# 6. கம்பனில் பெண்ணியம்

## முதல் ஆய்வு

கம்பனில் பெண்ணியம் என்ற இவ்வாய்வு, கம்பனின் பெண்மைச் சித்திரிப்புகள் முழுவதையும் உற்று நோக்கி, தொகுத்துத் திரட்டி, பகுப்பாய்வு செய்துகொண்டு விரிவாக நிகழ்த்தப்பட்ட முதல் ஆய்வாகும். இதற்குமுன், கம்பனின் பெண் பாத்திரங்களைத் தனித்தனியே ஆய்ந்து, சிறியதும், பெரியதுமாகக் கட்டுரைகள் வடித்துச் சிலர் வெளியிட்டுள்ளனர். அவை பலவும் தமிழ்நாட்டுக் கம்பன் கழகங்கள் வெளியிட்ட விழா மலர்களில் வெளியாயின. சில வேறு தலைப்பில் அமைந்த கட்டுரைத் தொகுப்புக்களில் இடம் பெறச் செய்யப்பட்டன. இவ்வாய்வில் கண்டு தெளியப்பட்ட முடிவுகள் பலவும், பெரும்பாலும் அவ்வவ் வியல்களின் இறுதியில் தொகுத்துச் சுட்டப்பட்டன. பெண்மையின் குறைபாடுகளைக் குறைகளே என்று ஏற்றும், நிறைகளை உள்ளவாறு ஒளியூட்டியும் இவ்வாய்வு நடுநிலை நின்று நிகழ்த்தப்பட்டது. கவிஞன் மீது கொண்ட பற்றுறுதியால் பெண்மை பற்றிய புனைவுகள் யாவற்றையும் சிறந்தன என்று வாதிட்டுக் கவிஞனைப் பாதுகாக்கும் முயற்சிகள் இங்கே மேற்கொள்ளப்படவில்லை.

## கம்பன் அமைத்த தனிக்களம்

தமிழகத்தின் சமூக அமைப்பில் நீண்ட நெடுங்காலம் பெண்மைக்கு எவ்வித உரிமைகளும் வழங்கப்பட்டிருக்க

www.saivamonline.com

வில்லை என்பது, கம்பன் செய்த மாற்றங்கள் சிலவற்றை இனங்காண்பதற்காக விரிவாக ஆராய்ந்து நிறுவிக் கொள்ளப்பட்டது. அவள் சமூகத்தில் ஆண்களின் இன்பத் திற்கு இரைபோடுபவளாகவே கருதப்பட்டு வந்தாள். கல்வி, சொத்துரிமை, கணவனைத் தேர்ந்து கொள்ளும் உரிமை முதலிய ஒன்றும் அவளுக்குச் சமூகத்தில் வழங்கப்பட்டிருக்க வில்லை. பெண் உரிமை பெற வேண்டும் என்ற நல்லெண்ணம் கம்பனுக்கு முன்னும் சில கவிஞர்கள் நெஞ்சில் வேர்விட்டிருந்தது. எனினும் அவர்களால், சமூகப் போக்கிற்கும், மரபுகளுக்கும் எதிராகப் பெரியதாக எதையும் சாதிக்க முடியவில்லை. வள்ளுவரும், இளங்கோவும் பெண்மை வாழ்வில் சிறு ஒளிக்கீற்றுக்களைப் பாய்ச்ச முயன்றனர். அவர்கள் பல்வேறு சிந்தனைகளுக்கு இடையில் பெண்மை பற்றியும் சிந்தித்தனர். கம்பன் மட்டும்தான் பெண்மையை மட்டும் கருத்தில் முன்னிறுத்தி, அதற்கு ஒளியூட்டும் காவியக் களம் அமைத்துக் கொண்டான்.

## கம்பனின் சாதனை

இன்று, பெண்மையைப் பற்றி நின்று சமூகத்தை மதிப்பிடுவார் பலர், ஆண் ஆதிக்க சமுதாயம் என்ற ஒன்றை அடையாளம் காட்டுவர். பெண்கள் ஆண்களுக்கு நிகராகவும், மேலாகவும் உரிமைகளைப் பெற்றிருக்கும் நிலையில் ஆண் ஆதிக்கம் பெரிதும் தலைசாய்ந்து விட்டது. ஆனால், இத்தொடரின் உண்மையான பொருளை நீங்கள் ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சமூக அமைப்பில்தான் இனங்காண முடியும். அத்தகு ஆதிக்க உணர்வு படைத்த கம்பன் கால சமூக அமைப்பில், சில மாற்றங்களை உருவாக்க அவன் எடுத்த முதன் முயற்சிகளை இனங்கண்டு, பெண்மை நன்றி செலுத்தியாக வேண்டும். எந்த ஒரு மாற்றமும் அது மேற்கொள்ளப்பட்ட கால வரலாற்றுடன் பொருத்திப் பார்க்கும் பொழுது மட்டுமே முழுமையாக

www.saivamonline.com

அறிய வரும். வாழும் சமூகத்திடமிருந்தோ, ஆட்சியாளர் களிடமிருந்தோ எவ்வித ஆதரவும் கிடைக்காத நிலையிலும் கம்பன் பெண்மை உயர்வுக்கு மேற்கொண்ட முயற்சிகளைச் சாதனைகளாகவே கருத வேண்டியுள்ளது.

## இருப்பதில் இது சிறந்தது

ஆடவர்களை ஒழுக்கத்தில் தலைநிறுத்தவும், பெண்மைக்கு உரிமைகள் வழங்கவுமே அவன் இராமன் கதையைத் தேர்ந்து கொண்டான். இம்முயற்சி அவன் வாழ்ந்த காலச் சமூகத்திற்குப் பிடித்திருக்கவில்லை. சமூகத் தின் எத்தரப்பிலும் அவன் ஆதரவு பெற இயலாமைக்கு அதுவே காரணம். கடவுள் அவதாரக் கதைகள் பலவும் பெண்மைக்கு எதிராகவே நின்றன. 'இருப்பதில் இது சிறந்தது' என்றே இராமன் கதையைத் தேர்ந்து கொண்டான். கதை நடந்த காலம் மிகப் பழையது. மண்ணும் தமிழ் மரபுகளோடு முற்றிலுமாகப் பொருந்தி வாராதது. இருந்தும், கம்பன் வான்மிகத்தையே முதல் நூலாகக் கொண்டு காப்பியம் புனைகிறான். நாடறிந்த கதையில், தன்னிச்சை யாகப் பெரிய மாற்றங்களைச் செய்துவிடவோ, பெண்மைக்கு எதிரான மூலநூல் சித்திரிப்புக்களை இருட்டடிப்புச் செய்துவிடவோ முடியாது என்பதையும் அவன் அறிந்தே இக்கதையைத் தேர்வு செய்து கொண்டுள் ளான்.

## கைகேயி என்ன தவறு செய்தாள்?

சமகால சமூக விருப்பங்களையும், காப்பியப் போக்கினையும் கருத்தில் கொண்டே கம்பன் கதை நடத்த வேண்டியுள்ளது. இருவரம் வேண்டிய போது கேட்டுப் பெற்றுக்கொள் என்று உரைத்தவன் தயரதன். தன் மகள் வயிற்றில் பிறக்கும் மகனுக்கே கோசல நாட்டு அரசுரிமை வழங்கப்பட வேண்டும் என்று வேண்டிய கேகய மன்ன

www.saivamonline.com

னுக்கு வாக்குறுதி தந்தே தயரதன் கைகேயியை மணந்தான் என்பது வான்மிகத்தில் வெளிப்படையாக உள்ளது. கைகேயி அரசர் இயல்புகள் அறிந்த மரபில் வந்தவள். தான் பரதனை மகனாகப் பெற்றிருந்தும், தன் கணவன் விருப்பம் உணர்ந்து, அவன் பெரிதும் விரும்பும் இராமனைத் தன் மகன் என்றே வளர்த்தவள். பரதன் கேகய நாடு சென்றிருக்கும் நிலையில், அன்புக்கு உரிய மனைவி கைகேயியுடன் சிறிதும் கலந்து ஆலோசிக்காது இராமன் முடிசூட்டு விழாவை உறுதி செய்கிறான் தயரதன். கைகேயி வரம் கேட்டுப் பரதனுக்கு அரசுரிமை பெறுகிறாள். வரமும் உண்டு, வாக்குறுதியும் உண்டு என்ற நிலையில், தன் உரிமையை வேண்டிப் பெற்ற ஒருத்தி மீது தயரதனும், வசிட்டனும், இலக்குவனும் நிகழ் காலச் சமூகத்தாரும் பாய்வது எதனால்? ஆண் ஆதிக்க வீச்சும், பெண்ணடிமை மோகமும் தவிர வேறு என்ன காரணங்கள் இருக்கக் கூடும். உண்மையிலேயே யாராவது ஒருவர் தயரதன் செயல்களில் நியாயம் இல்லை என்று எடுத்துரைக்க முன்வந்ததாகப் பதிவுகள் உண்டா? இல்லையே... இராமன் ஒருவன் மட்டுமே கைகேயியைக் குறை சொல்லாதவன்.

## கம்பனின் பெண்மைப் பரிவு

இத்தகைய பாத்திரப் புனைவில் கம்பன் பெண்மைக்கு என்ன ஏற்றத்தைச் செய்துவிட முடியும். கணவனும், மகனும், ஆசாரியனும், சமூகமும் ஒருங்கு சேர்ந்து கைகேயியைப் பழி கூறி இழித்துரைக்கின்றனர். சமூகப் பெண்களும் கூட இதில் இணைந்து கொள்வது வேதனை. கம்பன் எல்லா ஏச்சுரைகளையும் உள்ளவாறே பதிவு செய்கிறான். சமூகத்தின் ஓர் அங்கமாக நின்று தானும் தன் பங்குக்கு ஏசுகிறான். ஆயினும், முன்னும் பின்னும் அவன் பெய்துரைக்கும் குறிப்பு மொழிகளாலும், முரண் படாத சில அடையாளங்களாலும், அவளை இராமனே

www.saivamonline.com

வணங்கும் தெய்வப் பெண்ணாக உயர்த்திப் பிடிக்கிறான். எளிதில் புரிந்து கொள்ள முடியாத, அறிவும் திறமும் மிக்க முக்காலமும் உணர்ந்த ஒரு காரணமாது இவள் என்று முன்னிறுத்துகிறான். மூலக்கதையில் திட்டமிட்டே வரங்கள் கேட்டு, வாழ்விழந்து போன கைகேயியைக் கம்பன் கையில் எடுத்துக் கொண்டு இராமனை, அவன் அவதார நெறியில் செலுத்தித் தம் மேல் பழியை வேண்டுமென்றே சுமந்து நின்ற உத்தமியாகச் சித்திரிக்கிறானே இதைத்தான் இவ் ஆய்வில் கரும்புள்ளிகள் என்ற இயல் விரிவாக ஆய்வுக்கு உட்படுத்தியது. கைகேயி முகத்தில் குத்தப்பட்ட கரும்புள்ளி களைக் கம்பன் திருஷ்டிப் பொட்டாகவும் அழகு தரும் நெற்றித் திலகமாகவும் மாற்றிக் காட்டும் அன்பினை, பெண்மை மேல் கொண்ட அளப்பெரும் பரிவினையே இவ்வாய்வு இனங்காட்டியுள்ளது.

## கம்பன் பேரறிவு

காப்பிய இறுதியில் அமையும் சீதைக்கு ஏற்பட்ட நெருப்புச் சோதனையைக் களங்கமாகப் பெண்மைக்குக் காட்டி நிறைவு செய்ய கம்பன் விரும்பவில்லை. புற்றரவு ஒத்த மௌடீக எண்ணம் கொண்ட சமூகம், மாற்றானால் தூக்கிப் போகப்பட்ட பெண்மேல் வீசும் சுடுமொழிகள் யாவற்றையும் கம்பன் பதிவு செய்கிறான். இரண்டு கடமைகள் கம்பனுக்கு இங்கே வந்து சேர்கின்றன. ஒன்று சீதை மீது வீசப்பட்ட பழிமொழிகளைத் துடைப்பது. மற்றொன்று காப்பியத் தலைவனாகிய இராமன் உணர்ச்சி மேலீட்டால் உரைத்த சொற்களால் அவனுக்குப் பழி வந்து விடாது காப்பது என்பன அவை. கரும்புள்ளிகள் என்ற தலைப்பில் இக்களம் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது. தீச்சோதனையை இராமன் திட்டமிட்டு நிகழ்த்திய ஒரு நாடகமாக முன்னிறுத்தி, இதன் பயனால், சீதையின்

www.saivamonline.com

அடிமன அவலம் நீக்கப்பட்டது எனக் கதை நடத்திய கம்பன் பேரறிவும், பெரும் பண்பும் இனங்காட்டப்பட்டன. இவற்றைப் போல் காப்பியத்தில் வேறுபடக் கிடந்த பெண்மைக்கு எதிரான சித்திரிப்புக்களில் எல்லாம் கம்பன் காட்டும் ஆர்வமும், அவன் பெண்மைக்கு அமைக்க முயன்ற அரண்களும் இனம் காட்டப்பட்டன.

## கம்பனுக்கும் தெரியும்

கம்பனின் பெண்ணியப் புனைவில் முற்றிலும் தீமை சார்ந்த பெண்மையையும், அப்பாத்திரத்தின் பெண்மைக்கு எதிரான செயல்களையும் விரிவாக ஆய்வுக்கு உட்படுத்தவில்லை. அதனால் விளையப்போகும் பயன் ஒன்றும் இல்லை என்பதால் அத்தடத்தில் அதிகம் நாட்டம் செலுத்தப் படவில்லை. ஆடவர்களினும் மேலான கீழ்மைப் பண்புடையார் மகளிருள்ளும் உளர் என்பது நம்மைப்போல் கம்பனுக்கும் தெரிந்து இருந்துள்ளது. இவற்றை விடுத்துக் கம்பன் பெண்மைக்குச் சூட்டியிருக்கும் புகழ் ஆரங்கள் பலவும் ஐந்தாவதாக இனங்காட்டப்பட்டன.

## பெண்மைக்குக் கல்வி

பெண்களுக்கும் கல்வி வேண்டும் என்பதை முதன் முதல் வெளிப்படையாகப் பதிவு செய்து காட்டியவன் கம்பனே. அத்தகு அறிவாற்றல் அவளுக்கு உண்டு என்பதைச் சீதையைத் தோள் மீது ஏறுக என்று வேண்டிய அனுமனுக்கு வழங்கிய மறுப்புரைகள் வாயிலாகவும், மாயாசனகப் படலத்தில் இவன் என் தந்தை அல்லன் என்று வேறுபடுத்தி உணர்ந்த சீதை அறிவுடைமையாலும் கம்பன் நிலைநாட்டிக் காட்டுகிறான். 'பொருந்து கல்வியும் செல்வமும் பூத்தலால்', என்ற கம்பன் பதிவில் அன்னார் செல்வத்திலும் பங்கு பெற உரிமை உடையவர் என்று நாட்டுகிறான்.

www.saivamonline.com

## ஒருவனுக்கும் ஒருத்தியே

ஆடவர்கள் ஒரு பெண்ணோடு வாழும் வாழ்க்கை நெறியே சமூக ஒழுங்குக்கு ஏற்றது என்பதை வலியுறுத்திய வன் கம்பன். ஒருத்திக்கு ஒருவன் என்பதோடு, ஒருவனுக்கும் ஒருத்தியே என்று முதல் முழக்கம் இட்டவன். மேலும், ஆண்மை நெறி திறம்பாதிருக்கப் போராடவும், பெண் உரியவள் என்பதை "இந்த இப்பிறவிக்கு இருமாதரை" என்ற சீதையின் வாய்மொழியால் நிறுவி நிற்கிறான். ஆடவர் ஒழுக்கக் கேடுகளுக்கு இசைந்தே வாழ்ந்திருந்த பெண்மைத் தடத்தில், சீதை உரை முதல் போர்க்குரலாக முன்னிறுத்தப் படுகிறது. கணவனைப் பிரிந்திருக்கும் மனைவி, ஒழுக்கத்தில் தலைநின்று கற்பைக் காத்தல் வேண்டும் என்று ஆண் சமுதாயம் விரும்புவது போல், பெண்மையும் விரும்பலாம். விரும்ப வேண்டும் என்பது கம்பன் குறிப்பது.

## காதல் மணப் பதிவு

வில் ஒடித்து நின்றானுக்குப் பெண் மாலையிட்ட கதை இராமாயணம். இங்கே ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் முன்னதாகவே கண்டு, காதலித்து மணம் கொள்வ தாகப் புனைய வாய்ப்புக்கள் குறைவு. என்றாலும் மிதிலைக் காட்சிப் படலம் அமைத்துச் சீதையும் இராமனும் ஒருவரை ஒருவர் கண்டு மனங்கலந்து, காதலித்து மணந்ததாகக் கதை நடத்தும் துணிவில் கம்பன் நெஞ்சில் நிறைகிறான். காதல் மணம் பற்றிய, சமூகம் சார்ந்த முதல் பதிவாக இதைக் கருத வேண்டும். சங்க நூல்களும், வள்ளுவனும் உரைப்பன கற்பனை கலந்த இலக்கியத் தடங்கள்.

## மனைவி வழி கணவனை அறிதல்

கணவனை முன்னிறுத்தியே மனைவியை அடையாளப் படுத்துவது சமூக வழக்கமாக இருந்து வந்தது. இராமன் மனைவி சீதை. கோவலன் மனைவி கண்ணகி என்பது

www.saivamonline.com

என் பெயர். என்றெல்லாம் அறிமுகம் நிகழ்த்தப்பட்டன. கம்பன், அனுமன் வாயிலாக இராமனை முறையே மானுடன், தர்மதேவதை, வானவன், திருமால் அவதாரத்தில் ஒருவன் என்றெல்லாம் அடையாளப்படுத்திக் கொள்ள வைக்கிறான். நிறைவாக, அசோகவனத்தில் சீதையைக் காணும் அனுமன் ஐயம் சிறிதும் இன்றி, இவள் திருமகளே என்று உறுதி பூண்கிறான். அப்போது அவனுள் ஒரு எண்ணம் பிறக்கிறது. இவள் திருமகள் என்பதால், இவள் கணவன் இராமன் திருமாலாகத்தான் இருத்தல் வேண்டும் என்று உறுதி பூண்பதாகக் கம்பன் கதை நடத்திப் பெண்மைக்கு உயர்வு தருகிறான். பெண்மை அறிவு ஆற்றல்களால் மேன்மை பெற்று நின்று, தன் மூலம் தன் கணவன் இன்னார் என்பதை உலகுக்கு அறிமுகப்படுத்தும் நிலை வரல் வேண்டும் என்று கருதியமை புலனாகிறது.

## பெண்மை தெய்வநிலை எய்தல்

பெண்மைக்குப் பெருமை சேர்க்கும் கம்பன் அவள் தெய்வநிலை எய்தவும் வழிகாட்டுகிறான். எந்த ஒரு பெண்ணும் கணவனுக்கு இசைந்த மனைவியாகவும், கணவனைப் பெற்ற மாமனுக்குப் பெருமை சேர்க்கும் மருமகளாகவும், தன்னைப் பெற்றெடுத்த தன் தந்தை மனம் மகிழும் மகளாகவும் மூன்று நிலைகளிலும் பெருமை பெற்றிலங்குவாளானால், அவள் உலகத்தார் பார்வையில் தெய்வமாக மதிக்கப் படுவாள் என்று புத்திலக்கணம் படைத்துரைக்கிறான். ஏதேனும் ஒரு நிலையில் மட்டும் சிறப்பு எய்தி, பிற நிலைகளில் சிறப்பு உறாதிருத்தலைக் கம்பன் ஏற்கவில்லை.

## புதிய சமூக இயல்

மனைவியின் நடத்தைகளே ஓர் ஆண்மகனுக்குச் சமூக வீதியில் தலைநிமிர்ந்து நடக்கும் பெருமையைத் தரும் என்பான் வள்ளுவன். கம்பன் காதல் மனைவி அருகிருக்கும்

www.saivamonline.com

வரை ஆடவன் நடத்தையில் ஒரு ஒழுங்கு காணப்படும் என்றும், அவள் அருகில் இல்லாதபோது, அவன் பிறழ்ந்து பழி சுமப்பான் என்றும் புதிய சமூக இயல் படைக்கிறான். வாலி வதம், சீதை அருகிருந்தால் நிகழ்ந்திருக்காது என்பதை, வாலி கூற்றின் வாயிலாகவே சுட்டிக்காட்டுகிறான். எனவே, ஆடவனின் சமூக இணக்கம் பெண்மைச் சார்பால் அமைவது என்று பேசி பெண்மைக்குப் பெருமை சேர்க்கிறான்.

## ஆர்த்தெழும் பெண்மை

தலையாய இவற்றைத் தவிர, கம்பன் பெண்மைக்குச் சூட்டிய புகழ் மகுடங்கள் பலவும் முன்னை இயல்களில் விரிவாக ஆராய்ந்து இனங்காட்டப்பட்டன. காப்பியம் முழுதும் தேடிக் காணும் முயற்சியில் கம்பன் படைத்த பெண்ணியம் அறிவும் ஆற்றலும், உரிமையும் சான்றதாகப் பேருருக் கொண்டு, நாளைய உலகை ஆட்சி கொள்ளும் என்ற கர்வத்தைத் தோற்றுவிக்கிறது. தமிழ்க் கவிதைத் தடத்தில் பெண்மைக்குப் பல்வேறு உரிமைத் தடங்களை வகுத்தளித்ததன் வாயிலாகக் கம்பன் பெண்கள் நெஞ்சில் சிம்மாசனம் இட்டு அமர்ந்து கொள்கிறான். கவிஞனின் தாய் அன்பில் பெண்மை பேரழகு பெற்று உலகை ஆட்சி செய்ய ஆர்த்தெழக் கண்டு மகிழ்கிறோம்.

❖

www.saivamonline.com



*முனைவர்*

**இரா. செல்வக்கணபதி**

*எம்.ஏ., பி.எட்., பிஎச்.டி.,*

தருமையாதீன ஞானப் பண்ணையில் தமிழ்க்கல்வி பயின்று 1965இல் புலவர் தேர்வில் மாநில முதன்மை பெற்று 1000 ரூபாய் பரிசு பெற்றவர்.

தருமை ஆதீனம் கலைக் கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராகவும், முதல்வராகவும் பணியாற்றியவர்.

தருமையாதீனத் தமிழ் வளர்ச்சிப் பணிகளை ஆய்வு செய்து சென்னைப் பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றவர்.

நாடறிந்த சமய, இலக்கியச் சொற்பொழிவாளர்.

எட்டு நூல்களையும், பன்னாட்டு இதழ்களில் ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியவர்.

தமிழ் - தொல் இலக்கணங்கள், இலக்கண உரைகள், சங்க இலக்கியங்கள், சைவ சமயம் மற்றும் தத்துவ நூல்கள், சிறப்பாகச் சேக்கிழாரில் நிறைந்த ஈடுபாடும் புலமையும் மிக்கவர்.

தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்கள் பலவற்றிலும் அங்கம் வகித்தவர்.

இந்திய நாடெங்கும், கடல் கடந்தும் சென்று சமய இலக்கியப் பணி ஆற்றி வருபவர்.

பல்வேறு அமைப்புக்களால் 'சைவச் செங்கதிர்', 'முத்தமிழ் அரசு', 'செந்தமிழ் வாரிதி', 'சைவத் தமிழ்மணி', 'செந்தமிழ்ச் செல்வர்', 'சித்தர் இலக்கியச் செம்மல்', 'சமய இலக்கியக் கலாநிதி' முதலிய பட்டங்கள் வழங்கப் பெற்றவர்.

www.saivamonline.com